Koviloor Digital Library

அகஸ்தியர் 12000

என்னும் பெருநூல் காவியம்

பாகம் - 4



Acc.NO: 44790
R 689

தாமரை நூலகம், சென்னை - 600 026.

Koviloor Digital Library

Koviloor Digital Library

91/4

அகஸ்தியர் 12000

என்னும் பெருநூல் காவியம்

(நான்காவது காண்டம்)

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
44790

பதிப்பாசிரியர்

எஸ்.பி.இராமச்சந்திரன்

தாமரை நூலகம்
7, என்.ஜி.ஓ.காலனி
வடபழனி,
சென்னை - 600 026,
தொலைபேசி எண் : 04423620249

Koviloor Digital Library

தாமரை வெளியீடு எண் : 131
இரண்டாம் பதிப்பு : ஆகஸ்ட் 1999
மூன்றாம் பதிப்பு : டிசம்பர் 2013
நான்காம் பதிப்பு : 2021
பதிப்புரிமை பெற்றது
காப்புரிமை பெற்றது

நூலைப் பற்றி

நூலின் பெயர்	:	அகஸ்தியர் 12000 என்னும் பெரு நூல் காவியம் நான்காவது காண்டம்
நூலின் தன்மை	:	சித்த மருத்துவம்
பதிப்பாசிரியர்	:	எஸ்.பி.இராமச்சந்திரன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என்.ஜி.ஓ.காலனி வடபழனி சென்னை - 600 026,
பதிப்பு ஆண்டு	:	2021
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி 1 X 8
தாளின் தன்மை	:	16 கி.கி. வெள்ளைத்தாள்
எழுத்தின் அளவு	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	256 + VIII
பிரதிகள்	:	1000
நூலின் விலை	:	100
அச்சிட்டோர்	:	கிரியேடிவ் ஆப்செட்,சென்னை

Koviloor Digital Library

91/4

முதல் பதிப்பின்
பதிப்புரை

நான்காவது காண்டம் நடைபயிலத் தொடங்கிவிட்டது. ஐந்தாவது காண்டம் அடுத்து வருகிறது என்றால் தாமரை நூலகத்தின் தளரா ஊக்கத்தையே காட்டுகிறது.

ஆறு முதல் பனிரெண்டு வரை மற்ற ஏழு காண்டங்கள் இன்னும் கூட எங்களுக்குக் கிடைக்கவில்லை என்பதை வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியுள்ளது. அண்மையில் நெருங்கிக் கொண்டிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டுக்கு முன்னதாக பன்னிரு காண்டங்களையும் படைத்து விட வேண்டும் என்ற எம் முயற்சி பலித்தால் தமிழ்த்தாய் பூரிப் படைவாள்

நூல் வைத்திருப்பவர்கள் பெரிய மனது வைக்க வேண்டும். தங்களிடம் உள்ள இந்தச் செல்வம் காலத்தால் சிதைக்கப்பட்டு அழியும் நிலையில் உள்ளது என்பதை உணர வேண்டும். அப்படி அழிந்து விட்டால் பிறகு அதன் இடத்தை நிரப்புவதற்கு வேறெதனாலும் முடியாது. இந்தத் தமிழ்ச் செல்வத்தையும் அடியோடு இழந்து விடும் படியாகவே நேரிடும் என்பதையும் உணர வேண்டும்.

தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் துரோகம் செய்தவர்கள் என்ற நிலைமைக்கு ஆளாகாமல்- இந்த நூல் காப்பாற்றப் பட உதவி செய்யும் புண்ணியவான்கள் உலகம் உள்ளவரை நினைக்கப்படுவார்கள்.

இன்னும் நம்பிக்கை இருக்கிறது.

பனிரெண்டு காண்டங்களும் தொடர்ந்து வெளிவரும். இடையிலே தொடர் அற்றுப் போகாமல் தொடர்ச்சியாகவே வெளிவரும் என்று நம்புவோம், நமது நம்பிக்கை வீண் போகாது.

பதிப்பாசிரியர்
எஸ்.பி. இராச்சந்திரன்.

Koviloor Digital Library

பதிப்புரை

அகஸ்தியர் பனிரெண்டாயிரம் என்னும் இப் பெருநூல் காவியத்தின் சிறப்பினைத் தமிழகம் உணர்கிறது என்பதற்கு இந்த இரண்டாம் பதிப்பே உரிய சான்றாகும்.

இன்னும் கூட மக்களுக்குச் சித்தர் நெறிபற்றி ஒரு முழுமையான அபிப்பிராயம், ஒரு உருப்படியான கண்ணோட்டம் ஏற்படவில்லை என்றே நாம் கருதுகிறோம். ஆயினும் சித்தர் நூல்களில் ஈடுபாடு, அதில் என்னதான் இருந்கிறது பார்க்க வேண்டும் என்ற எண்ணம், சித்தர்களைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்ற அவா தமிழர்களிடையே ஏற்பட்டு வருவது கண்டு பூரிப்படைகிறோம்.

ஒரு நல்ல ஆரம்பம் உண்டாகிவிட்டது. விதை முளைக்கத் தொடங்கி விட்டது. அது இனித் தழைத்துப் படர்ந்து வளர்ந்தே ஆக வேண்டும். அதை இனி யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்பது குறித்து மகிழ்வடைகிறோம்.

ஆனால் இன்னும் கூட அகஸ்தியர் பனிரெண்டாயிரத்தில் ஆறு முதல் பனிரெண்டு வரை உள்ள மற்ற ஏழுகாண்டங்கள் கிடைக்க வில்லை என்பதை நினைக்கும் போது வேதனையாகத்தான் இருக்கிறது.

இங்கே இருக்கிறது அங்கே இருக்கிறது என்று சொல்கிறார்கள். யாரும் கொடுக்க முன் வரவில்லை. அதை ஏதோ பொக்கிஷம் என்று நினைத்து மூடி முடி வைத்திருப்பதில் அவர்களுக்கு ஏதோ ஒரு ஆனந்தம்!

ஓலையானாலும் காகிதம் ஆனாலும் அழியக் கூடிய பொருள்கள். ஏற்கெனவே அவை மக்கிப்போன நிலையில் தான் உங்களிடம் இருக்க முடியும். இன்னும் வைத்துக் கொண்டிருந்தீர்களானால் காலம் அவற்றை அழித்து விடும். செல்லரித்துப் போன ஓலை களையும், பிரித்தால் ஒடிந்து விழும் காகிதங்களையும் பார்த்துப் பார்த்துக் கற்றோர் வேதனை யடையத்தான் வேண்டுமா?

இவை அழிந்து போகாமல் காப்பாற்றுங்கள் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

வணக்கம்
எஸ். பி. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்

Koviloor Digital Library

91/41

பொருளடக்கம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

முற்றும்

Koviloor Digital Library

உ
கடவுள்துணை

பதினெண் சித்தர்களில் மகாமகத்துவம்
பொருந்திய அகத்திய முனிவர்
திருவாய் மலர்ந்தருளிய

அகஸ்தியர் 12000

என்னும் பெருநூல் காவியம்

நான்காவது காண்டம்

காப்பு

அண்டமதைத் தான்படைத்த ஐயன்காப்பு
அப்பனே அரன்மாலும் பிரமன்காப்பு
தொண்டர்முதல் தாள்வணங்கு மனோன்மணியாள்பாதம்
தோராம லம்பாளின் பாதம்போற்றி
வண்டுறையுந் தேன்குழலாள் சரஸ்வதியேகாப்பு
வான்முதலோர் இந்திரனார் தேவர்காப்பு
தண்டுளவ மாலையணி கிருஷ்ணபூபன்
தாமரையின் திருவடிகள் காப்புத்தானே. 1

நூல்

காப்பான புலஸ்தியனே கருவுள்ளானே
கவிராஜ கண்மணியே கருதக்கேளீர்
மூப்பான சாத்திரங்கள் மூன்றுகோடி
மூதுலகில் பாடிவைத்தார் லக்கோயில்லை
சாப்பான சாபமதை நிவர்த்திசெய்து
சாங்கமுடன் பாடிவைத்த குருநூலப்பா
தூக்கான குருநூலாம் பெருநூலப்பா
துப்பகற்றிப் பாடிவைத்த வுண்மைநூலே. 2

Koviloor Digital Library

நூலான பனிரண்டு காண்டமப்பா
நுட்பமெலா மிதற்குள்ளே காணலாகும்
பாலான வசுவனியார் சொன்னநீதி
பாலகனே யுபதேச மிகவுங்கேட்டு
மாலான வன்பதினா யிரத்தை
மார்க்கமுடன் றான்சுருக்கி மானிலத்தில்
காலான பன்னீரா யிரந்தானாகக்
காசினியில் பாடிவைத்தேன் காண்டம்பாரே. 3

பாரப்பா காண்டத்திற் காயிரந்தான்
பாடிவைத்தேன் பனிரண்டு காண்டமாக
நேரப்பா மூன்றுபனி ரண்டதாக
நேர்மையுடன் பாடிவைத்தேன் மூன்றுபாகம்
ஆரப்பா யிந்நூல்தான் முதற்பாகந்தான்
அப்பனே வின்னமிரு பாகமப்பா
சீரப்பா பன்னீரா யிரந்தானப்பா
சிறப்புடனே பாடிவைத்த நூல்களாமே. 4

நூலான விந்நூல்போ லின்னம்ரெண்டு
நுணுக்கமுடன் பாடிவைத்த நூல்தானாகும்
பாலான முப்பத்தா றாயிரந்தான்
பாலகனே பாடிவைத்தேன் மாந்தற்காக
சேலான நூல்தனிலே யிந்தநூலாம்
சிறந்தபன்னி ராயிரந்தா னென்னலாகும்
ஆலான சாபமதை நீக்கியேதான்
அப்பனே பாடிவைத்தேன் பெருமைகேளே. 5

கேளப்பா ரெண்டுபன் னீராயிரந்தான்
கெவனமுடன் பாடிவைத்த னூலிரண்டும்
தாளப்பா சாபமுடன் சொன்னனூலாம்
சதுர்முகமா மூன்றுயுக மாந்தருக்கு
கோளப்பா நேராம லுரைத்தனூலாம்
கொற்றவனே புலஸ்தியனே சுகுணமாரா
மீளப்பா விந்தபன்னீ ராயிரந்தான்
மிக்கவே கலியுகத்தார்க் கேற்றநூலே. 6

Koviloor Digital Library

ஏற்றவே சாபதை நீக்கியேதான்
யெழிலுடனே கலியுகத்தார்க் குகந்ததாக
சீற்றமது தான்போக்கி சின்மையோனே
சிற்பரனே பாடிவைத்த பெருநூலாகும்
கூற்றனுக்கு விடமில்லை யிந்தநூலாம்
குருபரனே புலஸ்தியனே புண்ணியாகேள்
மாற்றமுடன் நாமுரைத்த விரண்டுகோர்வை
மறைத்து வைத்தார் சதுர்யுகமாய் நாதர்தாமே. 7

தாமான நாதாக்கள் தரணிமீது
தாக்குடனே விருபத்து நாலாயிரத்தை
சாமானிய மானதொரு பொதிகைதன்னில்
தண்மையுடன் கற்பாரை யடிவாரத்தில்
நாமேதான் சொன்னபடி சாபமீய்ந்து
நலமுடனே கருங்கல்லாம் பேழைதன்னில்
கோமானே சமாதியது பீடமப்பா
கொற்றவனே பதனமது செய்தார்காணே. 8

காணவே புலஸ்தியனே மச்சகேந்திரா
கருவுள்ள கண்மணியே கவிவல்லோனே
ஊணவே முன்னுரைத்த வைந்துபத்தில்
வுத்தமனே முப்பத்தா றாயிரந்தான்
ஆணவமாம் பெருநூலா மூன்றுபாகம்
அப்பனே தான்போக பதினாலப்பா
மாணமரும் பதினாலா யிரத்திலப்பா
மார்க்கமென்ற பாதைவழி செப்புவேனே. 9

செப்பவென்றால் பஞ்ச காவியந்தானைந்து
சேர்வைதரும் சதுர்காண்டம் நாலாயிரந்தான்
ஒப்பமுடன் காவியமா யிரத்தைனூறாம்
ஓகோகோ சுருக்கமது வெண்ணூறாகும்
தெப்பமதில் சாகரத்தில் போனநூலாம்
தீர்க்கமுடன் வைநூறு மெழுநூறாகும்
தப்பிதங்கள் நேராத வறுநூறப்பா
தாரணியில் நாநூறு யென்னலாமே. 10

Koviloor Digital Library

என்னலா முன்னூறு கருக்கிடைதானப்பா
யெளிதான வொருநூறு சுருக்கந்தானாம்
சொன்னதொரு வறுபதுதான் சூத்திரந்தான்
சொற்பெரிய விருபதுதான் சூட்சாசூட்சம்
நன்னயமாம் பதினொன்று குளிகையப்பா
நலமான வைந்த்துவு முல்கங்காண்க
பன்னவே மூன்றதுவு முடிவுகாலம்
பகர்ந்தேனே வொன்றுமுத லன்பதுதானே. 11

தானான வன்பதினா யிரந்தானப்பா
தாரணியில் பாடிவைத்தேன் சாகரந்தான்
கோனான சாகரத்தைக் குறுக்கியேதான்
கொற்றவனே பாடிவைத்த பெருநூலப்பா
தேனான பெருநூலாம் பனிரண்டுகாண்டம்
தேற்றமுடன் மாணாக்கர் பிழைக்கவென்று
மானான மகதேவர் கிருபையாலே
மானிலத்தில் பாடிவைத்த பெருநூலாமே. 12

பெருநூலாம் குருநூலாம் நான்காம்காண்டம்
பேருலகில் பாடினதோர் பெருநூலாகும்
தருவான காண்டமது நாலாங்காண்டம்
தாக்கான வுடல்பொருள்க ளாதியந்தம்
கருவான நூலிதுக்கு எனந்தங்கோடி
காசினியில் நாதாக்கள் கூறாவண்ணம்
ஒருமையுடன் பலநூலுங் கண்டாராய்ந்து
வுத்தமனே பாடினதோர் கருநூலாமே. 13

பொதிகை மலை சிறப்பு

கருவான மலையதுதான் யென்னசொல்வேன்
காசினியில் நாதாக்க ளிருக்கும்ஸ்தானம்
பருவதமாம் மகமேரு கிரித்தானப்பா
பாலகனே சித்துமுனி யிருக்கும்நாடு
உருவமெனும் சித்தாதி ரூபம்போல
வுத்தமனே மலையோர மனேகமுண்டு
சொரூபமெனும் ரிடிநாதர் சித்துதானும்
சுந்தரனே சதாகாலந் தரிசிப்பாரே. 14

Koviloor Digital Library

பாரேதான் மலையோரஞ் சுனைதானுண்டு
பாலகனே தேவமகா ரிடிதானங்கே
சேரேதான் நான்குபுறம் காவலப்பா
செம்மலுடன் மேற்பக்கம் பிரிங்கிசித்தர்
மாரேதான் கீழ்பக்கம் பத்மசித்து
மன்னவனே தென்புறத்தில் கெவுண்டசித்தர்
தீரேதான் வடபுறத்தில் புஜண்டசித்து
தீர்க்கமுடன் கொலுக்காவ லிருப்பர்தானே. 15

தானான மத்தியமாம் கிரிமேலப்பா
தாக்கான வெள்ளியங் கிரியேயென்பார்
தேனான மனோன்மணியா ளிருக்கும்பீடம்
தேற்றமுட னயிராவத மென்னலாகும்
கோனான குருபீட மசுவனியார்தாமும்
கொற்றவனே வீற்றிருக்கும் கொலுக்கூடந்தான்
மானான திருக்கூட்டம் சித்தர்நாதர்
மகாரிடிக ளிருக்கின்ற கொலுதான்காணே. 16

கொலுவான பொதிகையிலே காமதேனு
கொற்றவனே சித்தர்பதம் பணிந்துபோற்றும்
வலுமையுள்ள கடலானை காவலப்பா
வளம்பெரிய சித்தருட கிரியில்தானும்
மறுமையாந் தேவாதி கன்னிமார்கள்
மகதேவர் சித்தர்மகா ரிடிகளுக்கு
கொலுவுடனே சமாதியென்ற பூசைக்கல்லோ
கொடியதவத் துடனேவல் புரிகுவாரே. 17

அகஸ்தியர் தீர்த்தம்

புரியவே வடவாச லசுவனியாந்தேவர்
புகழுடனே கட்டிவைத்த தீர்த்தமப்பா
அரியதவம் பெறுவதற்கு வடியேனுக்காய்
அகஸ்தியனார் தீர்த்தமென சமைத்தாரங்கே
நெறியான யெந்தனுட தீர்த்தமப்பா
நேர்மையுட னகஸ்தியனார் தீர்த்தமென்பார்
தெரியாத லோகமதில் மாந்தரப்பா
தெரிசித்தால் யோககசித்தி பெறுவார்தாமே. 18

Koviloor Digital Library

பெற்றதுவும் தீர்த்தமதில் முழுகினோர்க்குப்
பேரான சகலகச ரோகமெல்லாம்
பற்றறவே நீங்கியேதான் காயகற்பம்
பாருலகில் பெறுவதற்கு யிடமுண்டாகும்
சிற்சொரூப மானந்த நிலையையப்பா
சிற்பரனே காட்டுதற்கு வையமுண்டோ
கற்பெரிய மண்டபமும் சிவாலயந்தான்
கண்டவற்கு மகிமையது கூறுவேனே. 19

கூறுவேன் புலஸ்தியனே மச்சகேந்திரா
கொற்றவனே கோமானே குணமுள்ளானே
ஆறுமுதல் நான்கு வேதங்கள்தானும்
அப்பனே அறுபத்து நாலுசாஸ்திரம்
தேறுகலை யானபதி னெண்பேர்நூலும்
தெளிவான வாகமங்கள் பதினெண்கீதம்
கோறுமுனி சங்கத்தார் தொகுப்பனைத்தும்
கொற்றவனே திரவியங்க ளதீதந்தானே. 20

தானான யுகமதுவும் சங்கம்கோடி
தண்மையுள்ள பரிபாஷை லக்கோயில்லை
தேனான மதியமுர்தங் கொள்ளும்ஞானம்
தெகிட்டாத நவகோடி நாதர்சித்தர்
மானான பரஞ்சுடருக் கொப்பதான
மானிலத்தி லுண்டான முனிவர்யோகி
பானான சிவவேடம் பூண்டஞானி
பாலகனே பாடிவைத்த நூல்காண்பீரே. 21

காணவே நூலதனைக் கண்டபோதே
பான்மையுட னவர்பாதம் மிகவேநோக்கி
பூணவே சின்மயத்தைப் போற்றிசெய்து
புகமுடனே நூலதனைத் துதியேகொள்ளு
ஆணவங்கள் தானொடுங்கி யன்புள்ளானே
அம்பாளின் மலரடியை யஞ்சலித்து
நீணவே தீர்த்தமதில் ஸ்நானஞ்செய்து
நிஷ்களங்க மானதமாம் பூசைகொள்ளே. 22

Koviloor Digital Library

கொள்ளவே யுந்தமக்கு நூல்தான்கிட்டும்
கொற்றவனே நாலுயுக யுகாந்தமெல்லாம்
உள்ளபடி யுந்தமக்கு நூல்கள்தன்னா
லுத்தமனே லோகபதி வதிசயங்கள்
எள்ளளவும் குறையாம லபிக்கும்பாரு
யெளிதான யேற்றமொன்று யாமுரைப்போம்
தெள்ளமிர்த மானதொரு ஞானப்பாலை
தேற்றமுடனூட்டிடுவார் சித்தர்பாரே. 23

பொதிகை சங்கப்பலகை

பாரப்பா புலஸ்தியனே மச்சகேந்திரா
பாலகனே யுந்தமக்காய் சித்தரெல்லாம்
நேரப்பா மெய்ஞானப் பாலைத்தானும்
நெறியுடனே ஞானோப தேசஞ்செய்தார்
சீரப்பா வாசீர்மத் தீர்த்தத்தாலே
சிறப்புடனே பொதிகைமலை சங்கமப்பா
தீரப்பா நவகோடி சித்துநாதர்
திறமுடனே யெழுதிவைத்த பலகைதானே. 24

பலகையாம் சங்கமென்ற பலகையப்பா
பாதாளத் தீர்த்தமதில் அடிவாரத்தில்
அலகையுடன் கிரேதாயி னுகத்தில்தானும்
அப்பனே தீர்த்தமதி லடக்கஞ்செய்தார்
வலகையுடன் பொதிகைமலை சங்கத்தார்கள்
வாகுடனே வசுவனியார் தம்மைக்கண்டு
சலகையுடன் வுத்தாரம் விடையும்பெற்று
சாங்கமுடன் தீர்த்தமருகில் சென்றர்காணே. 25

சென்றாரே நவகோடி ரிடிகள்நாதர்
செந்தாசரைத் தீர்த்தமதி லிறங்குதற்கு
குன்றான மலைதனையே விட்டிறங்கி
குறிப்புடனே தீர்த்தமதைக் கண்டுமல்லோ
வென்றிடவே படியிறங்கி காவல்கார்க்கும்
வேதாந்த ரிடியாரைக் கேள்விகேட்க
நன்றியுடன் ரிடியாரும் நாதர்தம்மை
நலமுடனே வாக்குரைத்த வண்மைகேளே. 26

Koviloor Digital Library

கேளப்பா நாதர்களே சித்துபாலா
கெடியான திரேதாயி னுகத்திலப்பா
ஆளப்பா சங்கத்து நாதர்சித்து
அப்பனே சாபமுடன் தீர்த்தந்தன்னில்
பாளப்பா போகாம லடிவாரத்தில்
பாதாள வஞ்சன சங்கிலியைமாட்டி
தாளப்பா வூஞ்சலென்ற பலகைதன்னில்
சாங்கமுடன் சாபமிட்டுப் பதிந்தார்தாமே. 27

பதிந்துமே யெந்தனையும் காவல்கொண்டார்
பாங்குடனே காவல்தி காரத்தாலே
வதிந்துமே வுத்தாரந் தருவதற்கு
வடியேனா லாகாது யென்றுரைத்து
கதிந்துமே வசுவனியார் வாக்குரைத்தால்
காவலது தாள்திறந்து தீர்த்தங்காண
பொதிகைமலை சித்தருக்கு விடைகள்நேரும்
பொங்கமுடன் தீர்த்தமதைக் காணலாமே. 28

சங்கப்பலகை அசுவனியார் உத்தாரம்

காணலா மென்றுரைக்க ரிடியார்தாமும்
கடுகெனவே வசுவனியார் தம்மைக்கண்டு
வேணபடி யுபசார வார்த்தையோடும்
உத்தமர்கள் சித்தர்முதல் வணங்கியேதான்
ஆணவங்கள் தானொடுங்கி யன்பரெல்லாம்
அப்பனே யசுவனியார் விடைதான்கொண்டு
நாணமுடன் பின்னுமது பொய்கைகண்டு
நளினமுடன் பலகையிடம் வந்திட்டாரே. 29

வந்தாரே தேவரிடி யாருமப்போ
மன்னவனே சங்கமென்ற பலகைதன்னை
சிந்தையுடன் தான்காட்டி ஞானப்பாலை
தெவிட்டாமல் சாத்திரத்தின் முறைபாடோடும்
அந்தமுடன் வாக்களித்து சித்தர்தாமும்
அன்புடனே வரமதுவு மிகவாய்த்தந்து
சொந்தமுடன் சமாதிக்கு யிடமுங்காட்டி
சொரூபரவர் மனக்குறைகள் நீக்கினாரே. 30

Koviloor Digital Library

அசுவனியார் சிவகுளிகை

நீக்கவே யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
நீதியுள்ள புலஸ்தியனே மச்சகேந்திரா
ஆக்கமுட னசுவனியார் வாக்குபொய்யா
அப்பனே நாம்கண்ட முறைதானப்பா
ஊக்கமுடன் யாமுனக்கு உபதேசிப்பேன்
வுத்தமனே சிவராச குளிகைதன்னை
நோக்கமுட னுந்தமக்கு சித்தர்தம்மால்
நொடிக்குள்ளே யுபதேசம் நுவலுவேனே. 31

நுவலுவேன் வெள்வங்கம் பலந்தானப்பா
நுணுக்கமுடன் சிந்தித்து செப்பக்கேளீர்
சவலமது நேராமல் துய்யபாலா
சாங்கமுடன் கள்ளிப்பால் சுறுக்கேயீவாய்
கவலையுடன் திருகுகள்ளிப் பாலாலப்பா
காவலனே சுறுக்கதுவும் சாமம்நாலு
அவலதுபோ லிடித்துமைந்தா சூதமப்பா
அதற்கிரட்டி தான்சேர்க்க விதிதான்கேளே. 32

விதியான சூதமது வொன்றாய்ச்சேர்த்து
வித்தகனே தானுருகி வெட்டைமீறி
மதியான ரசிதமது போலிருக்கு
மகத்தான குளிகைக்கு சாரணையேயாகும்
துதியோடும் சாரணைக ளேதென்றாக்கால்
துப்புரவாய் நிம்பத்தின் சாறேயாகும்
மதிபோன்ற குளிகைக்கு சாமம்நூறு
மதிப்புடனே கொடுத்திடவே யிறுகுந்தானே. 33

இறுகுமே மின்னமொரு சாரணைகள் கேட்பீர்
யெழிலான வேம்பினிட தயிலமப்பா
குறுகுமே நாற்சாமம் சுறுக்குதாக்கு
கொற்றவனே கல்லாகி யிரும்புபோலாம்
அறுகினிட தயிலமப்பா யிறக்கிமைந்தா
அப்பனே நாற்சாமம் சுறுக்குதாக்கு
நறுமையாம் வேங்கையுட தயிலமப்பா
நாயகனே நாற்சாமம் சுறுக்குதாக்கே. 34

Koviloor Digital Library

தாக்கவே மலைத்தேனு நாற்சாமந்தான்
தகைமையுடன் வாலுழுவைத் தயிலம்வாங்கி
போக்கான சூதமதை நான்குசாமம்
பொங்கமுடன் நாற்சாமம் சுறுக்குதாக்கு
ஆக்கமுடன் வில்வாதித் தயிலம்வாங்கு
அப்பனே நாற்சாமம் சுறுக்குதாக்கு
நோக்கமுள்ள தில்லைப்பால் நான்குசாமம்
நுவலவே சுருக்கிடவே யிறுகுந்தானே. 35

உடற்கருவு

தானான குளிகையது யிறுகுதற்கு
தகைமையுள்ள கருமான மின்னங்கேளு
மானான மானிடர்க ளிறக்குங்கால்
மகாதேவா சொல்லுகிறேன் மருமங்கேளீர்
தேனான பாஷாணம் பலமொன்றாகும்
தெளிவான சிங்கியது பலமொன்றாகும்
பானான கெவுரியது பலமொன்றாகும்
பாலகனே கெந்தியது பலமொன்றாமே. 36

ஒன்றான பூரமது பலமொன்றாகும்
ஓகோகோ நாதாக்கள் கூறும்வீரம்
குன்றான பூநீறு சுன்னமப்பா
குறிப்பான சுன்னமென்ற வழலைதானும்
வென்றிடவே யிருசரக்கும் பலமொன்றாகும்
வேகமுள்ள துருசதுவும் பலமொன்றாகும்
சென்றிடவே சாரமது பலமேயாகும்
செழிப்பான கெவுரியது பலமுந்தூக்கே. 37

தூக்கையிலே மதியுப்பு பலமேயாகும்
துப்புரவாய் சீனமது பலமேயாகும்
ஆக்கமுடன் காரமது பலமேயாகும்
அப்பனே கல்லுப்பு பலமேயாகும்
தாக்கவே மெழுகதுவும் பலமேயாகும்
தண்மையுள்ள வபினியது பலமேயாகும்
நீக்கமுடன் கஞ்சாவும் பலமேயாகும்
நிஷ்களங்க மானதொரு புழுகுசேரே. 38

Koviloor Digital Library

சேர்க்கவே பச்சையென்ற பூரந்தானும்
செழிப்பான கோரோசன மிவ்விரண்டும்
பார்க்கவே பலமதுதா னிரண்டேயாகும்
பாலகனே கஸ்தூரி பலமேதாக்கு
ஏர்க்கவே யிதுவெல்லா மொன்றாய்க்கூட்டி
யெழிலுடனே கல்லுரலில் நையத்தாக்கி
பூர்க்கவே மைபோலே பொடியதாக்கி
புங்கவனே வதிற்கூறு முறையைக்கேளே. 39

முறையான முறையதுவு மேதென்றாக்கால்
முடிமன்னா நாமுரைப்போ மச்சகேந்திரா
துறையான முறையோடு சரக்கெல்லாந்தான்
தூய்மையுடன் கலசமென்ற பாண்டத்துள்ளே
நிறையோடு பாண்டமதி லிட்டுமைந்தா
நிஷ்களங்க மாகவேதான் முன்னேசொன்ன
பறையான பிரேதமேன்ற மானிடந்தான்
பாலகனே தீயிட்டு வேகுங்காலே. 40

காலான காலமது மசானந்தன்னில்
காவலனே காத்திருந்து மதியம்பூண்டு
ஆலான சவமதுவு மிடுப்புபாகம்
அப்பனே கலசமதை யடியிற்றாக்கு
கோலமுடன் தீயாறி யெடுத்துப்பார்க்க
கொற்றவனே தயிலமது யென்னகூர்வேன்
பாலான பசுமையென்ற தயிலமப்பா
பாங்குடனே சீசாவிற் பதனம்பண்ணே. 41

பண்ணவே தயிலமதை யெடுத்துபாலா
பாங்குடனே முன்னுரைத்த சூதந்தன்னை
நண்ணமுடன் யெண்சாமம் சுறுக்குதாக்கு
நளினமுடன் வங்கமென்ற சுறுக்குதாக்கு
தண்மையுடன் தானிருகிக் கட்டிப்போகும்
தாக்கான தீதனக்கு வடங்கியாடும்
வெண்மையாய் ரசீதமென்ற குளிகையாச்சு
வேதாந்தத் தாயினது வசுவனியார்வாக்கே. 42

Koviloor Digital Library

கேசரி தயிலம்

வாக்கதுவும் பொய்க்காது புண்ணியாகேள்
வாகுபெற குளிகைக்கு யின்னங்கூர்வேன்
ஆக்கமுள்ள புலஸ்தியனே மச்சபாலா
அன்புடனே யாமுரைப்போ மமிர்தவானே
மாச்சலது நேராது துய்யபாலா
மானிலத்தில் கோவேறு கேசரிதானப்பா
நோக்கமுடன் பிடித்துவந்து சமாதிபூண்டு
நெடிதான மண்டலந்தா னெடுக்கக்கேளே. 43

எடுக்கவே மண்ணெல்லாம் போக்கிமைந்தா
யெளிதான வஸ்தியைத்தான் பொறுக்கியப்பா
தொடுக்கவே பாண்டமதி லிட்டுபாலா
தோராமல சீலையது வலுக்கச்செய்து
இடுக்கமது நேராமல் பாண்டந்தன்னை
யெழிலான குழித்தயில மிகவேவாங்கி
ஒடுக்கமென்ற தயிலமதை பின்னுமப்பா
வுத்தமனே சீசாவிற் பதனம்செய்யே. 44

செய்துமே முன்னுரைத்த குளிகைக்கப்பா
செப்புகிறேன் சாரணைதான் தன்மையோடும்
பையவே குளிகைக்கு சுறுக்குதாக்குப்
பாலகனே யென்னசொல்வேன் பளிங்குபோலாம்
துய்யநல்ல ரசமதுவுங் கட்டிப்போகும்
தூய்தான குளிகையது சொல்லொண்ணாது
வெய்யபுக பூசுவனியார் தேவர்வாக்கு
வேற்றுமைகள் நேராது வேந்தாகேளே. 45

வேந்தனே குளிகையது செல்லுமார்க்கம்
வேதாந்தத் தாயினது வருளினாலே
சாந்தமுடன் சிவயோக நிலையில்நின்று
சாங்கமுடன் சாதிக்கும் பருவந்தன்னில்
பாந்தளெனு மூச்சதுவு மேலெட்டாமல்
பாங்குடனே குளிகைதனை வாயிலிட்டு
காந்தமெனும் குளிகையினால் வாசியோகம்
கலங்காமல் கோடிவரை நடத்தலாமே. 46

Koviloor Digital Library

நடக்கவே சிவயோக நிலைதானப்பா
நாதாக்க ளுரைத்தவண்ணம் கூறொண்ணாது
தொடக்கமுடன் காடுவனாந் திரங்களெல்லாம்
தோற்றமுடன் குளிகையில் செல்லலாகும்
அடக்கமுடன் குளிகைதனைக் கண்டபோதே
அப்பனே மிருகமென்ற சாதியெல்லாம்
சடக்கமது நேராமல் சதுருள்ளானே
தண்மையுட னுமைப்பணியும் பாவலோனே. 47

பாவலனே புலஸ்தியனே பண்புள்ளானே
பாருலகி லுனைப்போல சித்துமுண்டோ
ஆவலது நேராம லன்புள்ளானே
ஆகாச மேல்வரையில் செல்லலாகும்
காவலென்ற வேந்தர்புர மன்னர்நாடு
கட்டழகா குளிகையினாற் செல்லலாகும்
போவதுவு மெத்தூரம் நடந்திட்டாலும்
பொங்கமுட னாயாச மில்லைகாணே. 48

இல்லையே சிவராஜ குளிகைதன்னால்
யிட்டமுட னஷ்டசித்து வாடலாகும்
தொல்லையது நேராது துய்யபாலா
தொல்லுலகி லுனைப்போல சித்துமுண்டோ
எல்லையுள்ள சித்தர்முனி நாதர்தாமு
மெல்லவரு முனைப்பணிவார் குளிகையாலே
சொல்லியதோ ரசுவனியார் தேவர்வாக்கு
தொல்லுலகில் பொய்யாது மெய்யாம்பாரே. 49

பாரப்பா வசுவனியார் தேவர்வாக்கு
பாருலகில் நாதாக்கள் மெய்ச்சும்வாக்கு
ஆரப்பா வசுவனியார் போல்நமக்கு
அப்பனே வாக்குரைத்தார் நாதரில்லை
தேரப்பா மனந்தேறி யுந்தமக்கு
தேற்றமுடன் உபதேசம் கண்டோம்கண்டாய்
காரப்பா மதியமுர்தம் பூண்டுமேதான்
பாருலகி லெந்நாளும் பரிவாய்நில்லே. 50

Koviloor Digital Library

கேசரி மை

நில்லப்பா புலஸ்தியனே மச்சகேந்திரா
நீதியுடன் தானடக்கும் புனிதவானே
சொல்லவே கேசரியா மகிமையப்பா
சுந்தரனே கோவேறு கழுதையப்பா
வெல்லவே கழுதையுட பிச்சுதானும்
வீரான வாந்தையுட பிச்சுதானும்
புல்லவே காடையுட பிச்சுதானும்
புகழான செம்போத்து பிச்சுதானே. 51

பிச்சான மயிலினிட பிச்சுதானும்
பேரான கருங்குருவி பிச்சுதானும்
நச்சரவ மானதொரு பாம்பின்பிச்சும்
நலமான பச்சோந்தி பிச்சுதானும்
மிச்சான மீன்குத்தி பிச்சுதானும்
மீளவே வாயசத்தின் பிச்சுதானும்
மச்சான வௌவாலின் பிச்சுதானும்
மன்னவனே கூட்டவகை யின்னங்கேளே. 52

இன்னமுண்டு புலஸ்தியனே மச்சகேந்திரா
யெழிலான பாம்பரணை பிச்சுதானும்
சின்னமுள்ள குயிலினிட பிச்சுதானும்
சிறப்பான கூகையுட பிச்சுதானும்
நன்னயமா மானினிட பிச்சுதானும்
நலமான செங்கரடி பிச்சுதானும்
சொன்னபடி யூர்க்குருவி பிச்சுதானும்
சோராத பச்சரவம் பிச்சுதானே. 53

தானான கௌதாரி பிச்சுதானும்
தண்மையுள்ள மயிலினிட பிச்சுதானும்
கோனான பரியினது பிச்சுதானும்
கொற்றவனே தேவாங்கு பிச்சுதானும்
மானான கருங்குரங்கு பிச்சுதானும்
மகத்தான புறாவினிட பிச்சுதானும்
பானான பச்சைபுறா பிச்சுதானும்
பாங்கான கருங்காக்கை பிச்சுதாமே. 54

Koviloor Digital Library

கருநேத்திரம்

தாமான பிச்சுடனே யின்னஞ்சொல்வேன்
சார்பான புலஸ்தியனே மச்சகேந்திரா
ஆமான மானகரு வின்னஞ்சொல்வேன்
அப்பனே கரும்பூனைக் கண்ணுமாகும்
சாமான மானதொரு புலியின்கண்ணும்
சார்பான செம்போத்துக் கண்ணுங்கூட்டு
நாமாக சொன்னதொரு பேய்நாய்க்கண்ணும்
நலமான கருங்குரங்குக் கண்ணுதானே. 55

கண்ணான கண்ணதுவு மேதென்றாக்கால்
கன்னவனே செம்புலியின் கண்ணுதானும்
மண்ணான விருதலை மணியின்கண்ணு
மகத்தான கருவேங்கை கண்ணுதானும்
விண்ணான கரும்பூனை கண்ணுதானும்
வித்தகனே வாந்தையுட கண்ணுதானும்
தண்ணான பருந்தினிட கண்ணுதானும்
பாலகனே யின்னமுண்டு பகரக்கேளே. 56

கேளப்பா புலஸ்தியனே கருவுள்ளானே
புகலுகிறேன் புலியினிட கண்ணுதானும்
தாளப்பா கல்லானைக் கண்ணுதானும்
தண்மையுடன் கேசரியின் கண்ணுதானும்
வாளப்பா தேவாங்கு கண்ணுதானும்
வளம்பெரிய நாய்மண்டை பரியின்மண்டை
சூளப்பா தேசியது மண்டைதானும்
சுந்தரனே கேசரியின் மண்டைசேரே. 57

மண்டையா மிதுவெல்லா மொன்றாய்க்கூட்டி
மார்க்கமுடன் தலைப்பிண்டக் கருவாலாட்டி
சண்டமா ருதம்போல சரக்கெல்லாந்தான்
சாங்கமுடன் மைபோல யரைத்துமைந்தா
அண்டமெனும் பிண்டத்தின் கருவினாலே
அப்பனே யரைக்கும்போ தளவுசொல்வேன்
தொண்டர்புகழ் கஸ்தூரி புழுகுதானும்
தோராத பச்சையென்ற பூரந்தானே. 58

Koviloor Digital Library

பூரமாம் கோரோசனை குங்குமப்பூ
புங்கமுடன் றானரைப்பாய் மடியுமட்டும்
சாரமுடன் பிண்டமென்ற ஜெயநீர்தன்னால்
சட்டமுட னுலருமட்டு மரைப்பாயப்பா
காரமெனும் வாறுவகை செயநீர்தன்னால்
கடிந்தரைப்பா யெண்சாமம் கருகுமட்டும்
வீரமெனும் சரக்கெல்லா மொன்றாய்ச்சேர்ந்து
விருப்பமுடன் மைப்பொடியா யாகுந்தானே. 59

ஆகுமே பொடியென்ற மையைத்தானும்
அப்பனே பசுவினிட நெய்யினாலே
பாகுபோல் மையாக வெண்ணைபோல
பாங்குடனே தானரைப்பாய் சாமமெட்டு
வாகுபெற சுடர்த்தயில மாக்குதற்கு
வளம்பெறவே வெள்ளையென்ற சீலைதன்னில்
சாகுபட வேமுடித் துணியில்வெண்ணை
சட்டமுடன் மேற்பூசி காயப்போடே. 60

போடவே சீலையது வுலர்ந்துபோகும்
பொன்னவனே காய்ந்ததொரு சீலைதன்னை
நாட்டமுடன் திரியாக்கி காராவின்னெய்
நலம்பெறவே தோய்த்துமல்லோ செப்பக்கேளீர்
தாட்டிகமாய் திரிதனையே தீபந்தன்னில்
தண்மையுடன் கொளுத்திடவே தயிலம்வீழும்
வாட்டமுடன் தயிலமதை பதனம்பண்ணு
வளம்பெறவே யதன்பெருமை வழுத்துவேனே. 61

பெருமையா மித்தயிலம் சொல்லொண்ணாது
பேசரிய நாதாக்கள் புகலொண்ணாது
அருமையா மித்தயில மன்புள்ளானே
அப்பனே கடுகளவு யெடுத்துமைந்தா
ஒருமையாய் புழுகதனில் மத்தித்தேதான்
வுத்தமனே லலாடமதில் திலதந்தீட்ட
சொரூபமுடன் வனாந்திரங்கள் காடெல்லாந்தான்
சுந்தரனே சென்றுசெயம் பெறுகலாமே. 62

Koviloor Digital Library

பெறுகலா மன்னரிடஞ் செல்லாகும்
பேசரிய நாதாக்கள் முனியார்தாமும்
குறுகியே யுமதிடத்தில் பத்திவைத்து
குருபரனே யெந்நாளு மதியம்பூண்டு
சிறியதொரு பாலகனே சுந்தராகேள்
சீருடனே யெப்போதும் பாதுகாத்து
முறியாமல் மனதுவந்து யுந்தமக்கு
முக்கியமுடன் ஞானப்பா லூட்டுவாரே. 63

ஊட்டவே யுந்தமக்கு கேட்டதெல்லா
முத்தமனே தான்கொடுப்பார் லக்கோயில்லை
வாட்டமுடன் ராஜாதி ராஜரெல்லா
மகிழ்ச்சியுடன் தனங்கொடுத்து வினையம்கொள்வார்
தாட்டிகமாய் மையதனை முறையுங்கேட்பார்
தண்மையுடன் பெருமைதனை யீயவேண்டாம்
காட்டிலுள்ள கோபாலா மிருகம்யாவும்
கடுகெனவே வணங்கியல்லோ வந்திப்பாரே. 64

வந்தித்து நிற்கையிலே பூபாலாகேள்
மனதுவந்து வவர்களட பதியனைத்தும்
சிந்தித்துப் பிரியமுடன் செப்பக்கேளீர்
சிற்பரனே தொடுகுறிபோல் சாற்றும்போது
அந்தமுட னிவர்தானோ கடவுளென்பார்
அப்பனே சகலசித்து மறிந்தயோகி
சொந்தமுட னுமையணைத்து சொரூபானந்தா
சொர்க்கமென்ற லோகத்தின் பதிகேட்பாரே. 65

பதியான வழிகேட்பார் பளிங்குள்ளானே
பாலமிர்தங் கொள்ளவென்று ஞானப்பாலை
துதியோடு முந்தமக்கு வூட்டுவார்பார்
துப்பகற்றி ஞானசா கரந்தான்கொள்வீர்
மதியுடனே லோகபதி வதிசெயத்தை
மார்க்கமுட னருள்புரிவீர் மன்னாகேண்மோ
கதிபெறவே வஞ்சனமா மையினாலே
காட்சியெல்லாங் கண்டிடவே வருள்கொள்வீரே. 66

Koviloor Digital Library

பாதாளநிதி காண்பிப்பது

கொள்ளவென்றால் பாதாள நிதியைக்காண
கொற்றவனே லோகபதி மா்ண்பருக்காய்
எள்ளளவு மிடையூறு தன்னைநீக்கி
யெழிலான வஞ்சனத்தைத் திலர்தங்கொண்டு
உள்ளபடி யவரவர்கள் வைத்தவைப்பு
வுத்தமனே யவர்காண மாந்தருக்கு
தெள்ளமிர்த மானதொரு புண்ணியோர்க்கு
செப்பிடவே யுபதேசம் செப்பினேனே. 67

புசுண்டர்வைப்பு

செப்பவென்றால் புசுண்டருட வைப்புகேட்பீர்
செம்மலுடன் வஞ்சனத்தின் மையினாலே
ஒப்பமுடன் தென்கிழக்குக் கடலோரந்தான்
உத்தமனே பாபநதி குளமுமுண்டு
தப்பிதங்கள் நேராமல் துய்யபாலா
தகைமையுடன் அஞ்சனமா மையினாலே
நுட்பமுடன் பதிதனிலே கடலோரத்தில்
நூன்முகமாய் சமாதியது கண்டுகொள்ளே. 68

கண்டுமே வேதாளங் காவலுண்டு
கற்பதமாம் விருட்சமது வடையாளந்தான்
தொண்டுசெய்து நெடுங்காலம் தவம்புரிந்து
தோராமல் சமுசார மிகக்கடந்து
அண்டர்பிரா னருள்காண யெண்ணங்கொண்ட
அப்பனே புசண்டரெனுஞ் சித்துதாமும்
சண்டமாரு தம்கண்டு தரணிமீது
சார்புடனே வைத்தநிதி காண்பீர்தானே. 69

காணவே வஞ்சனமா மையினாலே
கனகமெனும் பொருளனைத்து முனக்கடக்கம்
பூணவே சாத்திரங்க ளிதிகங்கள்
புண்ணியனே முன்செய்த தவத்தினாலே
தோணவே காயசித்தி நீயுங்காண்பாய்
தோராத பதவியுமக் கிட்டலாகும்
வேணபடி யுபசார வினோதம்யாவு
முத்தமனே யுந்தமக்குக் கிடைக்கலாச்சே 70

Koviloor Digital Library

மச்சமுனி வைப்பு

கிடைக்கவென்றா லின்னமொரு மார்க்கங்கேளீர்
கிருபரனே புலஸ்தியனே சுந்தராகேள்
மடைபோன்ற நதியுண்டு காவணந்தான்
மன்னவனே வடமேற்கு டில்லிக்கப்பால்
புடைசூழ்ந்த பனிநாடு விலாடனாடு
புங்கவனே அஷ்டமா சித்தியோடு
தடையின்றி சமூசார வாழ்க்கையோடும்
தாரணியில் வெகுகால மிருந்தசித்தே. 71

சித்தான சித்தரவர் காலஞ்சென்று
சீருடனே நெடுநாளா யிருந்தமட்டும்
முத்தான சமுசார வாழ்க்கையெல்லா
மூதுலகில் யாவற்று மடிந்தபின்பு
செத்தவர்க ளாசீர்மந் துலைந்தபின்பு
செகதலத்தில் யாதொன்றுங் காணாமற்றான்
பத்தியுடன் சமாதிக்கு நாளுங்காண
பாலகனே மறைத்துவைத்த நிதிகாண்பீரே. 72

நிதியான நிதியதுவும் பூமிக்குள்ளே
நீணிலத்தி லோராளு மட்டமப்பா
பதியான குழிதனிலே வாயக்காலாம்
பாங்குடனே சமைந்ததோர் மண்டபந்தான்
மதியோடுங் கண்டுமல்லோ வினயங்கொண்டு
மதிப்புடனே யெடுக்கவல்லீர் புண்ணியபூபா
துதியோடு யுந்தமக்கு நூல்கள்தானும்
துப்புரவாய் நிதியனைத்தும் கிடைக்கும்பாரே. 73

சுந்தரானந்தர் வைப்பு

பாரப்பா புலஸ்திபனே மச்சகேந்திரா
பாலகனே யெனதையர் அசுவனியாந்தேவர்
தீரமுட னவரெனக்கு வுரைத்தவண்ணம்
செப்பினேன் சத்தியவான் வாக்குபொய்யா
காரப்பா யுந்தமக்கு வாய்க்கலாச்சு
கற்பகமே கண்மணியே கவிராஜேந்திரா
ஆரப்பா யெனைப்போல சொல்வாரப்பா
அப்பனே யுபதேச மருள்கொள்வீரோ. 74

Koviloor Digital Library

அருளான வுபதேசம் கொள்வீரப்பா
அபப்னே தென்காஞ்சி நகரமப்பா
இருளான காடகந்தான் குண்ணுமேடு
யெழிலான தென்னிலங்கை யூர்தானப்பா
பொருளான ராவணனு மிருந்தநாடு
பொன்னவனே சமுத்திரமாம் குண்ணுமேடு
தெருளான குண்ணுதனைக் காண்பதற்கு
தென்னவனே முன்னுரைத்த குளிகைகொள்ளே. 75

கொள்ளவே குண்ணதுவைக் காணலாகும்
கொற்றவனே புலஸ்தியனே கவிராஜேந்திரா
தெள்ளமிர்த மானபரி பூரணந்தான்
தெவிட்டாத கவனமென்ற குளிகைதன்னால்
வள்ளலுயர் பதிதனிலே பூமியாழம்
வகுப்புடனே கெஜமூன்று நீர்தான்கிட்டும்
பள்ளமதில் குத்துக்கல் காண்பாயப்பா
பாலகனே நிதியோடு மதிகொள்வீரே. 76

மதியான திரவியங்கள் மெத்தவுண்டு
மார்க்கமுடன் சுந்தரா னந்தர்வைப்பு
துதியோடு ருத்திராட்சங் கமண்டலந்தான்
சொற்பெரிய கவசமென்ற குண்டலந்தான்
கதிகொடுக்கும் சக்கரமாம் விஷ்ணுசக்ரம்
காவலனே சூலமென்ற பாணியப்பா
நிதியுடனே துளசியென்ற தீர்த்தங்காண்பீர்
நிஷ்களங்க மானதொரு பாதங்காணே. 77

பாதமாம் குறடதுவும் வாசல்தன்னில்
பதிந்திருந்த சமாதியது மேற்புரத்தில்
நீதமுட னவரடையுங் காலந்தன்னில்
நீதியுடன் சமாதிக்கு யேகுமுன்னே
ஆதவமா முனியருகில் நிஷ்டைகொண்டு
அப்பனே சமாதிக்கு சென்றபின்பு
போதமுடன் வைத்தவொரு யிதிகாசங்கள்
பொங்கமுடன் கண்டுமல்லோ தெரிசிப்பீரே. 78

Koviloor Digital Library

தெரிசிக்க நிதியனைத்தும் நீர்தான்கொள்வீர்
தேசிகனே யுந்தமக்கு கிட்டலாகும்
பரிசுத்த மாயிருந்து சித்துபாலா
பாலகனே யெந்நாளும் பதவிபூண்டு
அரியதவம் புரிந்தல்லோ வன்புள்ளானே
அவனிதனில் நெடுங்கால மிருந்துவாழ்வீர்
பெரியரிட மாசீர்ம மிகப்பிரிந்து
பேரான பதவிக்கு யிடங்கொள்வீரே. 79

வரரிடி வைப்பு

கொள்ளவே யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
கொற்றவனே புலஸ்தியனே புண்ணியபூபா
தெள்ளமிர்த மானதொரு வரரிடியாரப்பா
தேசமெலாந் திரிந்துவந்த காயத்திரிபூபன்
வள்ளலுயர் சித்துமுனி மெய்ச்சும்பூபன்
வாகுடைய வதிசீலன் ஞானபோதன்
எள்ளளவும் நாவுதவ றாதசித்தன்
யெழிலான வரரிடியாம் நாதர்காணே. 80

நாதராம் சித்துமுனி மகிமைகூர்வேன்
நாடாண்மை கொண்டதொரு குடகுநாடு
போதமது கொண்டல்லோ ஞானசித்து
பொங்கமுடன் மெய்ஞானப் பாலையுண்டோன்
வேதமது தான்துறந்த விகடசித்து
வேதாந்தத் தாயினது வருளுங்கொண்டோன்
நாதரவர் மெய்ச்சுகின்ற முனிதானப்பா
நலமான வரரிடியார் அருமைகேளே. 81

அருமையாம் மேருவுக்கு குணபாகத்தில்
அப்பனே சித்துமுனி வாழும்நாடு
பெருமையா மண்டபந்தான் நடுமையத்தில்
பேரான கிம்புருட ரிருந்தநாடு
ஒருமையாம் வரரிடியார் வைத்தவைப்பு
உத்தமனே சலநிதி பாஷாணந்தான்
சிருமையாய் நெடுங்காலம் கஷ்டங்கொண்டு
சிற்பானே தேடிவைத்த நிதிகாண்பீரே. 82

Koviloor Digital Library

நிதியான நிதியதுவும் கூறொண்ணாது
நீடாழி யுலகமெலா மறிந்திருக்கும்
பதியான பதிவிட்டு விசுவாசத்தால்
பாலகனே புசுண்டருக்கு சீஷனாகி
கதிபெறவே சமுசார வாழ்க்கைவிட்டுக்
காவலனே சமாதிக்கு யேகவென்று
துதியோடு மேருவுக்கு குணபாகத்தில்
துப்புரவாய் சமாதிமுகம் கொண்டிட்டாரே. 83

கொண்டுமே சமாதிக்கு யிடமுங்கொண்டு
கொற்றவனே நிதியனைத்தும் தேடிவைத்தார்
தொண்டுசெய்து சிலகாலஞ் சென்றபின்பு
தீவினைக்கியிடங் கொடாத புண்ணியராகி
அண்டர் தொழும் ராட்சதரி னன்புகொண்டு
அப்பனே வெகுகோடி திரவியங்கள்
கண்டுமே சமாதியது மதியம்பூண்டு
காவலனே தேடியதோர் பொருள்கள்தானே. 84

தானான திரவியங்கள் அஞ்சனத்தால்
தகைமையுட னுந்தமக்கு கிட்டும்பாரு
கோனான யெனதைய ரசுவனியார்
கொற்றவனே யெந்தனுக் குரைத்தவண்ணம்
பானான பராபரனே மச்சகேந்திரா
பாலகனே பாலித்தே னுந்தமக்காய்
மானான மகதேவர் கிருபையாலே
மன்னவனே யுந்தமக்கு வாய்க்குந்தானே. 85

ரோமரிடி வைப்பு

வாய்க்குமே யின்னமொரு மர்மங்கூர்வேன்
மானிலத்தில் நாதாக்கள் வைத்தவைப்பு
காய்க்குமே பொன்னாடா மவந்தியப்பா
கன்னவ்னே யோசனையா் மறுநூறாகும்
தாய்க்கமலம் வீற்றிருக்கு மனோன்மணியாள்நாடு
தண்மையுள்ள ரோமரிடி சமாதிகொண்ட
மாய்க்கவே திரவியங்கள் சாத்திரங்கள்
மன்னவனே யிருக்குமிடங் கண்டுகொள்ளே. 86

Koviloor Digital Library

கொள்வதற்கு யுந்தமக்குக் காலமெய்தும்
கொற்றவனே வரரிடியார் தேடிவைத்த
அள்ளினதோர் தனமெல்ல முந்தனக்கு
அப்பனே தேவரிடி கிருபையாலே
வள்ளலெனு மையதனால் கோடிசங்கம்
வாய்த்துதே தம்பிரானே யுந்தனக்கு
கொள்ளைகொண்ட பொருளதுபோல் கிடைக்கலாச்சு
கொற்றவனே மையதனை வெளிவிடாதே. 87

விட்டாலே யுந்தனுக்கு சாபமாகும்
வீரான சாத்திரங்க ளுமக்குகிட்டும்
அட்டான பாக்கியமும் பெறுகலாகும்
அப்பனே காயசித்தி யடையலாகும்
மட்டான தனபதியு மடையலாகும்
மன்னவனே யுந்தமக்கு யோகங்கிட்டும்
திட்டமுடன் வரரிடியார் வைத்தவைப்பை
தீர்க்கமுட னனுபவிக்க காலமாச்சே. 88

சோதிமுனி வைப்பு

காலமா மின்னமொரு கருமானங்கேள்
கன்னவனே புலஸ்தியனே கவிவல்லோனே
சீலமுடன் சோதிமுனி வைத்தவைப்பு
சிற்பரனே ஜெகதீசா தெளிந்தமாரா
கோலமுடன் பொதிகைக்கு வடபாகத்தில்
கோமகனே குருபரனே யறிந்தமட்டும்
தாலமெனு மாவுடையார் கோயிலுண்டு
தனியான வாசலது காளியுண்டே. 89

காளியா மடைவாசல் தாள்திறந்தால்
கருவான மண்டபந்தா னாயக்காலம்
ஆளியெனுங் காவலது வணிவாசல்தான்
அப்பனே பிடாரிமுதல் காவலுண்டு
மாளியெனும் பின்புறத்தி லடிவாரத்தில்
மன்னவனே மையதனை தீட்டிப்பாரு
தூளியுடன் சக்கால தேவிநிற்பாள்
துப்புரவாய் வாசலது திறக்கும்பாரே. 90

Koviloor Digital Library

திறமுடைய வாசல்வழி சென்றாயானால்
திகழ்பெரிய வூஞ்சலது பலகைதோன்றும்
அறமதுவும் வழுவாத அசுவனியார்வாக்கு
அப்பனே யொருபோதும் பொய்யாதையா
உறமான சாத்திரங்கள் ஞானப்பாலு
முத்தமனே யுந்தமக்கு கிட்டலாகும்
குறமாது வள்ளியுட கிருபையாலே
குருபரனே சகலநிதி யமைக்குந்தானே. 91

அமைக்குமே முன்தவத்தா லிந்தமைதான்
அப்பனே வசுவனியார் சொன்னநீதி
அமைக்கவே வுந்தமக்கு கிட்டலாச்சு
சுந்தரனே சித்தர்முனி யார்க்குக்கிட்டும்
உமையாளி னருளாலே வாய்க்கலாச்சு
வும்பர்பிரான் கிருபையது மிகவுண்டாச்சு
நமையாம லசுவனியார் தேவர்வாக்கு
நாயகனே யுந்தனுக்கு சித்தியாச்சே. 92

சித்தியாம் சோதிமுனி நூல்களப்பா
சின்மயமே தேடினால் கிடைக்குமோசொல்
முத்திவழி பெறலாகும் ஞானப்பாலும்
மூதுலகி லுந்தமக்கு வாய்க்கும்பாரு
எத்திசையும் புகழுண்டா மினிமையுண்டாம்
யெந்நாளும் கைலாசங் காணியாகும்
சத்தியமா யாமுரைத்தோம் புனிதவானே
தயாபரனே புலஸ்தியனே சதுருள்ளானே. 93

வருணரிஷி வைப்பு

சதுரான புலஸ்தியனே தம்பிரானே
சாங்கமுட னுந்தமக்குச் சாற்றுவேன்யான்
விதுரனது தேசமது குறிஞ்சிநாடு
வேதாந்தத் தாயினது சொரூபதேசம்
மதுரமுள்ள பொன்னகர மலைநாடப்பா
மன்னவனே சித்தர்முனி மறைத்தநாடு
சதுரமுள்ள மலையோரம் தோப்புமுண்டு
சுந்தரனே வதன்பெருமை கூறுவேனே. 94

Koviloor Digital Library

கூறுவேன் வெளிக்காடு தோப்பிலப்பா
குருபரனே புலஸ்தியனே குணமுள்ளானே
தேறுதலாய் தோப்பினிடம் சென்றாயானால்
தெளிவான மண்டபந்தான் செப்பலாகும்
மாறுபடா மண்டபத்தி லஞ்சனத்தை
மார்க்கமுடன் தான்போட தாள்திறக்கும்
ஆறுதலம் குளமுடனே ரூபந்தோன்றும்
அப்பனே மகிமையது கண்டுகொள்ளே. 95

கொள்ளப்பா படிவாச லருகதாக
கொற்றவனே கற்பேழை தானிருக்கும்
விள்ளப்பா வைகோடி திரவியங்கள்
வித்தகனே அஞ்சனத்தால் கிடைக்கலாச்சு
தெள்ளப்பா சாத்திரமும் ஞானப்பாலும்
தென்னவனே வசுவனியார் கிருபையாலே
உள்ளபடி விட்டகுறை யிருந்ததாலே
உத்தமனே யுந்தனுக்கு வாய்க்கலாச்சே. 96

கொங்கணவர் வைப்பு

ஆச்சப்பா யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
அப்பனே புலஸ்தியனே அன்புள்ளானே
மாச்சலது நேராத தென்மேற்கப்பா
மன்னவனே மலையாள பூபநாடு
பாச்சலது வாறுடனே தோப்புமுண்டு
பளிங்குமா மண்டபமு மதிலுமுண்டு
மூச்சடங்கிப் போனதொரு சித்துதாமு
மூதுலகில் கொங்கணரு மொருவருண்டே. 97

ஒருவராஞ் சித்துமுனி நாதரப்பா
உத்தமரும் தோப்பதனில் மண்டபத்தில்
கருவறிந்த சித்துமுனி தவமிருப்பார்
கண்டாலே வெகுமோச மதீதமர்கும்
திருவுதரும் யோகமென்ற ரிடியாருந்தான்
தீர்க்கமுடன் கொலுவிருப்பார் சித்துதாமும்
அருவமுள்ள நாதர்தம்மை வணங்கிநின்றால்
அப்பனே வுந்தனக்கு கிடைக்கும்பாரே. 98

Koviloor Digital Library

பாரப்பா கொங்கணர்தான் வைத்தவைப்பு
பாரினிலே வெகுகோடி திரவியங்கள்
நேரப்பா யுந்தமக்கு லபிக்குமப்பா
நெடிதான சாஸ்திரங்கள் கிட்டும்பாரு
சீரப்பா கிணறுண்டு வுதகமுண்டு
சிற்பரனே வுதகமதி லிறங்கினாக்கால்
ஆரப்பா வூஞ்சலென்ற பலகையப்பா
அப்பனே செந்தூரக் கிடாரந்தானே. 99

கிடாரமது செந்தூர மென்னசொல்வேன்
கீர்த்தியுள்ள புலஸ்தியனே சுகுணமாரா
அடாரமுள்ள காட்டகத்தே வுதகந்தன்னில்
அப்பனே செந்தூரக் கிடாரமப்பா
தடாகமெனுங் கிணரருகி லடிவாரத்தில்
தற்பரனே யுந்தமக்கு கிடைக்கலாகும்
சடாபார முள்ளதொரு ரிடியார்தம்மால்
சட்டமுட னுந்தமக்கு லபிக்குங்காணே. 100

டமராநந்தர் வைப்பு அயச்செந்தூரம்

காணவே யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
கண்மணியே புலமையுள்ள கவிவல்லோனே
வாணவே டமரகா நந்தநாதர்
வாகுடனே தான்தேடி வைத்தவைப்பு
தோணவே மல்லிகார்ச் சுனத்திநேரே
தோராம லணியணியாய் காவலுண்டு
மாணமருங் கல்வியுள்ள நாதர்தாமும்
மன்னவனே சுற்றிலுங் காவல்தானே. 101

காவலாம் கோடிபேர் ஞானசித்து
கன்னவனே யுந்தமக்கு கற்பமீவார்
ஆவலாய் செந்தூரக் கற்பமீவார்
அப்பனே கற்பமென்ற செந்தூரத்தை
சாவுமது நீக்கியல்லோ யுமக்கேயீவார்
சாங்கமுட்ன் ஞானவழி திறக்கும்பாரு
போவது திரேகமது வழியாதப்பா
பொங்கமுட னசுவனியார் தேவர்வாக்கே. 102

Koviloor Digital Library

தேவனே செந்தூரந் தனையெடுத்து
 தேற்றமுடன் மண்டலந்தான் கொண்டபோது
சாவதுதா னில்லையப்பா செந்தூரத்தால்
 சட்டமுடன் கோடிவரை யிருக்கலாகும்
கோலதுவும் பாலப்பா மண்டலந்தான்
 கொற்றவனே செந்தூரக் காயசித்தி
மேவாலம் சிவஞானப் பாலேபெய்யும்
 மேன்மையுடன் சதாகாலம் வாழலாமே. 103

வாழலாஞ் செந்தூரந் தனையெடுத்து
 வளமையுடன் வெள்ளிதனில் நூற்றுக்கொன்று
சாடவே தானுருக்கி குருவொன்றீய
 சதுர்மன்னா வெள்ளியது பழுத்துக்காட்டுந்
தாழவே மாற்றதுவு மேதுசொல்வேன்
 தப்பாது வாணிக்குப் பசுமைத்தங்கம்
ஞாழவே சுயத்தங்கம் பிறவித்தங்கம்
 நலமான வசுவனியார் தேவர்வாக்கே. 104

வாக்கதுவும் பொய்க்காது வளமையோனே
 வண்மையுள்ள செந்தூர மென்னசொல்வேன்
நோக்கமுடன் ரவிதனிலே நூத்துக் கொன்று
 நுட்பமுடன் தான்கொடுக்க மாற்றோபத்து
தூக்கமுடன் புடத்தங்கம் பசுமைத்தங்கம்
 துப்புரவாய் நாதாக்கள் மெய்ச்சுந்தங்கம்
போக்கதுவும் வாராது புண்ணியபாலா
 பொங்கமுடன் செந்தூரப் போக்குதானே. 105

தானான புலஸ்தியனே தம்பிரானே
 தகைமையுள்ள செந்தூர மென்னகூர்வேன்
கோனான குருபரனே புனிதவானே
 கொற்றவனே யெனதையர் சென்னநீதி
பானான பரஞ்சுடரே செந்தூரத்தைப்
 பாலகனே திரேகமது சாக்காடுறும்
மானான விஷகர்மா மொடுக்கந்தன்னில்
 மன்னவனே தினையளவு கொடுப்பீர்தாமே. 106

Koviloor Digital Library

கொடுத்திடவுந் திரேகமது குளிர்ந்துகாட்டும்
கோபாலா புலஸ்தியனே மகிமைசூர்வேன்
அடுத்துமே வக்கினியாம் வென்னீர்தன்னில்
அப்பனே கிடாரமது காயும்போது
எடுத்துமே தினையளவு காய்ந்தநீரில்
யெழிலாகத் தான்போட குளிர்ந்தநீராம்
படுத்திடவே பன்னீர்போல் குளிர்ந்துகாட்டும்
பாலகனே செந்தூரம் பண்பாய்க்கேளே. 107

சிலாமத கல்நாற் பற்பம்

பண்பான வின்னமொரு போக்குசூர்வேன்
பாலகனே புலஸ்தியனே மச்சகேந்திரா
நண்பான முக்கல்லாம் பற்பக்கல்லாம்
நலமான சுண்ணாம்புக் கல்லேயாகும்
திண்பான கல்லதுவை சுன்னமாக்க
தீர்க்கமுட னாறுவகை செயநீர்தன்னால்
உண்மையுடன் தானரைப்பாய் வெட்டுசாமம்
உத்தமனே மைபோலே யாட்டித்தீரே. 108

தீர்க்கவென்றால் பில்லையது கட்டிமைந்தா
திடமுடனே ரவிதனிலே காயவைத்து
பூர்க்கவே புடத்திற்கு வாதியாக
புங்கமுட னோட்டிலிட்டு சீலைசெய்யே
பார்க்கவே கெசபுடமாம் பண்பாய்ப்போடு
பார்த்திபனே புடமாறி யெடுத்துப்பார்க்க
நீர்க்கமலம் வீற்றிருக்கு மீஸ்பரியாள்பாதம்
நிஷ்களங்க மானதொரு பற்பமார்ச்சே. 109

பற்பமதை தானெடுத்து பண்புள்ளானே
பரிவாக செல்லும்வகை பகரக்கேளீர்
அற்பமென்று நினையாதே அன்புள்ளானே
அம்பரத்தில் நின்றாடு மதீதப்போக்கு
சொற்பமென்று வெண்ணாமல் சொரூபானந்தா
சுந்தரனே பற்பமதை யெடுத்துபாலா
விற்பனர் கொண்டாடும் கெந்திதானும்
வீறுடனே சுன்னமது செய்திடாயே. 110

Koviloor Digital Library

கெந்திபற்பம்

சுன்னமென்ற போக்குவகை பிரித்துசொல்வேன்
சுத்தமென்ற கெந்தியது பலந்தானொன்று
வின்னமது நேராது விதுரவானே
வீரான முன்னுரைத்த பற்பந்தன்னில்
பன்னவே குன்றியிடை செயநீர்தன்னால்
பாலகனே மத்தித்து கெந்திக்கங்கி
சொன்னபடி கவசமது தாமேகொண்டு
சொற்பெரிய சீலையது வலுவாய்ச்செய்யே. 111

செய்துமே ரவிதனிலே காயப்போடு
செப்புகிறேன் கோழியென்ற புடந்தான்தீரு
வெய்யபுக ழசுவனிபார் தேவர்வாக்கு
வேந்தனே புலஸ்தியனே பொய்யாதப்பா
வையகமும் தான்புகழ கெந்திபற்பம்
வளமையுடன் புகல்வதற்கு நாவுமில்லை
துய்யநல்ல பற்பமதைத் தானெடுத்து
துப்புரவாய் போக்குவகை செப்பக்கேளே. 112

செப்பவென்றால் பற்பமதை துய்யவேந்தா
செம்மலுடன் வீரமதைத் தானெடுப்பாய்
ஒப்பமுடன் கெந்தியது பத்துக்கொன்று
உத்தமனே யாறுவகை செயநீர்தன்னால்
தப்பிதங்கள் நேராமல் தம்பிரானே
தகைமையுடன் வீரத்துக் கங்கிகொண்டு
மெப்பமுடன் ரவிதனிலே காயவைத்து
மேன்மைபெற சீலையது வலுவாய்ச்செய்யே. 113

செய்துமே கோழியென்ற புடந்தான்தீரு
செம்மலுடன் வாறினபின் னெடுத்துப்பாரு
வையகங்கள் தாமறியா நீற்றுசுன்னம்
வளம்பெரிய நாதாக்கள் மெச்சுஞ்சுன்னம்
பொய்யாது வெனதைய ரசுவனியாந்தேவர்
போக்கான முறைபாடு சொல்லொண்ணாது
அப்பனே யிப்பற்பம் யார்தான்காண்பார்
அப்பனே விதியாளி காண்பான்றானே. 114

Koviloor Digital Library

காணவென்றால் பற்பமது சொல்லொண்ணாது
காவலனே புலஸ்தியனே கருவுள்ளானே
பூணவே ரசமதுதான் கழஞ்சியொன்று
புகழான வீரமென்ற சுன்னமப்பா
வேணபடி கல்வமது யிட்டுபாலா
வேகமுடன் கடுகளவு கல்வமிட்டு
ஆணவங்கள் றானொடுங்க வரைப்பாய்மைந்தா
அப்பனே சூதமது மடியுந்தானே. 115

மடியுமே வெண்ணையது மகிமைகூர்வேன்
மானிலத்தில் சித்தர்முனி மறைத்தவண்ணம்
அடிபணிந்து வசுவனியார் தேவர்பாதம்
அப்பனே மனங்கனிந்து வன்புகூர்ந்து
முடிபுனைந்த வெந்தனுக்கு யாசீர்மித்து
மூதுலகில் நாதாக்க ளருளும்பெற்று
மிடிநீங்க வடியேனும் பதம்பணிந்து
மிக்கவுப சாரமுடன் வாங்கும்பாகம். 116

பாகமா மருளோடும் பெற்றபூபா
பாலகனே யிம்முறைதான் வெளிவிடாதே
ஆகமங்கள் புராணவகை யிதிகாசங்கள்
அப்பனே கட்டறுத்து முறைமைகொண்டோன்
சாகமது நேராது சுந்தராகேள்
சாங்கமுடன் மாணாக்க ளறியவென்று
போகமது கொள்வதற்கு ஞானபோகம்
பொங்கமுட னுமக்களித்த பாகந்தானே. 117

தானேகேள் மச்சமென்ற புலஸ்தியனே
தண்மைபெறு மாணாக்கள் பிழைப்பதற்கு
தேனேதான் தினையளவு சூதபற்பம்
தேற்றமுடன் றானருந்த காயகற்பம்
மானேகேள் திரேகமது கற்றூணாச்சு
மாசற்ற காயாதி கற்பமாச்சு
பானென்ற பரஞ்சுடருக் கொப்பதான
பான்மையென்ற ரசபற்ப மென்னலாமே. 118

Koviloor Digital Library

என்னவே வாசியது மேல்நோக்காது
யெழில்பெரிய சுவாசமது சுழியேநிற்கும்
துன்னவெரி காயமது துய்யரோகம்
துப்பகற்றி சடலமது சிவந்துகாட்டும்
பன்னவே மாந்துளிர்போல் தேகமின்னும்
பாருலகில் நாதாக்கள் போலேயாவாய்
வின்னமிலா சூதமது கொண்டமானு
விண்ணுலகில் மகதேவ ரென்னலாமே. 119

சூதபற்ப வேதை

தேவனே புலஸ்தியனே யின்னங்கூர்வேன்
தெவிட்டாத தெள்ளமுர்த மானகோவே
பாவமென்ற கருமத்தை நிவர்த்திசெய்து
பாலகனே புண்ணியத்தைக் கொண்டமாரா
தாவெனும் சுன்னமதைப் பாய்ச்சுதற்கு
தண்மையுடன் செல்லும்வகை பிரித்துரைப்பேன்
நாவலனே புலஸ்தியனே வெள்ளிநூறில்
நணுகினால் குருபற்ப மொன்றுபோடே. 120

போடவே வெள்ளியது யுருகிவாங்கும்
பொங்கமுடன் மாற்றுரைக்க நாவொண்ணாது
நீடவே நாதாக்கள் தங்கமப்பா
நீதியுள்ள தங்கமது யென்னசொல்வேன்
தேடவே கிட்டாது தேசமெல்லாம்
தெள்ளமிர்த மானதொரு பிறவித்தங்கம்
ஆடவே யிச்சுன்னம் அதீதமப்பா
அப்பனே ரவிதனிலே நூற்றுக்கொன்றே. 121

ஒன்றான குருபற்பம் பாய்ச்சினாக்கா
லுத்தமனே செம்பொன்னும் தங்கமாகும்
குன்றான பிரணவத்தின் தங்கமப்பா
குறிப்பான புடத்துக்கு வாணித்தங்கம்
தென்றிசையி லகுவனியா ருரைத்ததங்கம்
தேற்றமுடன் பொதிகைமலைத் தங்கமாகும்
வென்றிடவே யிச்சுன்னம் பரிசுவேதை
வோடுமே வெகுபாதை வோடுந்தானே. 122

Koviloor Digital Library

தன்வந்திரி வுபதேச வுண்மை தேகநிலை

ஓடுமே யின்னமொரு மார்க்கங்கூர்வே
 னுத்தமனே புலஸ்தியனே வன்புள்ளானே
நீடுமே வுபதேச வுண்மையப்பா
 நீடாழி யுலாமதில் வுபதேசித்த
சூடுமே திரேதாயி னுகத்திலப்பா
 சுந்தரனே தன்வந்திரி யுரைத்தஞானம்
பாடுமே வழிமுறையா யெந்தமக்குப்
 பாவித்த பாலமுர்த மூட்டுவேனே. 123

ஊட்டுவேன் தன்வந்திரி யுபதேசத்தை
 வுத்தமனே யுந்தமக்கு தத்தம்தத்தம்
பாட்டுநய மறிந்தசித்து பாவலோய்கேள்
 பாலகனே ஞானப்பா லுனக்கேகிட்டும்
தீட்டுபுகழ் கொக்கன்ன மாகுமோசொல்
 திறமுடனே யுனைப்போலு மற்றோராகார்
கூட்டினில்வாழ் கோழியது மயிலுமாமோ
 கொற்றவனே புலஸ்தியனே யின்னங்கேளே. 124

கேளப்பா குன்றிமணி கெம்பாமோசொல்
 கெணிதமுடன் செக்கதுவு மிலிங்கமாமோ
தாளப்பா பனியதுவு மழையுமாமோ
 தகைமையுள்ள புத்திரனே மைந்தாமைந்தா
ஆளப்பா வுனைப்போலே யொருவராவார்
 அப்பனே விட்டகுறை யிருந்ததாலே
தேளப்பா கொட்டியதோர் விஷத்தைப்போலே
 தெவிட்டாத தெள்ளமிர்த முனக்கேயாச்சே. 125

ஆச்சப்பா புலஸ்தியனே அன்புள்ளானே
 அப்பனே காயத்திரி ஞானமப்பா
மூச்சடங்கிப் போவதற்கு முன்னதாக
 மூட்டுகிறேன் பிரணவத்தின் ஞானப்பாலை
மாச்சலது நேராம லன்புள்ளானே
 மகாதேவர் லோகமது வாழ்க்கைகூர்வேன்
நீச்சமென்ற தேகமது நிலைகொள்ளாது
 நீடாழி யுலகமெலா மற்பமாமே. 126

Koviloor Digital Library

அற்பமாம் லோகமதில் கோடிவாழ்க்கை
யவரவர்கள் தன்தமக்கு நேர்ந்தவண்ணம்
சொற்படியே யுபதேச வுண்மைகொண்டு
சோராமல் யிதிகாசங் கொள்ளல்வேண்டும்
விற்பனனே சாயுச்சிய பதவிகொண்டு
விருப்பமுடன் சதாகால மனமுந்தேறி
கற்புடனே யுபதேச மடையவேண்டிக்
காவலனே பிரணவத்தை போற்றுபோற்றே. 127

போற்றவே பிரமநிலை யறியவேண்டும்
பொங்கமுடன் நிஷ்டானு பூதிகொண்டு
நீற்றவே துரியாதீ தத்தில்நின்று
நிர்த்தமுடன் களைபாசம் பெறுகவேண்டும்
அற்றவே கூடார மகலத்தள்ளி
அப்பனே சர்வநிலை போதைகண்டு
மாற்றமெனு மயல்நீக்கி கிரியைபோத
மன்னவனே யுபதேசத் தருள்கொள்வீரே. 128

கொள்ளவே பிரமாச வழியைப் பற்றி
கொடூரமென்ற சித்விஷயம் தள்ளலொப்பாம்
எள்ளளவு முள்நிலையை யோங்கிநின்று
யெழிலான பிரணவத்தை நண்ணலொப்பாம்
தெள்ளவே மனக்குரங்கை விட்டகற்றி
தேற்றமுடன் பாலமுர்தம் கொண்டுமேதான்
உள்ளபடி யுதாசினத்தைப் போற்றிபாலா
யுத்தமனே கொடுவழியை போக்கநன்றே. 129

போக்கவே களைபயின்று சீரகற்றிப்
பொங்கமுடன் சாரமென்ற பாதைகண்டு
ஆக்கமுட னுலகுதனி லிருந்துகொண்டு
அப்பனே தியானமென்ற வட்சரத்தை
ஊக்கமுடன் தியானமது பிரமைகொண்டு
வுலகுதனில் வெகுபேரை கண்டாராய்ந்து
சாக்கமது நேராமல் கிரியை நின்று
சமாதிமுக மேகுதற்கு பாதைகாணே. 130

Koviloor Digital Library

பாதையாம் பிரமமுத்தி மூலாதாரம்
பாங்குபெறத் திரிகோண மாறுவீடு
வாதையாம் விட்டகற்றிக் கலையில்பாய்ந்து
வகுப்புடனே மூலத்தைப் பற்றிநின்று
காதையா மோங்கார முள்ளடக்கிக்
கனல்கொண்டு மோகனத்தை பிசகொட்டாமல்
வாதையெனுஞ் சிற்றா வத்தைப் போற்றி
மன்னவனே காரணத்தில் நின்றிடாயே. 131

நிற்கையிலே பரஞ்சுடரு முன்னுக்குள்ளாய்
நிஷ்டானு பூதிநிலை யறிவாயப்பா
துற்கையெனு மந்திரமு மறிவாயப்பா
துப்புரவாய் பாயும்வழி சுவாசங்குன்றும்
அற்பமென்று யெண்ணாதே அன்புள்ளானே
அரியதவம் பெறவுனக்கு நாளும்கிட்டும்
சொற்பவழி பாதையெனுங் கொடியபாதை
சொரூபனே போகாதே சுந்தரானே. 132

சுந்தரா புலஸ்தியனே சுகுணமாரா
சுடற்கயிறை மாட்டியது குருவேநோக்கி
தந்திரமா யூசிபோற் காந்தம்பற்றி
சற்குருவை சுதானவழி யறிந்துநன்றாய்
மந்திரமு மோங்கார முள்ளடக்கி
மாசற்ற சமாதியென்ற பீடம்நாட்டி
எந்திரத்தா லாயினிட பதமேபோற்றி
யெழிலான வோங்காரந் தன்னைமூட்டே. 133

மூட்டவே வாயிபதம் வணங்கினின்று
முத்தமனே சமாதிவழி பாதைசென்று
நீட்டமுடன் பசுபாசக் களையகற்றி
நிஷ்களங்க மானதொரு வாறாதாரம்
ஆட்டமுட னடுபீடம் பிரமமப்பா
அப்பனே சமாதிக்கு அதுவேபீடம்
தேட்டமுடன் சுழிமுனையை சுழிற்றிவாங்கி
தெளிவுடனே ஞானக்கண் திறப்பாய்தானே. 134

Koviloor Digital Library

தானேகேள் வுதானனைப்பா வுந்திப்பற்றி
தகைமையுடன் சிகாரமது கலையேதாக்கி
மானேகேள் சூரியனில் பிரகாசித்து
மகத்தான சந்திரனில்நின்றுதாக்கி
ஆமேதான் சுழிமுனையி லூடுதாக்கு
அப்பனே காந்தாரி பிரம்மமப்பா
நானேதா னுரைத்தவண்ண மாறாதாரம்
நயமுடனே சுழிதனை நாட்டிப்பாரே. 135

பாரப்பா சந்திரனில் சூரியன்றானும்
பட்சமுட னிராமயத்தைப் பொதுவாயெண்ணி
சீரப்பா விசுத்தியிலே கொண்டமுத்தி
சிற்பரனே சமுதாயக் குணத்தைக்கண்டு
போரப்பா போதநிலை தவங்கடந்து
பொன்னவனே முத்திவழி கண்டாராய்ந்து
தேரப்பா கலைகொண்டு விசுத்தியிலேதாக்கி
தேற்றமுடன் சிவயோக நிலையில்நில்லே. 136

நில்லப்பா காரணமாம் நிலையைப்பற்றி
நிதானித்து பீடமதில் வாசிதூக்கி
செல்லப்பா கலையமுர்த மாறலாகி
செம்மலுடன் வயிரவரை தியானித்தேகி
அல்லவே பிராணாய நிலையைப்பற்றி
அப்பனே கோசமென்ற பதியைநாட்டி
சொல்லவே விசுத்திவழி சொல்லொட்டாமல்
சொற்பெரிய மௌனவழி நிலைகொள்வீரே. 137

கொள்ளவே வுபதேச வுண்மைகேளீர்
கொற்றவனே சுழினைமுனை தாக்கும்போது
தெள்ளவே கலையமுர்த மாறிநிற்கும்
தேற்றமுடன் காந்தாரி விசுத்தியாலே
உள்ளபடி யோங்கார நிலையில்நின்று
வுத்தமனே சிவயோக பதியிற்சென்று
கள்ளமிலா பாசமென்ற கயிற்றினாலே
பாதைவழி காண்பதற்கு யிடமுண்டாமே. 138

Koviloor Digital Library

உண்டாமே யின்னமொரு மார்க்கங்கூறுவே
　　னுத்தமனே புலஸ்தியனே வுண்மையோனே
கண்டதொரு பாதைவழி காணலாகும்
　　கலைநிலையைத் தானகற்றி மாறல் காண்பாய்
அண்டமென்ற பிண்டநிலை காணுமட்டும்
　　அப்பனே சிவயோக நிலையில்தாக்கு
சண்டமா ருதம்போல கலையையூன்றி
　　சாயுச்சிய பதவிக்கு யேகலாமே. 139

ஏகலாம் கலைநிலையை யறியுமட்டு
　　மெழிலான சுழினைதனி லம்பரத்தை
ஆவலுடன் கண்டறிந்தோன் சிவராஜயோகி
　　அப்பனே காணுதற்கு யோகமுண்டோ
சாவலுடன் சமாதிக்கு வழியேதோன்றும்
　　சற்குருவே நிற்பதமே சாட்சிகூர்வேன்
தாவலது கொள்கைக்கு விடநேராது
　　தயாபரனே சண்முகனே தயவாய்க்கேளே. 140

கேளப்பா புலஸ்தியனே சிவயோகந்தான்
　　கெணிதமுடன் நாதவிந்து தன்னுள்தாக்கி
தேளப்பா-கொட்டியதோர் விஷத்தைப்போலே
　　தேற்றமுடன் மூலாதா ரத்தினின்று
மாளப்பா தேகமது மொழியுமட்டு
　　மன்னவனே ரேசகபூ ரகத்தைதாக்க
ஆளப்பா பூரகத்தை யடக்கினாலே
　　அப்பனே சடலமது மாண்டுபோச்சே. 141

போச்சென்று விடுகாதே புண்ணியபாலா
　　பொங்கமுடன் விசுத்தியிலே சுழினைதாக்கி
மூச்சடங்கிப் பிரணவத்தை யுச்சரித்து
　　மோங்கார நிலைபற்றி மொடுக்கமாகி
பேச்சதுவு முள்ளடக்கி மௌனங்கொண்டு
　　பேரான சமாதிக்கு யேகலாகி
ஆச்சரிய மானதொரு சரியையோகம்
　　அப்பனே செய்பவனே சித்தனாமே. 142

Koviloor Digital Library

சித்தனாய்ப் பிறந்தாலு மென்னலாபம்
செகதலத்தில் ஞானப்பா லுண்டோன்சித்தன்
பத்தனாய்ப் பிரணவத்தை யடைந்தோன்போலும்
பாருலகில் வேஷமது மிகவேபூன்
கத்தனைபோல் கைலாச வடிவுகொண்டு
காசினியில் வயிற்பிழைக்க வேஷம்பூண்டு
உத்தமமா மதியோகி சிவவேடத்தை
வுலகுதனில் வெகுபேர்கள் காணத்தானே. 143

காணவே யலைதாரன் வேஷம்பூண்டு
கருத்தறிந்த சித்துமுனி நாதர்போலும்
பூணவே சிவஞானப் பாலையுண்டு
புகழ்பெறவே தான்கடந்த ஞானிக்கொப்பாய்
ஆணவங்கள் தானொடுங்கி அன்புள்ளானே
அம்பரத்தில் கூத்தாடு மமிர்தவேளே
பாணம்போல் சிவயோகங் காண்போருக்க
கைலாசக் காணியது லபிக்ககும்பாரே. 144

அகஸ்தியர் புலஸ்தியர்க்கு ஞானசாகர மோதல்

பாரப்பா யின்னமொரு மார்க்கங்கூறுவேன்
பாலகனே புலஸ்தியனே பண்புள்ளானே
சீரப்பா யெனதைய ரசுவனியாந்தேவர்
சிறப்புடனே யெந்தமக்கு யுரைத்தநீதி
காரப்பா ஞானநூல் சாகரந்தான்
கண்மணியே யுந்தமக்கு கழறக்கேண்மோ
ஆரப்பா யெனைப்போல கூறுவாரப்பா
அப்பனே யுந்தமக்கு வமைந்தவாறே. 145

வாறான நூல்களுமே யுந்தமக்கு
வண்மையுடன் மைந்ததுவு முன்பிறப்பில்
கூறான விட்டகுறை யிருந்ததாலும்
குறிப்பான மனோன்மணியா ளருளினாலும்
நீறான தீட்சையது லபித்துதப்பா
நீணிலத்தில் நீயுமொரு சித்தனானாய்
தேறான பாற்கடலாம் ஞானசாரம்
தென்னவனே யுந்தமக்கு வடையலாச்சே. 146

Koviloor Digital Library

ஞானப்பால் நூல்தொகுப்பு

ஆச்சப்பா ஞானநூ லேதென்றாக்கால்
அப்பனே பூபாலா மச்சகேந்திரா
மாச்சலது நேராத காவியந்தான்
மகாதேவர் பதினெண்பேர் பாடிவைத்த
மூச்சடங்கா முன்னுரைத்த நூல்களப்பா
மொழிந்ததொரு ஞானசாகர மைநூறாம்
பேச்சடங்கி மௌனத்தில் சொன்னஞானப்
பெருமையுள்ள ஞானமணி நாலாயிரந்தானே. 147

தானான சிவகுளிகை ரெண்டாயிரந்தான்
தாக்கான போகமென்ற ஞானசாரம்
தேனான தெள்ளமிர்தக் கடல்தானப்பா
செப்பினார் பன்னீரா யிரந்தானாக
மானான மகதேவ ரிடியார்தாமு
மவுனமதி லுரைத்தவெண்ணூற் றிருஞானந்தான்
பானான பரஞ்சுடராம் ராஜயோகம்
பாடிவைத்தா ராயிரந்தான் பகரொண்ணாதே. 148

ஒணணாது திருக்கடல்தா னாயிரமாஞானம்
ஒப்பற்ற சிவஞானம் இருநூற்றைஞ்சு
மண்ணுள்ள வேந்தர்க்கு வுகந்தஞான
மன்னவனே சிவக்கியான மைநூறாகும்
கண்ணபிரா னுபதேசம் பதினெண்கீதை
காவலனே குருசம்பிர தாய்போதம்
திண்ணமுடன் ரகசியங்க ளாயிரந்தான்
தீர்க்கமுடன் பாடிவைத்த ஞானநூலே. 149

ஞானமாம் பெருங்கட லஷ்டசாரம்
ஞானமணி நாலுரெண் டாயிரந்தான்
வானவர்கள் மிகப்போற்றும் பிரணவந்தான்
வளம்பெரிய ஞானமிர்தக் கடலேயாகும்
கானமயில் சுப்பிரமணி தேவருக்கு
கைலாச வருள்ஞான துரியாதீதம்
பானமெனு தத்துவ்மாஞ் சாகரந்தான்
பத்துரண்டு நூறாகப் பாடினாரே. 150

Koviloor Digital Library

பாடியதோர் வைராக்கிய ஞானமெண்ணூற்
　　பாவலனே புலஸ்தியனே மச்சகேந்திரா
தேடியதோர் பூரணச் சந்திரோதயஞானம்
　　தேற்றமுள்ள தேவிகா லோத்திரந்தான்
ஆடியதோர் வுருக்குநிலை போதமப்பா
　　அப்பனே யெண்ணிரண்டு பதினாறுபத்து
மூடியதோர் கலைக்கியான மறுபத்துநாலு
　　முக்கியமாம் பத்துரண்டு நாலுதானே 151

நாலான தீட்சைவிதி யறுபத்துநான்கு
　　நாயகனே புலஸ்தியனே நவிலக்கேளீர்
காலான தத்துவ மையாயிரந்தான்
　　காவலனே சுருதிநூல் ஞானசாரம்
பாலான திருமந்திர ஞானமப்பா
　　பாடியதோர் வேதமணி ஞானப்பாலாம்
மேலான ரகசியமாந் திருமந்திரார்த்தம்
　　மேன்மையுடன் பாடினதோர் சாத்திரங்கள்தானே.152

தானான சாத்திரமு மனந்தஞானம்
　　தண்மையுள்ள பிரகாச ஞானம்பத்து
கோனான யெனதைய ரசுவனியாந் தேவர்
　　கொற்றவனே யெனக்களித்த வெண்பாஞானம்
தேனென்ற மனோன்மணியா ளுரைத்தபோதம்
　　தெளிவான வாமப்பால் பதினாயிரந்தான்
பானென்ற பராபரியா ளுபதேசித்தப்
　　பருங்கடலாம் ஞானப்பால் முற்றதாமே. 153

பஞ்ச கர்த்தாள் சுருதிநிலைபீடம்

முற்றான மச்சத்தி னேர்மை கொண்ட
　　மூச்சடங்கும் பிரமநிலை கொண்டபீடம்
கற்றறிந்த சந்திரனும் சூரியன்றான்
　　காவலனே சுழித்தியிலே வொடுங்கிநிற்கும்
சிற்றறிவால் யாமுரைப்போம் சிறியபாலா
　　சீரான கலைதன்னையே பற்றியேறி
வெற்றியுடன் பாசுபத மூலவீடு
　　வேதாந்தத் தாயளித்த பீடமாச்சே. 154

Koviloor Digital Library

ஆச்சப்பா சர்வநிலை யறிவாய்பாரு
அப்பனே ஞானக்கண் ணிருக்கும்ஸ்தானம்
மூச்சடங்கி மேல்வீடு மூலாதாரம்
முனைவட்டம் சிவயோக மொடுக்கங்காண்பீர்
பேச்சரிய நாதவிந்து சத்திசத்தி
பெருஞ்சுருதி சிவந்தனக்குள் ளொடுக்கஞானம்
மாச்சலது நேராது வோரெழுத்து
மார்க்கமுடன் மூவெழுத்து மொன்றதாமே. 155

தாமான வோரிதழு மூவிதழுமப்பா
தனியான மூச்சுவழி பிடரிகாண்பாய்
சாழான வபானமுட தாக்கேகுய்யம்
சதுரான மூலவட்டம் நவகோணந்தான்
நாமேதான் கும்பகத்தில் பூரகத்தை
நலமான வாகாயந் தனிலிருத்தி
போமே தான் பம்பரத்தி லாட்டிமைந்தா
பொங்கமுடன் கியானவழி திறந்திடாயே. 156

திறக்கவே குருமூலம் பிராணாயந்தான்
தீர்க்கமுடன் பிரமவித்து யோனிவாசல்
சிறக்கவே அங்கென்று யிங்கென்றோது
செம்மலென்ற மழைபொழிதல் போலேகியானம்
துறக்கவே யெழுவகை தோற்றங்காணும்
துரந்தரனே தசதீட்சை யிதிலடக்கம்
பிறக்கவே திரிபுரை வாலைதானும்
பிரம்மவென்ற புவனையிட கிருபைதானே. 157

கிருபையாம் காளியது சொரூபந்தானும்
கீர்த்தியுடன் மயேஸ்பரியாள் சொரூபந்தோன்றும்
அருமையாம் அவத்தையென்றால் ரெண்டேயாகும்
அப்பனே சிற்றவத்தை பேரவத்தை
பெருமையாம் லயப்பட்டு வைக்கியந்தான்
பேரான பூரணத்தி லன்புகொண்டு
நெருமையுடன் சுயபோத மருளுங்காணும்
நேர்மைகொண்டு சற்குருவைக் காணலாமே. 158

Koviloor Digital Library

காணலா மிப்பருவங் கண்டபோதே
காணாத காட்சியெல்லாம் காணலாகும்
பூணலாம் பிரமனாந்த மடையலாகும்
புங்கவனே வஷ்டசித்தி கொள்ளலாகும்
நாணவே மெய்ஞ்ஞானக் கடலேபுக்கும்
நயமுடனே சதாகாலங் கைலாயந்தான்
வேணபடி யுந்தனது மனோலயங்கள்
வெற்றிபெற யெந்நாளுஞ் சித்தியாமே. 159

நவலோக செந்தூரம்

சித்தியா மச்சத்தி னேர்மைபூண்ட
சிற்றறிவே சிறுபாலா சிரணானந்தா
புத்தியுள்ள பூபதியே புனிதவானே
புகழுடைய சித்தர்மெய்ச்சும் புண்ணியபூபா
வெத்திகொளும் வேல்வேந்தே பொதிகைமெய்ச்சும்
வேதாந்த நாதசித்து புகழும்பாலா
எத்திசையும் நாதரிடி முனிவர்தாமு
மெழிலாகப் போற்றுகின்ற ராஜவேளே. 160

வேளான செந்தூர மென்னசொல்வேன்
வேதாந்தத் தாயினது வருளுங்கொண்டு
தாளான விட்டகுறை யிருந்தாலும்
தாக்கான புலஸ்தியனே தார்வேந்தேகேள்
கோளாறு நேராத நவலோகந்தான்
கொற்றவனே செந்தூர மருமைமெத்த
ஆளான பாகமது பிசகிடாமல்
அப்பனே செய்பவனே யோகியாமே. 161

யோகனா மெனதைய ரசுவனியாந்தேவர்
யோசனையா யெந்தனுக்கு வுபதேசித்த
சாகமது நேராத செந்தூரத்தை
சட்டமுட னாமுனக்கு வரைதப்பாமல்
மோகமுடன் லோகவகை பிரிந்துகூர்வேன்
ஓங்குபுக ழிடைபாக மறியவேதான்
பாகமுடன் களங்குரைப்பேன் பண்புள்ளானே
பளிங்குள்ள தங்கமதை யெடுத்துக்கொள்ளே. 162

Koviloor Digital Library

கொள்ளவே தங்கமது யிடையேரெண்டு
கொற்றவனே யிரும்பதுவு மொன்றரையேயாகும்
விள்ளவே செம்பதுவு மொன்றேகாலாம்
வீரான வங்கமது வொன்றேயாகும்
தெள்ளவே நாகமது வொன்றேயாகும்
தெளிவான வெள்ளீயம் முக்காலாகும்
அள்ளவே தாரவங்க மறையோகும்
அப்பனே காந்தமது காலேயாமே. 163

காலான வெள்ளியது களஞ்சியாகும்
கருவாக யெடைகொண்டு நிறுத்துமைந்தா
பாலான சரக்கெல்லா மொன்றாய்க்கூட்டிப்
பாலகனே தானுருக்க களங்கமாகும்
சேலான சரக்கெல்லாம் பின்னுமப்பா
செம்மலுடன் மறுமூசை தனையெடுத்து
மாலான மூசையது வுருகும்போது
மன்னவனே தாளகமும் களஞ்சிதாக்கே. 164

தாக்கையிலே லோகமெல்லாங் களங்காய்ப்போகும்
தற்பரனே வதிற்சேர்க்க மருந்துகேண்மோ
நோக்கமுடன் கெந்தியதுரெட்டிசேரு
நெடிதான சூதமது லோகமொப்பாய்
வாக்குரையும் பொய்யாது துய்யபாலா
வளம்பெரிய தாரமது களஞ்சியொன்று
ஆக்கமுடன் லிங்கமது களஞ்சியொன்று
அப்பனே சிங்கியது களஞ்சியொன்றே. 165

களஞ்சியா மனோசிலையும் விராகன்முக்கால்
காவலனே துருசதுவும் விராகனொான்று
தளம்பெரிய சூதசெந் தூரமப்பா
தகைமையுடன் விராகனது கூடச் சேரு
வளம்பெரிய துத்தமது விராகனொன்று
வாகான கெவுரியது விராகனொான்று
நலம்பெரிய மதியுப்பு விராகனொன்று
நாட்டமுடன் சரக்கெல்லா மொன்றாய்க்கூட்மே. 166

Koviloor Digital Library

கூட்டியே வாறுவகை செயநீர்தன்னால்
குருபரனே தானரைப்பாய் சாமம்நாலு
வாட்டமுடன் தானரைத்து பில்லைசெய்து
வளமாக ரவிதனிலே காயவைத்து
தாட்டிகமா யோட்டிலிட்டு சீலைசெய்து
தண்மைபெற கோழிபுடந் தீர்த்தாயானால்
தேட்டமுடன் புடமாறி யெடுத்துப்பாரு
தெளிவான செந்தூரஞ் சொல்லொண்ணாதே. 167

ஒண்ணான செந்தூர மென்னசொல்வேன்
உத்தமனே வருணனைப்போல் சோதிமின்னும்
தண்மையாம் செந்தூரம் நவிலவொண்ணா
தாரணியில் நாதாக்கள் மெய்ச்சும்பாகம்
வண்மையாஞ் செந்தூரம் தனையெடுத்து
வாகுடனே வெள்ளியது நூற்றுக்கொன்று
நண்மையாஞ் செந்தூர முருக்குதன்னில்
நயமுடனே தான்கொடுக்க நயமதாமே. 168

நயமான லோகமதை யோட்டிலிட்டு
நலம்பெறவே யூதியெடு பொன்னதாகும்
மயமான மாற்றதுவு மெட்டேயாகும்
மன்னவனே வாரடித்துப் புடந்தான்போடு
சுயமான தங்கமது யென்னகூர்வேன்
சுந்தரனே சுயத்தங்கம் பிறவித்தங்கம்
வயமான தங்கமது யிதற்கொவ்வாது
வண்மையுடன் நாதாக்கள் தங்கமாச்சே. 169

தங்கமாஞ் செந்தூரம் தனையெடுத்து
தார் வேந்தா புலஸ்தியனே தம்பிரானே
புங்கசித்தி யெட்டுரிய பூபாலாகேள்
புனிதமுடன் ரவிதனிலே நூற்றுக்கொன்று
அங்கமுடன் றாமுருக்கிக் குருவொன்றீய
அப்பனே செம்பதுவும் செம்பொன்னாச்சு
சிங்கமென்ற புலஸ்தியனே மச்சகேந்திரா
சிற்பரனே சொல்வதற்கு நாவொண்ணாதே. 170

Koviloor Digital Library

நாவில்லை பாவில்லை நளினமாரா
நாயகனே சிவப்பென்ற பொன்னையப்பா
பாவகமாய் வாரடித்துப் புடந்தான்றீரு
பாலகனே பசுமையென்ற தங்கமாச்சு
சாவகமாய் நாதாக்கள் தங்கமாச்சு
சற்பரனே சித்தர்மெய்ச்சும் வரணத்தங்கம்
போவதுதான் புடத்துக்கு யேகாத்தங்கம்
பொங்கமுட னசுவனியா ருரைத்தவாக்கே. 171

வாக்கான செந்தூரங் குன்றியுண்டால்
வளமையென்ற பருவமது மிகவுண்டாகும்
நோக்கமுடன் காயாதி யிதுவேயாகும்
நொடிதான திரிகடுகு சூரணத்தில்
ஆக்கமுட னனுபானம் வெண்ணெயாகும்
அப்பனே நெய்தேனிற் கொள்ளலாகும்
ஊக்கமுடன் மண்டலந்தான் கொண்டாயானால்
வுத்தமனே நீயுமொரு யோகியாமே. 172

யோகமென்றால் யோகமது நாவுறாது
யொளிவான புலஸ்தியனே புண்ணியமாரா
போகமதை நீக்கிவிடு புண்ணியபாலா
பொங்கமுடன் சிவராஜ யோகங்கிட்டும்
சாகமென்ற நரைதிரையு மணுகாதப்பா
சாங்கமுடன் தேகமது கற்றூணாகும்
தாகமென்ற கலையமுர்த மருந்தலாகும்
தண்மையுள்ள புலஸ்தியனே தம்பிரானே. 173

தம்பியே செந்தூர முண்டபேர்க்கு
தாக்கான சுவாசமது கீழேநோக்கும்
வெம்பியதோர் தேகமது கற்றூணாகும்
வேதாந்தத் தாயாரு மருளுங்கொள்வாள்
கும்பியே காயமது கதித்திடாது
குருபரனே சுந்தரனே வயதுமெத்த
நம்பியேவளர் கோடி காலமப்பா
நாயகனே லோகபதிவாழ் குவீரே. 174

Koviloor Digital Library

வாழவென்றால் புலஸ்தியனே மச்சகேந்திரா
வல்லுடல மழியாது கோடிகாலம்
சாழவென்றால் சாக்காடு தானுறாது
தாரணியி லனேகநா ளிருந்துவாழ்வீர்
தாழமலர் மணமதுபோல் தேகவாசம்
தண்மையுடன் வெப்புடலம் தணியும்பாரு
ஆழமே சிவயோக நிலையில் நின்று
அப்பனே சமாதியது கொள்வீர்காணே. 175

காணவென்றால் நாதாந்த சித்துதாமும்
காசினியி லுமைக்கண்ட போதேவண்ண
மாணமருங் கல்வியுட னுனைப்பணிந்து
மன்னவனே யிதிகாசப் பொருளுங்கேட்பார்
ஆணவங்கள் தானொடுங்கி அன்புள்ளானே
அப்பனே செந்தூரந் தன்னைகேட்பார்
பானம்போல் வயிறெறிந்து முறையுங்கேட்பார்
பளிங்குடனே மனதுறுதி பகரொண்ணாதே. 176

ஒண்ணாது வுடல்பொருள்க ளாதியந்தம்
வுத்தமனே யுந்தமக்கு தத்தமென்பார்
கண்ணான கண்மணியே புலஸ்தியானே
கருத்துடனே வாக்கறிந்து மனதுங்கண்டு
தண்மையுள்ள குணவதிபால் தகைமைபூண்டு
தற்பரனே பரஞ்சுடரே தயவுள்ளானே
உண்மையது தான்புகல்வீர் வொளிவுள்ளானே
உத்தமனே மனதுவந்து வோதுவீரே. 177

ஓதவென்றால் மனுதர்ம முள்ளபேர்க்கும்
ஒப்பமுடன் சிவராஜ மடைந்தபேர்க்கும்
நீதமுள்ள மன்னவர்கள் புண்ணியோர்க்கும்
நிஷ்களங்க மானதொரு மாண்பருக்கும்
போதமுள்ள தபத்தினற்கும் பெரியோர்க்கும்
புங்கசித்தி யெட்டுரிய ஞானியோர்க்கும்
தீதகற்றி யுலகுபதி மறந்தோருக்கும்
தீர்க்கமுட னுபதேசம் கூறுவீரே. 178

Koviloor Digital Library

கூறவென்றால் சிவராஜ யோகிகேண்மோ
குணமுள்ள புலஸ்தியனே மச்சகேந்திரா
நீறான பாவிகட்கும் கருமிகட்கும்
நிஷ்டைதனை தான்கெடுத்த சண்டாளர்க்கும்
மாறனெனும் காமியோர்க்கு மதியில்லார்க்கு
மண்டலத்தில் தானுரைத்தால் பாவமெய்தும்
தேறலுடன் தென்றிசையா ரகுவனியார்தேவர்
தேற்றமுட னெந்தனுக்கு வுரைத்தவாறே. 179

உரைத்தமொழி தப்பாது புண்ணியபூபா
ஓகோகோ நாதாக்கள் சாபமெய்யும்
நிரைத்தபொருள் கருமிகளு மறிந்திட்டாலே
நீடாழி யுலகமெலாஞ் சித்தாய்க்காணும்
குரைத்தபொருள் மர்மங்கள் நீதமுண்டு
குருபரனே வெளியிட்டால் சாபங்காட்டும்
விரைத்தபொருள் மெய்ஞ்ஞானம் தேவர்வாக்கு
விண்ணுலகி லறியாத மர்மந்தானே. 180

தானான புலஸ்தியனே மச்சகேந்திரா
தகைமைபெறு மகுவனியார் தேவர்வாக்கு
கோனான வெனதையர் சொன்னநீதி
கொற்றவனே தேவாதி ரகசியந்தான்
பானான பரஞ்சுடரை யெந்நாளுந்தான்
பாருலகில் மனங்கனிந்து பாலித்தேதான்
மானான மகதேவர் பதாம்புயத்தை
மன்னவனே சதாகாலம் துதிப்பீர்தாமே. 181

செபமாலை விதி

துதிக்கவென்றால் புலஸ்தியனே யின்னங்கூர்வேன்
துப்புரவாய் செபமாலை பூணுங்காலம்
மதிக்கவே செபமாலை ருத்திராட்ச
மன்னவனே யாறுமுகந் தானெடுப்பாய்
பதிக்கவே செபமாலை முப்பத்திரண்டு
பாங்குடனே கரமதிலே யேந்தல்வேண்டும்
விதிப்படியே ருத்திராட்ச முன்பத்தொன்று
வேதவிதிப் பிரமாணம் செப்பக்கேளே. 182

Koviloor Digital Library

கேளப்பா புலஸ்தியனே யின்னங்கூர்வேன்
கொடியான ருத்திராட்ச மன்பத்தொன்று
மீளப்பா மாலையது கழுத்திலேதான்
மிக்கவே தான்றரிக்க விதியேயாகும்
தாளப்பா தோள்தனிலே துளசிமாலை
தகைமையுட னுத்திராட்சம் பனிரண்டாகும்
வேளப்பா ருத்திராட்சம் கங்கணந்தான்
வேதமுறைத் தான்படியே வட்டமாச்சே. 183

அட்டமாம் ருத்திராட்ச முழங்கைதொட்டு
அன்புடனே சரமதுவுஞ் சோடசந்தான்
திட்டமுடன் சோடசமாம் பதினாறப்பா
தீர்க்கமுடன் முழங்கரமா மணியத்துள்ளே
நிட்டையிலே தான்பூண்டு மதியங்கொண்டு
நிஷ்களங்க மானசெப மாலைபூண்டு
சட்டமுட னசுவனியார் சொன்னநீதி
சடாட்சரனே யுந்தமக்கு சாற்றினேனே. 184

சிவாலய தெரிசனம்

சாற்றவென்றா லின்னமொரு மகிமைகூர்வேன்
சதாசிவமே என்கோவே சதுருள்ளானே
போற்றவே சிவாலயத்தி னேர்மைகூர்வேன்
பொங்கமுடன் தேவதா ஸ்தலமுங்கண்டு
ஆற்றவே வடபாக மிடைபாகந்தான்
அப்பனே வலஞ்சுற்றி கேஷம்பூண்டு
நீற்ற மென்னும் வெண்ணீறு தாமணிந்து
நீதியுட னந்திதனைக் காண்பீர்தாமே. 185

காணவே மனவுறுதி வினயங்கொண்டு
களிப்புடனே துவாரபா லகரைக்கண்டு
வேணதோர் நமஸ்கார மிகப்பணிந்து
வேதமது நூற்படியே நுணுக்காராய்ந்து
சாணளவா யன்னமெனும் புடையும்பூண்டு
சக்கரமாந் தரிசனையுந் தானேகொண்டு
விணையுறுந் தம்பிரா னாஞ்சநேயர்
விதிப்படியே யாராட்சி மணிதான்காணே. 186

Koviloor Digital Library

அகஸ்தியர் புலஸ்தியருக்கு சன்மார்க்க மோதல் தேகம் நிலையாமை

தாமான புலத்தியனே யின்னஞ்சொல்வேன்
தற்பரனே பரஞ்சுடரே தயவாய்க்கேண்மோ
பூமானாம் வெகுகோடி மாண்பரப்பா
பூவுலகில் தேடிவைத்த நிதியனந்தம்
சாமான்னிய மாகவேதான் கோடிசெம்போன்
தாரணியில் அஞ்ஞானி மெய்ஞ்ஞானிதான்
ஆமான நவகோடி களஞ்சியங்கள்
அப்பனே தேடிவைத்த நிதிகளுண்டே. 195

நிதியான நிதியனைத்தும் தேடியென்ன
நீணிலத்தி லட்டநிதி படைத்துமென்ன
பதியான வூரனைத்து மாண்டுமென்ன
பாருலகில் நவகோடி மலைபொற்றங்கம்
மதிலான வரண்கோட்டை மாடமாளி
மண்டலத்தி லடைந்ததென்ன புண்ணியபாலா
துதியாக புவியிலுள்ள சாதுதாமும்
துப்புரவா யுந்தனையும் பணிவார்தாமே. 196

பணிந்தாலு முந்தமக்கு காட்சியென்ன
பாருலகை யொருகடையி லாண்டுமென்ன
அணியணியாய் படைமுகமுங் கொண்டுமென்ன
ஆஸ்தான மண்டபங்கள் மாளியென்ன
துணிவுடனே கடலேறி திரவியங்கள்
துப்புரவாய் தான்தேடி வைத்துமென்ன
மணியான நவகண்ட மடைந்துமென்ன
மானிலத்தி லொன்றுமில்லைக் காணீர்பாரே. 197

பார்க்கையிலே காயமது நீர்மேற்காயம்
பாலகனே நீரின்மேற் குமிழிபோலாம்
தீர்க்கவே சலமதனி லெழுத்தேயாகும்
திகழ்வேந்தே மூச்சடங்கும் பிரேதமப்பா
கார்க்கவே மண்ணாழி கோட்டையப்பா
கடுஞ்சினத்தால் மண்ணோடே மண்ணேயாகும்
நீர்க்கவே காயமது நிலைநில்லாது
நீடாழி யுலகமெலா மிந்தவாழ்வே. 198

Koviloor Digital Library

வெள்ளிபற்பம்

வாழவே யின்னமொரு மார்க்கம்பாரு
வளமான புலஸ்தியனே மச்சகேந்திரா
தாழவே ரசிதமென்ற பற்பந்தன்னை
தயவுடனே மாணாக்கள் பிழைக்கவென்று
சாழவே வெள்ளியது களஞ்சிமைந்தா
தகைமையுடன் ராவியல்லோ செப்பக்கேளீர்
சூழவே கல்வமதி லிட்டுமைந்தா
சுந்தரனே வெள்ளியென்ற பொடிதான்போடே. 199

போட்டுமே சரியிடையாய் புறாவின்முட்டை
புகழான தோலதுவும் சரியாய்க்கொண்டு
நாட்டமுடன் பொட்டிலுப்பு யிடையேயொன்று
நலமுடனே வெண்கருவா லிட்டேயாட்டி
வாட்டமுடன் தானரைப்பா யாறுசாமம்
வளமாக பில்லையது வலுக்கச்செய்து
நீட்டமுடன் காய்ந்தபின்பு வோட்டிலிட்டு
நிஷ்களங்க மானதொரு சீலைசெய்யே. 200

செய்யவே கோழியென்ற புடந்தான்தீரு
செப்புகிறேன் சுன்னமதை யெடுத்துப்பாரு
வையகங்கள் தான்மெய்ச்சும் சுன்னமப்பா
வளம்பெரிய சுன்னமதை தானெடுத்து
பையவே மறுபடியுங் காரங்கூட்டுப்
பாங்கான காரமென்றால் பகரக்கேளீர்
துய்யவே கடுங்கார செயநீராகுந்
துப்புரவே யாறுவகை செயநீர்கூட்டே. 201

கூட்டவென்றால் தானரைப்பா யாறுசாமம்
குறிப்புடனே மூசைதனி லிட்டுமைந்தா
நாட்டமுடன் சில்லிட்டுச் சீலைசெய்து
நலமுடனே சரவுலையி லிட்டுவூது
தேட்டமுடன் சாமமது ரெண்டேயூது
தெளிவுடனே தானெடுத்து காற்றில்வைக்க
வாட்டமது நேராது வண்மையோனே.
வலுவான சுன்னமதை மறுநாள்பாரே. 202

Koviloor Digital Library

பார்க்கையிலே சுன்னமது யேதுரைப்பேன்
பளிங்கான சுன்னமது காரமெத்த
பூர்க்கவே நாவதுவும் வெந்துகாட்டும்
புகழான சுன்னமது பகரொண்ணாது
ஏர்க்கவே யிச்சுன்னம் பளிங்குமெத்த
யெழிலான காரமென்ற சுன்னமாச்சு
ஆர்க்கவே சுன்னமதை சூதத்திற்கு
அப்பனே பத்துக்கு வொன்றுகூட்டே. 203

ஒன்றான சுன்னமது தானெடுத்து
உத்தமனே நிம்பத்தின் சாற்றினாலே
வென்றிடவே நாற்சாம மரைத்தபோது
வேகமது தானுண்டாய் சூதங்கொல்லும்
தென்றிசையி லகுவனியா ருரைத்தவண்ணம்
தேற்றமுடன் மெழுகுதனை யெடுத்துபாலா
குன்றிடவே மீசைதனி லடைத்துமைந்தா
குருபரனே தானுருக்க ரசிதமாமே. 204

ஆமேதான் ரசிதமென்ற வெள்ளியப்பா
அப்பனே தானெடுப்பாய் களஞ்சியொன்று
நாமேதா னுரைத்தபடி நாலுக்கொன்று
நயம்படவே ரவிதனை சேர்ப்பாயப்பா
போமேதான் கரியோட்டி லுருக்கிப்பாரு
பொங்கமுடன் துய்யானாம் வெள்ளைமெத்த
தாமேதான் செகசோதி வெள்ளியாச்சு
தற்பரனே நீயுமொரு சித்தனாமே. 205

சித்தனாம் வெள்ளியென்ற பற்பந்தன்னை
சீர்பெறவே வெண்ணைதனில் குன்றிதானும்
பத்தியுடன் மண்டலந்தா னந்திசந்தி
பாங்குடனே தான்கொண்டால் மேகம்போகும்
வெற்றியுடன் பத்தியந்தா னில்லையப்பா
வேகமுடன் மேகவகை யிருபத்தொன்றும்
நித்தியமும் தானருந்த ரோகம்போகும்
நீதியுள்ள புலஸ்தியனே நினைவாய்க்கேளே. 206

Koviloor Digital Library

அயபற்பம்

கேளப்பா யின்னமொரு மார்க்ககூர்வேன்
கெடியான புலஸ்தியனே புகல்வேனப்பா
தாளப்பா அயமதுவும் ராவிமைந்தா
தண்மைபெற யெரிகாலன் பாலாலாட்டி
கேளப்பா மெழுகுபத மானபின்பு
கெட்டியாய் காரமது பொரித்துக்கூட்டு
மீளப்பா மூசையிட்டு வுருக்கித்தீரு
மிக்கவே களங்காகு மின்னம்பாரே. 207

பாரப்பா களங்குதனை யெடுத்துமைந்தா
பாலகனே முன்னுரைத்த யெரிகாலந்தான்
நேரப்பா தான்சேர்த்துத் தானரைப்பாய்
நெடுநேர மொருசாம மரைத்தபின்பு
சேரப்பா பொரித்ததொரு காரஞ்சேர்த்து
செம்மலுடன் மூசைதனி லிட்டுமேதான்
ஆரப்பா சரவுலையி லிட்டுவூது
அப்பனே மாசற்ற களங்கமாச்சே. 208

ஆச்சப்பா களங்கமதைத் தானெடுத்து
அப்பனே வதற்குநிகர் சூதஞ்சேர்த்து
மூச்சப்பா தானொடுங்கி யோடொட்டாமல்
முகிழ்பெறவே யாறுவகை செயநீர்தன்னால்
மாச்சலது வாராமல் துய்யபூபா
மன்னவனே தானரைப்பாய் எட்டுசாமம்
காச்சலது ரவிதனிலே வைத்தபின்பு
காவலனே சில்லிட்டுச் சீலைசெய்யே. 209

செய்துமே ரவிதனிலே காயவைத்து
செங்கமலக் கண்ணானே செப்பக்கேளீர்
தொய்யவே நூறெருவிற் புடந்தான்போடு
துப்புரவாய் புடமாறி யெடுத்துப்பாரு
வையகங்கள் மெய்ச்சிக்கும் தவளமப்பா
வளம்பெரிய சுன்னமதை யென்னசொல்வேன்
துய்யபுகழ் சுன்னமென்ற வயபற்பந்தான்
சுந்தரனே கூறுதற்கு நாவொண்ணாதே. 210

Koviloor Digital Library

ஒண்ணாது பற்பமப்பா காரமெத்த
ஓகோகோ நாதாக்கள் செய்யும்பற்பம்
மண்ணிலுள்ள சிவயோகி மாண்பரப்பா
மானிலத்தில் செய்யுகின்ற வேதையாகும்
திண்ணமுடன் மானிடர்க ளனேகர்செய்வார்
தீர்க்கமுடன் கருவாளி செய்வானப்பா
தண்ணமுடன் விதியிலான் செய்யமாட்டான்
தாரணியில் விதியாளி செய்வான்தானே. 211

தானான புலஸ்தியனே புண்ணியபூபா
தகைமையுள்ள கண்மணியே கருத்துள்ளானே
தானான பற்பமதை மண்டலந்தான்
மகாதேவா கொண்டவற்கு காயசித்தி
கோனான பற்பமதை கொண்டபோதே
கொற்றவனே சுவாசமது கீழ்நோக்காகும்
தேனான மனோன்மணியாள் கிருபையாலே
தேசொளிவின் சின்மயத்தை யடையலாமே. 212

அடையலாம் தேகமது சட்டைதள்ளும்
அப்பனே நரைதிரையும் அற்றுப்போகும்
நடையணிந்த தம்பிரான் கிருபையாலே
சதாகாலம் வாசியது நடத்தலாகும்
தடையதுவும் நேராது காயபற்பம்
சட்டமுடன் சிவயோக நிலையேமாளும்
நடையதுவு நேர்ந்தாலு மிளைப்பேயில்லை
நாதாந்த சித்தொளிவின் பற்பந்தானே. 213

பற்பமா மயபற்பம் வேதையாகும்
பாலகனே புலஸ்தியனே பண்புள்ளானே
அற்பமென்று நினையாதே வுன்புள்ளானே
அப்பனே வயபற்பம் வண்ணமப்பாரீர்
சொற்பெரிய நாதாக்கள் கூறும்வண்ணம்
சுந்தரனே இந்திரனே சுகுணமாரா
விற்பனங்கள் கொண்டாடும் துய்யபற்பம்
விதியறிந்து மதிதனிலே பத்துக்கொன்றே. 21

Koviloor Digital Library

பத்தான மதிதனையே யுருக்கிமைந்தா
பாலகனே பற்பமதை கொடுத்தபோதே
சத்தான பற்பமது தானுஞ்சேர்ந்து
தகைமையுடன் தானுருகி வரணமுண்டாம்
வித்தான யேமமது நாலுக்கொன்று
விதிப்படியே தானுருக்கி வாரடித்து
சுத்தமள்ள பூங்காவில் புடமேதீர்ந்தால்
சுருதியுடன் பழுப்பகன்று பசுமையாமே. 215

பசுமையென்ற தங்கமது பகரொண்ணாது
பாரிலுள்ள ராஜாதி ராசர்தாமும்
பசுமையுள்ள தங்கமதை மெய்ச்சுந்தங்கம்
பாவாணர் கொண்டாடும் பிறவித்தங்கம்
பசுமையுள்ள நாதாக்கள் வசிக்குந்தங்கம்
பாருலகில் சிவயோகிக் கானதங்கம்
பசுமையுள்ள சமுசாரிக் கானதங்கம்
பார்லோக மெய்ச்சுகின்ற தங்கமாச்சே. 216

தங்கமா மிக்குருவை பற்பந்தன்னை
தண்மையுடன் ரவிதனிலே பத்துக்கொன்று
அங்கமுடன் தானுருக்கி குருவொன்றிய
அப்பனே செம்பதுவும் கட்டியேதான்
புங்கசித்து யெட்டுடைய பொன்னுமாச்சு
புகழான காவிதனில் புடமேதீர்ந்தால்
வங்கத்துக் கசையாத தங்கமாச்சு
வளம்பெரிய சித்துமுனி தங்கமாமே. 217

ஆமப்பா புலஸ்தியனே யறிவுள்ளானே
அஷ்டமா சித்தியது யிதற்குள்ளாகும்
நாமேதா னுரைத்தவண்ணம் பிசகிடாமல்
நளினமுடன் முன்னுரைத்த பற்பந்தன்னை
போமேதான் பணவிடையாங் களஞ்சியப்பா
பொன்னவனே குடவனிலே பத்துக்கொன்று
தாமேதா னுரைத்தவண்ண மேத்தமின்றி
தயாபரனே கொடுத்துருக்க மாற்றுமாச்சே. 218

Koviloor Digital Library

மாத்தான குடவனப்பா பசுமைத்தங்கம்
மகத்தான ரிடிமுனிவர் செய்யுந்தங்கம்
ஆத்தாளு மனதுவந்து புரிந்ததங்கம்
அப்பனே விதியிருந்து வமைந்ததங்கம்
நீத்தமுள்ள வேதியர்கள் சங்கமற்கு
நிஷ்டானு முறைமைகொண்ட பிறவித்தங்கம்
கோத்தமணி நவரத்தின கசிதங்கட்கு
கொற்றவனே யுகந்ததொரு தங்கமாச்சே. 219

பொதிகைமலை செப்புத்தொட்டி வேதை

ஆச்சென்று விடுகாதே யின்னங்கூர்வேன்
அப்பனே நாதர்மெய்ச்சும் புலஸ்தியாகேள்
பாச்சலெனும் நதிசூழ்ந்த பொதிகைதன்னில்
பாலகனே யெனதைய ரசுவனியாந்தேவர்
மூச்சடங்கி சிலகால மிருந்தசித்து
மூதுலகை வெகுகாலங் கடந்தசித்தி
மாச்சலது நேராத வொளியைக் கண்டோர்
மகாதேவா குருபரனா ரளித்தவாக்கே. 220

வாக்கான வாக்கதுவும் பொய்யாதப்பா
வையகங்கள் தான்மெய்ச்சும் அமிர்தவாக்கு
நோக்கான பொதிகைமலை யடிவாரத்தில்
நெடிதான சுனையுண்டு வுதகமுண்டு
போக்கான விடமல்ல தடமுமல்ல
பொங்கமுடன் சித்தர்முனி வசிக்கும்ஸ்தானம்
ஆக்கமுடன் தேவதா காளிகோயில்
அங்ஙனவே யடிவார மலைதான்காணே. 221

காணவே பிடாரியென்ற காளிதானும்
கடுஞ்சினமாம் பலிகொண்ட பிடாரியப்பா
பூணவே பத்திரா காளியப்பா
புகழ்படைத்த தேசமென்ற மாரிதானும்
ஆணவங்கள் கொண்டதொரு மாண்பர்தம்மை
யடக்கிவைக்கு மகாகாளி தேவியாகும்
நீணளவு மடையாள மோராள்மட்டம்
நீதியுடன் தான்வெட்டி பார்க்கநன்றே. 222

Koviloor Digital Library

பார்க்கையிலே முன்யுகத்தில் பிரளயங்கள்
பாங்குபெற வந்ததொரு காலந்தனில்
தீர்க்கமுடன் கிரேதாயி னுகத்திலப்பா
திறமுடனே நாதாந்த சித்துதாமும்
கார்க்கவே செப்பென்ற பாஷாணத்தை
காளிகா தேவியிட ஸ்தானந்தன்னில்
சேர்க்கவே பொதிகைமலை யடிவாரத்தில்
சென்றுமே மலைபோலே வமைத்தார்தானே. 223

தானான செப்பென்ற தொட்டிதானுந்
தண்மையுடன் மலையடிவாயிற் சென்றாயானால்
கோனான கோபுரம்போல் கொட்டிருக்கும்
கொற்றவனே செப்புயென்ற தொட்டிதன்னை
வேனான பாஷாணம் வேண்டுமட்டும்
வெட்டவெளி யம்பரத்தி லிருக்குஞ்செம்மை
போனதொரு வழியோடு துறையோடுந்தான்
பொங்கமுடன் கொண்டேகி முறைதான்கேளே. 224

கேளப்பா முறைபாடு யாமுரைப்போம்
கெடியான புலஸ்தியனே தம்பிரானே
கோளப்பா வாராமல் தொட்டிதன்னை
கோவேந்தே கோபுரமே கொன்றைவேளே
தாளப்பா தயாபரத் தம்பிரானே
தகையோடு தொட்டியது சேர்தானப்பா
பாளப்பா போகாமல் புனிதவானே
பட்சமுடன் கொண்டுவந்து செப்பக்கேளே. 225

செப்பவென்றால் வெள்ளாட்டு கோமியத்தில்
செம்மலுடன் மூன்றுநா ளூறப்போடு
ஒப்பமுடன் நான்காம்நாள் கழுவிப்போடு
ஒகோகோ நாதாக்கள் பெருமைகாண்பீர்
தப்பிதங்கள் நேராத வண்ணமப்பா
தண்மையுடன் தொட்டியென்ற பாஷாணத்தை
மெப்பமுட னாறுவகை செயநீர்தன்னால்
மேன்மைபெற தா[illegible] 226

Koviloor Digital Library

அன்றான செந்தூரம் குன்றியப்பா
அப்பனே மண்டலந்தான் கொண்டாயானால்
வென்றிடவே வாசியது கீழ்நோக்காகும்
வேதாந்தத் தாயினிட விளக்கம்பாரு
குன்றான கீதமது யென்னகூர்வேன்
குவலயத்தில் நீயுமொரு சித்தனாவாய்
தென்றிசையி லகுவனியார் யெந்தமக்கு
சித்தமுடன் மனதுவந்து வறைந்தவாரே. 235

வாறான விம்மருந்து வெளிவிடாதே
வளம்பெரிய நாதாக்கள் சாபங்காட்டும்
கூறான கர்மிகளும் சண்டாளருந்தான்
குவலயத்தில் மெத்தவுண்டு பாவிமார்கள்
தூறான கூற்றுவன்போ லும்மைக்கண்டால்
துப்பகற்றி யுறவாடி மர்மங்கொள்வார்
ஆறான செந்தூரந் தன்னைக்கேட்பார்
அப்பனே மர்மமதை காட்டொண்ணாதே. 236

காட்டாதே செந்தூரப் பாதைகாணார்
பாதைகண்டால் லோகமெல்லாஞ் சித்தாய்ப்போகும்
வாட்டமுள்ள செந்தூரம் கண்டபோதே
வாகுடனே மிடியெல்லா மகன்றுபோகும்
நாட்டமுடன் பிரமலபி காண்பாயப்பா
நலமான சிவயோகங் கிட்டும்கிட்டும்
தேட்டமுட னகுவனியார் சொன்னநீதி
தெளிவான செந்தூரம் புகலொண்ணாதே. 237

கோழித்தலை அரிதார செந்தூரம்

புகலவே யின்னமொரு மர்மங்கூர்வேன்
புகலான புலஸ்தியனே புண்ணியமாரா
நிகலவே வகுவனியார் சொன்னமார்க்கம்
நீதியுள்ள மாந்தர்கட்கு பொய்யாகாது
சகலசித்து மிதற்குள்ளா யாடலாகும்
சாங்கமுடன் பொதிகைமுனி மர்மமெத்த
அகலவே கோழியென்ற கெந்திதானும்
அப்பனே தாரமது சரியாய்க்கூட்டே. 238

Koviloor Digital Library

கூட்டியே தாரமதை யெடுத்துபாலா
குருபரனே சிறுசின்னி தன்னாலாட்டி
வாட்டமுடன் தாளகத்தை மைபோலாட்டி
வாகுடனே கெந்திக்கு வங்கிபூண்டு
நாட்டமுடன் சீலையது வலுக்கச்செய்து
நயம்பெறவே புடமதுவும் கோழியாக
தேட்டமுடன் புடம்போட்டுப் பார்த்தாயானால்
தெளிவான கெந்தியது கட்டிபோச்சே. 239

போச்சென்று விடுகாதே புண்ணியபாலா
புகழான கெந்திக்கு பின்னுமப்பா
பாச்சலென்ற தாரமதை முன்போலாகப்
பாலகனே மூலிதன்னா லரைத்துமைந்தா
மாச்சலது நேராமல் கெந்திக்கப்பா
மன்னவனே யஞ்சியது கவசம்கொண்டு
தீச்சலது வாராமல் கெந்திக்கல்லோ
திடமுடனே புடமதுவும் கோழியாமே. 240

கோழியாம் புடமதுவு மாறிப்பாரு
கொற்றவனே புலஸ்தியனே மச்சகேந்திரா
ஆழியுள்ள கெந்தியது கட்டிப்போச்சு
அப்பனே தாரத்தின் மகிமையப்பா
சாழியாம் பெருங்கடல்கள் தாண்டினாக்கால்
சாங்கமுடன் கெந்தியது கட்டுவாரோ
வேழியாம் கெந்தியது தனையெடுத்து
வேட்டமுடன் நீற்றுதற்கு விபரங்காணே. 241

காணவே நாயுருவி சுட்டசாம்பல்
காவலனே பாண்டமதில் கீழ்மேலிட்டு
ஊணவே நடுமையம் கட்டிவைத்து
வுத்தமனே மேற்சட்டி கொண்டுமூடி
நீணவே சீலையது வலுக்கச்செய்து
நீதியுடன் தாமெரிப்பா யெட்டுசாமம்
பானம்போல் கெந்தியது நீறிநிற்கும்
பாலகனே வாறியபின் னெடுத்துப்பாரே. 242

Koviloor Digital Library

பாரப்பா சுன்னமதை பதனம்பண்ணு
பாலகனே புலஸ்தியனே மச்சகேந்திரா
நேரப்பா குன்றியிடை மண்டலந்தான்
நேர்ப்புடனே வெண்ணைதனில் கொண்டாயானால்
தேரப்பா தேகமது கற்றூணாகும்
தெளிவுடனே சட்டையது மிகவேதள்ளும்
ஆரப்பா பத்தியமோ யிதற்கோயில்லை
அப்பனே கெந்தியிட பற்பந்தானே. 243

பற்பமாம் கெந்தியது வேகமெத்த
பார்த்திபனே புலஸ்தியனே பண்புள்ளானே
அற்பமென்று நினையாதே அன்புள்ளானே
அற்பனே கெந்தியது குன்றியப்பா
கற்பமென்ற கெந்தியது மண்டலந்தான்
காவலனே வெண்ணைதனில் கொண்டாயானால்
விற்பனன்போல தேகமது கற்றூணாகும்
விருதுகட்டி பற்பமதை கொள்ளலாமே. 244

கொள்ளவே கந்தகத்தின் நீற்றினத்தால்
கொற்றவனே சில்விஷங் களற்றுப்போகும்
எள்ளளவும் ரோகமது நிலைநில்லாது
யெழிலான பாண்டுமுதல் கெவுசிபோகும்
தெள்ளமிர்த மானவனே தசையிலுள்ள
தெளிவான மேகமென்ற நீர்விஷங்கள்
உள்ளபடி யகுவனியார் சொன்னவாக்கு
உத்தமனே பொய்யாது மெய்யாம்பாரே. 245

பாரப்பா புலஸ்தியனே மச்சகேந்திரா
பாலகனே பற்பமதை களஞ்சியப்பா
நேரப்பா வெள்ளிதனில் பத்துக்கொன்று
நேர்மையுடன் வுருக்குமுகந் தன்னிலீய
ஆரப்பா மாற்றதுவு மென்னசொல்வேன்
அப்பனே வாரடித்துப் புடந்தான்தீரு
காரப்பா கசடற்ற தங்கமாச்ச
காசினியில் நாதாக்க ளாடுங்கூத்தே. 246

Koviloor Digital Library

கூத்தான வேதைமுக மின்னங்கூர்வேன்
குருபரனே சிவஞான வொளிவுள்ளானே
நாத்தமுள்ள செம்பதுவும் பத்துக்கொன்று
நளினமுடன் குருபற்பந் தந்தாயானால்
நேத்தியுடன் வூரலது யேகியேதான்
நேர்மையுடன் மேகமென்ற வரணம்போலாம்
சாத்திரத்தி லுற்றபடி யோட்டிலூதி
சட்டமுடன் வாரடித்துப் புடந்தான்போடே. 247

போடப்பா பூங்காவி தன்னிலப்பா
பொங்கமுடன் தங்கமது யென்னசொல்வேன்
நீடப்பா தங்கமது பிறவித்தங்கம்
நெடிதான சுயத்தங்கம் ஞானத்தங்கம்
தேடப்பா சிவயோகத் தங்கமப்பா
தெளிவான தங்கமென்றே செப்பலாகும்
ஆடப்பா சகலசித்து மிதற்குள்ளாகும்
அப்பனே கெந்தியிட மகிமைதானே. 248

மகிமையா மின்னமொரு மார்க்கங்கூர்வேன்
மகாதேவா புலஸ்தியனே புண்ணியமாரா
அகிலமெலாம் தான்புகழும் கெந்திபற்பம்
அப்பனே மகிதலத்தில் செய்வாருண்டோ
சகிதமுடன் சித்தர்களும் கண்டாரானால்
சாங்கமுட னுந்தமக்கு வினயங்கூறி
விகிதமுடன் பற்பமதை யீயவென்று
வினயமுட னுபதேசங் கொள்ளுவாரே. 249

பொன்மாற்றுயர்வு

கொள்ளவே வின்னமொரு மறைப்புமார்க்கம்
கொப்பெனவே கூறுகிறேன் குணமுள்ளானே
தெள்ளமிர்த மானதொரு தெய்வஞானி
தேசொளிவின் சின்மயத்தைக் கண்டபோதே
வள்ளலுயர் பொதிகைமுனி சித்தர்பாலும்
வண்மையுடன் போற்றுகின்ற வளமையோனே
கள்ளமிலா சிரோரத்தினக் காவலோனே
கருத்துறவே மர்மமது வுரைக்கிறேனே. 250

Koviloor Digital Library

உரைக்கவே புருஷசிரோன் மணியேகேண்மோ
வுத்தமனே பொன்மாற்று வுயர்வுகூர்வேன்
மரைத்தபொரு ளுடகருவு வுளவுசொல்வேன்
மன்னவனே மெய்ஞ்ஞானி வகுப்புகேண்மோ
நிறைத்தபொருள் நூறாண்டு சென்றமூலி
நிஷ்களங்க மானதொரு மரந்தானப்பா
திரைத்ததொரு பூவரசு நூறாண்டப்பா
தீர்கக்முடன் மூலமதை யெடுத்துக்கொள்ளே. 251

எடுக்கவே சிவனாரின் வேம்புதானும்
யெழிலான மூலமுடன் சரியாய்ச்சேர்த்து
தொடுக்கவே பாண்டமதி லிட்டுமைந்தா
தோராமல் குழித்தயில மிறக்கியேதான்
விடுக்கவே தயிலமதை பதனம்பண்ணு
வித்தகனே பூவரசின் வித்துகூட்டி
அருக்கவே கெந்தியது சேர்தானப்பா
அப்பனே வித்துடனே தயிலங்கூட்டே. 252

கூட்டவே தயிலமதால் கெந்திதன்னை
குருபரனே தானரைப்பாய் நான்குசாமம்
தாட்டிகமாய் தானரைத்து மெழுகுதன்னை
தண்மையுடன் குழித்தயில மாகவாங்கி
நாட்டமுடன் தயிலமதை சூதத்தாட்டு
நலமுடனே சூதமது மறந்து கொல்லும்
வாட்டமுடன் சூதமதை யெடுத்துபாலா
வளம்பெறவே மெழுகுண்டா யிருக்கும்பாரே. 253

பாரப்பா மெழுகுதனைக் கவசம்செய்து
பார்த்திபனே யெழுசீலை வலுத்தபின்பு
நேரப்பா பூப்புடத்தில் போட்டாயானால்
நெடிதான சூதமது சுன்னமாகுந்
தீரப்பா சுன்னமதை பதனம்பண்ணு
தீர்க்கமுடன் சுன்னமது வேகமெத்த
நீரப்பா வெள்ளிதனில் பத்துக்கொன்று
நீதியுடன் றானுருக்கி கொடுத்திடாயே. 254

Koviloor Digital Library

கொடுத்திடவே மாற்றதுவு மேதென்றாக்கால்
கொற்றவனே யெட்டுவய தானபொன்னாம்
அடுத்துமே வாரடித்துப் புடந்தான்றீரு
அப்பனே சிவ்யோகத் தங்கமாகும்
தொடுத்ததொரு சுன்னமதை ரவியிலப்பா
சுந்தரனே பத்துக்கு வொன்றுதாக்கு
அடுத்த செம்பு செம்பொன்னா மண்ணலேகேள்
அப்பனே வயததுவுங் கூறொண்ணாதே. 255

ஒண்ணாது யேமமது யென்னசொல்வேன்
வுத்தமனே புலஸ்தியனே வுண்மையோனே
திண்மையுடன் தேனதனில் கொண்டாயானால்
தீர்க்கமுடன் காயாதிக் கொப்பேயாகும்
வண்ணமுள்ள சுன்னமதை கொண்டபோதே
வளம்பெரிய நாதாக்கள் போலேயாவாய்
எண்ணரிய நற்பொருளாம் காயகற்பம்
யெழிலான சுன்னத்தின் மகிமைதானே. 256

துருசு சுன்னம்

தானான யின்னமொரு மார்க்கம் சொல்வேன்
தகைமையுள்ள சிறுபாலா தம்பிரானே
தேனான மனோன்மணியான் கிருபையாலே
தேசொளிவின் சுன்னமது துருசுசுன்னம்
பானான துருசதுவும் பலந்தானப்பா
பாலகனே தானெடுத்து செப்பக்கேண்மோ
மானான ரோமமது பலமஞ்சாகு
மன்னவனே வெடியுப்பு சரியாய்க்கூட்டே. 257

கூட்டியே தானரைப்பாய் சாமம்நாலு
குருபரனே யாறுவகை செயநீர்தன்னால்
தாட்டிகமாய் மெழுகுபதந் தானரைத்து
தட்டாமல் துருசுக்கு வங்கிகொண்டு
பூட்டகமாய் சீலையது வலுவாய்ச்செய்து
புகழுடனே ரவிதனிலே காயவைத்து
ஆட்டமுடன் மண்மறைவில் புடந்தான்போடு
அப்பனே துருசுவெள்ளை யாகும்பாரே. 258

Koviloor Digital Library

பாரப்பா துருசுவெள்ளை யானபோது
பாலகனே யாடுகண்ட வோனாய்போலும்
நேரப்பா சூதமென்ற ராஜாவைத்தான்
நெடிதான சுன்னத்தால் கூட்டலாகும்
சீரப்பா சூதமது மடங்கிநின்றால்
சிதம்பரத்தி னம்பலத்தி னொளியேதோன்றும்
ஏரப்பா வஷ்டசித்து மாடலாகும்
யெளிதான துருசினிட போக்குதானே. 259

போக்கான சுன்னமதை யெடுத்துப்பாலா
பொங்கமுடன் நாகத்துக் கங்கிகொண்டு
நோக்கமுடன் தேன்வளைய லதின்மேற்கொண்டு
நெடிதான சீலையது வலுக்கச்செய்து
தாக்கவே நூரெருவிற் புடந்தான்றீரு
தண்மையுடன் நாகமது வுருகியல்லோ
வாக்கதுவும் பொய்க்காமல் மணிபோலாகும்
வாகான வெள்ளிமணி யென்னலாமே. 260

என்னவே மணியெடுத்து செப்பக்கேளீர்
யெளிதான யேற்றமது யென்னவென்றால்
பன்னவே நாகமிடை சூதஞ்சேர்த்துப்
பாலகனே கெந்தியது நாலுக்கொன்று
உன்னிதமாய் தாரமது யெட்டிலொன்று
வுற்பனமாய் கவுரியது நாலுக்கொன்று
சொன்னதொரு லிங்கமது விரண்டுக்கொன்று
சொருபமுடன் றான்சேர்த்து வரைக்கக்கேளே. 261

அரைக்கவென்றால் ஆறாதார மேதொன்றாக்கால்
அப்பனே யாறுவகை செயநீராகும்
விரைக்கவே செயநீரால் சாமமெட்டு
விரைவுடனே தானரைப்பாய் மைபோலாக
குரைக்கவே நீரதுவும் காய்ந்தபின்பு
குருபரனே பொடியாக்கி குறிதான்கேளு
நிரைப்படியே காசியென்ற குப்பிவாங்கி
நீதியுடன் சீலையது வலுக்கச்செய்யே. 262

Koviloor Digital Library

செய்யவே முறைபாடு யேதென்றாக்கால்
செப்பரிய வண்மையுள்ள புலஸ்தியானே
வெய்யவே குப்பிக்குள் மருந்தையிட்டு
வேகமது போகாமல் மாக்கல்லாலே
துய்யவே மேல்முடி சீலைசெய்து
துப்புரவாய் ரவிதனிலே காயவைத்து
பையவே பாண்டமதில் மணல்தானப்பா
பாலகனே விரல்நாலு வுயரம்போடே 263

போடவே குப்பிவாய்த் தெரியமூடு
பொங்கமுடன் மேற்சட்டி கொண்டுமூடி
நாடவே தீயதுவுங் கமலமாகும்
நாதாந்த சித்தொளிவே சாமமெட்டு
ஊடவே தானெரிப்பாய் புனிதவானே
வுத்தமனே தீயாறி யெடுத்துப்பாரு
ஆடவே செந்தூர மருணன்போலாம்
அப்பனே வசுவனியார் சொன்னவாக்கே. 264

வாக்கான வாக்கதுவும் பொய்யாதப்பா
வளம்பெரிய நாதாக்கள் மெய்ச்சும்வாக்கு
நோக்கமுடன் கண்டுமல்லோ மிகவாராய்ந்து
நெடிதான முறைபாடு செப்பினேன்யான்
போக்கதுவு மில்லாமல் துய்யபூபா
பொலிவுடனே செந்தூரந் தனையெடுப்பாய்
ஆக்கமுடன் செந்தூரம் பதனம்பண்ணு
அப்பனே வதின்பெருமை வறையக்கேளே. 265

கேளப்பா புலஸ்தியனே மச்சகேந்திரா
கெவனமுட னாமுரைப்போம் புண்ணியபூபா
கோளப்பா நேராது செந்தூரந்தான்
கொற்றவனே தினையளவு தேனிற்கொண்டால்
பாளப்பா தேகமது நிலைநில்லாது
பாலகனே தேகமது ரோகம்போகும்
வாளப்பா கசரோகம் பாண்டுபோகும்
வண்மையுள்ள நீராம்பல் கவுசிபோமே. 266

Koviloor Digital Library

போகுமே நீரிழிவு மதுமேகந்தான்
போக்கான பவுத்திரமு மூலம்போகும்
ஏகுமே சீழ்முல மிரத்தமூல
மெளிதான புத்துமுதல் கண்டமாலை
சாகுமே குன்மமென்ற வாந்திபோகும்
சாங்கமுடன் பித்தநாற் பதும்போகும்
ஏகுமே வாதமெண் பதும்போகும்
யெழிலான ஈளைபதி னெட்டும்போமே. 267

போமென்ற குஷ்டம்பதி னெட்டுமேகும்
பொல்லாத கடிவிஷங்கள் சில்விஷங்கள்
நாமென்ற சிலேத்துமங்கள் தொண்ணூற்றாறும்
நளினமுட னுடலைவிட் டகலும்பாரு
ஆமென்ற நீரிழிவு மாறும்போகும்
அப்பனே கால்குடைச்சல் கரணைநீங்கும்
மானென்ற புள்ளிமுதல் சர்மரோக
மகத்தான படைமுதலும் பறக்குந்தானே. 268

பறக்குமே கழல்வாதம் குடலில்வாதம்
பாங்குடனே நரம்புவலி நாடாதோடும்
இறக்காது தேகமது காயகற்பம்
யெழிலான செந்தூர மென்னகூர்வேன்
திறக்கவே காயாதி செந்தூரந்தான்
தேசத்தில் தேடினால் கிட்டாதப்பா
உறத்தவிதி யுள்ளவற்கு தேகம்போகா
வுத்தமனே காயாதி யென்னலாமே. 269

என்னவே யின்னமொரு மார்க்கம்கூர்வேன்
யெழிலான புலஸ்தியனே வன்புள்ளானே
முன்னமே செய்தவினை கர்மமப்பா
மூதுலகில் போவதற்கு யாராலாகும்
துன்னவே யிம்மருந்தால் நாலிலொன்று
துப்புரவாய் நீங்குமென்று யெந்தனையர்
சொன்னதொரு வகுவனியார் தேவர்வாக்கு
சொல்லதுவும் பிசகாது துய்மையோனே. 270

Koviloor Digital Library

புவனகிரி வளப்பம்

தூய்மையாய் புவனகிரி வளப்பஞ்சொல்வேன்
துப்புரவாய் புலஸ்தியனே சுகுணமாரா
வாய்மையாய் தென்காயற் பதிக்குமேற்கே
வளம்பெரிய நாதாக்கள் கூட்டமப்பா
மாய்மைக ளதிகமுண்டு மன்னாகேண்மோ
மகாபெரிய புவனகிரி மலைதானப்பா
சாய்மையா ரிஷிமுதலோர் சித்தர்கூட்டம்
தவமிருந்து சமாதிமிகக் கொண்டகாடே. 271

காடான காடதுவும் நாதர்காடு
கடுவனமாம் குகையுண்டு சுனையுமுண்டு
தாடாண்மை கொண்டதொரு கிரிகள்கூட்டம்
தகைமையுள்ள புவனகிரி யடிவாரத்தில்
மேடமையாம் வாசலது திட்டுவாகல்
மேன்மையுள்ள சுரங்கம்போல் வழிதான்தோன்றும்
கூடாமை யாரேனு முட்செல்லார்கள்
குருபரனே யசுவனியார் சொன்னவாக்கே. 272

அசுவனியார் அடையாளம்

வாக்கான படியல்லோ நீயுமப்பா
வளமுடனே னுன்பாட்டன் அசுவனியார்தாமும்
நோக்கமுட னெந்தமக்குத் தான்கொடுத்த
நுணுக்கமுள்ள சுக்குமாந் தடிதானப்பா
போக்குடனே கரமேந்தி புவனைதன்னில்
பொங்கமுட னசுவனியார் தமைநினைந்து
ஆக்கமுடன் செல்லுகையில் வாசல்காண்பாய்
அப்பனே யுந்தமக்குச் சேர்வையாமே. 273

சேர்வையாய் குகைக்குள்ளே சுரங்கத்துள்ளே
செங்கமலக் கண்ணானே சென்றபோது
பார்வையா யங்கிருக்கும் காவலாளார்
பார்த்திபனே யுமைக்கண்ட போதேவண்ணம்.
தேர்வையாம் யாரென்று வினவிக்கேட்பார்
தேற்றமுட னுந்தமக்கு தீரங்கொண்டு
தோர்வையாய்ப் போகாமல் நீயுமப்பா
தோற்றமுடன் வுத்தாரங் கூறுவாயே. 274

Koviloor Digital Library

கூறுவாய் அசுவனியார் பேரனென்றும்
குறிப்பான வகஸ்தியனார் சீஷனென்றும்
தேறவே யடையாளஞ் சுக்குமாந்தன்
தேற்றமுடன் தடியொன்று யானுங்கொண்டேன்
மீறவே யடையாளங் கண்டபோதே
மிக்கான வுபசரணை மிகவும்கொண்டு
ஆறவே யுமையழைத்து வாசீர்மித்து
அப்பனே வுட்காவல் கொள்ளுவாரே. 275

கொள்ளவே மூலவர்தான் ரிஷியாரங்கே
கொற்றவனே யுமைக்கண்டு வினயஞ்சொல்வார்
தெள்ளமிர்த மானதொரு சித்தேயென்பார்
தேவிபத முந்தமக்கு தானரிதாகும்
எள்ளளவும் குறையாது காயகற்பம்
ஏற்றமுட னுந்தமக்கு கிடைக்கலாகும்
வள்ளலுயர் சித்தர்முனி நாதரப்பா
வளம்பெரிய கூட்டமது நண்ணுவாரே. 276

நண்ணியே பலவிதமாம் கேள்விகேட்பார்
நாதாந்தக் குளிகைக்கு வழியுங்கேட்பார்
குண்ணியே ஞானப்பா லதீதங்கேட்பார்
குறிப்புடனே சாத்திரநூல் தொகுப்பைக்கேட்பார்
தண்மையுள்ள சுக்குமாந் தடிக்கேயப்பா
தாடாண்மை வட்சரத்தைத் தானும்கேட்பார்
எண்ணியே வரிசைமுறை தொகுப்புங்கேட்பார்
யேற்றமுடன் சிவயோக நுலைகேட்பாரே. 277

நிலையான நிஷ்டைபதி யோகங்கேட்பார்
நீணிலத்தி லஷ்டமா சித்திகேட்பார்
கலையான கலையமுர்தந் தானும்கேட்பார்
கருவிகர ணாதியந்த முடிவுங்கேட்பார்
மலைபோன்ற சாத்திரத்தி ன்ிடமுங்கேட்பார்
மன்னவனே விருப்பிடமுங் கூறவேண்டாம்
தலையான பொதிகைமலை மர்மங்கேட்பார்
சாத்திரத்தின் வுண்மைநிலை கூறுவாரே. 278

Koviloor Digital Library

கூறயிலே சாத்திரமும் நிலைகூறாதே
குணமள்ள புலஸ்தியனே பொதிகைதன்னில்
மாறலாய் தேவரக சியங்களப்பா
மன்னவனே சித்தர்கட்கு வெளிக்காட்டாதே
மீறவே யவரிடத்தி லனேகங்கோடி
மிக்கான சாத்திரங்க ளதிதமெத்த
தேறவே சாத்திரத்தி னுளவாராய்ந்து
தேற்றமுடன் நுணுக்கவகை முறைதான்கொள்ளே. 279

முறையான முறைபாடு வழியறிந்து
மூதுலகில் மூன்றுயுக பிரளயங்கள்
துறையான கலைபகுத்து யுகம்பிரித்து
துப்புரவாய் மூன்றுயுக சாத்திரங்கள்
கறையோடு மொழிபெயர்த்த நூல்களப்பா
கன்னவனே யிருபத்தோர் லட்சமுண்டு
பறையறைந்த மர்மமது கிரந்தமப்பா
பாலகனே நுணுக்கமதை யறிந்துகொள்ளே. 280

புலஸ்தியருக்கு இரண்டாம் பாட்டன் வைப்பு சாத்திரம்

கொள்ளவே வசுவனியார் பாட்டனப்பா
கொற்றவனே திரேதாயி னுகத்திலங்கே
விள்ளவே சமாதியி லமைத்தநூல்கள்
வித்தகனே சிலம்புவித்தை சாத்திரங்கள்
உள்ளதொரு மாந்திரிகம் சல்லியமுமப்பா
வுத்தமனே சமாதிமுகங் காணலாகும்
அள்ளவே சிலம்புவித்தை யுபதேசங்கள்
அப்பனே மர்மமது யறிந்துகொள்ளே. 281

அறிந்துகொள்ளு முறைபாடு வழிபாடெல்லாம்
அப்பனே சாத்திரங்கள் கையிலீயார்
செறிந்தபொரு ளுலகப்தி மர்மமெல்லாந்
தேற்றமுடன் கண்டுமிக வுளவாராய்ந்து
குறிந்துமே சிலகால மங்கிருந்து
குருவான யுன்பாட்ட னாசீர்மத்தை
நெரிந்துமே யவர்பாத மிகப்பணிந்து
நேமமுடன் பதாம்புயத்தைப் பணிகுவீரே. 282

Koviloor Digital Library

பணிந்ததொரு சிறுபாலா யுந்தமக்குப்
பட்சமுட னிதிகாசம் தாமுரைப்பார்
அணியணியாய் சித்தர்முனி கூட்டம்யாவும்
அப்பனே யுந்தமக்கு மர்மங்கூறி
மணியான யுன்பாட்ட னிரண்டாம்பாட்டன்
மகதேவ ரிஷியாரும் வாக்குரைத்த
கணிதமுள்ள நூற்றொகுப்பு யாவுமப்பா
காவலனே யுந்தனுக்கு வரமீவாரே. 283

ஈயவே விட்டகுறை யிருந்ததாலும்
யெழிலான மனோன்மணியாள் கிருபையாலும்
பாயவே சாஸ்திரங்கள் காண்பதற்கு
பாலகனே யுந்தமக்கு வமைக்கலாகும்
நேயமுடன் புவனைகிரி வளப்பங்கண்டு
நேர்ப்புடனே பாட்டனது சாத்திரத்தை
ஆயகலை யுணர்ந்ததொரு புண்ணியபாலா
அப்பனே தான்கேட்க கொடுப்பார்காணே. 284

இரண்டாம் பாட்டன் சரஸ்திரவைப்பு புலஸ்தியருக்குக் கிடைத்தது

காணவே புலஸ்தியனே கருவுள்ளானே
காவலனே நெடுங்காலம் செல்லாமற்றான்
பூணவே யுபதேச வுண்மைபூண்டு
புகழுடனே காயாதி தானுங்கொண்டு
ஆணவங்கள் தானொடுங்கி அன்புள்ளானே
அப்பனே சாஸ்திரங்கள் தானும்கொண்டு
மாணமருங் குடனாக மன்னர்பாதம்
வணங்கியே நமஸ்கரித்து திரும்புவீரே. 285

திரும்பியே பொதிகைக்கு சமாதிகொண்ட
தீர்க்கமுள்ள வசுவனியார் சமாதிபக்கல்
விரும்பியே யவரிட சமாதிதன்னில்
விருப்பமுடன் சாஸ்திரங்கள் கோர்வையெல்லாம்
துரும்புமுதல் யாரேனும் காணாமற்றான்
துப்புரவாய் சமாதிபக்கல் சமாதிகொள்ளு
கரும்பான சாஸ்திரங்கள் சித்தர்பக்கல்
கன்னவனே காட்டாதே கண்ணிற்றானே. 286

Koviloor Digital Library

கண்ணான மகதேவர் சித்தரப்பா
காவலனே யனேகம்பேர் தானுமுண்டு
மண்ணளவா லாசையுற்று சாஸ்திரங்கள்
மகாதேவர் சேர்வையது காணவென்று
தண்மையுட னுமைவந்து வினயம்கேட்பார்
தகைமையுடன் நூலதனைக் காட்டவேண்டாம்
உண்மையாய் வாழ்மொழியா லுரவுகூறி
வுத்தமனே மர்மமதே காட்டொண்ணாதே. 287

காட்டாதே சமாதிமுகம் நூல்களப்பா
கன்னவனே மன்னவனே கருத்துள்வைத்து
தாஷ்டிகமாய் மிகப்பேசி யிதவுகூறி
தர்க்கத்துக் கிடையூறு யாதுமில்லாய்
வாட்டமுடன் தர்க்கமென்ற நிலையிலப்பா
வளமுடனே சங்கத்து முதனைநில்லு
நோட்டமுடன் சித்தரெல்லா முன்னைக்கண்டு
நொடிப்புடனே தர்க்கத்துக் கேகுவாரே. 288

பொதிகைமலை சித்தருக்கும் புலஸ்தியருக்கும் தர்க்கம்

ஏகவே பொதிகைமலை சித்தர்கூட்ட
மெழிலான வசுவனியார் பேரன்முன்னே
சாகமுள்ள புலஸ்தியனார் பாலன்றன்னை
சாங்கமுடன் வாதுமுதற் கூறலாகி
ஆகமங்கள் புராணங்க ளிதிகாசங்கள்
அடுக்குடனே சீஷவர்க்கந் தன்னினோடும்
பாகமுடன் புலஸ்தியர்முன் வாதுகூற
பாங்குடனே நாதரிஷி கூட்டந்தானே. 289

தானான புலஸ்தியனார் றன்முன்னே
தமையுள்ள ரிஷிகூட்டம் சீஷரோடும்
கோனான யுலகுபதி மாண்பரெல்லாம்
கொற்றவனே சமாதிமுகம் கொண்டோரெல்லாம்
தேனான ஞானப்பா லுண்டகற்பம்
தேசமதில் தானிருந்து வாழ்ந்தோருண்டோ
னான மர்மமதை விபரித்தேதான்
பாலகனே யெந்தமக்கு வுரையென்றாரே. 290

Koviloor Digital Library

என்றவுடன் புலஸ்தியரு மதிதங்கொண்டு
யெழிலான புவனகிரி சித்தருக்கு
வென்றிடவே யுபதேச மேதென்றாக்கால்
வேதாந்த முறைபாடு தாமுரைப்பார்
தென்திசையி லகத்தியனா ருரைத்தவண்ணம்
தேற்றமுடன் றாமுரைப்பார் வினையங்கொண்டு
குன்றான தேகமது காயகற்பம்
கொற்றவனே யுண்டாலு மொன்றுங்காணே. 291

காணார்கள் சமாதிமுகம் கொண்டாலுந்தான்
காசினியி லாரேனு மிருந்ததில்லை
வீணாக சாஸ்திரத்தின் படியதாக
விண்ணுலகில் வெகுபேர்கள் சமாதிபூண்டு
தோணாமல் தேகத்தை நிலைநிறுத்தி
தோற்றமுடன் நெடுங்கால மிருந்துமேதான்
சோணாச லன்பதத்தைக் காண்பதல்லால்
சுடரொளியே சுந்தரமே யொன்றுங்காணே. 292

ஒன்றான தேகமது மண்ணோடொப்பாய்
வுத்தமனே போகுவது மெய்யேயாகும்
குன்றான வாழ்வதுவும் பொய்யேயாகும்
குவலயத்தின் வாழ்க்கையெல்லா மிந்தக்கூத்து
தென்றிசையி லசுவனியா ருரைத்தநீதி
தேற்றமுடன் யாமுரைத்தேன் நாதனேகேள்
வென்றிடவே புலஸ்தியரும் தாமுரைக்க
வேதாந்த சித்தர்களு மசந்திட்டாரே. 293

அசைந்ததொரு சித்தர்களு மனதுவந்து
அன்புடனே புலஸ்தியருக்கு விடைதான்கூர்வார்
திசையெட்டுங் கீர்த்திகொண்ட வசுவனியார்தாமும்
தீர்க்கமுடன் சாஸ்திரங்க ளனேகமுண்டே.
இசையான நூற்றொகுப்புப் பிரணவங்க
ளிதிகாச மானதெல்லா மெங்கேயென்றார்
வசையான மாந்திரீக சல்லியங்கள்
மன்னவனே யிருப்பிடத்தைக் கூரென்றாரே. 294

Koviloor Digital Library

கூரென்று வுரைக்கயிலே புலஸ்தியர்தாமும்
குறிப்புடனே நூல்வழியி லனந்தங்கோடி
தூரவே சொல்லியல்லோ விதிகாசங்கள்
துப்புரவாய் தாமுரைக்க சித்தரெல்லாம்
மாறவே மனதுவந்து மனங்கலங்கி
மன்னவர்கள் வுத்தார மிகக்கொடாமல்
ஆரவே சித்துரிஷி முனிவர்தேவர்
அப்பனே யவர்பதத்தை வணங்கினாரே. 295

சதுரகிரி சித்தர் சதாநிஷ்டை

வளங்கவே வின்னமொரு வகைமானங்கேள்
வளம்பெரிய நாதாக்கள் பந்தந்தீர்ந்து
சளமதுவு மிகத்தீர்த்துமரு குங்காலம்
சங்கரனா ரசுவனியார் கடாட்சத்தாலே
தளம் பெறவே சதுரகிரி மலையில்வாழும்
சாந்தமகா ரிஷியாரு மன்னர்பாலின்
வளம்பெரிய நாதாக்கள் சீஷர்தாமும்
வாகுடனே புலஸ்தியர்க்கு வதீதங்கேளே. 296

கேளப்பா புலஸ்தியனே புனிதவானே
கெடியான சதுரகிரி மேற்கேயப்பா
கோளப்பா புனலாற்றங் கரையோரம்தான்
கொற்றவுனே நெடுங்கால மிருந்தசித்து
தாளப்பா பயிரிடுங் குடிகளப்பா
தகைமையுள்ள சமுசாரி சித்தென்பார்கள்
வாளப்பா பயிருடனே வாழுஞ்சித்து
வளம்பெரிய நாதரென்று செப்பலாமே. 297

செப்பவென்றால் தவநிலையி லிருக்குங்காலம்
செம்மலுட னப்பதியி லிருந்தமாண்பர்
ஒப்பமுட னிவர்பக்கல் வினயங்கொண்டு
ஓகோகோ நாதர்தம்மை பழித்தவண்ணம்
மெப்பமுடன் றவநிலையி லிருக்கும்போது
மெழிலான வாஸ்பதமாம் குறிச்சிமாளி
எப்படியோ தீகொண்டு யெரிக்கமாண்பர்
யெழிலான கூரையது யெரியலாச்சே. 298

Koviloor Digital Library

எரியவே சாமமது சித்துதாமும்
யெழிலுடனே தவநிலையி லிருக்கும்போது
செரியவே வடவாக்கினி வீசுங்காலம்
செம்மலுட னப்பதியைக் காணயேகி
அரியதவம் புரிகின்ற சித்துதம்மை
அப்பனே காண்பதற்கு வுமையாளீசன்
உரிமையாய் ரிஷபவாகனத்தின் மேலேயேறி
உத்தமர்கள் சமேதருமாய் வந்திட்டாரே. 299

வந்தாரே தவநிலையைக் காணும்போது
வளம்பெரிய நாதருக்கு முமையவட்கும்
நொந்துமே வடவாக்கினி தீபத்தாலே
நெடுங்குதே யவர்மேனி பொறுக்கவில்லை
செந்திருவே கருடாழ்வார் தானுங்கண்டு
செம்மலுடன் ரெக்கைதனில் சலமுமேந்தி
குந்தியே தானிருக்கும் பார்வதிக்கு
குருபரனே சலமதுவை தெளிக்கலாச்சே. 300

கெருடாழ்வார் மோட்சம் பெற்றது

தெளிக்கவே விமலருக்கு மீஸ்பரிக்கும்
தேற்றமுடன் சலமதுவும் பட்டபோது
எரிக்கின்ற வடவாக்கினி குளிர்ந்துகாட்ட
யெழிலான வுமையவளு மனதுவந்து
குறிக்கவே பட்சியின்றன் அறிவைக்கண்டு
குருபரனே யென்சாமி பத்தாகேண்மோ
புரிசடையை வடவாக்கினி வீசுதென்று
புகழான பட்சியின்றன் னறிவைப்பாரே. 301

பாரென்று வுமையவளு மீசுரற்குப்
பட்சமுடன் றாமுரைக்க வீசர்தாமும்
ஆரென்று வினவியே யும்பர்தானும்
அப்பனே பட்சியை யழைத்துக்கேட்க
சீரொன்றும் நேராத கருடப்பட்சி
சிற்பரனை தானோக்கிக் கூறலாகும்
நேரொன்றில் வடவாக்கினி வீசுங்காலம்
நெடிதான தவநிலைக்கு குறைவுண்டாச்சே. 302

Koviloor Digital Library

குறையான தவமிருக்கு மெந்தன்சித்து
கோபாலா நினைவமுர்தங் கொடுக்குஞ்சித்து
முறையான சித்தெமக்கு மன்னமீவார்
மூதுலகி லவர்பாதங் காத்திருப்பேன்
சிறையோடு தவநிலையி லிருக்குங்காலம்
சிற்பரனே யென்குருவே தீயாலல்லோ
குறைவறவே தவநிலையைக் குலைக்கவென்று
குருநாதா கருவைத்து கொளுத்தினாரே. 303

கருடாழ்வார் வும்பர்பிரானுக்குரைப்பது

கொளுத்தினா ராரென்று யாமுங்காணோம்
கொற்றவரே பிராணனுக் காணியாச்சு
உளுத்தமரம் போலானா ரெங்கள்சித்து
ஒகோகோ நாதருக்கு குறைவுண்டாச்சே
பளுத்தமரம் போலாக நெடுங்காலந்தான்
பரம்பொருளே தவநிலையி லிருந்தசித்து
விளித்தெழுந்த சொரூபநிலை கொண்டசித்தை
மூதுலகி லிக்கோலஞ் செய்தார்காணே. 304

காணவே வந்ததொரு பரமருக்கு
கைலாச நாதருக்கு காந்தளாகி
பூணவே யம்பாட்டு தேகமையா
பூபோல வீசலது கருகலாகி
நாணவே யிருப்பதுவை யானுங்கண்டு
நாதரது கட்டளைதா னென்றேயெண்ணி
வேணபடி சலமதனை வாரித்தூற்ற
விமலரே யெந்தமக்குப் பணிதியாச்சே. 305

கெருடாழ்வாருக்குப் பரமசிவன் வரமளிப்பது

ஆச்சென்று புலஸ்தியனே அன்புள்ளானே
அப்பனே பட்சிக்கு வரமுந்தந்து
மாச்சலது வாராது யுகாந்தகால
மன்னவனே மானிலத்தில் மாந்தரெல்லாம்
கூச்சலுட னுமையழைத்துக் கரங்குவித்து
குருபரனே ஸ்திரிகரியே யென்னலாகி
பாச்சலுட னாகார விதவுந்தந்து
பாங்குடனே சதாகாலம் போற்றுவாரே. 306

Koviloor Digital Library

போற்றவே வரங்கொடுத்துப் பரமர்தாமும்
பொன்னுலக வழிதமக்கு யேகியேதான்
ஆற்றமுடி போகாத சித்தருக்கு
அங்ஙனவே சமாதிக்கு யிடமுண்டாகி
தேற்றமுட னாழ்வார்க்குப் பதியுமுண்டாய்
தேசமெலாம் புகழ்படைத்த தேவஸ்தானம்
நீற்றமள்ள வாழ்வார்திரு னகரியென்ற
நீனிலத்தி லப்பதிக்குப் பேருண்டாச்சே. 307

ஆச்சப்பா சதுரகிரி யத்தின்மார்க்கம்
அப்பனே யெனதைய ரசுவனியார்தேவர்
மூச்சடங்கி சிலகால மிருக்கும்போது
மூதுலகில் நடந்ததொரு சிலவிஷங்கள்
மாச்சலுடன் சதுரகிரி ரிடியாருக்கும்
மன்னவனே நடந்ததொரு தன்மையாலே
கூச்சலது நேர்ந்ததொரு தன்மையாலே
குருபரனார் சாபமது வளிக்கலாச்சே. 308

அளிக்கவே யப்பதிக்கு சிலகாலந்தான்
அப்பனே சுடரொளிபோல் சோதிகண்டு
பளியான காற்றதுவு மொன்றாய்நேர்ந்து
பாலகனே கிரியெல்லாம் பற்றலாகி
வளிதடமுங் காணாமல் சித்தர்தாமும்
வளம்பெரிய நாதாக்கள் முனிவர்பாலும்
வெளிப்படவே சிலகாலம் கிரியைவிட்டு
வெளிக்கானந் திரிவதற்கு யிடமுண்டாச்சே. 309

ஆச்சப்பா சதுரகிரி சிலகாலந்தான்
அப்பனே சாபத்தா லெரியலாச்சு
மூச்சடங்கி யிருந்ததொரு சித்துதாமும்
மூதண்ட கிரியைவிட்டு யேகலாகி
கூச்சலது நேராது குகைகள் கண்டு
குருபரனே சதாநிஷ்டை கொள்ளலாகி
மாச்சலுடன் சிலகாலஞ் சென்றேயேகி
மறுபடியுஞ் சதுரகிரி செல்வார்தாமே. 310

Koviloor Digital Library

செல்லவே சதுரகிரி ரிஷியார் தாமும்
தேசமெலாந் தூன்திரிந்த சித்துரூபன்
வல்லமைகள் அதீதமுடன் சொரூபங்கொண்ட
வளம்பெரிய வியாசரது மகிமைகொண்டோன்
புல்லறிவால் சீஷவர்க்கந் தனையாராய்ந்தோன்
பூபாலா புலஸ்தியனே யவரைக்காண்பீர்
வெல்லவே யுந்தமக்கு ஞானப்பாலும்
வேதாந்த காயகற்ப மருள்கொள்வாரே. 311

கொள்ளவே புலஸ்தியனே மச்சகேந்திரா
கொற்றவனே ரிஷியாரே கோவேகேண்மோ
எள்ளளவும் பிசகாது யுந்தமக்கு
யெழிலான சாத்திரங்க ளிதிகாசங்கள்
உள்ளதொரு பிரணவங்கள் காயகற்ப
முத்தமனே யுந்தமக்கு லபிக்கும்பாரு
தெள்ளமிர்த மானதொரு தேர்வேந்தேகேள்
செப்புவ ரவர்பதத்தைப் பணிந்துகொள்ளே. 312

புலஸ்தியருக்கு சதுரகிரியாரிடம் ஞானவுபதேசம்

பணிந்ததொரு புலஸ்தியரை யாரென்றேவ
பாலகனார் சதுரகிரி ரிஷியாருக்கு
துணிந்துமே யவர்பாதம் சிரங்குனிந்து
துப்புரவாய் வசுவனியார் பேரனென்ன
மணியான தேவரிஷி பேருரைக்க
மகாதவத்தில் மிகுந்ததொரு ரிஷியாருந்தான்
பணிவுடனே பாலகனே மனதுவந்து
பட்சமுட னுபதேசம் பாலிப்பாரே. 313

பாலிக்க புலஸ்தியற்கு ரிஷியாருந்தான்
பாங்குடனே திரேதாயி னுகத்திலையா
வாலிபமாய் பதினாறு மாண்டுதன்னில்
வளம்பெரிய யெனதையர் மச்சகேந்தி
சாலியாங் காவியங்கள் கீர்வாணங்கள்
சதுரான ஞானப்பால் சாத்திரங்கள்
காலியாங் காயாதி கற்பந்தானும்
கன்னவனே யுந்தமக்கு தத்தமாமே. 314

Koviloor Digital Library

தத்தமாய் புவனகிரி சமாதிதன்னில்
தண்மையுட நிருந்ததொரு நிதிகளெல்லாம்
சுத்தமுடன் செந்தூரக் காடெல்லாந்தான்
சுந்தரனே யுந்தமக்குத் தத்தமாகும்
நித்தமுமே தாமணிந்த ருத்திராட்சம்
நிஷ்களங்க மானதொரு குண்டலங்கள்
கத்தனவர் தாமணிந்த பாதரட்சை
கனமான சந்தனக் குறடுதானே. 315

தனானா குறருடனே கமண்டலந்தான்
தகைமையுள்ள செபமாலை வெண்ணீர்பாத்திரம்
கோனான குருவணிந்த சடகோபந்தான்
கொற்றவனே யுந்தமக்கே தத்தமீவார்
மானான பரஞ்சுடரே ஞானப்பாலே
மகத்தான வற்புதமே புங்கவேனே
தோனான மனோன்மணியாள் கிருபையாலே
தேசொளிவின் சின்மயமு மடையலாமே. 316

அகஸ்தியர் புலஸ்தியருக்கு புத்திகூறல்

அடையவே யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
அப்பனே புலஸ்தியனே அன்புள்ளானே
தடையதுவும் நேராமல் தம்பிரானே
தார்வேந்தா யுந்தமக்குக் கிடைக்கலாகும்
சடையுள்ள தம்பிரான் சொரூபசித்து
சாங்கமுட னுனைக்கண்டு கருவிகேட்பார்
உடையதொரு ரகசியங்கள் விள்ளவேண்டா
முத்தமனே மருமமதாயிருக்க நன்றே. 317

நன்றான மர்மமது கொள்ளல்நன்று
நாதாந்த சித்தொளிவு நண்ணியேதான்
குன்றான பர்வதமே யும்மைநாடி
குருபரனே பராபரமே புலஸ்தியாகேள்
தென்றிசையி லகுவனியார் சொன்னநீதி
தேற்றமுட னுந்தமக்கு வமைத்துதப்பா
ஒன்றுமே குறையாது யின்னமுண்டு
ஒகோகோ நாதாக்க ளருள்கொள்வாரே. 318

Koviloor Digital Library

அகஸ்தியர் மலையை வைகை மத்தியில் பார்ப்பது

கொள்ளவே யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
கோபாலா மச்சகெந்தி சொல்லக் கேண்மோ
தெள்ளமிர்த மானதொரு சுகுணமாரா
தேசொளிவே சின்மயமே சிறுவானந்தா
வள்ளலுயர் வைகைநதி மேற்கேயப்பா
வளம்பெரிய நடுமைய மத்தியானம்
கள்ளமிலா மனதுடனே கண்ணியவானே
கருவிலமே கண்ணொளியால் காணுவீரே. 319

காணவே வுச்சிமயந் தன்னிலப்பா
காவலனே காவலனே கருதக்கேண்மோ
தோணவே வகஸ்தியனார் கிரிதான்காண்பீர்
தொல்லுலகை மறந்ததொரு சித்தரெல்லாம்
ஆணவங்கள் காமியங்கள் சிக்கறுத்து
அட்டமா சித்திதனைக் கடந்தமாண்பர்
வேணபடி தவநிலையி லிருக்குஞ்சித்து
வேதாந்த சித்தொளிவை தெரிசிப்பீரே. 320

தெரிசினைக்கு நீயுமொரு ஆளானாலும்
தேவியரும் காண்பதற்கு இடம்வேறுண்டோ
பரிசினையாய் தேவரிடி யெல்லாருந்தான்
பார்வைமுகம் காண்பதற்கு ரூபந்தோன்றும்
புரிசடையோன் தம்பிரான் தன்றன் போலும்
புகழ்பெறவே தோற்றமது காட்சிகொள்வீர்
விரிசூழ்ந்த நாடுகளும் நகர்கள்தானும்
விண்ணுலகில் கண்டவர்க ளில்லைதானே. 321

இல்லையென்ற சித்துமுனி ரிடிகள்தேவர்
யெழிலான வகஸ்தியரின் மலைமேலுச்சி
தொல்லையெனு முலகபதி மாண்பர்தம்மை
தோற்றுகைக்கு ஆவலுடன் காணவெண்ணி
அல்லலது மானகற்றி அன்புள்ளாரும்
அப்பனே மறுரூப வேஷங்கொண்டு
கொல்லிமலை சாரலது யடிவாரத்தில்
கொற்றவனே தரிசனைக்கு யேகுவாரே. 322

Koviloor Digital Library

ஏகவே தரிசனைகள் புரிதலாகும்
மேற்றமுட னுமைக்கண்ட போதேயல்லால்
போகமனம் நேராது பூபாலாகேள்
பொங்கமுட னுந்தமையும் வினயங்கேட்பார்
ஆகவே யுமைக்கண்டு வினயங்கூறி
அப்பனே பொதிகைமலை ரகசியத்தை
யூகமாய் தனைக்கேட்பார் மச்சகேந்திரா
யுத்தமனே மர்மமதைக் காட்டொண்ணாதே. 323

காட்டவே கிரிமேலே கவுண்டசித்தர்
கனமான கும்பலது மேலேதோற்றும்
ஆட்களது ரூபமது சொல்லொண்ணாது
அப்பனே விதியுளா ரறிவார்தாமும்
மீட்கவே விதியில்லார் காணமாட்டார்
மிக்கான தரிசனையுங் கிட்டாதப்பா
சூட்சமது வகஸ்தியனார் மலையிலங்கே
சுந்தரனே மகிமையது கோடியுண்டே.. 324

மையினாக பர்வத வைப்பு நாலாம் பாட்டன்

கோடியா மின்னமொரு மார்க்கங்கூர்வேன்
கொற்றவனே புலஸ்தியனே கோவேகேண்மோ
நாடியே தென்மேற்கு வடபாகத்தில்
நளினமுள்ள மையிநாக னென்னுமேரு
கூட்டியே மையினாக சித்தரப்பா
கூட்டமது சொல்வதற்கு நாவொண்ணாது
தேடியே பர்வதத்தைக் கிட்டிசென்றால்
தேற்றமுட னனேக வதிசயங் காண்பீரே. 325

காணவே மையினாக மேலேயப்பா
கனமான சுனையொன்று வுதகமுண்டு
மாணமருங் கல்வியுள்ள தேவசித்து
மன்னவனே சிகரமதில் தவமேகொள்வார்
சேணமுடன் தவமிருக்குஞ் சித்துதம்மை
சிறுபாலா புலஸ்தியனே சேர்வைகொள்வாய்
பூணவே சேர்வையது கொண்டபோது
புகழ்பெறவே ஞானக்கண் திறப்பார்காமே. 326

Koviloor Digital Library

திறக்கையிலே யுந்தனையும் யாரென்றென்ன
திகழ்பெரிய வகுவனியார் பேரனென்று
உரத்தசத்தந் தொனியுடனே புலஸ்தியாகேள்
உத்தமனே வகஸ்தியனார் சீஷனென்றும்
மறப்பாயே யவர்பாத முன்னேநின்று
மன்னவனே வுத்தாரஞ் சொல்வாயப்பா
அறமுடைய சித்தனாம் நான்காம்பாட்டன்
அப்பனே வாய்மொழியுங் கூறுவாரே. 327

கூறுவே யுந்தனையு முபசரித்து
கொற்றவனே வேணபடி வுபசாரத்தோடும்
மாறவே யாசீர்ம முமக்கேயீய்ந்து
மன்னவனே சோடவுப சாரத்தோடும்
தேறவே யுன்வளப்ப மிகவாராய்ந்து
தேற்றமுடன் கருவிகர ணாதியந்தம்
மீறவே யுந்தமக்கு வோதியேதான்
மிக்கான ஞானப்பா லூட்டுவாரே. 328

ஊட்டவென்றா லுந்தமக்கு வுபதேசங்கள்
உத்தமனே யவர்தேடி வைத்தவைப்பு
கூட்டமுடன் சீஷவர்க்கம் நாலத்தொன்று
குருபரனே யுந்தமக்கு தத்தங்கொள்வார்
தேட்டமுடன் நிதியனைத்தும் சாத்திரங்கள்
தெளிவுறவே காயாதி கற்பந்தானும்
நாட்டமுட னுந்தமக்கு கொடுத்ததல்லால்
நாயகனே சித்தரிட மகிமைகேளே. 329

கேளப்பா புலஸ்தியனே மச்சகேந்திரா
கெவனமுடன் யாமுரைப்போ மன்னாகேண்மோ
தாளப்பா திரேதாயி னுகத்திலப்பா
தாரணியில் பிரளயங்கள் வந்தகாலம்
ஆளப்பா பேழையது செப்பனிட்டு
அப்பனே பேழைக்குள் உள்ளிருந்து
கோளப்பா தவயோக நிலையைக்கொண்டு
கொற்றவனே பேழைதனை யிறக்கினாரே. 330

Koviloor Digital Library

இறக்கியே மைநாக மலையிலப்பா
யெழிலான பிரளயங்கள் வடிந்ததென்று
சிறக்கவே ரிடியாருங் கிரியைவிட்டு
சிற்பரனே தானிறங்கி வந்தபோது
முறப்படியே வுலகுபதி தன்னைக்கண்டு
மூதுலகில் பிரளயங்கள் வடிந்ததென்று
நிறப்படியே முன்போல ரிடியார்தாமும்
நிஷ்களங்க மாயவரும் கிரிசென்றாரே. 331

சென்றுமே மேன்மையுடன் ரிடியாருந்தான்
செங்கமல புலஸ்தியரா முன்னைக்கண்டு
நின்றுமே யுந்தன்மே லன்புகொண்டு
நிதியனைத்தும் நாலிலோர் பாகந்தந்து
குன்றின்மேல் வைத்திருந்த சாத்திரங்கள்
குறிப்பான கோர்வைமுதல் ஞானப்பாலும்
வென்றிடவே காயாதி கற்பந்தானும்
வேட்டமுட னுந்தமக்கு யீவார்தானே. 332

தானான வைப்புமுத லுளவுங்கண்டு
தகைமையுடன் பொருளனைத்தும் பெற்றுவந்தால்
கோனான குருபரனை மனதிலெண்ணி
கொற்றவனே நூலனைத்தும் பொதிகைதன்னில்
தேனான வசுவனியார் சமாதிமுன்னம்
தென்கூடற் பதியருகில் சமாதிகொள்வீர்
மானான மகதேவர் கடாட்சத்தாலே
மர்மமதைக் காட்டாதே தலைதான்போமே. 333

கற்ப எண்ணெய்

போகுமே யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
பொங்கமுடன் புலஸ்தியனே புண்ணியமாரா
தாகுமே மாணாக்கள் பிழைக்கவென்று
யெழிலான யெண்ணையொன்று விளம்புவேன்யான்
வாகுடனே கெற்பமது மின்னாளுக்கு
வகையுடனே தான்பலிக்க யெண்ணையொன்று
பாகுபத மாகவேதான் சித்தர்மூலி
பளிங்குடனே யாமுரைப்போம் பண்பாய்க்கேளே.334

Koviloor Digital Library

கேளப்பா சிற்றாவி நெய்தானப்பா
கெணிதமுடன் சேரதுவு மிரண்டேயாகும்
தாளப்பா தேங்காயின் நெய்தானப்பா
தகமையுடன் சரியெடையாய் சேர்த்துக்கொண்டு
வீளப்பா மூலியது செப்பக்கேளீர்
மிக்கான விழுதியென்ற மூலிதானும்
ஆளப்பா தும்மட்டி யிலையின்வித்து
அப்பனே சிறுசின்னி யிலையுமாமே. 335

இலையான செங்கழனி யிலையுமாகு
மெழிலான பாளையு யெலையுமாகும்
தலையான தழுதாழை யெலையுமாகும்
தாக்கான செந்தோன்றி யெலையுமாகும்
வலையான மூக்குரட்டை யெலையுமாகு
மகத்தான தும்பையிட யெலையுமாகும்
சிலையான மையூரிசி னெலையுமாகும்
செப்பினேன் ஆகாச மூலிதானே. 336

மூலிதான் சிவகரந்தை விஷ்ணுவாகும்
மூதுலகில் நாதாக்கள் காணாமூலி
சாலிவா கனைமூலி புருஷரத்தம்
சாங்கமுடன் பேய்க்குமட்டி நரிமிரட்டி
வாலிபப் பெண்ருதுவாகு நாரிமூலி
வளம்பெரிய பேய்ப்பாகல் முசல்கூரதாகும்
வேலியா மிருவேலி கொடிவேலியப்பா
வித்தகனே தழைதனை யெடுப்பாய்காணே. 337

காணவே யின்னம்வெகு தழைகள் கூர்வேன்
கருவான பேய்மிரட்டி சொரிகாஞ்சோரி
பூணவே வோரிலை தாமரையேயாகும்
புகழான சங்கிலியி னிலைதானாகும்
தோணவே செம்புளிச்சி வெள்ளறுகுமாகும்
தோராபுளி யாரைகரு வேம்புமாகும்
மாணவே யெலிக்காதி னிலையுமாகு
மகத்தான புண்ணாக்குப் பூடுதானே. 338

Koviloor Digital Library

பூடான வனதழைக ளின்னமும்
புகழான வெண்ணொச்சி கருநொச்சியாகும்
காடான கானகத்தில் விளையும்பூண்டு
கருவான செங்கடுக்காய் தழையுமாகும்
பாடான வில்வமென்ற யெலைதானாகும்
பாலகனே நிலவேம்பு மலைவேம்பாகும்
கூடான கட்டுகொடி யெலையுமாகும்
குருபரனே தேள்கொடுக்கு மேனியாமே. 339

மேனியாம் பொன்முசுட்மை பொன்னாவாரை
மெலிவான கூத்தனது குரும்பையாகும்
மானிலத்தில் படருகின்ற நிலக்கடம்பு
மகத்தான தழையதுவுங் கஞ்சாங்கோரை
கானியாம் நிலத்துளசி கருந்துராவுமாகும்
கருவான நுணாவிலையும் பழம்பாசியப்பா
தானியாங் கையானின் தழைதானாகும்
காவலனே யின்னும்வெகு தழைகள்பாரே. 340

பாரப்பா மிளகரணை யெலையுமாகும்
பாங்கான நாவலிட துளிருமாகும்
கூரப்பா கருவேல னெலையுமாகும்
குணமான நாய்த்துளசி யெலையுமாகும்
சீரப்பா யிருவேலி யெலையுமாகும்
சிறப்பான ஐவேலி யிலையுமாகும்
தேரப்பா சூரியனா ரெலையுமாகும்
தேற்றமுள்ள கவுதும்பை யிலையுமாமே. 341

ஆமேதான் இலைகளெல்லாம் சாறுவாங்கி
அப்பனே வகைவகைக்கு வாழாக்காக
தாமேதான் சாற்பிழந்து யெண்ணைதன்னில்
தகைமையுடன் றான்கலந்து செப்பக்கேளீர்
போமேதான் பாலமுர்தம் கோவின்பாலும்
பொங்கமுடன் கோவேறு கேசரிப்பால்
நாமேதா னுரைத்தபடி பட்டைதானு
நலமான கருவேலன் பட்டைதாமே. 342

Koviloor Digital Library

பட்டையா மொதியனிட பட்டைதானும்
பாங்கான நாவலுட பட்டைதானும்
பட்டையாம் பூவரசின் பட்டைதானும்
பளிங்கான சூரையிட பட்டைதானும்
பட்டையாம் கருவாயின் பட்டையப்பா
பாங்கான வத்தியுட பட்டையப்பா
பட்டையாம் கருங்காலின் பட்டையப்பா
பாகமென்ற கல்லரளி பட்டைதானே. 343

தானான புட்டையது பலங்காலாகத்
தாக்கவே சூரணமாய் செய்துகொண்டு
மானான கற்கவகை செப்புவேன்யான்
மானிலத்தில் கருஞ்சீரம் காட்டுசீரம்
வேனான மதுரமது பூப்பனைதானப்பா
வித்தகனே யாண்வசம்பு கருவாய்ப்பட்டை
கோனான பெரியவா லுழுவைதானும்
கொற்றவனே யாமலகந் தானுங்கூட்டே. 344

கூட்டவே யேலமுடன் கிராம்புதானும்
குருபரனே வெள்ளையென்ற மிளகுசேரு
நாட்டமுடன் ஆடுதின்னா விரைதானப்பா
நலமான மூங்கில்வித்து சூரிவித்து
வாட்டமுடன் சோம்புவெள் ளுள்ளிதானும்
மகத்தான வாலுமுவை முத்தக்காசு
தேட்டமுடன் சரக்கெல்லாம் களஞ்சியாக
தெளிவுறவே தான்பொடித்துக் காய்ச்சுவாயே. 345

காய்ச்சுவாய் மெழுகுபதம் தன்னிலப்பா
கனமான புலஸ்தியனே கவிவல்லோய்கேள்
மாச்சலது நேராமல் மதிவல்லோய்கேள்
மன்னவனே.யெண்ணைதனைப் பதமாய்க்காய்ச்சி
பச்சலுடன் நெல்லாவிக் குள்ளேவைத்துப்
பாலகனே மண்டலந்தா னானபின்பு
மீச்சுரமா மிந்தயெண்ணை மிகவேக்காய்ச்சி
மிக்கவே பதமுடனே யருந்துவீரே. 346

Koviloor Digital Library

அருந்தவே மாதமொன்றுக் கைந்துநாள்தான்
அப்பனே மகாதேவா கரண்டிவீதம்
பொருந்தவே பத்தியந்தா னுப்பாகாது
பொங்கமுடன் துவரையுடன் நெய்யுமாகும்
திருந்துமே வைந்தாநாள் வறுத்தவுப்பு
தீர்க்கமுடன் றான்கூட்டு திகழ்வல்லோனே
குருந்தவே வேழாநாள் நீரைவாரு
கொற்றவனே புலஸ்தியனே குருவேகேண்மோ. 347

குருவான புலஸ்தியனே புண்ணியபாலா
கொற்றவனா ரெனதைய ரசுவனியார்
திருவான பெருவயது வருளேகாட்டும்
தீர்க்கமுள்ள காயாதி கற்பயெண்ணை
உருவான வடிவமது பாலனெண்ணை
வுத்தமனே சீஷர்களு மறைத்தபாகம்
சொரூபமுள்ள யெண்ணையது வெளிவிடாதே
சுந்தரனே யுந்தமக்கு கிட்டலாச்சே. 348

தன்வந்திரி யுப்புக் குரு

ஆச்சப்பா யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
அப்பனே புலஸ்தியனே புண்ணியமாரா
மாச்சலென்ற யுப்பதுவும் பூநீருப்பும்
மகத்தான வரப்பொடியும் பலமதாகும்
பாச்சலென்ற வாகாயம் பலமொன்றாகும்
பாலகனே தேயுவது பலமொன்றாகும்
நீச்சலென்ற தாளகமும் பலமொன்றாகும்
நிஷ்களங்க மானதொரு கெந்திதானே. 349

தானேகேள் வரிதாரம் பலமொன்றாகும்
தாக்கான துருசதுவும் பலமொன்றாகும்
தேனேகேள் பூநீறு பலமொன்றாகும்
தேற்றமுள்ள வாறுவகை செயநீர்தன்னால்
மானேதான் தானரைப்பாய் சாமம்நாலு
மன்னவனே மெழுகுபத மானபின்பு
கோனேதான் பில்லையது லகுவாய்தட்டிக்
கொற்றவனே ரவிதனிலே காயப்போடே. 350

Koviloor Digital Library

போட்டபின்பு பில்லைதனைத் தானெடுத்து
பொங்கமுடன் வோட்டிலிட்டு சீலைசெய்து
வாட்டமுடன் தளவாயாம் பாண்டந்தன்னை
வரிசைபெறத் தானெடுத்து வகுக்கக்கேண்மோ
தேட்டமுட னடிப்பாண்டந் தன்னிலப்பா
தெளிவுடனே சிறுமணலாம் பாண்டந்தன்னில்
ஆட்டமுடன் மணலிட்டு யரைவாசியப்பா
மன்னவனே தான்கொட்டி பில்லைவையே. 351

வைத்தபின்பு மேலுமந்த மணல்தான்ரொப்பி
வளமுடனே மேற்பாண்டந் தன்னைமூடி
கைத்தவமாய் சீலையது வலுக்கச்செய்து
கன்னவனே வாலுகையா மடுப்பிலேற்றி
பொய்த்தவறா வண்ணமது கமலமாக
புகமுடனே தானெரிப்பாய் சாமம்நாலு
எத்திசையுந் தீயதுவும் பறக்கவேதா
னெழிலுடனே பதம்பார்த்து யெரித்திடாயே. 352

எரிக்கவே தீயாறி யெடுத்துப்பாரு
யெழிலான செந்தூர மென்ன கூர்வேன்
பொரித்ததொரு செந்தூரம் புகலொண்ணாது
பொன்னவனே சீஷாவில் பதனம்பண்ணு
நெறியுடனே செம்புதனில் பத்துக்கொன்று
நேர்மையுடன் தானுருக்கி சரியதாக
குறியுடனே வுருக்குமுகந் தன்னிலப்பா
குருபரனே செந்தூரங் கிராசமீயே. 353

ஈயவே செம்பதுவுங் கிராசங்கொள்ளு
மெழிலான ரவியதுவுங் கட்டிநிற்கும்
தூயவே யிருண்டசேம்பு கட்டிநிற்கும்
துப்புரவா யோட்டிலிட்டு யூதிப்போடு
ஆயகலை தனையுணர்ந்து அன்புள்ளானே
அப்பனே தங்கமென்ற ரவிதானாகும்
காயமென்ற தங்கத்தின் செம்பேயல்லால்
தாரணியில் நாதாக்கள் மறைத்தசெம்பே. 354

Koviloor Digital Library

செப்பான செம்பதுவு மென்னசொல்வேன்
செங்கமலக் கண்ணான தேர்வேந்தேகேள்
அம்பொன்னாஞ் செம்புதா னெடுத்துப்பாலா
அப்பனே மதிதனிலே நாலுக்கொன்று
நம்பியே தானுருக்கி யெடுத்துப்பாரு
நலமான மாற்றதுவும் வாணிக்காறு
கும்பியே மனம்வாடி யேங்கிடாதே
குருபரனே புலஸ்தியனே புகலக்கேளே. 355

கேளப்பா புலஸ்தியனே தம்பிரானே
கெவனமுட னெடைக்கிடைதான் தங்கஞ்சேரு
மாளப்பா வாரடித்துப் புடந்தான்தீரு
மன்னவனே சுயத்தங்கம் பிறவித்தங்கம்
தாளப்பா சிவயோகித் தங்கமாகும்
தாரணியில் நாதாக்கள் மறைத்ததங்கம்
மீளப்பா யிச்செம்பை பரியில்தாக்க
மிக்கபதம் யாமுரைப்போம் பண்புள்ளானே. 356

பண்பான செம்புதனை யென்னசொல்வேன்
பாலகனே புலஸ்தியனே கருவுள்ளானே
தண்பான தங்கமது சிவந்ததங்கம்
தாரணியில் நாதாக்க ளறியாத்தங்கம்
வண்பான தங்கமதைக் தானெடுத்து
வளம்பெறவே மதிதனிலே பத்துக்கொன்று
நண்பாகத் தான்கொடுக்க மாற்றோவாறு
நலமான பசுமையென்ற பொன்னுமாமே. 357

பொன்னான பொன்னதனை யென்னகூர்வேன்
புவிதனிலே ரிஷிமுனிவர் மெச்சும்பொன்னாம்
கன்னவனே புலஸ்தியனே கவிராஜேந்திரா
காசினியி லுந்தமக்கு கிடைக்கலாச்சு
தென்னவனே சிவயோகி மாண்பர்கண்டால்
தேற்றமுட னுந்தமக்கு வினையங்கூறி
மன்னவனே யதிவிநய சிந்தையோடு
மகாதேவர் கேட்பார்கள் அதிதமாமே. 358

Koviloor Digital Library

ஆமேதான் கேட்டாலும் வெளிவிடாதே
அப்பனே வூமைபோ லிருந்துவுண்பீர்
நாமேதான் சொன்னபடி சாபமீவார்
நாட்டிலே யாரேனும் நம்பவேண்டாம்
போமேதான் பேதையர்க்கு பொருள்களீய்ந்து
பொங்கமுடன் சோடசோ பாரத்தோடும்
வேமேதா னஞ்சலிகள் மிகப்புரிந்து
வேட்டமுட னிதவுசொல்லிப் போற்றுவீரே. 359

பொதிகைமலை பிரணவப் பொருள்கள்

போற்றவென்றால் புலஸ்தியரே புண்ணியாகேள்
பொங்கமுட னின்னமொரு மார்க்கங்கூர்வேன்
ஆற்றலது நேராது அன்புள்ளானே
அரும்பொருளாம் பிரணவங்க ளதீதங்கூர்வேன்
மாற்றமென்ற மயம்நீக்கி யருளுங்கொண்டு
மன்னவனே பிரணவத்தை யுச்சரிப்பேன்
கூற்றனவ னாடாது பிரணவங்கள்
குருபரனா ரெனதைய ருரைத்தவாக்கே. 360

வாக்கான வாக்கவுந் தசதீட்சையாகும்
வளம்பெரிய தீட்சைக்கு வஷ்டசித்து
நோக்கான வாதாரஞ் சோடசந்தான்
நெடிதான சோடசத்துக் கொன்றேயாதி
தாக்கான கலைகள்பதி னாறுமாகும்
தகைமையுள்ள கலைகளுக்கு நான்குபாகம்
தூக்கான கலைகளது பத்துநான்கு
துப்புரவா யெட்டெட்டு சத்தியாமே. 361

சத்தியாஞ் சித்துபதி னெட்டுமாகும்
சராசரங்கள் கூர்வதற்கு யாராலாகும்
நித்தியமும் மாசிலாக் கடவுள்பாதம்
நிஷ்களங்கப் படிகடந்து நடந்திட்டாலும்
முத்திபெறும் வழிதனையே யடையவேண்டி
மூதுலகை துப்பகற்றி யொழித்திட்டாலும்
வெத்திபெறு மோனநத் ஞானந்தன்னை
வேட்கையுடன் காண்ப்வர்க ளில்லைதானே. 362

Koviloor Digital Library

தானான குருபரனை யடுக்கவேண்டும்
தாளிணையை சதாகால மிணங்கவேண்டும்
கோனான குருமொழியை தவறாவண்ணம்
கொற்றவனே யவர்மொழிக்கு முன்பாய்நின்று
தேனான மனோன்மணியாள் பதாம்புயத்தை
தெளிவுறவே யெந்நாளு மனதிலுன்னி
மானான மகிதலத்தி னாசைநீங்கி
மகாதேவா குருபரனே நண்ணுவீரே. 363

நண்ணவென்றால் புலஸ்தியனே நண்புள்ளானே
நாதாக்கள் சித்துமுனி மறைத்தமார்க்கம்
எண்ணரிய நற்பொருளா மேகவெளியாகும்
யெழிலான வருளதனை காண்பீர்காண்பீர்
திண்ணமுட னடியாற்கு வருளேதந்து
தீர்க்கமுடன் பதிபாச நிலைநிறுத்தி
வண்ணமுடன் பிரணவத்தை வன்பாற்கொண்டு
வகையுடனே யுட்கொள்ளா ரென்றுங்காணே. 364

காணவே ஞானப்பா லறிதல்வேண்டும்
கண்டாலும் வழிதுறையும் புரிதல்வேண்டும்
தோணவே யுட்பொருளே கொள்ளாவிட்டால்
தோற்றமுடன் யாதேனுங் கிட்டுமோசொல்
வேணபடி பிரணவத்தை யறிந்துமென்ன
வெகுகாலம் நிலைவாசி நிறுத்தியென்ன
ஆணவங்கள் தானொடுங்கி யடங்கியென்ன
அப்பனே யம்பலத்தி னாட்டங்காணே. 365

ஆட்டமென்றா லம்பலத்தி னாட்டங்காண்பீர்
அப்பனே புலஸ்தியனே ஞானக்கண்ணே
கூட்டமுடன் நவகோடி சித்தரெல்லாம்
கூறினார் வெகுகோடி பிரணவங்கள்
நாட்டமுடன் கூறியதோர் நூல்கள்தன்னில்
நளினமுடன் கட்டறுத்துச் சொன்னாரில்லை
பூட்டமுடன் பன்னீரா யிரந்தானப்பா
பூமகனே யுந்தமக்கு வோதலாச்சே. 366

Koviloor Digital Library

ஆச்சென்று நினையாதே புண்ணியபாலா
அருங்கொழுந்தே வற்புதமே சிவமேகேண்மோ
மூச்சிருந்த காலமதா லுந்தமக்கு
முடிவான கருவிகர ணாதியந்தம்
பேச்சடங்கி பிரிதிவியிற் சேராமுன்னம்
பெரும்பொருளாம் பிரணவத்தை கூறலாச்சு
மாச்சலது நேராது வன்னமப்பா
மகாதேவா யுந்தமக்கு வமைக்கலாச்சே. 367

ஆச்சப்பா மன்னவனே புலஸ்தியாகேள்
அருங்குன்ற மானகர மதீதக்காடு
மேச்சலெனு மதகரியாஞ் சிங்கம்யாளி
மேன்மையுள்ள வன்னமது யிருக்கும்நாடு
கூச்சலது தேவதா ரிஷிகள்நாடு
குருபரனார் அசுவனியா ரிருந்தநாடு
ஆச்சரிய மானதொரு சித்தர்நாடு
அப்பனே வதினுடைய மர்மங்கேளே. 368

நாகார்ச்சுனன் பாட்டன் மலை

கேளப்பா வருங்குன்ற மேற்கேயப்பா
கெடியான கெடிஸ்தலமு குரும்பர்நாடு
தாளப்பா தாம்பரமாம் நதியுமுண்டு
தாக்கான நதிமலைக ளனேகமுண்டு
மீளப்பா நாகார்ச்சுனன் பாட்டனப்பா
மிக்கதவம் புரிந்ததொரு விடுதியாகும்
சூளப்பா துறைகழியாம் சமாதியுண்டு
சுந்தரனே மதிவல்லோய் துணிவாய்பாரே. 369

பார்க்கையிலே சமாதிமுகம் திட்டுவாசல்
பளிங்குமா மண்டபந்தான் கண்ணிற்றோற்றும்
ஏர்க்கவே கபாடமென்ற வழிதான்காட்டு
மெழிலான பாதையது கண்டபோதே
ஆர்க்கவே ஸ்தூலமென்ற விட்டந்தோன்றும்
அப்பனே காயாதி சமாதிகாண்பாய்
பூர்க்கவே சமாதிமுகம் விருட்சமூலி
புங்கவனே மூலியது மகிமைகாணே. 370

Koviloor Digital Library

காணவே மூலியது பார்த்தபோது
கன்னவனே வதிற்சென்று மூலிதொட்டு
தோணவே சர்வாங்க நேத்திரத்தில்
தோற்றமது காணுகைக்கு மைபோல்தீட்டி
வேணபடி பிரணவத்தை காண்பதற்கு
வேட்டமுடன் பார்வைமுகம் கண்டபோது
பாணமது யுருவிநின்ற பான்மைபோல
பளிங்குடனே யுந்தமக்கு தோற்றும்பாரே. 371

தோற்றுகையில் பிரணவமாம் கோர்வைநூல்கள்
தோராத சாத்திரங்க ளனேகங்காண்பீர்
ஆற்றவே போகாது முனிவர்சித்தர்
அப்பனே கோடிமுறை யனேகஞ்சொன்னார்
போற்றவே யெனதையர் அசுவனியாந்தேவர்
பொங்கமுடன் கூறினதோர் நூல்கள்கோடி
கூற்றனெனும் நாகார்ச்சுனன் பாட்டனப்பா
குருபரனார் வைத்ததொரு நூல்கள்தாமே. 372

தானான சாத்திரத்தின் பிரணவங்கள்
சதுருகமாந் திரேதாயி னுகத்திலப்பா
கோனான நாகார்ச்சுனன் பாட்டனங்கே
கொலுவிருந்த சமாதிமுகம் நூல்கள்கூர்வேன்
தேனான பரஞ்சுடராம் ஞானப்பாலாம்
தெளிவான கோர்வையது சாகரந்தான்
மானான நூலறுபதி னாயிரந்தானப்பா
மார்க்கமுடன் சமாதிமுகங் காணலாமே. 373

காணலாம் பிரணவங்க ளின்னம்கூர்வேன்
கைலாச வடிவுடைய புலஸ்தியாகேள்
மாணவே வெகுகோடி சித்துமாண்பர்
பூவுலகில் பாடிவைத்த பிரணவங்கள்
வேணபடி தாமுரைத்தார் ஞானப்பாலாம்
வேதாந்த வெட்டவெளி யொன்றுங்காணேன்
மானமருங் கல்வியுற்ற மாண்பர்தாமும்
மண்டலத்தி லின்றேனுங் கண்டிலாரே. 374

Koviloor Digital Library

கண்டதில்லை புலஸ்தியனே மீச்சகேந்திரா
கண்மணியே விண்மணி கவிவல்லோய்கேள்
புண்டரிய மானதொரு கிருஷ்ண பூபன்
கொற்றவனார் நாகார்ச்சனன் அருளுங்கொண்டோன்
தண்டுளப மாலையணி அரசன்றானும்
தகைமையுடன் பிரணவத்தை கொண்டபாலன்
மண்டலத்தி லுந்தனுக்கு மமைக்கலாச்சு
மன்னவனே பிரணவத்தை யின்னங்கேளே. 375

இன்னங்கேள் மகாவேத பிரணவங்கள்
யெழிலான சுருக்கமப்பா விரண்டுலட்சம்
வின்னமது நேராமல் பிரளயத்தில்
வேதாந்தத் தாயினது வருளினாலே
நன்னயமாய் கிரிதனிலே சமாதியுள்ளே
நலமுடனே பாட்டனவர் வைத்தவைப்பு
மன்னவனே பிரணவத்தைக் காணலாகு
மகாதேவா பாபவிமோ சனமுமாச்சே. 376

ஆச்சப்பா பிரணவங்க ளறுபத்துநான்கு
அப்பனே ஒன்றுக்கு கோடிசங்கம்
மூச்சடங்கி தேவாதி ரிஷிகளெல்லாம்
மூதுலகில் கூறினதோர் பிரணவங்கள்
போச்சப்பா சங்கத்துக் காறுலட்சம்
பேசினதோர் நூற்றொகுப்பு பிரணவங்கள்
மாச்சலது நேராது வாறுலட்சம்
மகாதேவா லட்சமது சுருக்கங்கேளே. 377

சுருக்கமப்பா புலஸ்தியனே புண்ணியபாலா
சுந்தரனே யிந்திரனே சுகுணபாலா
உருக்கமுடன் காப்பதுவு முப்பத்தாறு
வுத்தமனே படியனந்த முறுதிகூர்வேன்
நெருக்கமது படியாது சூட்சம்பத்து
நெடிதான மகுடமது தசமுமாகும்
குருக்கமுள்ள திருமந்திர மாறுகோடி
குருபரனே தயாநிதியே தயவாய்க்கேளே. 378

Koviloor Digital Library

கேட்கவென்றால் தத்துவநூல் நாலுலட்சம்
கெடியான வத்விதங்க ளிரண்டுலட்சம்
தாட்கமலம் வீற்றிருக்கும் தன்மைமாது
தனியான மனோன்மணியாள் கிருபையாலே
தீட்கமுடன் பிரணவத்தின் சோதிமார்க்கம்
திரட்டினதோ ருருக்கருவு மூன்றுலட்சம்
நாட்படவே திரேதாயி னுகத்திலப்பா
நளினமுடன் றானுரைத்த பனுவல்பாரே. 379

பார்க்கவென்றால் பனுவலது வேழுலட்சம்
படிகமென்ற ஞானமுடி நவநீதந்தான்
ஏர்க்கவே கைலாச பிரணவங்கள்
யெழிலான சததீட்சை வலங்காரந்தான்
தீர்க்கமுள்ள குருசம்பிர தாயவேதம்
திறமுடனே கூறினதோர் சதுராயிரந்தான்
மார்க்கமது பதினெண்பேர் கூறும்வேத
மகாவேதஞ் சத்தரிடி வாக்குதானே. 380

வாக்கான வுபதேச வுண்மையப்பா
வளம்பெரிய சத்தசா கரமுமாகும்
நோக்கான கிரேதாயி னுத்திலப்பா
நெடிதான மகமேரு யுச்சிகாணும்
தாக்கான பிரளயங்கள் நேர்ந்தபோது
தடம் பெரிய நாதர்முனி சித்தர்தாமும்
ஆக்கமுடன் திருப்பாலின் சாகரத்தில்
அப்பனே பேழைகொண்டு தாவினாரே. 381

தாவியே மகமேரு யுச்சிதன்னில்
தனியான பேழைமுக மேலேசென்று
கூவியே பிரணவத்தை யுச்சாடித்து
குருபரனே மகாதேவா குமரவேளே
ஆவியே போகுதென்று மனதுவந்து
அப்பனே வைங்கரனே கருணபாதா
பாவியா மெங்களையு மாதரித்து
பரம்பொருளே காப்பாற்ற நண்ணுவீரே. 382

Koviloor Digital Library

நண்ணவென்று பிரணவத்தை யோதும்போது
நாதாந்த சுடரொளியுங் கண்ணிற்றோன்றும்
கண்ணவிந்த மாண்பரென்ற கருவிகட்கு
கைத்தடிகள் வாச்சுதென்ற பான்மைபோலே
தண்ணமுடன் சுடரொளியாந் தீபந்தானும்
தகைமையுடன் சித்துமுனி ரிடிகளுக்கு
உண்மையுடன் விட்டகுறை யிருந்ததாலே
வேதாந்தத் தாயருளுங் காணலாச்சே. 383

ஆச்சப்பா மேருகிரி கண்டபோதே
அப்பனே ஞானமென்ற பிரணவங்கள்
மூச்சடங்கும் ரிடிகோடி தேவர்தாமும்
முத்தமிழைக் கண்டறிந்த முனிவருக்கு
மாச்சலது பிரணவத்தை மகாவேதந்தான்
மகாவேத மகாவிந்த மருளும்ஞானம்
பாச்சலுட னுபதேசம் சமாதிகற்பம்
பான்மையுடன் தடமதுவும் காட்டினாரே. 384

காட்டவே பிரணவங்கள் சமாதிநூல்கள்
பளிங்கான காயாதி கற்பமப்பா
நாட்டமுடன் மேருகிரி யுச்சிதன்னில்
நடுமைய மாயக்கால் குத்துக்கல்லாம்
வாட்டமுடன் நூறுவரை பீடமப்பா
மனோன்மணியாள் வீற்றிருந்த விடுதியாகும்
கூட்டமுடன் சதாகோடி வானதேவர்
குடியிருப்பா ரவ்விடத்தில் கண்டுகொள்ளே. 385

கொள்ளவே புலஸ்தியனே மச்சகேந்திரா
கொற்றவனே மேருவரை கண்டபோதே
எள்ளளவு முந்தமக்கு விதியினேர்மை
யெழிலாகத் தானமைக்கும் புண்ணியபாலா
உள்ளபடி சதகோடி ரிஷிகள்தாமும்
வுத்தமனே யுனைக்கண்ட போதேயப்பா
கள்ளமிலா யுந்தனையு மாரென்பார்கள்
கர்த்தாவே யசுவனியார் பேரனென்னே. 386

Koviloor Digital Library

என்னவே யசுவனிக்குப் பேரனென்றும்
        யெழிலான வகஸ்தியற்குச் சீஷனென்றும்
நன்னயமாய் காலாங்கி யுபதேசத்தை
        நாட்டமுடன் பெற்றுவந்த பாலனென்றும்
சொன்னதொரு மொழிதனையே கேட்டபோது
        சுந்தரனே யுந்தமக்கு யெல்லாஞ்சித்தி
மன்னவனே கொண்டணைத்து யுந்தமைத்தான்
        மகாதேவா பிரணவத்தை யீவார்பாரே. 387

புலஸ்திற்கு சத்தரிடி வாக்கியம் பெற்றது

பாரப்பா பிரணவத்தின் பொருள்களெல்லாம்
        பாலகனே யுந்தமக்கு தருவாரங்கே
நேரப்பா யவரிடத்தி லுபதேசங்கள்
        நேர்மையுடன் பெற்றபின்பு படியிறங்கி
கூறப்பா குசலமகா ரிடியாசீர்மங்
        கொற்றவனே கண்டாலே யுந்தமக்கு
ஆரப்பா தேவரிடி சத்தவாக்கியம்
        அப்பனே யுந்தனுக்கு லபிக்குந்தாமே. 388

தானான வாக்கியங்கள் பெற்றபின்பு
        தனியான மேருவுக்கு மேற்பாகத்தில்
கோனான யெனதையர் கிரேதாயுகத்தில்
        கொற்றவனே யுபதேசம் பெற்றபாலாம்
தேனான ஞானமென்ற சுருதிநூலாம்
        தேற்றமுடன் சமாதிமுகம் காண்பாயப்பா
மானான மகாதேவ ரிடிகள்தாமும்
        மன்னவனே காவல்முக மிருப்பார்தாமே. 389

இருக்கவே சமாதிமுகம் பிரணவங்கள்
        யெழிலான ரிடியாரு முந்தமக்கு
சருக்கமது தவுராது முறைபாடெல்லாம்
        தப்பாது தொகுப்புடனே வருக்கமாக
பெருக்கமுட னுந்தமக்கு பிரணவத்தை
        பேசரிய யுபதேச வுண்மையோடும்
சுருக்கமது காயாதி கற்பமெல்லாம்
        சுந்தரனே யுந்தனக்கு வமைப்பார்காணே. 390

Koviloor Digital Library

காணவே யுபதேசம் பெற்றபாலா
கனிவனேபுலஸ்தியனே ஞானக்கண்ணே
பூணவே பிரணவங்கள் கொண்டபின்பு
புங்கவனே மேருகிரி தன்னைவிட்டு
ஆணவங்கள் தானொடுங்க வன்புள்ளானே
அப்பனே பொதிகைமலை தன்னிற்சென்று
வேணபடி ரிடிமுனிவர் நாதர்தம்மை
விருப்பமுடன் றாள்வணங்கி பணிந்துகொள்ளே. 391

கொள்ளவே யுந்தமக்கு வாசீர்மங்கள்
கொற்றவனே தானமைக்கும் கோபலாகேள்
தெள்ளமிர்த மானதொரு ஞானப்பாலே
தெளிவான பிரணவமே குருநாதாகேள்
வள்ளலுயர் தென்பொதிகை வரசேகேண்மோ
வளம்பெரிய நாதாக்கள் மெய்ச்சும்பாலா
கிள்ளைமொழி தான்புகலும் கீர்த்திவானே
கிருபையுள்ள புலஸ்தியனே புகலக்கேளே. 392

அகஸ்தியர் புலஸ்தியருக்கு பதினெண்பேர்
வள்ளல் கூறல் மச்சமுனி

கேளப்பா புலஸ்தியனே மச்சகேந்திரா
கெடியான கருவிலமே கவிவல்லோனே
தாளப்பா வசுவனியார் மெச்சும்பாலா
தண்மையுள்ள தயாபரனே தகைமையோனே
ஆளப்பா மச்சமுனி வள்ளல்கேண்மோ
அப்பனே நெடுங்கால மிருந்தசித்து
பாளப்பா தேகமது போகாமற்றான்
பாலகனே சித்துவிளை யாடினாரே. 393

ஆடினார் மூன்றுமுறை சமாதிகொண்டார்
அப்பனே யவர்தாதை முப்பாட்டன்தான்
தேடியே யாசகமா முலகுதன்னில்
தெளிவுடனே பலதேசம் சென்றுவையம்
நாடியே வனாந்திரங்கள் குகைகள்தேடி
நாதாந்த பிச்சையது மிகவாய்வாங்கி
பாடியே யாகாச வீர்த்தியோடு
பாலகனே காட்டகத்தி லிருந்தார்தானே. 394

Koviloor Digital Library

தானான மச்சமுனி தாதைவர்க்கம்
தனியாக காட்டகத்தில் வாழ்க்கையோடும்
தேனான மனோன்மணியா ளருளுங்கொண்டு
கெந்தனிலே குடிவாழ்க்கை செய்துகொண்டு
மானான மச்சருக்குப் பிரணவத்தை
மாறாமல் அனுதினமும் போதித்தேதான்
கோனான குருக்களுக்கு தனங்கொடாமல்
கொற்றவனே பணிவிடைகள் செய்தார்பாரே. 395

பாரப்பா பணிவிடைகள் செய்துகொண்டு
பார்த்திபனே மச்சனுக்கு கல்வியோதி
ஆரப்பா யாசகா விர்த்திசெய்து
அப்பனே நெடுங்காலங் கழித்துமேதான்
சீரப்பா ரிடியாசீர்மந் தன்னிற்சென்று
சிறப்புடனே மச்சமுனி வயதுமாகி
தீரப்பா குருபரனை யடுத்துமேதான்
தீர்க்கமுட னுபதேசம் பெற்றார்தாமே. 396

பெற்றுமே கவிவாண ரென்றநாமம்
பேருலகில் கீர்த்தியது மிகவுண்டாகி
கற்றுமே சிலகால மிருந்துசென்று
காவலனே பெரியோரை வகுத்துமேதான்
பற்றதுவு மிகநீங்கிப் பரிசனாகி
பாருலகு வாசைதனை வெறுப்புண்டாகி
சுற்றமுடன் பதிபாச களைகள்பூண்டு
சுந்தரனே சமுசார மறந்திட்டாரே. 397

மறந்தாரே மச்சமுனி நாதர்தாமும்
மகிதலத்தி லதீதமுடன் ஞானவானாய்
துறந்தாரே யுலகுபதி வாசைதன்னை
துப்புரவாய் தானொழித்த புனிதவானாய்
அறந்தனையே எப்போதுஞ் சிரமேற்கொண்டு
அவநிதனில் நெடுங்காலஞ் சமாதிபூண்டு
திறமுடனே யோகநிஷ்டை மதியங்கொண்டு
தீர்க்கமுடன் வெகுகால மிருந்திட்டாரே. 398

Koviloor Digital Library

சட்டைமுனி வள்ளல்

இருந்தாரே புலஸ்தியனே யின்னங்கூர்வேன்
யெழிலான சட்டைமுனி வரைதான்கேண்மோ
பொருந்தவே தாய்தந்தை வளங்கள்கூர்வேன்
பொங்கமுடன் பயிரிடுங் குடிகளப்பா
திருந்தவே காணிவள மெத்தவுண்டு
தீர்க்கமுடன் யேனாதிக் கூட்டமென்பார்
அருந்தவத்தி லுதித்ததொரு சட்டைதானும்
அப்பனே சமாதிமுகம் கொண்டசித்தே. 399

சித்தான சட்டைமுனி நாதரப்பா
சிறப்பான பூமிவளம் திரிந்துமேதான்
சுத்தமுடன் கைலாச ரிடிதான்கூட்டம்
சுந்தரனார் தாமெடுத்து பணிகள்செய்து
நித்தியமும் மாசிலாக் கடவுள்தம்மை
நேமநிஷ் டைகளோடு வதீதந்தீர்ந்து
சத்தியத்தை யனுதினமு மனுசரித்து
சாங்கமுடன் திருக்கோயில் காப்பார்தானே. 400

தானான தேவதாஸ் தலத்தின்வாசல்
தண்மையுடன் கரந்தனிலே தாம்பாளந்தான்
கோனேதான் கைபிடித்து யிதவுகூறி
கொற்றவனே முகம்பார்த்து தனமேகேட்பார்
மானேகேள் மானிடராம் கோடிசங்க
மகத்தான பரமாத்மா வென்றுகூறி
தேனேகேள் சட்டைமுனி நாதருக்கு
தெகிட்டாதே பொன்காசு தருவார்காணே. 401

காணவே சட்டைமுனி நாதர்தாமும்
கருவாக யாசகா விர்த்திசெய்து
தோணவே சம்சார வாழ்க்கையோடும்
தொல்லுலகில் தாய்தந்தை வினக்கத்தோடும்
பூணவே யுபசார வஞ்சலோடு
புகழ்ச்சியாய் வனுதினமு நமஸ்கரித்து
வேணபடி தனந்தேடி சமுசாரத்தில்
வீற்றிருந்தார் சித்துமுனி நாதர்பாரே. 402

Koviloor Digital Library

பாரப்பா சட்டைமுனி மைந்தரோடு
பாலகனே நெடுங்காலங் கூடிருந்தார்
நேரப்பா வடகோடி கானகத்தில்
நேர்மையுடன் தபசியராம் சங்குபூண்ட
தேரப்பா சந்தியாசி ஞானவானாந்
தெளிவான யோகியாம் சங்குநாதன்
ஆரப்பா வவருடைய ஆசீர்மத்தால்
அப்பனே சிலகாலம் வாழ்ந்தார்தாமே. 403

வாழ்ந்தாரே சட்டைமுனி சிறிதுகாலம்
வளம்பெரிய நாதாக்க ளருளினாலே
தாழந்திருந்த குடிவாழ்க்கை மேலதாகி
தயாபரனே சின்மயமே புலஸ்தியாகேள்
ஆழ்ந்ததொரு சத்தசா கரந்திரிந்து
அப்பனே சிவவேட மதியங்கொண்டு
சூழ்ந்ததொரு சமுசார வாழ்க்கையற்று
துறந்தரனாய் சிவவேடம் கொண்டார்பாரே. 404

கொங்கணர் வள்ளல் கூறல்

பாரப்பா யின்னமொரு வளமைகூர்வேன்
பாலகனே புலஸ்தியனே வறிவுள்ளானே
ஆரப்பா சித்துமுனி ரிடிகள்தேவர்
அருந்தவத்தி லுதித்ததொரு வண்மைதானும்
நேரப்பா வவரிருந்த வாழ்க்கையெல்லாம்
நெறிமுறைகள் யார்வகுத்தா ரொருவர்காணேன்
தீரப்பா யுந்தமக்கு முன்தவத்தால்
தீர்க்கமுடன் விட்டகுறை யமைக்கலாச்சே. 405

ஆச்சப்பா கொங்கணவ ரிருந்தவண்ணம்
அப்பனே யவர்பாடு முறைபாடெல்லாம்
மூச்சடங்கி தவநிலைக்கு செல்லாமுன்னம்
மூதுலகி லவர்தந்தை தாயின்வள்ளல்
பேச்சரியா முழுமகக ளிருவர்தானும்
பேருலகி லீசரது கோட்டைவாசல்
மாச்சலுடன் யிரும்புருக்கி கலங்கள்செய்து
மன்னவனே விற்றுண்ட புனிதராமே. 406

Koviloor Digital Library

புனிதனாம் கொங்கணவர் தந்தைதாயும்
புகலரிய நாதாக்கள் பாடுசென்று
கனிவுடனே யவர்தமக்கு யேவல்யீய்ந்து
கண்மணியே பணிவிடைக ளுபசாரங்கள்
தனியான வரைபாடு சோடசாரம்
தண்மையுடன் மிகப்புரிந்து தகைமைகொண்டு
இனிதமுடன் பூசைமுகம் கையிலேந்தி
யெப்போதும் முன்பணிக்கு முதலானோரே. 407

முதலாக நின்றுமே பணிகளுக்கு
முடிபுனைந்து சதாகாலம் பான்மைகொண்டு
பதமுடனே யேவலுக்கு முன்னேநிற்க
பார்த்தாரே ரிடிதேவர் முனிவர்தாமும்
இதமுடனே யவர்களுக்கு கிருபைபூண்டு
மிக்கான தனமதுவு மிகவேதந்து
கதமுடனே கொங்கணவர் பாலனுக்கு
கதிப்புடனே வளருகைக்கு வரந்தந்தாரே. 408

தந்தாரே கொங்கணவர் சேய்தனக்கு
தக்கபடி தனங்கொடுத்து வரமுமீய்ந்து
எந்நாளு மங்களமா யிருக்கவென்று
யெழிலுடனே யாசீர்ம மிகப்புரிந்து
அந்தமுடன் விடையதுவுந் தந்தபின்பு
அப்பனே வீசரது கோட்டைநீங்கி
சொந்தமெனும் மல்லிகார்ச் சுனன்தனக்கு
சுந்தரனே குடியேறி வாழ்ந்திட்டாரே. 409

இட்டாரே கொங்கணவர் தந்தைதாயார்
யெழில்பெரிய பட்டணமாம் பள்ளிமுட்டம்
திட்டமுடன் மரபினரா மனேகசங்கம்
தீர்க்கமுள்ள மாண்பரொடு நெடுங்காலந்தான்
சட்டமுடன் குடும்ப சமேதரருமாக
சாங்கமுடன் சீவித்து சீவியகாலம்
அட்டதிசை தான்புகழ மைந்தன் தன்னை
அப்பனே கொங்கணரை வளர்த்தார்காணே. 410

Koviloor Digital Library

காணவே புலஸ்தியனே மச்சகேந்திரா
கருவிலமே பொன்மணியே கவிராஜேந்திரா
பூணவே கொங்கணவர் வயதுமாகி
பூவுலகில் பதினாறு பாலனாகி
தோணவே கைத்தொழிலாங் கலங்கள்செய்து
தோராமல் வர்த்தகத் தினிபுணனாகி
ஆணவங்க ளுள்ளடக்கி வரியபாலன்
அவனிதனில் வர்த்தகனா யிருந்தார்தாமே. 411

இருந்தாரே சிலகாலஞ் செட்டுசெய்து
யெழிலான பருவமது மிகவுண்டாகி
பொருந்தவே மணக்கோல னாளானாகிப்
பூவுலகில் சமுசார வாழ்க்கைபூண்டு
திருந்தவே நெடுங்காலஞ் செட்டுதன்னில்
தீவிரமாய் தனந்தேடி தனியன்றானும்
விருந்துடனே யெந்நாளு மனமேகொண்டு
விற்பனையாய் மதியூகம் பூண்டார்தாமே. 412

பூண்டாரே கொங்கணவர் தானுமங்கே
பூவுலகில் மிகப்புனித புண்ணியவானாய்
ஆண்டாரே மாட மாளிகைகள்கட்டி
அப்பனே சங்கமருக் கன்னந்தந்து
காண்டாவின் வனந்தேடி ரிடியாருக்கு
கனிவுடனே பண்டுபாலா வமுர்தத்தோடும்
வேண்டியே தான்கொடுப்பார் கொங்கணன்றான்
வேட்கமுடன் சித்துமுனி கொள்வார்பாரே. 413

கொள்ளவே மகாதேவ ரிடிகள்சித்து
கொற்றவனாங் கொங்கணவர் தன்றமக்கு
தெள்ளமிர்த மானதொரு பால்பழத்தால்
தேற்றமுடன் கொங்கணற்கு மனதுவந்து
உள்ளபடி மெய்ஞ்ஞானப் பாலையப்பா
வுத்தமற்கு வுபதேசஞ் செய்ததாலே
கள்ளமிலா கொங்கணரு மனதுவந்து
காசினியில் சமுசாரந் துறந்திட்டாரே. 414

Koviloor Digital Library

துறந்தாரே தாய்தந்தை வுறவின்மார்க்கம்
துப்புரவாய் தானகற்றி தூய்மைகொண்டு
மறந்தாரே கலியுகத்தி னாசைதன்னை
மார்க்கமுடன் விட்டகற்றிக் காவிபூண்டு
இறந்தாரே தாய்தந்தை சமுசாரங்கள்
யெழிலுடனே தந்தமக்கு பாசம்நீங்கி
சிறந்ததொரு யோகநிலை கொண்டோன்போலும்
சிதாபாசங் கள்தனிலே யிருந்திட்டாரே. 415

இட்டதொரு கொங்கணவர் தானுமங்கே
யெழிலான சித்துமுனி ரிடிகள்போல
விட்டகுறை யிருந்ததொரு தன்மையாலும்
வேதாந்தத் தாயினது வருளினாலும்
சட்டமுடன் வையகத்தில் நெடுநாளாக
சாங்கமுடன் வீற்றிருந்தார் சட்டைநாதர்
அட்டதிசை தான்புகழ சித்தர்மெய்ச்ச
அருந்தவசி யோகியதா யமர்ந்திட்டாரே. 416

அமைந்துமே சட்டமுனி யிருக்கும்போது
அப்பனே பதினெண்பேர் வொன்றாய்க்கூடி
அமைந்தபடி யோகநிலைக் குறுதியாவீர்
அருங்குன்றக் குணமேரே அன்புள்ளானே
அமைந்தபடி வட்ட பாக்கியந்தான் கொள்வீர்
அருங்கடலே சாகரமே அமுர்தவானே
அமைந்தபடி வஷ்டசித்து ஆடலாகும்
அவனியிலே நீயுமொரு சித்தாவாயே. 417

சித்தனா யிருக்கவென்று ரிடிகள்தாமும்
சிற்பரனே சதாகாலம் ஞானங்கொண்டு
முத்திவழி தானடையும் வழியுங்காட்டி
மூதுலகைத் துப்பகற்றி துறையுங்கூறி
பத்தியுடன் யெந்நாளும் கருணைகொண்டு
பாருலகை மறந்ததொரு பாலனாக
எத்திசையு மெச்சுதற்கு வரமுமீய்ந்து
யெழிலுடனே யிருக்கவென்று முறைசொன்னாரே. 418

Koviloor Digital Library

ரோமரிடி வள்ளல் கூறல்

சொன்னாரே யின்னமொரு மர்மங்கூர்வேன்
சொற்பெரிய புலஸ்தியனே குமரவேளே
மன்னவனாம் ரோமரிடி சக்கரவர்த்தி
மகாதேவ ராஜாவாம் குருக்கள்கூட்டம்
கன்னவனுக் கொப்பான குருக்களப்பா
காயத்திரிப் பிரணவத்தை கொண்டஞ்பன்
தென்னவனாம் ராமருக்கு வுபதேசங்கள்
தெளிவுடைத்த குருக்களிட கூட்டந்தானே. 419

தானான குருக்களுக்கு ராமர்தந்தை
தாயுடனே சுற்றத்தா ருறவின்மார்க்கம்
கோனான குருக்களுக்கு தொண்டுசெய்து
கொற்றவனே நெடிதுநா ளிருந்தமாண்பர்
தேனான தேவதா ஸ்தலமுஞ் சென்று
தேற்றமுடன் அரும்பணிகள் மிகப்புரிந்து
மானான குருக்களிடம் பணிதிசெய்து
மதிப்புடனே சிலகால மிருந்தார்காணே. 420

காணவே ரோமரிடி பாலனுக்கு
கருவாக வயதைந்து வானபின்பு
ஆணவங்கள் வருமுன்னம் பாலனுக்கு
அன்புடனே கல்வியது யோதுகைக்கு
மாணமருங் கல்வியுள்ளோர் தன்னைத்தேடி
மகத்தான பிரணவத்தை யோதுகைக்கு
பாணமது போலாக கல்விநூலை
பட்சமுடன் யோதுவித்தார் பண்பாய்க்கேளே. 421

கேளக்பா ரோமருக்கு கல்விவாய்ந்து
கெடியான பருவமாய் காலந்தன்னில்
தாளப்பா மணமுகூர்த்தம் புரிந்தாரங்கே
தகைமையுடன் சம்சார வாழ்க்கையோடும்
கோளப்பா நேராமல் புனிதவானாய்
கொற்றவனார் சிலகாலம் வாழ்க்கைசெய்து
மாளப்பா வையகத்தி லிருந்துகொண்டு
மகாதேவா யென்றலுமே கூறுவாரே. 422

Koviloor Digital Library

கூறுவார் சதாகாலம் நிஷ்டையோடு
குருபரனே யெந்நாளு மனதிலெண்ணி
தேறுவார் சிவஞான போதைகொண்டு
தெளிவுடனே சமுசார வாழ்க்கையற்று
மாறுபட வில்வாழ்க்கை தன்னைவிட்டு
மன்னவனார் ரோமரிடி காட்டகத்தே
வீறுடனே வனாந்திரமாங் காடேயேக
விட்டகுறை யிருந்ததினால் சென்றார்பாரே. 423

பாரப்பா வனாந்திரியாய் சென்றபோது
பாலகனே ரோமரிஷி தன்னைத்தானும்
நேரப்பா தவநிலையி லிருந்தசித்து
நெடிதாக ரோமரைத்தான் கண்டபோதே
சீரப்பா பதினெண்பேர் சித்துதாமும்
சிறப்புடனே ரோமருக்கு வினையங்கூறி
ஆரப்பா ஞானோப தேசந்தன்னை
அப்பனே யவர்தமக்கு ஓதினாரே. 424

ஓதவே ரோமரிஷி யார்தமக்கு
வுற்றதொரு கருவிகர ணாதியந்தம்
நீதமுடன் உடல்பொருளா ளாவியெல்லாம்
நிஷ்களங்க மாகவல்லோ நீடித்தார்கள்
பாதமெனும் பவக்கடலை விட்டகற்றி
பரமகுரு ஞானமதைப் புகட்டினார்கள்
தோதமுடன் ரோமரிடி யாருமப்பா
தொல்லுலகை தான்கடந்த சித்தானாரே. 425

சித்தான சித்துமுனி ரிடிகள்போலே
சிறப்புடனே பதினெண்பேர் மெச்சுவானாய்
சத்தியத்தை சதாகாலங் கைவிடாமல்
சதாநிஷ்டைக் குள்ளாகி தருமவானாய்
முத்திபெறும் பதவிக்கு மேவலாகி
மூதுலகைத் தான்கடந்த சித்துமாகி
எத்திசையும் மெய்ச்சுதற்கு பாலனாகி
யெழில்பெரிய ரோமரென்ற பெயருமாச்சே. 426

Koviloor Digital Library

தன்வந்திரி வள்ளல் கூறல்

ஆச்சப்பா யின்னமொரு மர்மங்கூர்வேன்
அப்பனே புலஸ்தியனே கவிராஜேந்திரா
மூச்சடங்கும் தேகமது நில்நில்லாது
மூதுலகில் வாழ்க்கையது சொல்லொண்ணாது
மாச்சலென்ற தன்வந்திரி வளப்பங்கூர்வேன்
மன்னவனே முன்பிறப்பில் விஷ்ணுவென்பார்
பாச்சலுட னிப்பிறப்பில் தன்வந்திரிதானும்
பாலகனே மானிடராய் பிறந்தார்காணே. 427

காணவே தன்வந்திரி மூதைதாதை
கருவிலமே புலஸ்தியனே கவிராஜேந்திரா
பூணவே யவர்தாதை தந்தைதாயும்
புகழ்பெறவே காயத்திரி நாமங்கொண்டு
வேணபடி தம்பூரு வீணைகீதம்
வித்தகனார் கையேந்தி யாசீர்மங்கள்
தோணவே கரபாத்திரங் கையிலேந்தி
தேற்றமுடன் யாசகங்கள் செய்தார்தானே. 428

தானான ரோமரிடி தாதைவர்க்கம்
தனியான யாசகா விர்த்தியோடு
தேனான மனோன்மணியை தெரிசித்தேதான்
தேற்றமுடன் சதாநித்தம் பணிகளுக்கு
மானான மன்னவனாம் கஜேந்திரனுக்கு
மகத்தான பணிவிடைக ளதீதங்கூறி
பானான பரஞ்சுடரை மனதிலுன்னி
பதாம்புயத்தை யெப்போதும் பணிகுவாரே. 429

பணியவே சடாட்சரமாம் பொருளையுன்னி
பாலகனே சதாநித்தம் பனுவல்கொண்டு
துணிவுடனே நிஷ்டைகளு மனந்தஞ்செய்து
துப்புரவாய் யோகமென்ற சாதனத்தை
மணியான தன்வந்திரி பகவானுக்கு
மன்னவனே நிர்த்தமுடன் கியானமோதி
அணிகடவுள் செய்கைதனை யவர்க்கேகாட்டி
அப்பனே பாலகனை வளர்த்தார்தாமே. 430

Koviloor Digital Library

தாமான சாத்திரத்தின் கியானரூபம்
சதகோடி சூரியர்போல் பிரகாசிக்க
கோமானாம் தன்வந்திரி பாலனுக்கு
கூறியதோர் மூன்றுலட்சங் கிரந்தந்தன்னை
சாமனிய மானதொரு பதினெண்பேர்கள்
சாற்றினா ருபதேசம் பலவாறாக
போமேதா னிதிகாசங் கட்டறுத்து
புகட்டினார் தன்வந்திரி பாலனுக்கே. 431

பாலனாஞ் சித்தர்முனி தன்வந்திரி பகவான்
பாருலகைத் தான்மறந்த சித்தனாகி
சீலமுட னுபதேச வுண்மைபூண்டு
சிற்பரனே யனுதினமும் தியானித்தேதான்
கோலமயில் சுப்பிரமணியர் வாசம்பூண்டு
கொற்றவனார் சக்ரமதை கரத்திலேந்தி
வேலுடைய சக்ரமதை கரத்திலேந்தி
வித்தகரும் வெகுகால மிருந்திட்டாரே. 432

இட்டாரே லோகபதி தன்னிற்சென்று
யெழிலான கேடயத்தை தான்மறந்து
சட்டமுடன் வரைகோடி காலந்தானும்
சதுருகமாம் நான்குயுக காலமட்டும்
திட்டமுடன் சமாதிமுகம் பூண்டுமேதான்
தீர்க்கமுடன் கைலாச பதிநினைந்து
அட்டதிசை தான்புகழ கீர்த்திவானாய்
அவனிதனில் நெடுங்கால மிருந்திட்டாரே. 433

சிவவாக்கியர் வள்ளல் கூறல்

இருந்ததொரு புலஸ்தியனே தம்பிரானே
யெழிலான வற்புதமே இறைவாகேண்மோ
பொருந்தவே சிவவாக்கியர் வள்ளல்நேர்மை
பொங்கமுடன் யாமுரைப்போம் புனிதவானே
திருந்தவே சிவவாக்கியர் தந்தைதாய்மார்
சிற்பரனே யவருடைய வள்ளல்கேண்மோ
அருந்ததிக் கொப்பான சிவவாக்கியர்தாய்தான்
அப்பனே யவருடைய பணிகள்கேளே. 434

Koviloor Digital Library

பணியான பணியதுவு மேதென்றாக்கால்
பாலகனே சித்தருட மரவுக்கல்லோ
அணிஅணியா யவருடைய வுறவின்மார்கள்
அப்பனே பணிவிடைகள் செய்வார்பாரு
மணியான கருவதுதான் மண்ணினாலே
மன்னவனே யுருச்செய்து கருக்கள்கட்டி
துணிவுடனே சிலைசெய்து கருக்கள்வார்த்து
துப்புரவாய் பணிதிமிக செய்வார்பாரே. 435

பாரப்பா பஞ்சணத்தா ரானவருக்கும்
பாலகனே பணிவிடைகள் செய்வாரல்லோ
நேரப்பா சதாகாலம் காலை மாலை
நெடிதான பணிவிடைக்கு முன்னேநிற்பார்
தூரப்பா நேராமற் துய்யபாலா
துப்புரவாய் யெந்நாளு மதீதங்கொள்வார்
சாரப்பா யவர்மரபில் நெடுங்காலந்தான்
சட்டமுடன் வீற்றிருந்தார் சிவவாக்கியருந்தானே. 436

தானான சிவாக்கிய நாதருக்கு
சதுரான ஞானமென்ற பீடந்தானும்
கோனான பஞ்சணத்தின் கூட்டத்தார்கள்
கொற்றவனார் சிவவாக்கிய நாதருக்கு
மானான மதியமிர்தங் கொள்வதற்கு
மகத்தான கல்விநூ லறிவதற்கும்
தேனான குருக்கள்மார் கூட்டந்தன்னில்
தேற்றமுடன் குருபரனைத் தேடினாரே. 437

தேடியே குருபரனை கண்டுமேதான்
தேற்றமுடன் சிவவாக்கிய நாதருக்கு
கூடியதோர் நூன்முகமும் ஞானப்பாலும்
குருபரனார் தீட்சைவிதி கோடிசங்கம்
நாடியே சிவவாக்கிய பாலனுக்கு
நாதாந்த கீதமுதல் நடனசேர்வை
பாடியே யரங்கேற்றஞ் செய்யவென்று
பாலித்தார் தாய்தந்தை பாலித்தாரே. 438

Koviloor Digital Library

பாலிக்க குருபரனை மனதிலுன்னி
பஞ்சனத்தா ரானவர்களு மொன்றாய்க்கூடி
வாலிபனாஞ் சிவவாக்கிய மன்னனுக்கு
வரிசைமுறை பிசகாமல் வகுப்போடொக்க
நூலிணையாம் ஆதியந்தங் காப்போடோடும்
நுட்பொருளாம் பிரணவத்தின் நுணுக்கம்யாவும்
மாலினையாம் பதாம்புயத்தி னடிபணிந்து
மன்னவனே யுபதேசஞ் செய்தார்தாமே. 439

செய்யவே சிவவாக்கிய நாதருக்கு
செப்பரிய சிதாபாசக் களைகள்பூண்டு
தூய்யவே மனுகோடி பிரணவங்கள்
துகள்நீங்கி பாலனுக்கு துறையுங்கண்டு
பையவே ஞானப்பா லமிர்தமேறி
பாலனுக்கு சின்மயத்தின் மயக்கங்கொண்டு
வெய்யபுகழ் பதினெண்பேர் சார்பிற்சென்று
வேதாந்த சிவவாக்கிய ரானார்காணே. 440

காணவே சிவவாக்கிய நாதருக்கு
கருத்திருந்தி பரஞ்சுடராம் கருணைமீறி
ஆணவங்கள் தானொடுங்கி அன்பர்தானும்
அப்பனே சிவயோக நிலையிற்சென்று
மாணமருங் கல்வியுள்ளோர் தமையடுத்து
மன்னவனும் யோகநிலை வழியிற்சென்று
பூணவே பூரணத்தை யறிவால்வென்று
புங்கமுடன் அஷ்டசித்தி கொண்டார்தாமே. 441

இடைக்காட்டார் வள்ளல் கூறல்

கொண்டதொரு புலஸ்தியனே யின்னங்கூர்வேன்
கூறான இடைக்காடார் மரவுகேண்மோ
அண்டர்பிரா னருளாலே தந்தைதாய்கள்
அப்பனே சிறுவயது காலந்தன்னில்
தண்டகா ரணியமதில் சென்றுமேதான்
தகைமையுடன் காட்டகத்தில் கோனார்பக்கல்
தெண்டமது தான்புரிந்து கோனார்மாளி
கொற்றவனார் பணிவிடைகள் செய்தார்தாமே. 442

Koviloor Digital Library

செய்துமே பால்பசுக்கள் மேய்த்துக்கொண்டு
செப்பவே மலைகுகைகள் குடியிருந்து
வையகங்கள் தான்புகழ சித்தருக்கு
வாகடனே பணிவிடைக்கு ஏவலாகி
துய்யநல்ல பாலமுர்தம் தானெடுத்து
துப்புரவே பூசைமுகம் சமாதிசென்று
வெய்யவே தானீய்ந்து முனிவர்கட்கு
வேட்டமுடன் வாழ்க்கையது செய்தார்பாரே. 443

பாரேதான் பணிவிடைகள் செய்யும்போது
பாலகனே சித்தருக்கு மனமும்பொங்கி
நேரான விடைக்காட்டார் சேய்தனக்கு
நெடிதான ஞானப்பா லறிவதற்கு
கூரான புத்திமிகத் தானறிந்து
குருபரனாம் வாத்தியார் தன்னைத்தேடி
சீரான பள்ளிதனி லமைக்கவென்று
சிற்பரனை பள்ளிதனில் விட்டார்காணே. 444

விட்டாரே விடைக்காடார் தன்னைத்தானும்
வீரான குருபரனார் தாமுமங்கே
இட்டமுடன் ஞானோப தேசம்யாவும்
யெழிலுடனே போதிக்க விடைக்காடற்கு
தொட்டமொழி கோணாமல் ஞானப்பாலும்
தேராம லவர்தமக்கு கியானமாகி
அட்டதிசை சித்தர்களு மெய்ச்சவேதான்
அவதார சித்தராய் வமைந்திட்டாரே. 445

அமைந்தாரே விடைக்காடார் சித்தனாகி
அரும்பருவம் தாய்தந்தை தனைமறந்து
அமைந்தபொருள் படியதுவும் நிதானமாகி
அருள்ஞானப் பாலதுவு முருவங்கொண்டு
அமைந்ததொரு வாழ்க்கையெல்லாம் தான்மறந்து
அப்பனே சின்மயத்தி னொளிவுகண்டு
அமைந்தபடி விதியாளாய் அவனிதன்னில்
அருங்கனலி லிடைக்காட்டா ரருந்திட்டாரே. 446

Koviloor Digital Library

அருந்துமே இடைக்காடார் பாலன்றானும்
அப்பனே மதியமிர்த மதிகமாகி
பொருந்தவே கியானத்தின் ரூபங்கொண்டு
பொங்கமுடன் பிரணவத்தை யுச்சரித்து
திருந்தவே செபமாலை கரமணிந்து
சிற்பரனே யெந்நாளு முறுதிகொண்டு
குருந்தமெனு மரத்தடியில் வனாந்திரத்தில்
குருபரன்போல் தவநிலையி லிருந்திட்டாரே. 447

இருந்தாரே இடைக்காடார் சித்துதாமும்
யெழில்பெரிய காட்டகத்தின் மரத்தின்பொந்தில்
திருந்தவே சிவயோக நிலையிற்சென்று
தீர்க்கமுடன் கண்ணிரண்டு மூடலாகி
பருந்துமுதல் காகங்க ளிருந்திட்டாலும்
பாலருக்கு யாதொன்றும் தோன்றாமற்றான்
அருந்தவத்தி லிருந்துகொண்டு வவனிதன்னை
அப்பனே மறந்தசித்த ரானார்காணே. 448

கருவூரார் வள்ளல் கூறல்

காணவே யின்னமொரு கர்மங்கேளீர்
காசினியில் நாதாக்க ளனேகருண்டு
தோணவே யவரவர்கள் வள்ளல்தன்னை
தோற்றமுடன் யாமுரைப்போம் புனிதவானே
வேணதொரு கருவூரார் தந்தைதாய்கள்
வெளிக்காடு தன்தேச மிகப்பிரிந்து
பாணமுடன் தேவதாஸ் தலங்கள்தேடி
பணிவிடைகள் மிகச்செய்து துணிந்தார்பாரே. 449

துணிந்துமே சிலைக்கருவு செய்யவென்று
துப்புரவாய் குடிகளிட மார்க்கஞ்சென்று
மணியான மணியுடனே குடவன்தானு
மன்னவனே நவலோக மொன்றாய்ச்சேர்த்து
அணியான கருவுதனி லமைத்துமேதான்
அப்பனே பிரதமைக ளுருவுசெய்து
தணியான கருவுதனை விற்றுவுண்டு
சதாகாலஞ் சீவனங்கள் செய்திட்டாரே. 450

Koviloor Digital Library

இட்டாரே கருவூரார் தந்தைதாய்மார்
யெழில்பெரிய தேவதாஸ் தலங்கள்தேடி
மட்டமாம் விக்கிரங்கள் மிகப் புரிந்து
மகதேவ சித்தருக்கு பணியுஞ்செய்து
தொட்டதொரு பொருள்க஌ெல்லாம் சித்தருக்கு
தோறாமல் தான்கொடுப்பார் தந்தைதாய்மார்
அட்டதிசை தான்புகழ முனிவர்சித்தர்
அன்புடனே வவர்தமக்கு அருள்செய்வாரே. 451

அருளான வருளதுவு மிகவேசெய்து
அப்பனே கருவூரார் தந்தமக்கு
பொருளான பொருள்களது யளிக்கவென்று
பொங்கமுடன் கருவூரார் பாலனைத்தான்
இருளான இருளகற்றி துலக்கங்காண
யெழில்பெரிய குருபரனை யேற்றங்கொண்டு
குருவான குருதனையே தேடிச்சித்தார்
குறிப்புடனே கூறலுற்றார் முனிவர்தாமே. 452

முனியான நவகோடி ரிஷிகள்தேவர்
முயற்சியாய் கருவூரார் பாலனுக்கு
கனியான நவக்கனிகள் தானுமீய்ந்து
காவலனே பள்ளிதனி லோதுவித்து
தொனியான சாஸ்திரங்கள் நவகீதங்கள்
தோறாம லோதுவித்தார் பாலனுக்கு
இனியான ஞானப்பால் தன்னினோடும்
யெழிலான யேற்றமது கற்பித்தாரே. 453

கற்கவே கருவூரார் பாலனுக்கு
கருவான ஞானப்பா லறிந்தபோதே
சிற்பரனா ரருளாலே பாலனுக்கு
சிதாபாசக் களையதுவு மிகவுண்டாகி
அற்பமென்ற தேகமது வாழ்க்கைதன்னை
அட்சணமே தான்வெறுத்து மதியம்பூண்டு
விற்பனன்போற் சொற்சொரூப மிகவுண்டாகி
விண்ணுலகில் கருவூரார் சித்தானாரே. 454

Koviloor Digital Library

சித்தான சித்துருவங் கொண்டபாலன்
சின்மயத்தின் பூரணத்தை யறிந்தசீலன்
முத்தான வழிதேடி கருவூராரும்
மூதுலகைத் தான்கடந்த சித்தனாகி
தத்துவத்தில் மிகுந்ததொரு முனிவன்போலுஞ்
சதாநித்தம் மனோன்மணியை தொழுதுபோற்றி
கத்தனெனும் கைலாச ரூபரைப்போல்
கருவூறார் வடிவமதா யானார்பாரே. 455

ஆனாரே கருவூரார் சித்துதாமும்
அன்புடைய சீஷனைப்போல் சித்தருக்கு
போனாரே நெடுங்காடு கானகத்தில்
பொங்கமுடன் கருவூரார் தானுமங்கே
தேனான வாரணமாம் வாசிதன்னை
தேடியே புறஞ்சென்று ஸ்தலமுங்கொண்டு
மானான மகதேவர் காசினாதர்
மன்னவனார் ஸ்தலமதுவுங் கண்டிட்டாரே. 456

கண்டாரே கருவூரார் காசிநாதர்
கைலங்கிரி வாசரையுங் கண்டபோதே
தொண்டுசெய்து காசிவிஸ்வ நாதருக்கு
தோறாத சிவலிங்கம் லட்சங்கோடி
தண்டகா ரணியமது தடத்திலேதான்
தலம்பெரிய லிங்கமது கோடிசெய்தார்
கண்டவர்கள் பார்த்திடவே கருவூராரும்
கருவான செம்புதனி லமைத்திட்டாரே. 457

செம்பான செம்பதுவும் தங்கச்செம்பாம்
செயலான பாக்கியமு மதிலேயுண்டு
அம்பொன்னால் மாட கூடங்களெல்லாம்
அப்பனே சிவாலயங்கள் மதில்கள்தோறும்
கும்பமுனி யகஸ்தியனார் குருபரன்றான்
கூறியதோ ரகுவனியார் கடாட்சத்தாலே
செம்பொன்னாந் தேவதாஸ் தலமுந்தானும்
செம்பான செம்பதுவு மென்னுவாரே. 458

Koviloor Digital Library

என்னவே கருவூரார் மகிமையப்பா
யெழிலான மானிடர்க ளறிவாரோதான்
துன்னவே யவர்தேடி வைத்தவைப்பு
துப்புரவாய் செந்தூரக் காடேயாகும்
கன்னபுரி மன்னவனார் கோட்டைக்குள்ளே
காவலனார் வைத்ததொரு செந்தூரந்தான்
மன்னவனார் வைத்ததொரு செந்தூரந்தான்
மகதேவர் சித்துமுனி யறியார்தானே. 459

தானான கோட்டையது சாளரந்தான்
தனியான மண்டபமாம் குத்துக்காலாம்
மானான மண்டபத்தி லூஞ்சலுண்டு
மகதேவர் கருவூரார் வைத்தவைப்பு
கானமயில் சுப்பிரமணியர் காவலுண்டு
கருவான செந்தூர கிடாரமப்பா
தேனான வசுராக்க ளறியாரப்பா
தேவேந்திரன் காவலதி காரமுண்டே. 460

உண்டான கோடிவரை கோடிதங்கம்
உத்தமனாங் கருவூரார் நிதிதானாகும்
கொண்டல்வண்ண னச்சுதனார் நிதிதான்கொஞ்சம்
கூர்வதற்கு நாவில்லை நிதியோமெத்த
அண்டர்பிரான் தேவாதி ரிஷிகள்தேவர்
அவர்வைத்த நிதியதுவு மிதற்கீடுண்டோ
தண்டகா ரணியமதில் வைத்தவைப்பு
சதுரான செந்தூரம் நாவொண்ணாதே. 461

ஒண்ணாத செந்தூரந் தனையெடுத்து
வுத்தமனே வாரண வாசிதன்னில்
கண்ணான காசிவிஸ்வ நாதர்தம்பால்
கருவூரார் சித்துமுனி பாலன்றானும்
மண்ணான வேந்தராம் பாண்டிராஜா
மகத்தான மகுடமுனி ராசர்மெச்ச
குண்ணான மலைபோன்ற சிவாலிங்கத்தில்
கொற்றவனார் தூம்பரமாம் வேதையாமே. 462

Koviloor Digital Library

வேதையாஞ் செந்தூரம் போக்குதன்னை
வேகமுடன் செம்புதனில் பாச்சும்போது
சோதனையாய்த் தாம்பூரம் பரிசனத்தால்
சொர்ணமென்ற தங்கமது யென்னகூர்வோம்
நீதமுடன் தங்கமது செம்புபோலாம்
நிஷ்களங்க மாற்றதுவும் புகலொண்ணாது
பாதையெனும் பாதைவழி யறிந்தோர்காண்பார்
பாருலகில் பாவியற்கு கிட்டாதன்றே. 463

கிட்டாது கருமிகட்கும் பாவிகட்கும்
கெடிதான மனதுடைய மாண்பருக்கும்
முட்டாளா முழுமக்கள் மூடருக்கும்
மூதுலகில் அநியாயக் காரருக்கும்
அட்டான பொருளதுவும் வாய்க்குமோசொல்
அவனிதனில் விதியாளி யவனேகாண்பான்
திட்டமுடன் கருவூரார் வைத்தவைப்பு
தீர்க்கமுள்ள புண்ணியற்கு கிட்டும்பாரே. 464

பாரப்பா சிவலிங்கம் கண்டபேர்க்கு
பதிலான சிவலிங்கஞ் செம்பேகாட்டும்
நேரப்பா பாவிகட்கு செப்பேடாகும்
நெடிதான புண்ணியர்க்கு தங்கச்செம்பாம்
கூரப்பான நவகோடி ரிஷிகள்கண்டார்
கொற்றவனே சாபமது தருவாரென்று
ஆரப்பா சாபது நிவர்த்திசெய்து
அப்பனே கருவூரார் அமைத்தார்காணே. 465

காணவே கருவூரார் சித்துதானும்
கருவான வடதிசையாந் தென்திசையில்தானும்
பூணவே குடதிசையாம் குணதிசையிலப்பா
புகழுடனே சென்றுமல்லோ வற்புதங்கள்
வேணபடி தானமைக்க கருத்திலெண்ணி
வேட்கமுடன் கருவூரார் மனதுவந்து
தோணவே செந்தூரந் தனையெடுத்து
தோராமல் தேவதாஸ் தலஞ்சென்றாரே. 466

Koviloor Digital Library

சென்றாரே தேவதாஸ் தலங்கள்சென்று
செப்பரிய மூலவர்தம் பதமுங்கண்டு
நின்றாரே செந்தூரந் தனையெடுத்து
நெடிதான மூலவர்க்கு பரிசந்தோன்ற
குன்றான கோபுரங்கள் மாபுரங்கள்
குறிப்பான செந்தூரந் தன்னிலேதான்
வென்றிடவே தூம்பரமாம் பரிசைவேதை
வேகமுடன் பழுக்கவல்லோ வேதித்தாரே. 467

வேதிக்க நவலோக விக்கிரங்கள்
வெளியான தங்கமது செம்புபோலாம்
சோதிக்க செம்பெல்லாந் தங்கமாகும்
சுந்தரனே நடராஜர் தானுந்தங்கம்
ஆதித்தன் போலாக வெளியேதோன்றும்
அப்பனே கோபுரங்க ளெல்லாந்தங்கம்
பாதிமதி சடையணிந்த தம்பிரானும்
பார்தனிலே மெச்சுகின்ற வேதையாச்சே. 468

ஆச்சப்பா கருவூரார் மர்க்கமெல்லாம்
அப்பனே யிப்படியே செப்பலாகும்
மூச்சடங்கி சிலகாலஞ் சமாதிதன்னில்
மூதுலகை தான்மறந்த சித்துவாகும்
பேச்சடங்கி நெடுங்கால மிருந்தசித்து
பேருலகில் மவுனமதை கொண்டசித்து
மாச்சலது நேராத மகிமைசித்து
மகத்தான தேவரிஷி யென்னலாமே. 469

என்னவே கருவூரார் சித்துதாமும்
எழிலான அற்புதங்கள் செய்தார்பாரு
மின்னவே அஷ்டதிசை தானுஞ்சென்று
மிக்கான குருபதத்தில் மனதிலுண்ணி
சொன்னபடி தேவதாஸ் தலங்களெல்லாம்
சொல்லரிய விக்கிரங்கள் சொர்ணமாக
நன்னயமாய் மாயாபி ரூபந்தன்னை
மார்க்கமுடன் தானமைத்த சித்துதாமே. 470

Koviloor Digital Library

சித்தான சித்தமுனி கருவூராரே
சிற்பரனார் பாண்டியர்கள் மூவர்தாமும்
நித்தியமும் மாசிலாக் கடவுள்போலே
நிஷ்களங்க மானதொரு சித்துதன்னை
பத்தியுடன் கரங்குவித்து மஞ்சலித்து
பதாம்புயத்தை யெந்நாளும் மனதிலுன்னி
சத்தியமுந் தவறாமல் பாண்டிமூவர்
சதாகாலம் பரிசனையாய் போற்றுவாரே. 471

போற்றியே கருவூரார் சித்துதாமும்
பொன்னுலக நடராஜர் சேர்வைகண்டு
ஆற்றவே யவர்பாதந் தாள்பணிந்து
அப்பனே தேனமிர்த மதியம்பூண்டு
கூற்றனுக் கிடமதுவும் நேராவண்ணம்
குவலயத்தில் தானுமொரு சித்தன்போலாம்
மாற்றமய நீக்கியல்லோ மயமுங்கொண்டு
மன்னவனார் கருவூரார் யிருந்தார்காணே. 472

இருந்தாரே கருவூரார் சித்துதாமு
மெழிலான காயாதி கற்பங்கொண்டு
குருந்தமரந் தன்னருகே தானுஞ்சென்று
குருபரனாம் ரிஷியாரை தானினைந்து
திருந்தவே ஞானப்பால் மதியம்பூண்டு
தீர்க்கமுடன் வரைகோடி காலமப்பா
பொருந்தவே சமாதிமுக மிருந்துகொண்டு
பொங்கமுட னஷ்டசித்து மாடினாரே. 473

பிரம்மமுனி வள்ளல் கூறல்

ஆடியே யின்னமொரு மர்மங்கூர்வேன்
அப்பனே புலஸ்தியனே அரும்பொன்னேகேள்
தேடியதோர் பொருளெல்லா மார்க்குக்கிட்டும்
தெகிட்டாத தெள்ளமிர்தே யுனக்கேயல்லால்
வாடியதோர் பயிர்க்கெல்லா மழைவந்தாற்போல்
அருளான ஞானமெல்லா முனக்கேவாய்க்கும்
நீடியே பதினெண்பேர் முனிவர்தாமும்
நிஷ்கரித்த ஞானமெல்லா முனக்குண்டாச்சே. 474

Koviloor Digital Library

ஆச்சப்பா புலஸ்தியனே மச்சகேந்திரா
அருந்தவத்தி லுதித்தபிரம்ம முனிதானப்பா
நீச்சில்லா பிரம்மகுல முனிதானாகும்
நீதியுள்ள தாய்தந்தை வள்ளல்கூர்வேன்
மாய்ச்சலென்ற மலையரசன் குலத்தாருக்கு
மகத்தான பிரம்மமுனி தந்தைதாய்மார்
கூச்சமின்றி மலையரசன் மரபுள்ளார்க்கு
கொற்றவர்கள் பணிவிடைகள் செய்தார்தாமே. 475

செய்யவே பணிவிடைக ளேதென்றாக்கால்
செப்பெரிய வாரிதியாஞ் சாகரந்தான்
துய்யநல்ல வாரிதியில் வலைகொண்டேகி
துப்புரவாய் மச்சவகை தான்பிடித்து
பையவே வியாபார வர்த்தகங்கள்
பாங்குபெற விற்றுண்டு கலைகள்மாறி
வெய்யவே சதாகாலஞ் செட்டுமார்க்கம்
வீரமுடன் செய்திருந்தார் பிரம்மத்தோடே. 476

பிரம்மா முனியென்ற பாலன்தானும்
பேருலகில் கீர்த்தியுடன் வளர்ந்திருந்தார்
கர்மமென்ற தொழிலதுவே தந்தைதாய்மார்
காசினியில் சிலகாலஞ் செய்திருந்தார்
மர்மமுடன் பாலனுக்கு ஞானக்கண்ணாம்
மகத்தான பேரின்பந் தோன்றலாச்சு
வர்மமது பிசகாமல் பாலனுக்கு
வகையுடனே யுபதேசஞ் செய்தார்தானே. 477

தானான நற்குருவை தாமழைத்து
தகைமையுட னுபதேசஞ் செய்வதற்கு
கோனான குருக்களிட வைதீகங்கள்
கொற்றவனார் பாலனுக்கு யுபதேசித்து
தேனான மனோன்மணியை தொழுதுபோற்றி
தேற்றமுடன் காயாதி தானெடுத்து
மானான பாலனுக்கு கொடுத்தாரங்கே
மன்னவனு மதிமயக்க மானார்பாரே. 478

Koviloor Digital Library

பாரேதான் பிரம்மமுனி ஞானங்கொண்டு
பாருலகைத் தான்மறந்த சித்தனாக
வேரோடே தாய்தந்தை சுற்றத்தாரை
வெறுப்புடனே மனந்திரும்பி பேசலுற்றார்
சீரோடே தாய்தந்தை மாரையப்பா
சிற்பரனார் பாலனவன் பிரிந்துநீங்கி
தீரேதான் வயிராக்கிய ரூபனாக
திறமுடனே குடும்பம்விட்டு நீங்கினாரே. 479

நீங்கியே பிரம்மமுனி பாலன்தானும்
நேர்மையுடன் வளம்பெரிய கானகத்தில்
ஓங்கியே திருவாத்தி மரத்தின்பொந்தில்
வுத்தமனார் பிரம்மமுனி தவசிருந்தார்
பாங்குடனே கானகத்தி லிருந்தசித்தர்
பாலகனைக் கண்டல்லோ பகருவார்பார்
தீங்கில்லா குணக்குன்றே சிங்கவேரே
திகழ்பெரிய வுபதேசம் கொள்வீர்தாமே. 480

கொள்ளவே யுபதேச வுண்மைகூற
கொற்றவனார் கானகத்து ரிஷிகளெல்லாம்
தெள்ளமிர்த மானசிறு பாலனுக்கு
தெளிவுபெற ஞானவுப தேசஞ்செய்தார்
உள்ளதொரு கருவிகர ணாதியந்தம்
உத்தமர்க்கு ஞானோப தேசஞ்செய்தார்
கள்ளமிலாக் காவலனும் பிரம்மயோகி
களிப்புடனே தவநிலையி லடைந்தார்தாமே. 481

அடைந்தாரே பிரம்மமுனி யோகிதானும்
அப்பனே வையகத்தில் தான்மறந்து
மடைபோன்ற ஞானசா கரத்தையப்பா
மன்னவனும் சிறுபாலன் மனதிற் றோய்ந்து
நடையறவே சிவஞான போதைகொண்டு
தகைமையுடன் யோகநிலை சமாதிகொண்டு
சடைபோன்ற கைலாச வுருவராகி
தண்மையுடன் வீற்றிருந்தார் சமாதிகாணே. 482

Koviloor Digital Library

காணவே பிரம்மமுனி யோகிதானும்
காசினியில் சமுசார வாழ்க்கையற்று
தோணவே யிதிகாசப் பொருள்கடந்து
தோறாமல் சமாதிமுகங் கொண்டேயேகி
பூணவே வரைகோடி காலமப்பா
புங்கசித்தி தானடைந்த புனிதவானாய்
ஆணவங்கள் தானொடுங்கி யன்புள்ளானும்
அப்பனே சமாதிமுகம் இருந்தார்பாரே. 483

இருந்ததொரு சித்துமகா ரிடியார்தானும்
எழிலான ஞானமதைக் கொண்டபோதே
அருந்தவத்தி லுதித்ததொரு தம்பிரான்போல்
அப்பனே சிவவேடம் பூண்டயோகி
கருந்தமிழாஞ் செந்தமிழாங் கண்டயோகி
காசினியில் பதினெண்பேர் தன்னிலொக்க
குருந்தமெனுங் கல்லாலின் மரத்தின்பொந்தில்
குருபரனார் சமாதிமுகங் கொண்டார்பாரே. 484

கொண்டாரே பதினெண்பேர் சித்தர்மெச்சும்
கோவர்த்தன கிரியுடைய கண்ணனென்பார்
தண்டுளப மாலையணி கிருஷ்ணபூபன்
தாரணியி லிவரென்பார் மாண்பரெல்லாம்
தொண்டுசெய்யும் சீஷர்களோ கோடிவர்க்கம்
தோறாத யேவல்களோ வதீதங்கோடி
கண்டுமே மாண்பரெல்லாம் பிரம்மனைத்தான்
கைலாச நாதரென்று செப்புவாரே. 485

போகமுனிவர் வள்ளல் கூறல்

செப்பவென்றால் யின்னமொரு மர்மங்கூர்வேன்
செங்கமல புலஸ்தியனே செந்தேனேகேள்
அப்பனே மகமேரே வன்புள்ளானே
ஆயகலை தமையுணர்ந்த வருளாளாகேள்
ஒப்பமுடன் பதினெண்பேர் நாதர்தம்மில்
ஓகோகோ நாதாக்கள் அனந்தங்கோடி
தப்பிதங்கள் நேராத சுகுணமாரன்
தாரணியில் யிவர்போலலுஞ் சித்துகாணே. 486

Koviloor Digital Library

சித்தான சித்துமுனி போகநாதர்
 சிறந்தபதி னெண்பேரி லுயர்ந்தசீலன்
கத்தனெனுங் காலாங்கி நாதர்சீஷன்
 கனமான சீனபதிக் குகந்தபாலன்
முத்தான வதிசயங்கள் யாவற்றுந்தான்
 மூதுலகில் கண்டறிந்த முதல்வன்சித்தன்
நித்தமுமே மாசிலாக் கடவுள்தம்மை
 நீணிலத்தில் மறவாத போகர்தானே. 487

தானேகேள் புலிப்பாணி சித்தருக்கு
 தனியான குருபரனா ரிவரேயென்பார்
கோனேதா னிவருடைய தந்தைதாய்கள்
 கொற்றவனே நெடுங்கால முன்னேயப்பா
மானேகேள் சீனபதி தேசந்தன்னில்
 மன்னவனார் தாய்தந்தை வள்ளல் சூர்வேன்
சோனமழை போல்பொழியும் குளிர்ந்தநாடு
 சுழிப்பான பனிநாடு வதுமேயாமே. 488

ஆமேதான் சீனபதி தேசந்தன்னில்
 அப்பனே சீனபதி பெண்களுக்கு
போமேதான் யேவல்பணி யேதென்றாக்கால்
 பொங்கமுட னுடுகரைகள் வெளுக்குமாண்பர்
தாமேதான் சவுக்கார வழலைகண்டோர்
 சட்டமுடன் சரக்கனைத்தும் சொல்வதற்கு
நாமேதான் சொன்னபடி வழலைமார்க்கம்
 நயமுடனே கண்டவர்க ளதீதந்தானே. 489

தானான போகருட வுளப்பமப்பா
 தாரணியில் விண்டவர்க ளாருமில்லை
வேனான போகரவர் சீனந்தன்னில்
 வேட்கமுடன் கமலமுனி யாசீர்மத்தில்
கோனான காலாங்கி வருள்தான்கொண்ட
 கொற்றவனார் நெடுங்கால மிருந்தசித்து
பானான பரஞ்சுடரைப் போற்றியேதான்
 பாருலகில் சிலகால மிருந்தார்பாரே. 490

Koviloor Digital Library

பாரேதான் சீனபதி வெள்ளைமாண்பர்
பாருலகில் போகருட மரபென்பார்கள்
நேரேதான் பதினெட்டு வெள்ளைமாண்பர்
நெடிதான பூவுலகில் வாழ்ந்தோரப்பா
கூரேதான் வடகோடி கானகந்தான்
குறிப்புடனே நூறுயோ சனைதான்தூரம்
ஆரோதான் கூட்டமது சிவந்தமாண்பர்
அப்பனே னாவிநா லுரையொண்ணாதே. 491

ஒண்ணாது வற்புதங்கள் கோடியுண்டு
வுத்தமனே பதினெண்பேர்' சொன்னதில்லை
குண்ணான மலைகளுக்கு மேற்கேயப்பா
குறிப்பான கடலதுதான் கருங்கடலேயாகும்
திண்ணமாங் கடலருகே கோட்டையப்பா
தீர்க்கமுள்ள மானிடராம் நீர்மாந்தராகும்
எண்ணரிய கோடிசங்கம் கூறொண்ணாது
யெழிலான போகருட பதிதான்கேளே. 492

கேளப்பா போகரவர் சிறுவன்காலம்
கெடியான விளந்தையிலே வதிசயங்கள்
தாளப்பா தாய்ப்பாலை யுண்ணும்போது
தகைமையுட னாறுதிங்கள் நடக்கும்போது
வாளப்பா ரம்பம்போல் வார்த்தைகூறும்
வளமான லோகவதி சயங்கள்கூறும்
மீளப்பா ஞானப்பால் தானேகேட்கும்
விட்டகுறை வாய்த்ததென்று கூறும்பாரே. 493

கூறுமே வேதாந்த சின்மயத்தைக்
குறிப்புடனே லோகத்தார் பிரமைகொள்ள
தாறுமா ராகவேதான் அட்சரங்கள்
தனித்தனியே வறியாத தன்மைபோலும்
வேறுடனே லோகமதை வெறுத்தாப்போலும்
வேதாந்தத் தாயினுட வார்த்தைகூறும்
மாறுடனே வார்த்தையது கண்டபோதே
மாதாவு மெத்தவுந்தான் துக்கிப்பாளே. 494

Koviloor Digital Library

துக்கித்த தாயாரு மெச்சவேதான்
துப்புரவாய் சேயதுவு மேதுரைப்பாள்
தக்கபடி வுத்தாரம் விடையுங்கூறும்
தனியான வேதாந்தத் தன்மையோடும்
சிக்கமுடன் லோகத்தைக் காணவேண்டும்
சிதாபாச பொருளனைத்து மறியல்வேண்டும்
மிக்கவே சத்தசா கரத்தையானும்
மீட்சியுடன் காணவென்று பேசும்பாரே. 495

பேசியே குளிகையது கொள்ளவேண்டும்
பேருலகை வெழுகடலுஞ் சுத்தவேண்டும்
ஆசியுடன் சுயதேசம் வரவேவேண்டும்
அப்பனே சீனபதி பெண்களுக்கு
வாசியுடன் போகநிலை கொள்ளவேண்டும்
மகதேவா காலாங்கி பதமும்வேண்டும்
மாசிபடா தேகமதை கற்பங்கொண்டு
மானிலத்தி லிருக்கவென்று நவிலுவாரே. 496

நவிலவே பலவாராய் ஞானங்கூர்வா
நாதாந்தத் தெளிவதுவு மிகவேபேசும்
புவிதனிலே நெடுங்கால மிருந்தசித்து
புங்கசித்தி போதனிலை யறிந்துமேதான்
கவியான சாத்திரங்க ளிதிகாசங்கள்
கற்றறிந்து சமாதிநிலை கொண்டுமேதான்
பவிதமென்ற ஞானப்பால் தன்னிலேதான்
பாருலகில் நெடுங்கால மிருந்தார்காணே. 497

காணவே சித்தர்பதி னெட்டுபேரும்
கருவான நவகோடி முனிவர்தாமும்
பூணவே சாத்திரங்கள் கோடிசொன்னார்
பூவுலகில் வெளியரங்கம் யாரும்விள்ளார்
தோணவே சாதியின்றன் வள்ளல்மார்க்கம்
புகட்டவில்லை நாற்பத்து யெட்டுபேரும்
வேணபடி சாத்திரங்க ளிதிகாசங்கள்
வெட்டறுத்து சிக்கறுத்து விளம்பினேனே. 498

Koviloor Digital Library

புஜண்டர் வள்ளல் கூறல்

விளம்பினோ மின்னமொரு மார்க்கங்கூர்வேன்
விட்டகுறை யிருந்ததொரு தன்மையாலே
தளம்படவே புஜண்டருட வள்ளல்கூர்வேன்
தாய்தந்தை வள்ளலது யேதென்றாக்கால்
தளம்படவே மேருகிரி தெற்கேயப்பா
தட்சிணா மூர்த்தியிட மறையுள்ளோர்க்கு
வளம்பெரிய தேவதாஸ் தலத்தின்மார்க்கம்
வாகுடனே பணிவிடைகள் செய்தார்பாரே. 499

கேளப்பா யேவல்பணி யேதென்றாக்கால்
கெடியான வர்ச்சனைக்கி புஷ்பமப்பா
தாளப்பா திரிகால பூசைமார்க்கம்
தகைமையுடன் புஷ்பமது தான்பறித்து
வேளப்பா குடலைதனில் புஷ்பந்தன்னை
விற்பனனே தானிறப்பிக் கொடுப்பார்தாமும்
வளம்பெரிய தேவதாஸ் தலத்தின்மார்க்கம்
வாகுடனே பணிவிடைகள் செய்தார்பாரே. 500

பாரப்பா சதாகாலம் தேவஸ்தானம்
பளிங்குமா மண்டபமா மாசீர்மத்தில்
நேரப்பா யாசகா விர்த்திசெய்து
நெடுங்காலம் வீற்றிருந்தார் தந்தைதாய்மார்
ஆரப்பா விவர்வயிற்றில் பிறந்தபாலன்
அப்பனே புஜண்டனென்ற பாலனப்பா
சீரப்பா நெடுங்காலம் வளர்ந்தபிள்ளை
சிற்பரனே யதினுடைய மகிமைபாரே. 501

பாரேதான் திங்களது வாறதாகும்
பாங்கான மதலையது யேதுரைக்கும்
சீரேதான் தாய்தந்தை முகந்தெரிந்து
சிதாபாசக் களைபூண்டு பாலன்சொல்வான்
தீரேதான் கர்மத்தி லவதரித்தேன்
தீவினைக்கி யாளாகி ஜனனங்கொண்டேன்
வீரேதான் தேகமதை நம்பேன்நம்பேன்
விண்ணுலகை யான்மறவே னென்னலாச்சே. 502

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
Acc. No. 44790

ஆச்சப்பா பாலனவ னேதுரைப்பான்
அப்பனே யிதிகாசங் கட்டறுத்தேன்
மூச்சப்பா தேகமது நம்பொண்ணாது
மூதுலகில் வாழ்க்கையது பொய்யதாகும்
பேச்சப்பா பிரணவமா மேதுகூறும்
பேரின்பக் கடலதனை நண்ணலொக்கும்
பாய்ச்சலுடன் ஞானப்பா லறிதல்வேண்டும்
பளிங்கான சின்மயத்தை தேடும்பாரே. 503

தேடையிலே யிதிகாசப் பொருளைக்காண்பார்
தேற்றமுடன் சமாதிமுக மெளிதில்தோன்றும்
மூச்சடையில் தேகமது நிலைநில்லாது
மூதுலகை தள்ளுவது நிச்சயந்தான்
பாடையிலே சென்றாலு மென்னலாபம்
பாருலகில் வாழ்வெல்லாம் அற்பவாழ்வாம்
நீடையிலே யவரவர்கள் செய்தகர்மம்
நீனிலத்தில் விளைந்ததொரு பாண்டமாச்சே. 504

பாண்டமா மென்றுரைக்க பாலன்தானும்
பட்சமுடன் மனதுவந்து தட்சணாயன்
காண்டமெனும் நவகண்டந் தனையாராய்ந்து
கருவான குருபரனார் தன்னைத்தேடி
தாண்டவமாங் குருபரனே தட்சணாயன்
தகைமையுடன் தான்பார்த்து மனங்கனித்து
பூண்டதொரு பொன்னினா பரணமின்ன
பொங்கமுடன் பாலன்தன்னை கூறினாரே. 505

கூறுவது யேவல்பணி யேதென்றாக்கால்
கொற்றவரே யிப்போதே வுரைக்கக்கேண்மோ
வீறுடைய பாலனுக்கு வித்தைதன்னை
வீரமுடன் தானோதித் தருகவென்று
மாறுபடா தன்மைதனை மனங்களித்து
மன்னவனே கருவிகர ணாதியந்தம்
தேறுதலாய் தானுமுப தேசமோதி
தேற்றமுடன் பாலன்தனை யருள்கொள்வாரே. 506

Koviloor Digital Library

கொள்ளவே குருபரனே யென்றுரைக்க
கொற்றவனார் தட்சணவர் கூறும்போது
தெள்ளமிர்த மானதொரு புஜண்டர்தாமும்
தெளிவுடனே ஞானப்பா லதீதங்கொண்டு
கொள்ளை கொண்டு போனிடத்தில் கொடுமைதானும்
கொற்றவனே வாய்த்ததொரு தன்மைபோலும்
சுள்ளாணிக் குள்ளாக சுழல்கண்டாற்போல்
சுந்தரர்க்கு விட்டகுறை வாய்க்கலாச்சே. 507

விட்டகுறை நேர்ந்ததொரு தன்மையாலும்
வேதாந்தத் தாயினது வருளினாலும்
தொட்டபொருள் தந்தமக்கு வாய்த்தாற்போலும்
தொடுகுறிபோல் முன்தவத்தில் செய்தநேர்மை
பட்டமரம் உளுத்தமரம் போலானாற்போல்
பாருலகில் பகருகின்ற கதைதான்பொய்யோ
இட்டமுட னிணைகவுரி வீசினாற்போல்
யிணையான விட்டகுறை நேரலாச்சே. 508

ஆச்சப்பா புஜண்டருக்கு யெல்லாஞ்சித்தி
அப்பனே ஞானமென்ற வதீதத்தாலே
பேச்சறியாய் பேச்சதுபோல் பாலன்றானும்
பெருமைபுகழ் படைத்ததுபோல் பேசுவான்பார்
மாச்சலது கொண்டதுபோல் கியானமாய்கை
மகத்தான மதிமயக்க மேகலாகி
வீச்சலுடன் தெள்ளமிர்த மானப்பாலை
விட்டமுடன் தானுணர நண்ணுவாரே. 509

நண்ணவே புஜண்டமுனி சித்துதாமும்
நலமுடனே நெடுநாளா யிருந்தசித்து
குண்ணான மலைதனிலே யிருந்தசித்து
கொற்றவனார் நவகண்ட முனியார்தாமும்
தண்ணமுடன் வெகுகாலம் வாழ்க்கைதன்னை
தகைமையுடன் தான்மறந்த சித்துவாகும்
எண்ணரிய நற்பொருளே யேகவெளியாக
யெழிலாகத் தான்துறந்த சித்துவாமே. 510

Koviloor Digital Library

நந்தீஸ்வரர் வள்ளல் கூறல்

சித்தான யின்னமொரு முறமைகூர்வேன்
சிதாபாசக் களையகன்ற புலஸ்தியாகேள்
கத்தனெனுங் கைலங்கிரி தனையுணர்ந்த
காவலனே நாவலனே கழறக்கேண்மோ
புத்தியுள்ள புங்கவனே புனிதபாலா
பூபாலா வசுவனிக்கி பௌத்திராகேள்
யெத்திசையுங் கீர்த்திபெற்ற கியானக்கண்ணே
எழிலான பர்வதமே யின்னங்கேளே. 511

இன்னமே தானுரைப்பேன் மச்சகேந்திரா
எழிலான புலஸ்தியனே புனிதவானே
நன்னயமாம் நந்தீஸர் தந்தைதாய்மார்
நாட்டிலே தானிருந்த வள்ளல்கூர்வேன்
முன்னமே பெரியோர்க ளுரைத்தமார்க்கம்
மூதுலகில் நாதாக்க ளறிந்ததில்லை
சொன்னமுறை தப்பாமல் புலஸ்தியாகேள்
சூட்சமுடன் வள்ளல்தனை கூறுவேனே. 512

கூறுவேன் நந்தீஸர் தந்தைதாய்கள்
குலாலரெனு மறவுதனில் சென்றுமேதான்
வீறுடனே பாண்டமது செய்துமல்லோ
வித்தகனார் நெடுங்காலஞ் சீவித்தேதான்
மாறுபடா வர்த்தங்கங்கள் செட்டுமார்க்கம்
மன்னவர்கள் செய்திருந்தார் சிலதுகாலம்
தேறுதலாய் குலாலரென்ற மறபுள்ளோர்க்கு
தேற்றமுடன் பணிவிடைகள் செய்தார்பாரே. 513

பாரேதான் நெடுங்காலம் பணிகள்செய்து
பரிவாகத் தாய்தந்தை கூட்டத்தார்கள்
சீரேதான் சிரங்குனிந்து வாசீர்மத்தில்
சிறப்புடனே குலாலரிட மிருக்கும்போது
நேரேதான் நந்தியென்ற பாலனைத்தான்
நேர்மையுடன் தான்வளர்த்தார் குலாலத்தோர்கள்
கூறேதான் நந்தீஸர் தந்தனக்கு
கொற்றவர்கள் கல்வியது யோதினாரே. 514

Koviloor Digital Library

ஓதவே குருபரனார் தமையழைத்து
உத்தமனார் பாலனுக்கு கல்வியோதி
நீதமுடன் வேதாந்த சாரந்தன்னை
நிஷ்களங்க மாகவேதான் நீடித்தேதான்
போதமெனும் பிரணவத்தின் பொருளையெல்லாம்
பொங்கமுடன் வுபதேசம் பொருந்தவேதான்
வேதமெனும் மெய்ப்பொருளை விளங்கக்காட்டி
வேதாந்த சாகரத்தை விளக்கினாரே. 515

விளக்கவே நந்தீஸர் பாலனுக்கு
வீரான வுபதேச வுண்மையாலே
துளக்கமுட னத்வீத வுபதேசத்தால்
துப்புரவாய் சகலகலைக் கியானங்கொண்டு
களக்கமற நந்தியென்ற நாமத்தாலே
காசினியில் வெகுகோடி மாண்பர்மெய்ச்ச
வளக்கமுடன் மனக்கண்ணால் சகலசித்தும்
வளமுடனே பாடினார் பாடினாரே. 516

பாடியே வனேககலைக் கியானமெல்லாம்
பாவலர்கள் கொண்டாட பண்பாய்த்தானும்
தேடியதோர் சாஸ்திரங்கள் நூல்களெல்லாம்
தேற்றமுடன் பதினெண்பே ர்றியவேதான்
கூறியே சமாதிதனி லிருந்தநூலை
கொற்றவனார் நந்தீஸர் மனதுவந்து
நீடியே நெடுங்காலங் கண்டறிந்து
நீதியுடன் பிரணவத்தை யோதினாரே. 517

ஓதினோர் திரேதாயி னுகத்திலப்பா
உத்தமனே சித்தர்முனி செய்தநூலை
பாதிமதி யணிந்தபிரான் சாட்சியாக
பாருலகில் சித்தர்முன்னும் பகர்ந்தாரங்கே
நீதியுடன் நீணிலத்தில் மாந்தற்காக
நிகழ்ச்சியுடன் வரங்கேற்றல் நண்ணலாகி
சோதிமதி மணியரசர் மூதூரரார்கள்
சுந்தரனே மெய்ச்சிடவே யேகிட்டாரே. 518

Koviloor Digital Library

இட்டாரே யிவர்வள்ளல் மறையலாச்சு
எழிலான யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
சட்டமுடன் நான்குயுக சித்தர்தம்மை
சதுருடனே மனந்தேறி போதித்தேதான்
திட்டமுடன் சிதானந்த பொருளைநண்ணி
தீர்க்கமுடன் வுபதேச ஞானவானாய்
அட்டதிசை தான்புகழ நந்திதாமும்
அவனிதனில் நெடுங்கால மிருந்தார்தாமே 519

தாமேதான் புலஸ்தியரே புனிதவானே
தகைமையுள்ள தெள்ளமிர்தே சிங்கவேளே
நாமேதா னறிந்தமட்டு மின்னங்கூர்வோம்
நலமான சித்தருட வள்ளல்நேர்மை
போமேதா னவரவர்கள் செய்கையாவும்
பொங்கமுடன் யாமுரைப்போம் புனிதவானே
வேமேதான் தேரையர் தந்தைதாய்மார்
வேட்டையுடன் வள்ளல்தனை விளம்புவேனே. 520

தேரையர் வள்ளல் கூறல்

விளம்பவே தேரையிட தந்தைதாய்மார்
விண்ணுலகில் நெடுங்காலம் வாழ்க்கைபூண்டார்
தளம்பறவே தாய்தந்தை சுற்றார்பெற்றோர்
தகமையுட னவரிருந்த வள்ளல்கூர்வேன்
களம்பெரிய ரிஷிவனத்தில் பயிர்கள்செய்து
கட்டழகர் பாடுபட்டு படைத்துமேதான்
சளமதுவும் நேராம நெடுங்காலந்தான்
சாங்கமுடன் வீற்றிருந்தார் தண்மைகேளே. 521

தண்மையா முடியரசர் செங்கோல்வேந்தர்
தகமையுடன் குடிகளுக்கு வாறிலொன்று
வுண்மையாய் கடமையது வாங்கியேதான்
வுத்தமனே குடிகளுக்கு யிடையூரின்றி
வண்மையுடன் தான்கார்த்து வருகுநாளில்
வளமுடனே பாலனுக்கு மயக்கமாகி
கண்மையூடன் வுலகுபதி யாசைவிட்டு
காசினியில் நெடுநாளா யிருந்தார்தாமே. 522

Koviloor Digital Library

இருந்தாரே தேரையர் தந்தைதாய்மார்
யெழிலான மேழியென்ற செல்வத்தாலே
திருந்தமுடன் காடேகி வனந்திரிந்து
தீர்க்கமுடன் னாற்றிசையும் வனந்திரிந்து
பொருந்தவே சமாதிமுகம் வீற்றிருந்து
பொங்கமுடன் யோகநிலை யுறுதிகொண்டு
குருந்தமெனு மரத்தடியி லிருந்துபாலன்
கூறுவார் வாய்திறந்து கூறுவாரே. 523

கூறவே தேரனென்ற பாலனுக்கு
தேற்றமுட னாப்பிர காசந்தன்னால்
மாறுபட புத்தியது மிகவாய்த்தேறி
மதிமயங்கி மதிகலங்கி மதியம்பூண்டு
தேறவே பாலனுக்கு தியானரூபம்
தேற்றமுட னிதிகாசப் பொருளுந்தோன்றி
சீறலுடன் விட்டகுறை யறிந்தபாலன்
சிதாபாசக் களைதனிலே யிருந்திட்டாரே. 524

இட்டாரே சிவபோத பிரணவத்தில்
யெழிலான தேரையர் முனிவர்தாமும்
தொட்டதொரு கியானமென்ற பிரணவத்தை
தோராமல் நவகோடி ரிஷியாருக்கும்
பட்டமரந் துளுத்ததொரு பான்மைபோலும்
பான்மையுடன் சித்தர்முனி பதமுங்கிட்ட
வெட்டவெளி யாகாயந் தன்னிற்சென்று
வேதாந்த கியானமதை யெட்டினாரே. 525

எட்டவே வேதரிஷி யருளினாலே
யெழிலான போதநிலை யறுபத்துநாலும்
கிட்டாமல் விட்டுவிட்டோர் கோடாகோடி
கெவனநிலை கொண்டவர்கள் கோடாகோடி
அட்டாங்க யோகநிலை கொண்டார்கோடி
அம்பரத்தில் ஆடிநின்றோர் கோடாகோடி
திட்டமுடன் பொருளறியார் மாண்பர்கோடி
தீர்க்கமுட னறிந்தவருஞ் சித்துதானே. 526

Koviloor Digital Library

தானான தேரையர் முனிவர்பாலன்
　　தகமையுடன் விசுவாசங் கொண்டரூபன்
தேனான குருபரனார் வசுவனியாந்தேவர்
　　தேற்றமுடன் தேர்ந்தெடுத்த சீஷனல்லோ
பானான பதினெண்பேர் சித்தருக்கு
　　பதாம்புயத்தி னடிதாழ்ந்த சீஷனல்லோ
மானான மகத்துவத்தின் தேரனல்லோ
　　மன்னவனே யெந்தனிட சீஷன்காணே. 527

காணவே யெந்தனுக்கு மூன்றாஞ்சீஷன்
　　காசினியில் யானறிந்த மார்க்கமெல்லாம்
தோணவே யுபதேச வுண்மையாவும்
　　தோறாம லோதுவித்தேன் பாலனுக்கு
பூணவே மூலிகையின் மகிமையெல்லாம்
　　பூட்டினே னாதியந்தங் காப்போடொக்க
மாணவே சிலகால முன்னதாக
　　மன்னவனே நடந்ததொரு வளப்பங்கேளே. 528

அகஸ்தியர் புலஸ்தியருக்கு தேரையருடைய வைராக்கிய வுண்மை கூறல்

கேளப்பா கலியுகமாம் யிருபத்தைந்தில்
　　கெடியான சங்கத்தார் காலந்தன்னில்
நாளப்பா நெடுங்காலந் தன்முன்பாக
　　நவிலுகிறேன் சங்கத்தார் செய்திதன்னை
தாளப்பா மகமேரு பர்வதத்தில்
　　தகமையுடன் சங்கத்தார் கூட்டந்தன்னில்
ஆளப்பா ஜமதக்கினி முனிவரப்பா
　　அப்பனே யருந்தவசி யிருந்தார்பாரே. 529

பாரப்பா வவருடைய மைந்தனாகும்
　　பாங்கான திரணாக்கிய முனிவருக்கு
நேரப்பா நெடுங்கால ரோகமப்பா
　　நேர்மையுடன் தலையிடியும் தலைனோக்காடாம்
தீரப்பா பனிரண்டு வாண்டுதானும்
　　தீர்க்கமுடன் பிணியதுவு மதிகமாகி
வேரப்பா கபாலவலி மிகவுண்டாச்சு
　　வித்தகனார் படுந்துயரஞ் சொல்லொண்ணாதே. 530

Koviloor Digital Library

ஒண்ணாத சங்கத்தார் மேவலாக
வுத்தமர்கள் தான்கூடி வினயங்கூறி
அண்ணாந்து தென்பொதிகை யேகலாகி
அப்பனே யென்பதிக்கி வந்தாரங்கே
விண்ணாடர் தான்துதிக்கு மடியேன்தன்னை
விருப்பமுட னெந்தனையு மழைத்தாரல்லோ
கண்ணாடி பாத்திரமுஞ் சிலவாயுதங்கள்
கருத்துடனே யானெடுத்து நடந்திட்டேனே. 531

நடந்தேனே என்சீடன் தேரன்தானும்
நளினமுடன் தென்பொதிகை விட்டுநீங்கி
கடந்தேனே தென்மேரு பருவந்தன்னில்
களிப்புடனே சீஷனுடன் காலஞ்சென்றேன்
விடம்பெரிய நாதாக்க ளிருக்கும் ஸ்தானம்
வீரான மகமேரு சங்கந்தன்னில்
அடர்ந்துமே கார்த்திருந்த ரிஷிகள்தேவர்
அன்புடனே யென்னையும்வா வென்றிட்டாரே. 532

வாவென்று ஓதுகையி லடியேன்றானும்
வளம்பெரிய சங்கமதில் நடுவிற்சென்றேன்
ஆவலுட னென்றனையுங் கண்டநாதர்
அன்புடனே யாசீர்மங் கொண்டேயேகி
காவலதி காரர்முன்னை யென்னைத்தானும்
கருத்துடனே விசுவாச வுதயங்கொண்டார்
பாவலர்முன் யென்றனையும் பரிசோதிக்க
பகருகின்றார் தேரையர்முன் பகர்கின்றாரே. 533

பகரவே நச்சினார்க் கினியதேவர்
பண்புள்ள ரிடியார்க்கு நெடுங்காலந்தான்
சிகரமதில் மூளைதனில் தலைநோக்காடு
சிற்பரரே நெடுங்காலஞ் சொல்லொண்ணாது
நிகரமுடன் தங்களையு மதிப்புற்றேகி
நீதியுடன் வரவழைத்தோ மென்றுகூறி
சகரமுட னெந்தனையு மஞ்சலித்து
சட்டமுடன் பிணியகலக் கேட்பார்தாமே. 534

Koviloor Digital Library

கேட்கையிலே சங்கத்தார் முன்னதாக
கெடியான வார்த்தைக்கு யிதவுகூறி
தாட்கமலம் வீற்றிருக்கும் தாயார்பாதம்
தண்மையுட னடியேனும் தாள்பணிந்து
மீட்கவே ரோகமதை நிவர்த்திசெய்ய
வேகமுட னாயுதத்தை தானெடுத்து
மீட்கவே கபாலமதை தான்திறந்து
மிக்கவே தேரைதனை யெடுக்கலாச்சே. 535

எடுக்கவே வெண்ணமது கொண்டேயேகி
யெழிலான சிமிட்டாவை கரத்திலேந்த
தடுக்கவே தேரையர் சித்துதாமும்
தண்மையுடன் கரந்தனிலே யிருந்தகோலை
தடுத்துமே தேரைதனை யெடுக்காமுன்னம்
அப்பனே சிமிட்டாவை தொட்டவாறு
கருத்துடனே யூமைபோ லிருந்தசித்து
கருவாகக் கரந்தனையே தடுத்திட்டாரே. 536

இட்டானே யெந்தனுட வாயுதத்தை
யெழிலாக தன்கையி லேந்திக்கொண்டு
தட்டமுடன் தாம்பாளந் தன்னைக்காட்டி
தகமையுடன் சலமதுவைத் தரவேகூறி
மட்டமுடன் சிறந்தனிலே யிழிந்ததேரை
மடங்கிடவே சலத்தையே காட்டும்போது
வட்டமுள்ள தாம்பாளஞ் சலத்திலப்பா
மன்னவனே குதித்துவிழக் கண்டிட்டேனே. 537

கண்டேனே தேரையன் மகுத்துவத்தை
காவலனே புலஸ்தியனே கருவுள்ளானே
விண்டேனே தேரையனார் முனிவனுக்கு
வீரான லோகவதி சயங்களெல்லாம்
தொண்டனுக்கு யானுரைத்தேன் மர்மமெல்லாம்
தோராம லுயிர்கொடுக்கும் விதியுஞ்சொன்னேன்
அண்டர்பிரா னருளாலே தேரன்றானும்
அப்பனே நெடுங்கால மிருந்திட்டானே. 538

Koviloor Digital Library

இருந்ததொரு தேரையர் முனிவருக்கு
யெழிலான லோகவதி சயங்களெல்லாம்
பொருந்தவே பாலனுக் குபதேசித்தேன்
பொங்கமுடன் நெடுங்கால மென்றனுக்கு
திருந்தவே வேணபடி வுபசாரங்கள்
தீர்க்கமுட னென்றனுக்கு வினயஞ்செய்த
அருந்தமிழாம் பண்டிதங்கள் மிகவும்கற்றோன்
அப்பனே தேரனிட வாண்மைதானே. 539

அகஸ்தியர் புலஸ்தியருக்கு பூனீரெடுக்க தேசவளப்பங் கூறல்

தானான புலஸ்தியனே புண்ணியபாலா
தகைமையுள்ள கருவிலமே மச்சகேந்திரா
கோனான யெனதைய ரகுவனியாந்தேவர்
கொற்றவனார் எந்தனுக்கு சொன்னநீதி
பானான பரஞ்சுடரே பரமஞானி
பாருலகில் நாதாக்க ளுரைத்ததில்லை
தேனான பூனீற்றின் வளப்பநாட்டை
செப்புகிறேன் முறைப்பாடாய் செப்புவேனே. 540

செப்புவேன் மேருவுக்கு வடபாகத்தில்
செயலான நதியுண்டு குண்ணுமுண்டு
ஒப்பமுடன் வளநாடு பூனீருப்பு
ஓகோகோ நாதாக்கள் கண்டதில்லை
மெய்ப்புடனே பூமிவளங் கண்டுறைப்பேன்
மேன்மையுடன் குளிகைகண்ட சித்துதானும்
செப்பரிய நாதாக்கள் ரிஷிகள்தேவர்
தேற்றமுடன் கண்டவர்கள் மற்றோர்காணே. 541

காணவே துரைகோடி தேசங்காணார்
கைலாய மேருகிரி தென்பாகத்தில்
பூணவே பூநீர்தா னெடுக்குமார்க்கம்
புங்கவனே என்னையன்றி வேறோருண்டோ
தோணவே ராஜாதி ராசமன்னர்
தொல்லுலகில் பூனீர்க ளெடுக்குமார்க்கம்
வேணபடி சாஸ்திரங்க ளிதிகாசங்கள்
விட்டகுறை தானறியார் சித்துதாமே. 542

Koviloor Digital Library

சித்தான புலஸ்தியனே புண்ணியபாலா
சிதாபாச களையகன்ற சிறுவாகேண்மோ
எத்திசையும் திரிந்தாலும் பூனீர்மார்க்கம்
எழிலான பூமிவளம் யார்தான்காண்பார்
புத்தியுள்ள மாண்பர்கனே காண்பாரப்பா
பூவுலகில் விதியாளி யிருந்தால்கிட்டும்
சத்தியத்தை தவறாத புண்ணியோற்கு
சட்டமுடன் வாய்ப்பதற்கு நாவொண்ணாதே. 543

ஒண்ணாத பூனீர்க ளிருக்கும்ஸ்தானம்
வுத்தமனே யாமறிந்த மட்டுமேதான்
விண்ணுலகில் நாதாக்கள் கண்டபாதை
விருப்பமுடன் யாமுறைக்க விபரங்கேளீர்
தண்மையுடன் டில்லிக்கி மேற்கேயப்பா
தகைமையுடன் நாதாக்கள் கண்டநாடு
வெண்மையாம் பூமிவள மென்னசொல்வேன்
வேதாந்தத் தாயுரையும் பொன்னுநாடே. 544

பொன்னான நாட்டுக்கு கிழக்கேயப்பா
பொங்கமுடன் குரும்பர்களு மிருக்குநாடு
தென்னவனாம் ஸ்ரீராமச் சந்திரன்றான்
தேற்றமுடன் சிலகால மிருந்தநாடு
மன்னவனாங் காசிநகர் வேந்தன்றானும்
மகதேவர் சிலகால மிருந்தநாடு
கந்தபுரி மன்னவனும் நெடுங்காலந்தான்
களிப்புடனே வாசமது செய்தநாடே. 545

நாடான திரேதாயி னுகத்திலப்பா
நளினமுடன் புரூரவ னிருந்தநாடு
தாடாண்மை கொண்டதொரு நளனுமங்கே
தரணிதனில் சிலகால மிருந்தநாடு
ஆடரவங் கொண்டதிரி யோதிரன்தான்
அரசாண்ட நாடென்றே செப்பலாகும்
மாடமாளிகை நிறைந்த கோட்டைதானும்
மதிலேழு கோபுரங்க ளிருந்தநாடே. 546

Koviloor Digital Library

நாடுபதி யாழிகளும் மாபுரங்கள்
நலமான தடாகமுட னாசீர்மங்கள்
வாடுபயிர் செந்நெல்முதல் விளைந்தநாடு
மகாநதிகள் பிரளயங்கள் பிரண்டநாடு
ஆடுமயில் வாகனங்க ளடர்ந்தநாடு
அப்பனே திருமாலு முறையுநாடு
காடுறையும் புலிகரடி சிங்கம்யாளி
களிப்புடனே வீற்றிருந்த நாடுமாச்சே. 547

ஆச்சப்பா திரேதாயி னுகத்திலப்பா
அருந்தவத்தா லுதித்ததொரு நாடென்பார்கள்
மூச்சடங்கி தேகமது சென்றபின்பு
மூதுலகில் கிரேதாயுகம் பிறக்கலாச்சு
ஆச்சரிய மானதொரு காலமாச்சு
அப்பனே சித்தருட நாளுமாச்சு
பேச்சரியா மாண்பருட நாளுமாச்சு
பேருலகில் சித்தகுரு காலமாச்சே. 548

சித்தான சித்தர்முனி காலந்தன்னில்
சிறப்பான நாதாக்கள் ரிஷிகள்தேவர்
சத்தான பூனீரை யெடுக்கவல்லோ
சதகோடி ரிஷிமுனிவர் கூறவில்லை
முத்தான ஸ்தலங்களெல்லா மறைத்துவைத்தார்
மூதுலகில் நாதாக்கள் ரிஷிகள்தேவர்
எத்தனையோ சாஸ்திரங்கள் புராணகீதம்
யெழிலாகத் தான்மறந்தார் சித்தர்நூலே. 549

நூலான நூல்தனிலே தடங்கள்மார்க்கம்
நுணுக்கமுள்ள தடமதனை மறைத்தார்சித்தர்
பாலான நூலுபனி ரண்டுகாண்டம்
பாரினிலே மாண்பர்களு மறியவேதான்
காவான நூல்தனிலே கடையும்பார்த்து
கருவான காப்பேடு தனையறிந்து
பாலான மொழிபன்னீ ராயிரத்தை
பாடினேன் வுலகுபதி தன்னுள்ளோர்க்கே. 550

Koviloor Digital Library

உள்ளான புலஸ்தியனே புனிதவானே
ஓகோகோ நாதாக்கள் மறைந்ததெல்லாம்
கள்ளமின்றி நூலதனை கருவைக்காட்டி
காவலனே மானிடர்கள் பிழைக்கவென்று
உள்ளபடி பூமிவளம் யாமுரைப்போம்
வுத்தமனே புலஸ்தியனே மச்சகேந்திரா
எள்ளளவும் பிசகாதென் னையர்வாக்கு
யெழிலுடனே கூறுகிறேன் அன்பாய்கேளே. 551

தேசவளமறிதல்

அன்பான பூனீரின் தேசமார்க்கம்
அப்பனே யாமுரைப்போ மன்புள்ளானே
தென்பாண்டி நாடாகுஞ் சோழதேசம்
தெளிவான திரிப்பரங் குன்றந்தானும்
மன்னவனாம் பாண்டிவள நாடேயாகும்
மகத்தான திருவால மதுரைபாகும்
கன்னபுரி நாடதுதான் கன்னிவாடி
கனமான திண்டுக்கல் புவனமாமே. 552

புவனமாந் திருப்புவனம் நாடேயாகும்
புகழான திருவானைக் காவல்நாடு
அவனமாந் திரிச்செந்தூர் துறையேயாகும்
அப்பனே கிளியனூர் வில்லியனூராம்
கவனமாம் மன்னார் பாளையந்தானாகும்
காவலனே சோனகிரி நாடேயாகும்
பவனமாம் பசுமலையாம் பூம்பாறையாகும்
பாங்கான சதுரகிரி நாடுகாணே. 553

காணவே திருமங்கல பதியேயாகும்
கருவான துறைகோடி முகவையாகும்
பூணவே வெள்ளியங் கிரிதானாகும்
புகழான வைகைநதி கோடியாகும்
வேணவே தருமபுரி வட்டாரந்தான்
வேகமுள்ள சிவகங்கை நாடேயாகும்
ஈனமென்ற துறைநாடு யீளதேசம்
யெழிலான கதிர்காமங் கண்டிநாடே. 554

Koviloor Digital Library

நாடான கன்னியா குமரியாகும்
நலமான சேதுபதி குறிஞ்சிநாடு
தாடாண்மை கொண்டதொரு குற்றாலந்தான்
தண்மையுள்ள வடமேற்கு யிலங்கையாகும்
கோடான தேவரிடி யிருக்கும்நாடு
குறிப்பான வயோத்திநகர் நாடேயாகும்
ஆடரவங் கொண்டதிரி யோதிரன்தான்
அஸ்தினா தன்புறமு மறையலாமே. 555

அறையவே மேருவுக்கு மேற்பாகத்தில்
அப்பனே வடகோடி கானகந்தான்
நிறையவே வசுராக்கள் வாழுநாடு
நிஷ்களங்க வஞ்சனமாங் கிரிதானாகும்
திரைவீசுந் தென்கடலா மழகர்நாடு
தீர்க்கமுள்ள சேதுபதி ஸ்தலமேயாகும்
குறைவில்லா மகநாடு பாஞ்சதேசம்
குறிப்பான பாஞ்சாலி யிருந்தநாடே. 556

நாடான நாடதுவு மின்னமுண்டு
நலமான புலஸ்தியனே நவிலக்கேண்மோ
கோடான கோடிசங்க மிருந்தநாடு
கொற்றவனே ராட்சதர்க ளுறையும்நாடு
தேடவே தென்யிலங்கை பதியோரந்தான்
தெளிவான சிவந்ததொரு பூமிநாடு
சாடவே யலைவீசுங் கதிர்காமந்தான்
சதுரான சுழலுடைய கறையுமாச்சே. 557

ஆச்சப்பா ராமர்பதி குகனோடந்தான்
அப்பனே கறைநாடு வெளுத்தபூமி
மூச்சடங்கி வெகுமாண்பர் சித்துதாமும்
மூதுலகைத் தான்கடந்த ரிடிகள்தேவர்
ஆச்சரிய மாகவேதான் பூனீர்காண
அப்பனே துறைகோடி சங்கங்கோடி
வீச்சலுட னவ்வனத்தி லுறைந்தோர்கோடி
வீறான சமாதிமுகங் கோடிதானே. 558

Koviloor Digital Library

தானான யிலங்கைபுரி வடக்கேயப்பா
தகமையுள்ள யோசனையுஞ் சொல்லொண்ணாது
கோனான வெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனார் யெந்தனுக்கு வுரைத்தமார்க்கம்
தேனான வடபொதிகை தெலுங்கர்நாடு
தேற்றமுள்ள கன்னடியர் மராட்டியநாடு
பானான பப்பரரு மிருக்குநாடு
பாங்கான துலுக்கர்களு மலுக்கர்நாடே. 559

மலுக்கான வாரியர்க ளிருக்கும்நாடு
மகத்தான சிங்களரின் கூட்டந்தானும்
சலிப்பில்லா பிரம்மகுல வேதியோர்கள்
சதுரான வங்களர்க ளிருந்நாடு
இலுப்பையெனுங் காட்டகந்தான் சிவந்தபூமி
யெழிலான வாசீர்மஞ் சமாதியுண்டு
தெலுப்பான குண்ணுமுதல் கோபுரங்கள்
தெகிட்டாத தெள்ளமிர்த யணையுமுண்டே. 560

உண்டான நாடெல்லாம் பூனீர்நாடு
வுத்தமனே பதினெண்பேர் கூறாநாடு
கண்டாலும் விடுவாரோ பதினெண்பேர்கள்
காவலரே மறைத்துவைத்தேன் பொன்னாடெல்லாம்
தொண்டுசெய்து யெனதைய ரசுவனியார்தம்பால்
தொட்டகுறி போலாக கண்டேன்யானும்
அண்டர்பிரான் தானறிவார் யிந்தநாடு
அப்பனே பூநீரின் வளப்பந்தானே. 561

வளப்பமா மிப்பூமி யார்தான்கண்டார்
வளம்பெரிய யெனதையர் கண்டார்விண்டார்
பளக்கமுடன் யான்கண்ட பதியனேகம்
பகருகிறேன் புலத்தியனே பண்புள்ளானே
துளக்கமுடன் துறைகோடி பதியனேகம்
துப்புரவாய் கண்டமட்டு மின்னங்கூர்வேன்
அளக்கமுட நம்பலங்க ளேதென்றாக்கால்
அப்பனே காசிநக ரவந்திதானே. 562

Koviloor Digital Library

தானான காசிக்கி வடபாகத்தில்
தனியான வடபொதியாங் கங்கையோரம்
தேனான செங்காவி னதியோரந்தான்
தெளிவான நாடெல்லாஞ் சிவந்தபூமி
பானான பரஞ்சுடராம் பனிகள்சூழா
பாங்கான சுடர்போன்ற கிரணநாடு
மானான மண்டலத்தோர் மன்னர்தாமும்
மயங்குகின்ற நாடதுவு மென்னலாமே. 563

என்னவே பூமிவள மேதென்றாக்கால்
யெழிலான பூனீர்கள் விளையும்நாடு
மன்னவர்க ளாண்டதொரு நாடுமல்லோ
மகதேவர் ரிடியிருந்த நாடேயாகும்
சொன்னதொரு நாடதுவை பதினெண்பேர்கள்
சுந்தரனே சொல்லவில்லை சுருதினூலில்
நன்னயமாய் பன்னீரா யிரந்தானப்பா
நவின்றிட்டே னின்னூலில் நவின்றிட்டேனே. 564

இட்டேனே பன்னீரா யிரத்திலப்பா
யெழில்பெரிய நாதாக்கள் கூறாவண்ணம்
சட்டமுடன் யான்கண்டு வுரைக்கலுற்றேன்
சதுரான குருனூலாங் காவியத்தில்
அட்டதிசை தான்புகழ சித்தர்மெச்ச
அப்பனே பெருனூலாங் காவியத்தில்
தொட்டகுறி போலாக நாலாங்காண்டம்
தோராமல் யானுரைத்தேன் தெளிவாய்பாரே. 565

பாரப்பா முன்னுரைத்த நாடேயெல்லாம்
பலபல சாஸ்திரமாங் கோர்வைதன்னில்
சீரப்பா யென்போலு மார்தான்சொன்னார்
சிற்பரனே பணாமுடியிந் திடுக்கிட்டேங்க
காரப்பா கதிரவன்போல் பிராகாசித்து
களிப்புடனே யவர்வாசல் சென்றார்பாரு
தீரப்பா யின்னமுண்டு மனேகபூமி
தெளிவுடனே நாதாக்கள் கண்டாரன்றே. 566

Koviloor Digital Library

கண்டாரே மேருவுக்கு குணபாகத்தில்
கருவான பூமிவள மென்னகூர்வேன்
தண்டான சேனையுட னரக்கர்கூட்டம்
தகமையுடன் போர்புரிந்த யிடந்தானப்பா
தண்டாவின் மறைதானும் பூர்க்காபூமி
தண்மையுள்ள பூமியெல்லாங் கறுப்பேகாணும்
உண்மையாங் கெந்தகமும் விளையும்நாடு
வுப்பனமாங் கார்போக பூமியாமே. 567

பூமியாஞ் சுறுமாவுக் கல்லேயாகும்
புகழான காந்தமென்ற கல்லேகாணும்
சாமியவர் தான்படைத்த தாளகந்தான்
சதுரான கெந்தகமும் விளையுங்கண்டீர்
வாமிபுகழ் பூனீராஞ் சுக்காங்கல்லாம்
வளமுடனே தான்விளையும் மலைநாடாகும்
நாமிதற்கோ பூமிவளஞ் சொல்லொண்ணாது
நலமான தேவரிடி நாடுகாணே. 568

நாடான மேருவுக்கு தென்கிழக்கு
நலமான தென்பொதிகை மேற்கேயப்பா
காடான வனாந்திரமும் பனிநாடாகும்
கருவான தென்பொதியார் சித்துமுண்டு
தேடான பூமிவள மென்னசொல்வேன்
தெளிவான சுண்ணாம்பு வனமேயாகும்
சாடான மண்டபந்தா னாயக்காலாம்
சதுரான வாசல்வழி தடமுமுண்டே. 569

உண்டான வாசல்வழி குத்துக்கல்லாம்
ஓகோகோ நாதாக்க ளூஞ்சலுண்டு
கண்டவர்க ளாறுமில்லை பொதிகைமேற்கே
கருவாளி விதியாளி காண்பாரெல்லாம்
தண்டலையார் வீற்றிருந்த தலந்தானாகும்
தகமையுள்ள தேவதாஸ் தலத்தின்னேர்மை
விண்டவர்க ளாறுமில்லை வையகத்தில்
வேதாந்தத் தாயினிட மகிமைபாரே. 570

Koviloor Digital Library

பாரேதான் பூமிவள மஞ்சள்காணும்
பாங்கான சூரியனு மஞ்சள்போலாம்
சீரேதான் பூனீர்கள் மஞ்சளாகும்
சிறப்பான கார சாரங்களெல்லாம்
திரேதா னூர்வனவாம் பறப்பினங்கள்
தீர்க்கமுடன் மஞ்சள்நிற மிகவேகாணும்
வீரேதான் ஜலமதுவுங் காரங்காட்டும்
வித்தகனே ரோகமெலா மகன்றுபோமே. 571

போகுமே யின்னமொரு புதுமைகூர்வேன்
பொங்கமுட னாயக்கா லூஞ்சலின்கீழ்
மேகுமே கிடாரமது நவந்தானுண்டு
மெய்க்கவே கிடாரமதில் சாசனந்தான்
வாகுடனே வால்மீகர் வைத்தவைப்பு
வளமான பிரணவமாம் பூநீராகும்
சாகுவதும் யில்லையப்பா பூநீராகும்
சட்டமுடன் வரைகோடி யிருப்பாருண்டோ. 572

இருப்பாரே பூனீரின் சுன்னந்தன்னை
யெழிலாகத் தான்முடித்த கிடாரந்தன்னில்
வருக்குமுடன் பிரணவத்தை சீட்டதாக்கி
மன்னவனே வைத்துவைப்பு நிதியுங்கண்டேன்
சுருக்கமுட னுந்தனுக்கு வுளவாராய்ந்து
திறமுடனே சாசனத்தை யறிவித்தேதான்
குருக்கமுட னிதிபதனிற் தொகையுங் கண்டு
கொற்றவனார் வால்மீகர் வைத்துவைப்பே. 573

முதலாவது கிடார வைப்பு

கொற்றவனார் நிதியதுவு மேதென்றாக்கால்
குருபரனே புலஸ்தியனே குமுதவானே
பெற்றதொரு பேரனுக்கு வைத்தவைப்பு
பேரின்பக் கடலாகும் நாவொண்ணாது
சற்றேற நிதிதனையை கூறுவேன்யான்
சதாகோடி மகாசங்கம் வெள்ளம்நாலு
முற்றிலும் துகைகண்டு மொழிந்துரைப்பேன்
மூதுலகில் நாதாக்கள் சொல்லாரன்றே. 574

Koviloor Digital Library

இரண்டாவது கிடார வைப்பு

அன்றான புலஸ்தியனே அன்புள்ளானே
யவரவர்கள் நூல்தனிலே கிடாரவைப்பு
குன்றான மலைபோல கோடிசொன்னார்
குவலயத்தி லொருநூலுங் கணக்கேயில்லை
வென்றிடவே சதகோடி சூரியன்போல்
வெட்டவெளி யாகவேதான் மறைத்துச்சொன்னார்
தென்திசையில் பதினெண்பேர் சித்தர்தாமும்
தெளிவுரைத்தா ரொருநூலுங் கண்டிலேனே. 575

கண்டிலே னெனதையர் சொன்னவாக்கு
கருவிலமே யானறிந்து உண்மைசொல்வேன்
விண்டேனே ரெண்டாங்கால் சாடிவைப்பு
வினைகோடி சங்கமாறு வெள்ளம்ரெண்டு
பண்டான கிடாரமதிற் சாசனந்தான்
பகர்வதற்கு பாரினிலே யாராலாகும்
கொண்டல்வண்ணன் பாட்டனவன் வைத்தவைப்பு
கொற்றவனே யிதற்கீடு சொல்லொண்ணாதே. 576

மூன்றாங்கால் சாடிவைப்பு

ஒண்ணாத புலஸ்தியனே வுத்தமாகேள்
ஓகோகோ நாதாக்கள் மறைத்தவைப்பே
கண்ணான கண்மணியே கழறுவேன்யான்
காசினியில் அபரஞ்சித் தங்கவேளே
விண்ணாடர் போற்றுகின்ற யோகவானே
வெட் டவெளி யம்பலத்தி லாடுங்கூத்தே
மண்ணாளுந் தோவேந்தர் மெய்ச்சும்பாலா
மன்னவனே புலஸ்தியனே மதிப்பாய்க்கேளே. 577

கேளப்பா மூன்றாங்கால் சாடிவைப்பு
கெணிதமுடன் சொல்லுகிறேன் கவனவானே
தாளப்பா சங்கமது எட்டேயாகும்
தனியான வெள்ளமது ரெண்டேயாகும்
சூளப்பா களஞ்சியங்கள் சோடசந்தான்
சுந்தரனே சொல்வதற்கு நாவொண்ணாது
பாளப்பா போகாமல் தானுமங்கே
பாலகனே சொல்கிறேன் பண்பாய்க்கேளே. 578

Koviloor Digital Library

நாலாங்கால் கிடார வைப்பு

பண்பான நாலாங்கால் கிடாரவைப்பு
பாலகனே பகருகிறேன் பரிவாய்கேண்மோ
நண்பான புலஸ்தியனே நளினவானே
நாதாந்த சித்தரது கிருபையாலே
வண்பான வரைகோடி சாஸ்திரங்கள்
வண்மையுடன் பாடிவைத்தார் பதினெண்பேர்கள்
திண்பான முறைபாடு வழியுஞ்சொன்னார்
தீர்க்கமுடன் நிதிதனக்கு முறைதான்காணே. 579

காணவே நாலாங்கால் சாடிவைப்பு
கருவான சாசனங்க ளேதென்றாக்கால்
தோணவே வைப்புநிதி சங்கம்மூன்று
தோறாத வெள்ளமது நான்கதாகும்
மாணவே களஞ்சியங்க ளஷ்டமாகும்
மகதேவா கண்டறிந்த யானுமட்டும்
பூணவே பன்னீரா யிரத்திலப்பா
பூட்டிவிட்டு நாக்கறுப்பேன் பொய்யென்றோர்க்கே.580

ஐந்தாங்கால் சாடிவைப்பு

பொய்யென்று கூறினதோர் மாண்பருக்கு
பொல்லாத சாபமது யெய்தும்பாரு
மெய்யெலாந் தடிப்புடனே குஷ்டந்தானும்
மேதினியில் நீரிழிவு மதுமேகந்தான்
ஐயனா ரெனதைய ரசுவனியார்சாட்சி
அப்பனே யவர்பேரி லாணையாக
கைத்தவமாய் சொன்னதொரு பெருநூலப்பா
காசினியில் நாதாக்கள் விள்ளார்தானே. 581

தானான வைந்தாங்கால் சாடிவைப்பு
தகமையுள்ள புலஸ்தியனே நான்காஞ்சீஷா
கோனான யெனதையர் சொன்னநீதி
கொற்றவனார் குருபரனார் வாக்குபொய்யா
தேனான வைந்தாங்கால் சாடிவைப்பு
தெளிவான விருநிதியே செப்பக்கேளீர்
பானான கடலேழு சத்தவெள்ளம்
பாங்கான சங்கமது கொண்டதாமே. 582

Koviloor Digital Library

ஆறாங்கால் சாடிவைப்பு

தாமான சாஸ்திரங்க ளதீதஞ்சொன்னார்
தண்மையுள்ள வேதாந்த ரிடிகளப்பா
சாமானிய மானதொரு நூலுரைத்தார்
சாங்கமுட னிருபத்தோர் லட்சங்காப்பு
போமேதான் ஞானவெளி சிக்கறுத்து
பூட்டினார் வெளியரங்க மனேகங்கோடி
நாமேதான் சொன்னபன் னீராயிரந்தான்
நாட்டினிலே நாதாக்கள் கூறாரன்றே. 583

அன்றான புலஸ்தியனே புண்ணியவானே
அன்புள்ள ஞானப்பால் கொண்டபாலா
குன்றான வங்கணவே சிங்கவேறே
குருபரனார் தந்தமக்கு யுகந்தசீஷா
தென்றிசையா மகுவனிக்கி சிறந்தபேரா
தேன்கமமும் பொதிகைமுனி சித்தர்பூபா
அன்றெரிந்த திரிபுரனுக் குகந்தசீலா
அப்பனே அருங்கிளியே அன்பாய்க்கேளே. 584

அன்பான புலத்தியனே யறிவுள்ளானே
அறையுகிறே னாறாங்கால் கிடாரமப்பா
சொன்னதொரு நிதியதுவு மேதென்றாக்கால்
சொற்பெரிய வெள்ளமது யெட்டேயாகு
நன்னயமாம் சங்கமது பனிரெண்டாகும்
நலமுடனே களஞ்சியங்கள் பத்ததாகும்
மன்னவர்கள் ராஜாதி ராஜருக்கு
மகதேவா யிருநிதிக ளில்லைபாரே. 585

ஏழாங்கால் சாடிவைப்பு

பாரப்பா புலஸ்தியனே பாவலோய்கேள்
பாருலகில் நவகோடி ரிஷிகள்மெய்ச்சும்
தேரப்பா சின்மயமே ஞானக்கண்ணே
தெளிவான பரம்பொருளே பூபாலாகேள்
சீரப்பா மணிவிளக்கே சிவமே கேண்மே
சிதாபாசப் பரஞ்சுடரே தெளிவேபாரீர்
ஆரப்பா யமுர்தமென்று ஞானக்கண்ணே
அருங்கொழுந்தே யருள்கோவே யறையக்கேளே. 586

Koviloor Digital Library

அறையுகிறே னேழாங்கால் கிடாரவைப்பு
அரும்பொன்மணி முதலான நவமணிகளப்பா
குறையாத ரத்தினமே கோடிசங்கம்
குறிப்பான வெள்ளமது பதினாறாகும்
நிறையான களஞ்சியமே நாற்பத்தாறு
நிஷ்களங்க மானதொரு நிறையுங்கண்டேன்
திறைபோன்ற நிதியென்னுங் கிடாரந்தன்னில்
தீர்க்கமுடன் கோடிவே தாளங்கண்டேன். 587

எட்டாங்கால் கிடாரவைப்பு

கண்டேனே புலத்தியனே கவிராஜேந்திரா
கருவிலமே கண்மணியே கழறக்கேண்மோ
தொண்டரெனும் நவகோடி சித்தர்தாமும்
தொல்லுலகில் வைத்தவைப்பு கூறொண்ணாது
விண்டிடவே யெட்டாங்கால் கிடாரவைப்பு
வீரமுடன் நெடுங்காலம் வைத்தவைப்பு
அண்டர்பிரான் தானறிவா ரவரேசாட்சி
அப்பனே புலத்தியனே யறிவாய்க்கேளே. 588

அறிவான யெட்டாங்கால் சாடிதானும்
அப்பனே வெள்ளமது பதினான்காகும்
குறியான சங்கமது மிருபத்தொன்று
குருபரனார் களஞ்சிய மொன்பதாகும்
நெறிதவறா வால்மீகர் வைத்தவைப்பு
நெடுங்காலம் வரைகோடி வைப்பேயாகும்
உறிபோன்ற வுஞ்சலிட வைப்புதானும்
வுத்தமனே காசினியி லில்லைகாணே. 589

ஒன்பதாங் கிடாரவைப்பு

இல்லையே புலஸ்தியனே மச்சகேந்திரா
யெழிலான யற்புதமே பூவேகேண்மோ
தொல்லையெனும் பவக்கடலை விட்டொழித்த
துரைராஜ சுந்தரனே சுகுணமாரா
அல்லும்பகலுஞ் செபஞ்செய் யன்புள்ளானே
அப்பனே மச்சமதின் நேர்மைபூண்ட
புல்லறிவு வுடையதொரு பூபாலாகேண்மோ
பூட்டுகிறே னொன்பதாங் கிடாரவைப்பே. 590

Koviloor Digital Library

கிடாரமாம் புலத்தியனே புண்ணியபூபா
புற்பதமே கிடாரமது சங்கமேழாம்
தடாகமெனு மூஞ்சலுக்கு வடமேற்கப்பா
தனியான வெள்ளமது பதிமூன்றாகும்
படாகமெனுங் களஞ்சியங்கள் பதினாறாகும்
பாருலகில் சொல்வதற்கு யாராலாகும்
அடாரமெனுங் காட்டகத்தில் வைத்தவைப்பு
அன்பான புலத்தியனே யிதற்கீடுண்டோ. 591

ஈடான சாஸ்திரங்கள் கோடிநூல்கள்
யெழிலான கோர்வைகளோ அனந்தங்கோடி
நாடான மாண்பர்களுஞ் சித்துதாமும்
நாட்டமுடன் கூறினதோர் கோடிசங்கம்
பாடான னூல்களிலே பதிவுகாணார்
பாருலகில் சித்தர்முனி பகர்ந்தவண்ணம்
கோடான கோடிநூ லூரைத்தபோதும்
குறிப்பான பன்னீரா யிரந்தான்காணே. 592

காணவே போகாது யின்னூல்மார்க்கம்
கருவிகர ணாதியந்தம் யிதற்குள்தோயும்
தோணவே யிதிகாசப் பொருளுங்காட்டும்
தோராத சின்மயமும் முன்னேநிற்கும்
ஆணவே வத்வீத வொடுக்கங்காட்டும்
அப்பனே பிரணவத்தின் பொருளேகாட்டும்
மாணமருங் கல்வியுள்ளோ ரிடிகள்தேவர்
மகத்தான நாதாக்க ளறிவார்தானே. 593

அகஸ்தியர் மதுரையில் சங்கப்பலகை கூறுவது

தானான புலஸ்தியனே தகைமையோனே
தண்மையுள்ள குணபாலா வதீதசீலா
கோனான யெனதைய ரகுவனியாந்தேவர்
கொற்றவனார் யெந்தனக்கு வுரைத்தவண்ணம்
தேனான தென்மதுரை தேவஸ்தானம்
தெளிவான சிவகங்கை தீர்த்தமப்பா
மானான பொத்தாமரை தடாகந்தன்னில்
மகத்தான சங்கமானப்பலகைதானே. 594

Koviloor Digital Library

பலகையாந் திரேதாயி னுகத்திலப்பா
பளிங்குமா மண்டபத்தி லிருந்தசங்கம்
அலகையாந் தான்கொண்டு பூட்டிருந்த
அரும்பொன்னாம் பலகையது நாவொண்ணாது
சலமான பிரளயங்கள் வந்தபோது
சதுரான சங்கமென்ற பலகைதன்னை
பலமான சங்கிலியா லிறுத்திக்கட்டி
பதியவே தடாகமதி லமுத்திட்டாரே. 595

இட்டாரே சங்கமென்ற பலகைதன்னை
யெழிலான சலமதிலே வூஞ்சலாக்கி
பட்டதொரு சாஸ்திரங்க ளிதிகாசங்கள்
பாவாணர் தேடிவைத்த புராணகீதம்
சட்டமென்ற தங்கத்தின் பேழைக்குள்ளே
சதுருடனே தானடக்கஞ் செய்தாரங்கே
திட்டமுடன் திரேதாயி னுகத்திலப்பா
தீர்க்கமுடன் பலகைதனை பொதிந்திட்டாரே. 596

கிரேதாயுகத்து சித்தர் சங்கப் பலகை கேட்டது

பொதியவே புலஸ்தியனே பொன்னாகேண்மோ
பொங்கமுடன் கிரேதாயி னுகத்திலப்பா
பதிந்திருந்த சங்கமென்ற பலகைதன்னை
பாவாணர் சித்தர்முனி ரிடிகளெல்லாம்
நதிபிறண்ட பிரளயத்தி லமர்ந்தசங்கம்
நாதாக்கள் பலபேரு மொன்றாய்க்கூடி
கதிபெறவே சங்கமென்ற பலகைநண்ணி
களிப்புடனே நாதாக்கள் கேட்டார்தாமே. 597

கேட்கையிலே சங்கத்தா ரொன்றாய்க்கூடி
கெவனமுடன் சித்தர்கட்கு யேதுரைப்பார்
மீட்கவே வாயிரத் தெட்டுமாற்று
மிக்கான சங்கமென்ற பலகைதன்னில்
வாட்கமுடன் மனோன்மணியாள் வீற்றிருக்க
மகதேவ வம்பாளி னருளினாலே
தாட்கமுடன் சங்கமென்ற பலகைதன்னை
தாரணியி லொருபோது யீயாரன்றே. 598

Koviloor Digital Library

ஈயவே யெங்களுக்குத் தாரமில்லை
யெழிலான சங்கமென்ற பலகைதன்னை
துய்யமொழி சங்கத்தார் தாமுரைக்க
துப்புரவாய் நாதாக்கள் ரிடிகள்தாமும்
ஆயகலை தாமுணர்ந்த சித்தரெல்லாம்
யசருண்டாய் வாய்முடி மவுனங்கொண்டு
பேயரைப்போல் நின்றேங்கி பிணம்போலாகி
பேரின்பக் கடல்தனிலே யமுந்திட்டாரே. 599

இட்டதொரு பேரின்ப சாகரத்தில்
யெழிலாக சித்தர்முனி ரிடிகளெல்லாம்
பட்டமரம் போலானார் பதினெண்பேரும்
பாருலகில் பலகையது கிட்டவில்லை
அட்டதிசை புகழ்படைத்த வசுவனியாந்தேவர்
அன்புடனே யெந்தனுக்கு வுரைத்தநீதி
விட்டகுறை யிருந்ததினா லுந்தமக்கு
வித்தகனே யிம்மொழியை கூறலாச்சே. 600

ஆச்சப்பா புலஸ்தியனே அன்புள்ளானே
அவனிதனி லதிசயங்கள் கோடிசொன்னேன்
மூச்சடங்கி யெமதிடத்தி லிருந்தசீஷர்
மூதுலகி லவருடைய வண்மைகூர்வேன்
கூச்சலுடன் முதற்சீஷன் தந்தைதாய்மார்
குவலயத்தி லவரிருந்த வளப்பம்யாவும்
மாய்ச்சலது நேராத ராமதேவன்
மன்னவனார் யாக்கோபின் விபரங்கேளே. 601

புலஸ்தியருக்கு ராமதேவர் வண்மைகூறல்

கேளப்பா முன்பிறப்பில் ராமதேவர்
கெவனமென்ற குளிகையது கொண்டசித்து
மாளப்பா யிப்பிறப்பில் யாக்கோபென்று
மன்னவனா ரிடிதேவர் பேரமைத்தான்
பாளப்பா யன்றுதொட்டு யின்றுமட்டும்
பாலகனே யாக்கோபு மதியங்கொண்டு
சூளப்பா நற்சீஷ னென்றநாமம்
சுந்தரனே தான்பெற்ற சித்துவாமே. 602

Koviloor Digital Library

(அகஸ்தியர் புலஸ்தியருக்கு ரெண்டாவது சீஷன் வள்ள கூறல்)

சித்தான சித்துமுனி புலஸ்தியாகேள்
சின்மயமே பரஞ்சுடரே தெளிந்தபாலா
பத்தியுள்ள பூபதியே பாவலோய்கேள்
பரமகுரு பதிபாச பண்புள்ளானே
நித்தியமும் யெனதைய ரசுவனியாந்தேவர்
நிஷ்களங் மானதொரு சிவபூசைக்கி
பத்தியுடன் புஷ்பமது வர்ச்சனைக்கி
பாலித்து சீஷருட வண்மைகேளே. 603

கிரேதாயுகத்தில் நடந்த மருத்துவங்கூறல்
அசுவனியார் சொன்ன வாக்கு

வண்மையாங் கிரேதாயி னுகத்திலப்பா
வளம்பெரிய நாதாக்கள் கூறவில்லை
வுண்மையாய் நாமறிந்த மட்டுமேதான்
வுத்தமனே கூறுகிறேன் முந்தன்காதை
தண்மையா மெனதைய ரசுவனியாந்தேவர்
தகைமையுடன் வனசாரி யேகும்போது
நண்மையாய் நதிபிரண்டு ஓடுங்காலம்
நலமுடனே தானேக நத்தினாரே. 604

நத்தியே கரையோரஞ் சென்றுமேதான்
நளினமுட னோடமது யேகும்போது
புத்தியுள்ள பூபாலர் பாலனப்பா
பொங்கமுடன் கல்லால மரத்தின்கீழே
வெற்றிபெற சங்கிலியால் வரிந்துகட்டி
வேட்கமுடன் பாலனைத்தான் கண்டபோது
சுத்தியுடன் கயிற்மாட்டி யிருந்தபாலன்
சுதந்தரமாய் தானெடுத்து யேகினாரே. 605

யேகியே குகனோடந் தானிறங்கி
யெழிலான வக்கரையைக் கண்டபோதே
வாகினியாங் கல்லாலின் மரத்தின்கீழே
வளமையுள்ள சிறுபாலன் தன்னைக்கண்டு
போகியே மனதுவந்து பாலன்தன்னை
பொங்கமுடன் தானெடுத்து கரத்திலேந்தி
ஆகியே குகைதனக்கு சென்றப்பின்பு
அப்பனே மைந்தனைத்தான் வளர்த்திட்டாரே. 606

Koviloor Digital Library

வளர்த்தாரே தென்பொதிகை தன்னிலப்பா
வண்மையுள்ள பாலகர்க ளிரண்டுபேரும்
தளராமல் தென்பொதிகை தன்னிலப்பா
தகமையுடன் வளர்ந்துவருங் காலந்தன்னில்
சளமறவே யிரண்டு சிறு பாலருந்தான்
சாங்கமுடன் சதாகாலம் மதலைவார்த்தை
நளம்படவே யிருபால ரொன்றாய்கூடி
நயனமென்ற பாஷைதனை கூறுவாரே. 607

கூறுவார் சிலகாலம் நயனபாஷை
கொற்றவர்கள் சிலகாலஞ் சென்றபின்பு
மாறுபடா வார்த்தைகளு மதீதங்கூறி
மன்னவர்க ளிருபாலர் பேசலுற்றார்
வீறுடைய தாயாரை தம்பிதானும்
விருப்பமுடன் மூத்தவனை வினவிக்கேட்க
ஆறுதலாய் மூத்தவனு மிளயோனுக்கு
அன்பான வார்த்தையது வுரைக்கின்றானே. 608

உரைக்கின்ற வார்த்தையது யேதென்றாக்கால்
வுத்தமனே தாயிறந்த வளப்பங்கூர்வேன்
சிறையிருந்த வுன்மாதா வளமைகூர்வேன்
சிற்பரனே தம்பியரே சிறுவாகேண்மோ
நிறையான திரேதாயி னுகத்திலப்பா
தீர்க்கமுடன் முடிவேந்தன் செங்கோல்காலம்
திறையான வேல்வேந்தன் கொலுவுதன்னில்
நீதியுடன் நவதானம் செய்தார்பாரே. 609

பார்க்கவே தானமது செய்யுங்காலம்
பாருலகில் மாண்பரெல்லாம் பிரண்டேயேகி
தீர்க்கமுடன் சம்பானம் வாங்குதற்கு
திறமுடனே வுன்தாயார் மாளிசென்று
ஆர்க்கமுடன் மன்னரிடஞ் சென்றேயேகி
அருங்கிளியா ளுந்தாயார் வையங்கேழ்க்க
பூர்க்கமலம் வீற்றிருந்த ராஜவேந்தன்
பூபாலன் செய்தகுறை கேழ்ப்பீர்தானே. 610

Koviloor Digital Library

மாலியச் சக்கரவர்த்தி வஞ்சகபாவத்தை வுரைத்தல்

தானான தம்பியரே தனஞ்சியாகேள்
    தாக்கான நம்மாதா தரணிமீதில்
கோனான தர்மமது முப்பத்திரண்டு
    கூறியே நாள்தோறும் கூறிநிற்க
தேனான வுன்தாயார் மாதுதானும்
    தேற்றமுடன் யாசக விருத்திகேட்க
பானான முடியரசன் மோகங்கொண்டு
    பட்சமுடன் தன்காவல் நிறுத்தினானே 611

நிறுத்தியே வந்ததொரு மானிடர்க்கு
    நீடாழி வுலகுபதி தானந்தந்தான்
பொருத்தவே யவரவரை போகவிட்டு
    பொங்கமுடன் முடிவேந்த ராஜனங்கே
விருப்புடனே வுந்தாயார் மாதுதன்னை
    வினவியே மோகமது மிகவுண்டாகி
சிரிப்புடனே மாதர்தனை கற்பழிக்க
    சிற்பரனே சிற்றரசன் யெண்ணினானே. 612

எண்ணியே வுன்தாயார் மனதுநொந்து
    யெழிலான மன்னவன்றான் மனதறிந்து
குண்ணியே திரேகமது மிகவும்வாழ
    கொற்றவனே மோசமது நேர்ந்ததென்று
மண்ணுவிண்ணுந் தானறிய மாதுதானும்
    மங்கையரும் கூடைதனை கவிழ்த்துமேதான்
தண்ணமுடன் பேழையென்ற கூடைதன்னை
    சாங்கமுடன் தான்கவிழ்க்க கல்லானாளே. 613

கல்லான கல்லதுவு மென்னகூர்வேன்
    காசினியில் மலைக்கல்லாங் குண்ணுக்கல்லாம்
வல்லமைகள் பெற்றதொரு வைரக்கல்லாம்
    வாகாயந் தானறிந்த மாதுகல்லாம்
சொல்லான விந்திராணி அறிந்தகல்லாம்
    சொற்பெரிய தேவர்களு மெச்சுங்கல்லாம்
நல்லதொரு வருந்தூதிக் கல்லேயாகும்
    நலம்பெரிய நாதாக்க ளறிந்தகல்லே. 614

Koviloor Digital Library

கல்லான வுந்தாயார் மாதுதானும்
காசினியில் ராஜனிட மாளிதன்னில்
வில்லான செங்கோலின் பட்டந்தன்னில்
வீருடைய கல்லதுவும் நெடுங்காலந்தான்
மல்லான வாயுதங்கள் கூடிருக்க
மன்னவனார் கல்லதனைக் கண்டபோது
செல்லான கல்லதனை செங்கோல்வேந்தன்
தேற்றமுடன் காவணத்தை செல்லென்றாரே. 615

என்றாரே முடிவேந்த ராஜனப்பா
யெளிதான குண்ணென்ற கருங்கல்தன்னை
தென்றிசையா மிலங்கைபுரி யாற்றோரந்தான்
தேர்வேந்த முடிமன்னன் சொற்படிக்கி
வென்றிடவே சல்லதனை பிரட்டியப்பா
வேகவதி தீர்த்தமென்னுங் கரையினோரம்
குன்றான பர்வதத்தின் மலைக்கல்லப்பா
கொற்றவனே தானிருக்கக் கண்டிட்டாரே. 616

கண்டாரே குண்டுக்கல் தன்னையப்பா
கருத்துடனே தமயனுந் தம்மிதானும்
விண்டதொரு தாய்தந்தை காதைதன்னை
விசனமுடன் ஒருவருக்கோ ரோதும்போது
குண்டான கல்லதுக்குள் ளிருந்ததாயார்
கொம்பனையாள் மாதுநல்ல கன்னிதானும்
செண்டான முறமைகொண்டு பாலருக்கு
செப்புகிறாள் நான்தாயா ரென்றிட்டாளே. 617

என்னவே தாயாரும் பாலனைத்தான்
யெழிலுடனே மறுவார்த்தை கூறும்போது
கன்னபுரி மன்னவர்க ளிரண்டுபேருங்
கனத்தமுடி தானசந்து திடுக்கிட்டேங்கி
பன்னினதோர் வார்த்தைதனை பார்த்தாராய்ந்து
பாலகருந் தன்தாயா ரென்றேயெண்ணி
கன்னிசொன்ன வார்த்தைதனை மனதுவந்து
கட்டழக ரிருவருமாய் யோசித்தாரே. 618

Koviloor Digital Library

யோசிக்கும் போதையிலே கன்னிதானும்
ஏழிலான பாதைத்தனை வெடித்தேயேகி
வாசித்து மந்திர உட்சாடணத்தால்
மங்கையரும் வாய்திறந்து கூறலாகி
நேசித்த பாலனுக்கு முன்னுங்காதை
நெகிழ்ச்சியுடன் தானுரைக்க மாதுதானும்
பூசித்த பாலர்களு மிருவர்தாமும்
பொங்கமுடன் மாதாவைப் பணிந்திட்டாரே. 619

பணிந்ததொரு மாலருக்கு மாதுதானும்
பகர்ந்திடவே திரேதாயி னுகத்தின்சங்கை
அணியணியாய் நடந்ததொரு காதைதன்னை
அன்புடனே பாலருக்கு தாமுரைக்க
கணிதமுடன் சித்தர்முனி ரிடிகள்தாமும்
காவலனார் சொரூபசித்து கழறக்கேட்டு
மணியான மாபால ரிருவர்தம்மை
மகிழ்ச்சியுடன் சீஷனா யணைந்திட்டாரே. 620

அணைந்துமே சீஷர்களு மிருவர்தாமும்
அன்புடனே குருபரனார் முனிவருக்கு
பணயமுட னாசீர்ம மிகக்குறித்து
பாருலகில் தேவரிஷி பாலனாக
துணைவருடன் குருபரனார் தமையடுத்து
துப்புரவா யேவலுக்கு முன்னேநின்று
கணையோடு மேவலுக்கு மாறலாகி
காசினியில் நெடுங்கால மிருந்தார்தானே. 621

அகஸ்தியர் புலஸ்தியருக்கு திருமந்திரமோதல்

தானான புலஸ்தியனே தம்பிரானே
தகமையுள்ள பூபாலா மச்சகேந்திரா
கோனான யெனதைய ரகுவனியாந்தேவர்
கொற்றவனா ருந்தனுக்கு வுரைத்தநீதி
தேனான மனோன்மணியாள் கடாட்சத்தாலே
தெளிவான திருமந்திர ஞானோபத்தை
பானான பரஞ்சுடரை முதலாயெண்ணி
பரமகுரு சர்க்குருவை போற்றுவாயே. 622

Koviloor Digital Library

போற்றுவே புலஸ்தியனே புண்ணியபாலா
புங்கவனே வஷ்டசித்தி கொண்டமாரா
நாற்றிசையுங் கீர்த்தியுற்ற நளினபாலா
நலமுடனே ஞானமென்ற வமுர்தப்பாலை
ஆற்றவே பிரணவத்தின் பொருளையெல்லாம்
அப்பனே யுந்தமக்கு ஓதலாச்சு
மேற்றிசையா மேருகிரி தன்னிலப்பா
மேன்மையுட னுனைப்பணிவார் சித்துதாமே. 623

சித்தான சித்துமுனி ரிடிகள்கூட்டம்
சிற்பரனே வுந்தனையும் அதீதங்கொள்வார்
சத்தான சோதிமுனி வர்க்கத்தோடும்
சதுரான தென்பொதிகை சித்தர்தாமும்
முத்தான ஞானப்பால் தன்னைக்கண்டு
மூதுலகில் யுன்னையொரு சித்தனாக்கி
கத்தனைப்போ லென்னாளுந் துதிப்பாரப்பா
கண்மணியே சதாகால மருள்கொள்வீரே. 624

கொள்ளவே ஞானமென்ற வமுர்தப்பாலை
கொற்றவனே யென்னாளு மதியம்பூண்டு
தெள்ளமிர்த மானதொரு சிறுவாகேண்மோ
தேற்றமுள்ள புலஸ்தியனே கவிராஜேந்திரா
கள்ளமிலா நுட்பொருளை யறிதல்வேண்டும்
காசினியில் மறைப்பொருளை நீக்கல்வேண்டும்
உள்ளபடி யாமுரைத்தோ முத்தமாகேள்
ஓகோகோ நாதாக்க ளுரையார்தாமே. 625

உரையாத சாஸ்திரங்க ளிதிகாசங்கள்
வுத்தமனே வேதமுதல் புராணகீதம்
கரைபோன்ற கலைக்கியான மறுபத்து நான்கும்
காசினியில் நாதாக்கள் கூறாவண்ணம்
திரைபோன்ற ஞானத்தினதீத மார்க்கம்
தீர்க்கமுள்ள வுபதேச வுண்மையாவும்
வரையோடு முறையோடு வழிபாடோடும்
வளமையுடன் யாமுரைப்போம் வண்மைபாரே. 626

Koviloor Digital Library

யோசிக்கும் போதையிலே கன்னிதானும்
ஏழிலான பாதைதனை வெடித்தேயேகி
வாசித்து மந்திர உட்சாடணத்தால்
மங்கையரும் வாய்திறந்து கூறலாகி
நேசித்த பாலனுக்கு முன்னுங்காதை
நெகிழ்ச்சியுடன் தானுறைக்க மாதுதானும்
பூசித்த பாலர்களு மிருவர்தாமும்
பொங்கமுடன் மாதாவைப் பணிந்திட்டாரே. 619

பணிந்ததொரு மாலருக்கு மாதுதானும்
பகர்ந்திடவே திரேதாயி னுகத்தின்சங்கை
அணியணியாய் நடந்ததொரு காதைதன்னை
அன்புடனே பாலருக்கு தாமுரைக்க
கணிதமுடன் சித்தர்முனி ரிடிகள்தாமும்
காவலனார் சொரூபசித்து கழறக்கேட்டு
மணியான மாபால ரிருவர்தம்மை
மகிழ்ச்சியுடன் சீஷனா யணைந்திட்டாரே. 620

அணைந்துமே சீஷர்களு மிருவர்தாமும்
அன்புடனே குருபரனார் முனிவருக்கு
பணயமுட னாசீர்ம மிகக்குறித்து
பாருலகில் தேவரிஷி பாலனாக
துணைவருடன் குருபரனார் தமையடுத்து
துப்புரவா யேவலுக்கு முன்னேநின்று
கணையோடு மேவலுக்கு மாறலாகி
காசினியில் நெடுங்கால மிருந்தார்தானே. 621

அகஸ்தியர் புலஸ்தியருக்கு திருமந்திரமோதல்

தானான புலஸ்தியனே தம்பிரானே
தகமையுள்ள பூபாலா மச்சகேந்திரா
கோனான யெனதைய ரகுவனியாந்தேவர்
கொற்றவனா ருந்தனுக்கு வுரைத்தநீதி
தேனான மனோன்மணியாள் கடாட்சத்தாலே
தெளிவான திருமந்திர ஞானோபத்தை
பானான பரஞ்சுடரை முதலாயெண்ணி
பரமகுரு சர்க்குருவை போற்றுவாயே. 622

Koviloor Digital Library

போற்றுவே புலஸ்தியனே புண்ணியபாலா
புங்கவனே வஷ்டசித்தி கொண்டமாரா
நாற்றிசையுங் கீர்த்தியுற்ற நளினபாலா
நலமுடனே ஞானமென்ற வமுர்தப்பாலை
ஆற்றவே பிரணவத்தின் பொருளையெல்லாம்
அப்பனே யுந்தமக்கு ஓதலாச்சு
மேற்றிசையா மேருகிரி தன்னிலப்பா
மேன்மையுட னுனைப்பணிவார் சித்துதாமே. 623

சித்தான சித்துமுனி ரிடிகள்கூட்டம்
சிற்பரனே வுந்தனையும் அதீதங்கொள்வார்
சத்தான சோதிமுனி வர்க்கத்தோடும்
சதுரான தென்பொதிகை சித்தர்தாமும்
முத்தான ஞானப்பால் தன்னைக்கண்டு
மூதுலகில் யுன்னையொரு சித்தனாக்கி
கத்தனைப்போ லென்னாளுந் துதிப்பாரப்பா
கண்மணியே சதாகால மருள்கொள்வீரே. 624

கொள்ளவே ஞானமென்ற வமுர்தப்பாலை
கொற்றவனே யென்னாளு மதியம்பூண்டு
தெள்ளமிர்த மானதொரு சிறுவாகேண்மோ
தேற்றமுள்ள புலஸ்தியனே கவிராஜேந்திரா
கள்ளமிலா நுட்பொருளை யறிதல்வேண்டும்
காசினியில் மறைப்பொருளை நீக்கல்வேண்டும்
உள்ளபடி யாமுரைத்தோ முத்தமாகேள்
ஓகோகோ நாதாக்க ளுரையார்தாமே. 625

உரையாத சாஸ்திரங்க ளிதிகாசங்கள்
வுத்தமனே வேதமுதல் புராணகீதம்
கரைபோன்ற கலைக்கியான மறுபத்து நான்கும்
காசினியில் நாதாக்கள் கூறாவண்ணம்
திரைபோன்ற ஞானத்தினதீத மார்க்கம்
தீர்க்கமுள்ள வுபதேச வுண்மையாவும்
வரையோடு முறையோடு வழிபாடோடும்
வளமையுடன் யாமுரைப்போம் வண்மைபாரே. 626

Koviloor Digital Library

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பாருலகில் நாதாக்கள் கூறாவண்ணம்
நேரப்பா தன்கண்ணின் சிறாயெடாதான்
நேத்திரத்தி லுத்திரத்தை யெடுப்பான்போலும்
காரப்பா நற்கூரை யேறியேதான்
கடுஞ்சேவல் தான்பிடிக்க யாளன்போலும்
தீரப்பா நற்பதவி காட்டுவான்போல்
தீர்க்கமுடன் வாயாட்டங் கூறுவாரே. 627

கூறுவான் தன்பாவம் தன்னையப்பா
கொற்றவனே நீக்காத குருவுதானும்
மாறுபடா பிறர்பாவம் நீக்குவானோ
மன்னவனே யாருந்தா னில்லையப்பா
தேறுதலாய் சாஸ்திரங்கள் மிகவுங்கூறி
தேற்றமுடன் பிரணவத்தை யறியாமற்றான்
சீறுடனே வினையங்கள் அதீதங்கூறி
சிற்பரனே லோகவழி கூறுவாரே. 628

வாறான வுபதேச மேதென்றாக்கால்
மதிப்புடனே புலஸ்தியனே மதிவல்லோய்கேள்
கூறான யிதிகாசப் பொருள்களெல்லாம்
கொற்றவனே யுந்தமக்கு வுபதேசிப்பேன்
ஆறான வழிதடங்க ளறியஞானம்
அப்பனே பிரவணத்தின் மார்க்கமெல்லாம்
நீறான புதைபொருளு மென்னயோகம்
நிஷ்களங்க மானதொரு கியானங்காணே. 629

காணவே கியானமென்றால் பிரணவங்கள்
கறிப்பான சுவாதிஷ்டா னந்தமாகும்
தோணவே கர்மேந்திரியம் நான்கதாகும்
தோறாத கியானமது மூன்றதாகும்
மாணவே யத்வீத பொருளையெல்லாம்
மார்க்கமுடன் தானறிந்த சித்துபாலா
பூணவே கலைக்கியான மறுபத்து நான்கும்
புகழுடனே யறிந்தசித்தே தயவாய்கேளே. 630

Koviloor Digital Library

கேளப்பா ஞானமென்ற ஒடுக்கங்கூர்வேன்
கெவனமுடன் சின்மயத்தை பற்றியேறு
தாளப்பா பதிபாசக் களையகற்றி
தற்பரனே பரஞ்சோதி தன்னைக்காண்பாய்
ஆளப்பா மவுனநிலை பிரணவத்தை
அப்பனே வுள்ளறிந்த சித்துபாலா
நாளப்பா நடராஜ வடிவேகேண்மோ
நலமான புலஸ்தியனே நண்புள்ளானே. 631

அகஸ்தியர் புலஸ்தியருக்கு சக்ரவர்த்தி பெருமை கூறல்

நண்பான புலஸ்தியனே மச்சகேந்திரா
நாதாந்த சித்தொளிவே நளராஜேந்திரா
வண்பான திசையெட்டுந் திக்குநான்கும்
வளமையுடன் ராஜாதி ராஜநேர்மை
திண்பான குவலயங்க ளெல்லாங்கண்டு
தீர்க்கமுட னானறிந்த மட்டுமேதான்
சண்பகம்போல் அடையாளம் ஸ்தலமுங்கண்டு
சாங்கமுடன் யானுரைப்பேன் தயவாய்த்தானே. 632

தானான வயோத்திக்கி மேற்கேயப்பா
தண்மையுள்ள கெடிஸ்தலமாம் புரூரநூராம்
கோனான தெனதைய ரகுவனியாந்தேவர்
கொற்றவனார் யெந்தனுக் குரைத்தமார்க்கம்
தேனான மனோன்மணியாள் கிருபையாலே
தேஜொளிவின் சின்மயமாம் புரூரன்தன்னை
பானான பரம்பொருளை யறிந்தஞானி
பாருலகை யாண்டதொரு புரூரன்தானே. 633

தானான மனுதர்ம சாஸ்திரங்கள்
சதகோடி சூரியர்கள் பிரகாசிக்க
தேனான புரூரன்றன் ராஜயோகி
தேசமதில் நாடாண்ட மன்னனப்பா
கோனான நளதேவன் சக்கரன்றன்
குருவான சமதரிட மருளும்பெற்றோன்
பானான வரிச்சந்திரன்றம் பியாகுதானும்
பாலகனே திருச்சங்கு மன்னனாமே. 634

Koviloor Digital Library

மன்னவர்கள் மனுச்சக்கிர வர்த்தியப்பா
மகதேவர் புலஸ்தியனே மதிப்புள்ளானே
தென்னவர்க ளாறிலோர் கடமைவாங்கும்
தேவாதி தேசமன்ன ரிவர்தானாகும்
முன்னமே பெரியோர்கள் ரிடிகள்நாதர்
மூதுலகி லவர்தமையை கண்டார்பாரு
கன்னவராஞ் சக்கரவர்த்தி நால்வரப்பா
காசினியில் நெடுங்கால மிருந்தார்தாமே. 635

அகஸ்தியர் புலஸ்தியருக்கு சீடவர்க்கத் தெர்கை கூறல்

ஆமேதான் புலஸ்தியனே யன்புள்ளானே
அப்பனே சிரோன்மணியே வருள்பாலாகேள்
போமேதான் பதினெண்பேர் சித்தருக்கும்
பொங்கமுடன் நவகோடி ரிஷிகளுக்கும்
தாமேதான் நாற்பத்தெண் முனிவருக்கும்
தாக்கான சீடவர்க்கத் தொகையைக்கூர்வேன்
வேமேதா னெனதைய ரசுவனியாந்தேவர்
விட்டகுறை சீஷவர்க்கம் கூறினாரே. 636

கூறினா ரசுவனியார் தேவருக்கு
குறிப்பான சீஷவர்க்கம் நவமேயாகும்
தேறியதோ ரன்புள்ள சீஷரப்பா
தெளிவான யொன்பதுபே ரென்னலாகும்
மீறியதோர் தன்வந்திரி சீஷவர்க்கம்
மிக்கான தளபதிகள் நான்குபேரும்
மாறியதோர் புலிப்பாணி சித்தருக்கு
மகத்தான மாணாக்க ராறுபேரே. 637

ஆறான மாணாக்கள் காண்பரப்பா
அப்பனே லோகபதி மாண்பர்தானும்
கூறான மச்சமுனி குறுமாணாக்கர்
குவலயத்தி லேழுபேர் கூறொண்ணாது
நீறான சட்டமுனி நாதருக்கு
நெடுங்காலம் சமாதிமுக மிருந்தபோது
தூறான மாணாக்கர் அறுநூறாகும்
துப்புரவாய் சமாதிமுகம் சென்றார்காணே. 638

Koviloor Digital Library

காணவே முதற்காலாஞ் சமாதிகாலம்
கருவான மாணாக்கர் அறுநூறாகும்
தோணவே ரெண்டாங்கால் சமாதியப்பா
தோற்றமுடன் மாணாக்க ரெண்ணூறாகும்
பூணவே மூன்றாங்கால் சமாதியப்பா
புகழான மாணாக்க ராயிரம்பேர்
மாணமருங் கல்வியுள்ளோ மாணாக்கரப்பா
மகத்தான சிவயோகி மாண்பர்தானே. 639

தானான தலைமுறைகள் சமாதிமூன்று
தாக்கான வகுப்புகளோ உரைப்பேன்கேளீர்
தேனான மாணாக்க ரண்டாயிரந்தான்
தேற்றமுடன் சொச்சமது நானூறாகும்
பானான பரஞ்சுடரை சதாகாலந்தான்
பாலித்தே நென்னாளும் சட்டர்தம்மை
கோனான குருவைப்போ லஞ்சலித்து
கொற்றவர்க னெடுங்கால மிருந்தார்தாமே. 640

இருந்தாரே சிலகால முகாந்தகாலம்
யெழிலான சட்டமுனி சமாதிபக்கல்
திருந்தவே வந்திசந்தி மத்தியானம்
தீர்க்கமுடன் தேவதா புஷ்பங்கொண்டு
அருந்தவசி போலாக மாண்பரெல்லாம்
அப்பனே நெடுங்கால மிருந்துகொண்டு
பொருந்தவே சிவயோக நிலையில்நின்று
பொங்கமுடன் வரைகோடி யிருந்தார்பாரே. 641

பாரப்பா யின்னமொரு புதுமைகூர்வேன்
பாலகனே புலஸ்தியனே மச்சகேந்திரா
நேரப்பா ராமதேவ ரென்னுஞ்சித்து
நெடிதான லோகபதி சித்தென்பார்கள்
தேரப்பா மாணாக்க ரிறுநூறாகும்
தெளிவான முனிவருக்கு கந்தமாண்பர்
சீரப்பா வுபதேசங் கொண்டமாண்பர்
சிற்பரனே புலஸ்தியனே திண்மைபாரே. 642

Koviloor Digital Library

திண்மையா முப்பிறப்பில் ராமதேவர்
தீர்க்கமுட னிப்பிறப்பில் யாக்கோபானார்
வண்மையாம் யாக்கோபு யென்றநாமம்
வகுத்தார்கள் மக்கதேச மாண்பரெல்லாம்
உண்மையாய் மக்கமதீன் நகருக்கப்பா
உத்தமனே யாக்கோபு சென்றபின்பு
கண்மையாம் சுன்னத்து செய்தாரங்கே
கருவான ரொட்டியது தந்தார்பாரே. 643

தந்தாரே வசேனசேன் என்றேயோதி
தகமையுள்ள யாக்கோபு சித்தருக்கு
சொந்தமுடன் மனதுவந்து மலுங்குமாருஞ்
சோறாமல் சோடசோ பாரத்தோடு
நிந்தனைகள் நேராமல் மலுங்குமார்கள்
நீதியுடன் நபிநாயன் சமாதிபக்கல்
வந்தனையாய் தானழைத்து கொண்டுசென்றார்
வளமுடனே யாக்கோபை மதிப்பிட்டாரே. 644

மதிக்கவே தீன்மார்க ளதீதங்கோடி
மன்னவனார் யாக்கோபு சித்தருக்கு
துதிக்கவே மக்காவின் தேசத்தார்கள்
துப்புரவாய் மாணாக்க ரதீதங்கொண்டு
நதிப்புடனே மாணாக்க ராயிரம்பேர்
நலமுடனே திரள்கூட்ட மொன்றாய்க்கூடி
கதிப்புடனே யாக்கோபு பாலனுக்கு
கனமுடனே மாண்பர்களாய் கூடினாரே. 645

கூடினார் புலஸ்தியனே புண்ணியவானே
கொற்றவனே மச்சகேந்திரா பூபாலாகேள்
தேடியே சிவவாக்கிய சித்தருக்கு
தெளிவான மாணாக்க ருரைப்பேனப்பா
நாடியதோர் மாணாக்கர் முன்னூறாகும்
நலமான சித்தருக் குகந்தமாண்பர்
ஆடியதோர் சிவாக்கிய சித்துதாமும்
யவனிதனில் சிவயோகம் பூண்டசித்தே. 646

Koviloor Digital Library

சித்தான சித்துமுனி சிவவாக்கியதேவர்
தெளிவான யோகநிலை யிருக்கும்போது
முத்தான பரவொளியை காட்டுஞ்சித்து
மூதுலகை தான்கடந்த சித்துமாவார்
சத்தான சித்துநிலை கொண்டபோது
சதுரான ஞானோப நிலையினின்று
பத்தான பரம்பொருளை மனதிலுன்னி
பாரினிலே நெடுங்கால மிருந்தார்தானே. 647

நெடுங்கால மிருந்ததொரு சித்துமப்பா
நெடிதான சிவவாக்கிய நாதருக்கு
பருந்துயர மேதேனு நேர்ந்திட்டாலும்
பரமவொளி மனோன்மணியா ளருளினாலே
கொடும்பிணிக ளேதுபவம் வந்திட்டாலும்
குவலயத்தில் சூரியன்முன் பனிகள்போலே
தொடுகுறிபோல் விட்டுலகி யன்புள்ளாரும்
தோற்றமுட னெடுங்கால மிருந்திட்டாரே. 648

இட்டதொரு புலத்தியனே யின்னஞ்சொல்வேன்
யெழிலான சீடவர்க்கஞ் சொல்லொண்ணாது
அட்டாங்க யோகமதிற் சென்றசித்து
வப்பனே புண்ணாக்க னென்றசித்து
தொட்டகுறி போலாகத் தோன்றுஞ்சித்து
துரைராஜ சுந்தரனே மச்சகேந்திரா
விட்டகுறை யிருந்ததொரு தன்மையாலே
வேதாந்தப் புண்ணாக்கர் சித்தானாரே. 649

சித்தான சித்துமுனி புண்ணாக்கர்க்கு
சிறப்பான சீடவர்க்கஞ் சொல்வேனப்பா
புத்தான பையெடுக்கும் வாணிபந்தான்
புகழான சீடவர்க்க மாறுபேராம்
குத்தாலந் திரிந்ததொரு குடிகளப்பா
குருமக்கள் பதினாறு பதினாலாகும்
சத்தபுரி தான்திரியும் வணிகன்மார்கள்
சதாநித்தம் சீடவர்க்கம் முப்பத்தாறே. 650

Koviloor Digital Library

ஆறான குதம்பையுட மார்க்கங்கூர்வேன்
அப்பனே புலத்தியனே மச்சகேந்திரா
கூறான குதம்பைக்கு சீடவர்க்கம்
குறிப்பான மாணாக்கர் எட்டதாகும்
நீறான தளபதிக ளொன்பதாகும்
நிட்களங்க மானதொரு மாண்பரப்பா
தாறான தாயாநிதிபோல் சித்தருக்கு
தகமையுள்ள மாணாக்க ரிவர்கள்தானே. 651

தானான புலத்தியனே தம்பிரானே
தகமையுள்ள சித்தர்முனி நாதர்தம்மில்
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனா ரெந்தனுக்குச் சொன்னமார்க்கம்
தேனான மனோன்மணியாள் கிருபையாலும்
தேற்றமுடன் யென்னாளு முறுதிகொண்டு
பானான பரஞ்சுடரை மனதிலுன்னி
பாலித்தேன் சதகோடி வருடந்தானே. 652

வருடமா மின்னமொரு மார்க்கங்கூர்வேன்
மகத்தான புலத்தியனே மதிவல்லோய்கேள்
தெருள்கலையிற் றெள்ளமுர்தே செந்தேனேகேள்
தெளிவான மணிவிளக்கே மன்னாபொன்னா
இருளகன்ற சூரியன்போல் பிரகாசிக்கும்
யெழிலான சித்துமுனி சித்துபாலா
அருளில்லார்க் கொன்றுமில்லை யென்றவாக்கியம்
அப்பனே பொய்யாது மெய்யாம்பாரே. 653

பாரப்பா யின்னமொரு பளிங்குகூர்வேன்
பண்புள்ள புலத்தியனே பாவலோய்கேள்
தேரப்பா கருவூரா ரென்னுஞ்சித்து
தெளிவான சித்துமுனி நாதருக்கு
கூரப்பா மாணாக்க ரொன்பதாகும்
குறிப்பான தளபதிகள் மூன்றேயாகும்
சேரப்பா ஞானமதி யுண்டமாண்பர்
சிற்பரனே யானறிந்த மட்டுந்தானே. 654

Koviloor Digital Library

மட்டான மாணாக்க ரின்னங்கூர்வேன்
மகத்தான கருவூரா ரென்னுஞ்சித்து
திட்டமுடன் யேமலயங் கொண்டசித்து
தீர்க்கமுள்ள மாணாக்கர் மூவைந்தாகும்
சட்டமுடன் கருவூரார் சித்துதாமும்
சாங்கமுடன் ஞானமென்ற மாண்பரப்பா
அட்டதிசை புகழ்கொண்ட மாண்பரப்பா
வப்பனே சிவஞான சீடர்தாமே. 655

தாமான யின்னமொரு மர்மங்கூர்வேன்
தகமையுள்ள புலத்தியனே தம்பிரானே
சாமானிய மானதொரு சித்தரப்பா
தாக்குடைய யூகிமுனி சித்துதாமும்
கோமானாஞ் சித்தர்களுக் குகந்தபாலன்
கொற்றவனே சாத்திரத்தி லுகந்தயூகி
போமேதான் மாணாக்கர் பதிநான்காகும்
பொங்கமுடன் தளபதிக ளாறுபேரே. 656

பேரான யூகிமுனி மாணாக்கரப்பா
பெருமையுள்ள யித்தாதி மாண்பரெல்லாம்
கூரான ஞானப்பா லுண்டசித்து
குருபரனார் தான்மதிக்குங் குறும்பசித்து
நேரான திருப்பாலின் கடலுக்கப்பால்
நெடிதான சிவயோகங் கொண்டசித்து
பாரான ஜெயகண்டி பூண்டசித்து
பதமுடைய கவுபால முறவுதானே. 657

தானான யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
தகமையுள்ள புலத்தியனே தகமையோனே
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனா ரெந்தனுக்கு வுரைத்தவண்ணம்
தேனான மூலத்தி னீசனப்பா
தெளிவான சித்துமுனி நாதரப்பா
பானான மாணாக்கர் பகருவேன்யான்
பாலகனே தளபதிக ளெட்டுபேரே. 658

Koviloor Digital Library

பேரான புலத்தியனே புண்ணியரூபா
பெருமையுள்ள ரோமரிடி வளமைகூர்வேன்
நீரான ரோமரிடி புனிதனப்பா
நீதியுள்ள சித்துமுனி யென்பார்மாண்பர்
தூரான லோகபதி மாண்பர்தாமும்
துப்புரவாய் குருபீட மாகிநின்றோர்
காரான யேமத்தை துறந்தசித்து
கருவான ரோமரிடி யென்பார்தாமே. 659

தானான தளபதிக ளாறுபேராம்
தகைமையுள்ள சீடவர்க்கம் பதினெட்டாகும்
கோனான சீடர்களி ளாறுபேரில்
குறிப்பான வுபதேசம் பெற்றோர்மூவர்
பானான பரஞ்சுடரைக் காணாமாண்பர்
பாருலகில் குருடரென்ற சீடராகும்
மானான சீடவர்க்கம் பதினெட்டாகும்
மகத்தான பன்னிருவர் குருடராமே. 660

குருடான சீடவர்க்க மின்னங்கூர்வேன்
குவலயத்தி லின்னம்வெகு நாதருண்டே
அருளான ஞானப்பிர சித்தேகூர்வேன்
அருண்மைந்தா புலத்தியனே வறிவுள்ளானே
இருளகற்று மெய்ஞ்ஞானப் பொருளேகேண்மோ
யெழிலான சுந்தரா னந்தசித்து
தெருள்கலையிற் றேந்தெடுத்த சொரூபானந்தர்
தேற்றமுள்ள சுந்தரமாஞ் சித்துதானே. 661

சித்தான சுந்தரா னந்தருக்கு
சீருள்ள சீடவர்க்க மட்டமாகும்
முத்தான தளபதிக ளிரண்டுபேரா
மூதுலகில் சித்துதனைக் கண்டயோகி
தத்துவமாங் கடலதனைக் கடந்தசித்து
காசினியி லிவர்போலுஞ் சித்துமுண்டோ
முக்திவழி தானறிந்த முனிதானாகும்
மூதுலகைக் கட்டறுத்த சிங்கமாமே. 662

Koviloor Digital Library

சிங்கமா மாறுபேர் சீடரப்பா
சிறப்புள்ள சித்துகளுங் குருடராகும்
புங்கமா மட்டசித்துக் கண்டசீடன்
புகழ்பெரிய நாதாக்கள் மெச்சுமாண்பர்
தங்கமென்ற பொருளாசை விட்டோராகும்
தாரணியில் சிவயோக சொரூபராகும்
கங்கணமாங் கரந்தனிலே வேலுங்கொண்டோர்
காசினியி லருமையுள்ள சித்துமாச்சே. 663

ஆச்சப்பா யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
அப்பனே புலத்தியனே மச்சகேந்திரா
மூச்சடங்கி நெடுங்கால மிருந்தசித்து
மூதுலகில் சிவயோகங் கண்டசித்து
பாச்சலென்ற டமரகனா ரென்றசித்துப்
பாலகனே யவர்தமக்கு சீடவர்க்கம்
ஆச்சரிய மானதொரு சித்தருக்கு
வன்பான தளபதிக ளிர்ண்டுபேரே. 664

பேரான சித்தருக்கு சீடவர்க்கம்
பெருமையுள்ள மாணாக்கர் சோடசந்தான்
கூரான நகமுடனே சடையுமாகக்
கொற்றவனே சமாதிமுக மிருந்தசித்து
தேரான சமாதிதனி லிருந்துகொண்டு
தெளிவான பூரணத்தை மேலேநோக்கி
சீரான பதந்தனிலே சமாதிபூண்டு
சிற்பரனே தொண்டுமிகச் செய்தார்பாரே. 665

பாரேதான் புலத்தியனே பண்புள்ளானே
பாருலகில் சித்தர்முனி நாதர்தாமும்
கூரேதான் பதினெண்பேர் மெச்சும்பாலா
குவலயத்தில் டமரகனா ரென்றசித்து
சீரேதான் நெடுங்காலந் தவமிருந்து
தீர்க்கமுடன் தவநிலையி லிறங்கியேதான்
ஊரேதான் தவநிலையை யொட்டியல்லோ
வுத்தமனே வரைகோடி யிருந்தார்காணே. 666

Koviloor Digital Library

காணவே மாணாக்க ராறுபேராம்
கனமான தளபதிகள் நான்குபேராம்
பூணவே தளபதிகள் செவிடுவூமை
புங்கசித்தி கொண்டதொரு சொரூபராகும்
நீணவே மாணாக்க ரிரண்டுபேரும்
நிஷ்களங்க மானதொரு குருடேயாகும்
மாணமருங் கல்வியுள்ள சித்தேயாகும்
மகத்தான சீடவர்க்க மென்னலாமே. 667

என்னவே புலத்தியனே மச்சகேந்திரா
யெழிலான சித்துவர்க்க மின்னங்கூர்வேன்
மன்னவனாய் கொங்கணவ ரென்றசித்து
மானிலத்தில் வெகுகோடி மாண்பருக்கு
தென்னவனா மசுவனியா ரருளினாலே
தேற்றமுடன் ஞானோபங் கொண்டசித்து
நன்னயமாய் காயாதி சொரூபங்கொண்டு
நாட்டிலே வரைகோடி யிருந்தார்தானே. 668

தானான கொங்கணர்க்கு மாணாக்கரையா
தாரணியில் தளபதிகள் பதினாறாகும்
கோனான குருக்களவர் நான்குபேராம்
கொற்றவனே புலத்தியனே கூறொன்னாது
தேனான மனோன்மணியாள் கிருபையாலே
தேஜொளிவின் சின்மயத்தைக் கண்டசித்து
பானான பரம்பொருளை யறிந்தயோகி
பாரினிலே யிவர்போலே சித்துகாணே. 669

காணவே தளபதிகள் நான்குபேர்க்கு
கருவான வட்டசித்துங் கண்ணிற்றோற்றும்
பூணவே பன்னிரு தள்பதிக்கு
புகழான வாத்துமநிலை தன்னிற்காணும்
ஆணவமுந் தானொடுங்கி யவனிதன்னில்
அம்பரத்தைக் கண்டறிய மனதிலுன்னி
வேணபடி தவயோக நிலையிற்சார்ந்து
விட்டகுறை வருமளவுந் தவம்பூண்டாரே. 670

Koviloor Digital Library

பூண்டதொரு புலத்தியனே மச்சகேந்திரா
புகழான சித்துவர்க்கங் கூர்வேன்பாராய்
ஆண்டகையா மெனதைய ரசுவனியாந்தேவர்
அப்பனே யெந்தனுக்கு உரைத்தவண்ணம்
தூண்டியதோர் புஜண்டமகா சித்துதாமும்
துப்புரவாய் சமாதிமுகம் யேகும்போது
மாண்டதொரு மானிடர்கள் மாணாக்கர்தாமும்
மன்னவர்கள் நூறுபே ரென்னலாமே. 671

என்னவே யின்னமொரு மதீதங்கூர்வேன்
எழிலான புலத்தியனே மச்சகேந்திரா
துன்னவே பதினெண்பேர் வளப்பஞ்சொன்னேன்
சுந்தரனே சீடவர்க்கம் கூறிவிட்டேன்
நன்னயமாய் நாதாக்க ளாருந்தானும்
நலம்பெறவே சங்கையறக் கூறவில்லை
புன்னகையா லுந்தமக்கு தேவர்வாக்கு
புண்ணியனே யமைத்துதடா வறிவுள்ளானே. 672

அகஸ்தியர் புலத்தியருக்கு வெள்ளிமலை சிறப்பு கூறல்

அறிவான புலத்தியனே வன்புள்ளானே
வப்பனே யெந்தனிரு மணியேகேண்மோ
நெறியான நீதிவழி நடக்கவேண்டும்
நேர்மையுடன் சித்தர்பதம் பணியவேண்டும்
குறியான பவக்கடலை யகற்றவேண்டும்
கூர்மையுடன் பிரணவத்தை மாறல்வேண்டும்
வெறியனைப்போல் திரிந்தாலு மொன்றுங்கிட்டா
வேட்கமுடன் விட்டகுறை தேடுவாயே. 673

தேடவே வெள்ளியங் கிரியிலப்பா
தேவேந்திர பட்டமுடன் கோடிசித்தர்
நீடவே குகைதனிலே சமாதிசித்தர்
நெடுங்காலந் தவசிருப்பார் நாதர்தாமும்
கூடவே வனமூலி சித்தர்தாமும்
கும்பலாய்த் தவமிருப்பார் முனிவர்தாமும்
பாடவே நடுமையம் ரிடிதானப்பா
பாலகனே தவமிருந்தார் பண்புள்ளானே. 674

Koviloor Digital Library

பண்பான ரிடியாரும் துவாபரத்தில்
பாலகனே தவநிலையி லிருந்தாரப்பா
நண்பான நவகோடி ரிடிகள்தாமும்
நலமான ரிடியாரின் பக்கல்சார்ந்து
திண்ணமுடன் கொலுவிருப்பார் சித்தர்கூட்டம்
தீர்க்கமுடன் பணிதிக்கு பேவல்முன்பால்
வண்ணமுடன் காத்திருப்பார் நாதர்கூட்டம்
வளம்பெரிய வெள்ளிமலை வளப்பந்தானே. 675

தானான சித்தர்மலை குறக்கூட்டந்தான்
தனியான குண்ணருகே கும்பலாக
மானான தவயாகஞ் செய்துகொண்டு
மாறாமல் யென்னாளும் யோகங்கொள்வார்
தேனான மனோன்மணியா ளருளுங்கொண்டு
தேட்டமுடன் சமாதிக்கு விடமுந்தேடி
பானான பராபரியை மனதிலுன்னி
பாருலகில் நெடுங்கால மிருப்பார்தானே. 676

தானான வெள்ளியங் கிரியின்கீழே
தாக்கான குளமுண்டு குண்ணுமுண்டு
கோனான வசுவனியார் சொன்னநீதி
கொற்றவனே திரேதாயி னுகத்திலப்பா
மானான சூரியனார் வனந்தானுண்டு
மகத்தான வாரிதியாம் சுழலுமில்லை
பானான பரவொளியும் சொரூபமப்பா
பாலகனே வெளிக்காடு தோன்றும்பாரே. 677

பாரேதான் அசுவனிக்கு யிரண்டாம்பாட்டன்
பாலகனே திரேதாயி னுகத்திலப்பா
கூரேதன் பிரளயங்கள் நேர்ந்தபோது
குறிப்புடனே சமாதிமுகங் கொண்டார்தாமும்
ஆரேதான் நாதாக்க ளறிந்ததில்லை
யப்பனே திருச்சங்கு பாட்டனப்பா
சீரோகச் சமாதிமுகங் கொண்டுமல்லோ
தீர்க்கமுடன் ஆராதனை முதல்நின்றாரே. 678

Koviloor Digital Library

நின்றாரே நெடுங்காலம் பூசைமார்க்கம்
நீதியுடன் சித்துமுனி ரிடியார்தானும்
குன்றான சுனைகீழே பூசைமார்க்கம்
கொற்றவனார் செய்யுகின்ற காலந்தன்னில்
தென்றிசையி லசுவனியா ரெந்தன்பாட்டன்
தேசொளிவின் சின்மயத்தை யறிந்தசித்து
வென்றிடவே லோகபதி மாண்பரெல்லாம்
வேதாந்த சித்தெனவும் விளம்புவாரே. 679

அயக்களங்கு மகாசிடிகை வேதை

விளம்பவே யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
வீரான புலத்தியனே வித்வமாரா
தளம்படவே லோகாதி மாண்பருக்குத்
தகைமையுடன் அசுவனியார் சொன்னமார்க்கம்
சளமகற்றிக் கூறுகிறேன் சந்தனமாரா
சதுரான களங்கமப்பா சொல்லொணாது
நலம்பெறவே நாதாந்த சித்துதாமும்
நவிலவிலை யிப்பாகம் நவிலார்காணே. 680

காணவே களங்கமது யேதென்றாக்கால்
கட்டழகா காவலனே கழறக்கேண்மோ
தோணவே வயமதுதான் பலமோபத்து
தொகுப்புடனே தானெடுப்பாய் சுந்தராகேள்
பூணவே வமுரியினா லோகந்தன்னைப்
புகழ்பெறவே சுத்திப்பாய் சாமம்ரெண்டு
மாணவே பொடிதனையே ரவியுலர்த்தி
மன்னவனே வதிற்சேர்க்க மருந்துகேளே. 681

கேளப்பா புலத்தியனே புனிதவானே
கெவனமுடன் தானெடுப்பாய் தாரம்கெந்தி
வாளப்பா லிங்கமுடன் சிங்கிதானும்
வளம்பெரிய துரிசுடனே காசுகட்டி
தாளப்பா வீரமுடன் பூரந்தானும்
தகைமையுடன் சீனமது மதியுப்பொன்று
பாளப்பா போகாமல் யிவைகளெல்லாம்
பண்புபெறத் தூளாக்கி செப்பக்கேளே. 682

Koviloor Digital Library

செப்பவென்றால் சரக்கனைத்தும் பொடியதாக்கி
செயம்பெறவே ரவிதனையே ராவிமைந்தா
ஒப்பவே வயத்தினுட யெடையதாக
வுத்தமனே தான்சேர்த்துப் பொடியதாக்கி
தப்பிதங்கள் நேராமல் கண்டர்தம்மை
தகைமையுடன் லோகத்தி னெடையதாக
மெய்யுடனே பிசரியொன்றாய் சரக்கனைத்தும்
மேன்மையுடன் குகையிலிட்டுச் சீலைசெய்யே. 683

சீலையா மெழுசீலை வலுவாய்ச்செய்து
சிற்பரனே புலத்தியனே ரவியில்வைப்பாய்
மாலையா மூசைதனை யெடுத்துபாலா
மன்னவனே சரவுலையி லுருக்கித்தீரு
ஆலையா மூசைதனை யுடைத்துதீரு
வப்பனே யரகரா களங்கமப்பா
வாலையாம் புவனைதிரி புரைதானாகும்
மகத்தான பூசையது செபந்தான்கொள்ளே. 684

கொள்ளவே யேர்வையது தீர்ந்தபின்பு
கொற்றவனே புலத்தியனே குணமுள்ளானே
தெள்ளமுர்த மானதொரு களங்குதன்னை
தேற்றமுடன் களஞ்சிடைதான் யெடுப்பாய்மைந்தா
விள்ளவே மதிதனிலே சரிநேரொக்க
வீரமுடன் றான்கொடுத்து வூதிப்போடு
கள்ளமது வாராது கவிராஜேந்திரா
கருவான மதியதுவும் பழுக்கும்பாரே. 685

பாரப்பா மாற்றதுவும் ஆறதாகும்
பாலகனே தங்கமிடை சரியாய்த்தூக்கு
நேரப்பா தானுருக்கி வாரடித்து
நெடிதான புடமிடவு மாற்றோவெட்டு
சீரப்பா தங்கமென்ற புடந்தான்தீரு
தீர்க்கமுள்ள தங்கமது பிறவித்தங்கம்
கூரப்பா யாருக்கும் வெளிவிடாதே
கொற்றவனே பிறவியென்ற தங்கமாச்சே. 686

Koviloor Digital Library

ஆச்சப்பா புலத்தியனே மச்சகேந்திரா
அப்பனே யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
மாச்சலது வாராது களங்கமப்பா
மன்னவனே களங்கமது சரிநேர்தங்கம்
பாச்சியே களங்காக்கி யுருக்கிமைந்தா
பாலகனே கெந்தியது ரெட்டிப்பாக
வீச்சலுடன் சூதமது பாதியாகும்
வீரான வீரமது கால்தானாமே. 687

காலான சரக்கெல்லா மொன்றாய்க்கூட்டி
கருவான வயிரக்கல் தன்னிலப்பா
பாலான மூலிகையாந் தகரையாகும்
பாலகனே தானரைப்பா யாறுசாமம்
மாலான மெழுகுபத மாகவேதான்
மதியுடனே தானரைத்து ரவியில்வைப்பாய்
காலான கதிரவன்முன் வைத்தபோது
காவலனே கறுப்புநிறப் பொடியுமாமே. 688

பொடியான தூள்தனை மேருக்கேற்றில்
பொங்கமுடன் காசியென்ற குப்பிதன்னில்
படிகமென்ற மாக்கல்லால் கொண்டுமூடி
பதறாமல் வாலுகையா மேந்திரத்தில்
கடிகையா மறுபது நாழிதானும்
கன்னவனே தானெரிப்பாய் கமலம்போல
மிடியகல தானெரித்து மைந்தாகேண்மோ
மிக்கான செந்தூரங் கூறொண்ணாதே. 689

ஒண்ணாது செந்தூர மென்னசொல்வேன்
ஓகோகோ நாதாக்கள் கூறவில்லை
கண்ணான செந்தூரம் தன்னையப்பா
காவலனே பாச்சுதற்கு கருதான்கேளு
திண்ணமுடன் தேன்மெழுகு தன்னிலப்பா
தீர்க்கமுடன் பணவெடைதான் தூக்கமப்பா
தண்மையுடன் வெள்ளிதனில் நூற்றுக்கொன்று
தாக்கடா செந்தூரம் தன்னைத்தானே 690

Koviloor Digital Library

தானான வெள்ளிதனை தகடடித்து
தண்மையுடன் புடமிடவும் மாற்றோதங்கம்
கோனான வெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனா ரெந்தனக்கு வுரைத்தநீதி
தேனான தங்கமது பிறவித்தங்கம்
தெளிவான சித்தர்களுங் காணாத்தங்கம்
மானான மகதேவர் வசிக்குந்தங்கம்
மானிலத்தில் மாணாக்க ரறியார்தாமே. 691

சாரக்கட்டு

தாமான யின்னமொரு தகைமைகூர்வேன்
தாக்கான சூட்சமென்ற சுண்ணமப்பா
பூமானா மெனதையர் அசுவனியாந்தேவர்
புகழுடனே யெந்தமக்கு வுரைத்தவண்ணம்
சாமான மானதொரு சாரமப்பா
சாங்கமுடன் களஞ்சியது விருபதாகும்
ஆமோன் மாகவேதான் சாரத்துக்கு
வப்பனே சரக்குவகை செப்பக்கேளே. 692

கேளப்பா மதியுப்பு பலமொன்றாகும்
கெடியான சீனமது பலமொன்றாகும்
பாளப்பா போகாமல் தீநீரெட்டு
பாங்குடனே காரமது நாலதாகும்
தாளப்பா விந்துப்பு பலமொன்றாகும்
தண்மையுள்ள சவுக்காரம் பலமொன்றாகும்
நாளப்பா போகாமல் வளையலுப்பு
நலம்பெறவே பலமதுவும் நிறுத்துக்கொள்ளே. 693

கொள்ளவே கிளிஞ்சியென்ற சுன்னமப்பா
கொற்றவனே சமயெடையாய் நிறுத்துக்கொண்டு
அள்ளவே கிளிஞ்சியென்ற சுண்ணத்துக்கு
அப்பனே சரியெடையாய் கள்ளிச்சாம்பல்
விள்ளவே தானெடுப்பாய் மைந்தாபாரு
வித்தகனே கல்வமதி லிட்டுக்கொண்டு
எள்ளளவும் பிசகாமல் மைந்தாகேண்மோ
யெழிலுடனே கல்வமதிற் பொடிதான் செய்யே. 694

Koviloor Digital Library

பொடியான தூளதனை காயமிட்டுப்
பொங்கமுடன் பொடியதனைப் பாதியிட்டு
அடிதனிலே சாரமதை பொறித்துமேதான்
அப்பனே வதன்மேலேபொடியைத்தூவி
நெடிதான தீயதுவு முட்போகாமல்
நேர்மையுடன் சில்லிட்டு சீலைசெய்து
வெடியான புடமதுவும் கோழியாக
வித்தகனே தான்போட விதியைக்கேளே. 695

விதியான புடமதுவும் மாறியேதான்
வித்தகனே தானெடுத்து விள்ளக்கேளீர்
மதிவான கவசமதை யுடைத்துப்பாரு
பாலகனே யென்மக்காள் யென்ன கூர்வேன்
மதியான சந்திரனார் வண்மைபோல
வளமான சாரமது கட்டிநிற்கும்
துதிசெய்து மனோன் மணியாள் பதாம்புயத்தை
துப்புரவாய் யெந்நாளும் வணங்குவீரே. 696

வணங்குகையி லம்பாளும் நிர்த்தஞ்செய்வார்
வண்மையுள்ள சாரமதை திறந்துபார்க்க
அணங்க னென்னும் பைரவர்க்குச் சொன்னபூசை
சொல்லரிய நாதாக்கள் பலனறிந்து
இணங்கமுடன் கவசமதை நீக்கிப்பின்பு
யெழிலுடனே சாரமதை யெடுத்துப்பார்க்க
மணங்கமழும் சாரமது வண்டக்காற்றால்
மன்னவே பூநீர்போல் பூர்க்குந்தானே. 697

பூர்க்கவே சுண்ணாம்பு காரமேறி
புகழுடனே சாரமது சுன்னமாகும்
ஏர்க்கவே சுன்னமது யென்னசொல்வேன்
யெழிலான காரமது செப்பொண்ணாது
தீர்க்கமுள்ள சுன்னமது பதனம்பண்ணு
திரவியமோ நிதிவிளையும் சின்னக்காடு
நார்க்கமலம் வீற்றிருக்கு மம்பாள்பாதம்
நவின்றிடவே மென்னாளும் துதிகொண்டாரே. 698

Koviloor Digital Library

கொண்டிடவே சாரமதை யெடுத்துமைந்தா
கொப்பனவே கண்டருக்கு வங்கிகொண்டு
கண்டர்தனை ரவியில்வைத்து காய்ந்தபின்பு
கன்னவனே சுண்ணாம்பு சீலைசெய்து
விண்டிடவே சீலையது கோழியாக
விற்பனனே புடமிடவும் நீறிப்போகும்
அண்டர்புகழ் சுன்னமது யென்னசொல்வேன்
அப்பனே போக்கும்வகை யறையக்கேளே. 699

அறையவே சுன்னமதை சூதந்தன்னில்
அப்பனே களஞ்சிக்கு பத்துக்கொன்று
நிறையே தான்போட்டு செயநீராலே
நீதியுடன் தானரைப்பாய் சாமமொன்று
குறையாமல் தானரைத்து மைபோலாட்டிக்
கூர்மையுடன் மூசைதனில் வுருக்கித்தீரு
திறையகல காரமிட்டு வூதிப்போடு
தீர்க்கமுடன் வெள்ளியது சொல்லொண்ணாதே. 700

ஒண்ணாத வெற்றிதனை யென்னகூர்வேன்
ஓகோகோ நாதாக்கள் மறைத்துவைத்தார்
திண்ணமுடன் சூதமென்ற வெள்ளிதன்னைச்
சூட்டமுடன் சிவயோகங் கொள்ளல்நன்று
வண்ணமுடன் சாரமென்ற சுன்னந்தன்னை
வளமாகக் குடவனிலே பத்துக்கொன்று
நண்ணவே றானுருக்கிக் குருவொன்றீய
நளினமுட னூறலது வற்றுப்போமே. 701

போமேதான் குட்வனது பொன்னுமாகிக்
குடவனுமே பொன்னாகிப் பசுமைமெத்த
நாமேதா னுரைத்தபடி யேமந்தன்னை
நலமுடனே வாரடித்துப் புடத்தைப்போடு
வேமேதான் சுயத்தங்கம் பிறவித்தங்கம்
வேதாந்த தாயாருங் கண்டதங்கம்
ஆமேதான் நாதாக்க ளுரைக்கவில்லை
அப்பனே யாமுமக்கு வுரைத்திட்டேனே. 702

Koviloor Digital Library

இட்டேனே பசுமையென்ற தங்கந்தன்னை
யெழிலுடனே நாதாக்கள் மறைத்தார்தாமும்
கட்டான சாரமதை யெடுத்துபாலா
காவலனே வெடியுப்புக் கங்கிகொண்டு
சட்டமுடன் சுண்ணாம்புச் சீலைசெய்து
சாங்கமுடன் பாண்டமதில் மணல்தான்கொண்டு
திட்டமுடன் நடுமையம் சரக்குவைத்து
தீர்க்கமுடன் மண்ணதனால் மூடுமூடே. 703

மூடியே மேற்சட்டி கொண்டுதானு
மிக்கவே சீலையது வலுவாய்ச்செய்து
நீடியே தானெரிப்பாய் நான்குசாமம்
நீதியுடன் றானெரிக்க வெடிதானங்கே
கூடியே வெடிதானுஞ் சுன்னமாகிக்
கொற்றவனே தவளம்போ லிருக்கும்பாரு
வாடியே திரியாமல் அருண்மைந்தாகேள்
வளமுடனே பற்பமதை பதனம்பண்ணே. 704

பண்ணியே பற்பமதை யெடுத்துமைந்தா
பாவலனே றான்போகும் போக்குகேண்மோ
தண்மையுடன் மதிதனிலே பத்துக்கொன்று
தப்பாமல் தான்கொடுக்க தண்மைகேளீர்
வண்ணமுடன் மாற்றதுவு மெட்டேயாகும்
வாகான புடத்தங்கம் பிறவித்தங்கம்
சுண்ணமது கடுங்காரச் சுண்ணமப்பா
சுந்தரனே வெடியுப்பு வீரந்தானே. 705

தானான வீரமது யென்னகூர்வேன்
தாக்கான வெடியுப்பு சுண்ணமப்பா
தேனான மனோன்மணியாள் கிருபையாலும்
தேசொளிவின் சின்மயத்தி னருளினாலும்
மானான மகதேவர் கடாட்சத்தாலும்
மானிலத்தில் சித்தர்களின் பொருட்டினாலும்
பானான பரஞ்சுடரை மனதிலுன்னிப்
பாடினேன் பன்னீரா யிரந்தான்காணே. 706

Koviloor Digital Library

காணவே யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
காசினியில் நாதாக்கள் மறைத்தவண்ணம்
தோணவே வெகுகோடி நூல்கள்செய்தார்
தோறாத நூல்களிலே வனந்தங்கண்டேன்
மாணவே சிடிகைமுத லனந்தம்வேதை
மகாகோடி வேதைமுக மறைத்தசித்தர்
பாணம்போ லின்நூலில் அனந்தங்கோடி
பாடிவைத்தேன் பெருநூலி லுண்மைபாரே. 707

நாகப்பச்சை அயச்செம்பு

பாரேதான் சாத்திரங்கள் லக்கோயில்லை
பாருலகில் சித்தர்முனி யுரையாவண்ணம்
நேரேதான் யாமறிந்த மட்டுங்கூர்வோம்
நெடிதான புலஸ்தியனே மச்சகேந்திரா
சீரேதான் வயமதுவுந் துலந்தான்பத்து
சிற்பரனே பொடியாக்கி செப்பக்கேண்மோ
கூரேதான் சம்பழத்தின் சாற்றினாலே
குறிப்புடனே மூன்றுநா ளூறப்போடே. 708

போடேதான் கழுவியதை யுலரவிட்டுப்
பொங்கமுடன் காய்ந்தபின்பு யெடுத்துமைந்தா
ஆடவே நாகமென்ற பச்சைதன்னை
அப்பனே வயமிடைக்குப் பாதிகொண்டு
தேடவே துரிசியது வதற்குப்பாதி
தேற்றமுடன் றானிறுத்து செப்பக்கேண்மோ
நாடவே யிதிலகுவு நாரமப்பா
நலமான காரமது கூட்டிடாயே. 709

கூட்டிடவே சரக்கெல்லா மொன்றாய்ச்சேர்த்து
குணமுடனே தானுரைப்பாய் செயநீர்தன்னால்
ஆட்டவே நாற்சாம மரைத்தபின்பு
அப்பனே வச்சிரமாங் குகையிலிட்டே.
நீட்டமுடன் தானுருக்கி யெடுத்துப்பாரு
நிஷ்களங்க மானதொரு ரவியுமாச்சு
தேட்டமுள்ள ரவியதுவு மென்னகூர்வேன்
தேசொளிவின் சின்மயம்போல் சொலிக்குந்தானே. 710

Koviloor Digital Library

சொலிக்குகின்ற ரவியதனை யெடுத்துபாலா
சொரூபமென்ற வெள்ளிதனில் நாலுக்கொன்று
ஓலிக்கவே ரவிதனையே யுருக்கிமைந்தா
வுத்தமனே வங்கமிட்டு வூதிப்போடு
கலிக்காமல் மறுவோட்டில் பின்னுமூதி
கன்னவனே தான்பார்க்கத் தங்கச்செம்பாம்
வலிதான வயமதுவும் செம்பேயாகி
வண்மையுள்ள வெள்ளிதனை கப்பும்பாரே. 711

கப்பியே மதியதுவும் பழுப்புமெத்தப்
பாலகனே மாற்றதுவு மாறதாகும்
செப்பவே தங்கமது நாலுக்கொன்று
செயம்பெறவே தாமுருக்கி வாரடித்து
ஒப்பமுடன் புடமிடவு மாற்றோபத்து
ஓகோகோ நாதாக்க ளுரைத்தவண்ணம்
தப்பிதங்கள் நேராது துய்யபாலா
தாரணியில் அசுவனியார் வாக்குதாமே. 712

வாக்கான வாக்கதுவும் பொய்யாதப்பா
வளம்பெரிய நாதாக்க ளுரைக்கவில்லை
தூக்கமது பிறவியென்ற தங்கமாச்சு
துப்புரவாய் தங்கமென்ற செம்பேயாகும்
நோக்கமுடன் நாகமென்ற பச்சைதன்னை
நொடியாமல் தங்கத்துக் கிடைதான்கூட்டி
ஆக்கமுடன் காரமது வறையதாக
அப்பனே தான்பொடித்து அன்பாய்க்கேளே. 713

அன்பான நூலதனை அரியபாலா
ஆக்கமுடன் சம்பழத்தின் சாற்றினாலே
வண்மையுடன் தானரைத்து மைபோலாட்டி
வாகுடனே மூசைதனி லடைத்துமைந்தா
தென்னவனே சில்லிட்டு சீலைசெய்து
தேற்றமுடன் ரவிதனிலே காயவைத்து
முன்னவர்கள் சித்தர்முனி ரிஷிகள்தாமும்
மூதுலகி லுரைத்ததொரு நீதிபோலே. 714

Koviloor Digital Library

நீதியாம் மகாரிஷிகள் மனுவுபோலும்
நீணிலத்தில் பாடிவைத்த முறைபோகாமல்
ஆதியாஞ் சரக்கதனை மூசையிட்டு
அப்பனே தானுருக்கி யன்பாய்ப்பாரு
சோதியாம் ரவியதுவு மென்னகூர்வேன்
சொரூபமென்ற செகசோதி செம்புமாச்சு
வாதிகளோ காணார்கள் தங்கச்செம்பாம்
வானுலகு தேவர்களும் காணாரன்றே. 715

அன்றான செம்பதுவு மென்னகூர்வேன்
அப்பனே புலஸ்தியனே வறிவுள்ளானே
தென்திசையி லெனதைய ரசுவனியாந்தேவர்
தெளிவுடனே யெந்தனுக்கு வுரைத்தவண்ணம்
குன்றான தங்கமென்ற செம்புதன்னை
குருபரனே யாறுமாற் றாணிமேலே
வென்றிடவே பத்துக்கு வொன்றுதாக்க
வேலவனே மாற்றதுவு மெட்டதாமே. 716

எட்டான பொன்னதுவு மகிமைமெத்த
யெளிதான யேற்றமொன்று செப்பக்கேளீர்
மட்டான பொன்னதுவை வாரடித்து
மன்னவனே புடமிடவு மாற்றோபத்து
திட்டான சுயத்தங்கம் பிறவித்தங்கம்
சுடரொளியாம் நாதாக்கள் ஞானத்தங்கம்
அட்டதிசை ரிடிமுனிவர் நாதர்தாமும்
அருமையுடன் கண்டறிந்த தங்கமாமே. 717

வெள்ளி வித்தை

தங்மா மின்னமொரு போக்குகூர்வேன்
தாரணியில் நாதாக்கள் கூறவில்லை
புங்கசித்தி யெட்டுரிய புலஸ்தியாகேள்
பூவுலகில் மானிடர்க ளறியமாட்டார்
வங்கமெனும் வெள்வங்கந் துலமேயாகும்
வளம்பெரிய சூதமது துலமேயாகும்
இங்கிதமாம் வெள்ளையென்ற பாஷாணந்தான்
யெழிலுடனே துலமதுவு மொன்றுகாணே. 718

Koviloor Digital Library

காணவே சரக்கனைத்து மொன்றுகூட்டி
களிப்புடனே தானரைப்பாய் நிம்பச்சாற்றால்
பூணவே நாற்சாம மரைத்தபின்பு
புகழுடனே பில்லையது தட்டிமைந்தா
தோணவே ரவிதனிலே காயவைத்து
தோராமல் மேற்கவசஞ் செப்பக்கேளீர்
நீணவே மேற்கவச மேதென்றாக்கால்
நீறான மதியுப்பு ரேக்கதாமே. 719

ரேக்கான மதியுப்பு பலமொன்றாகும்
நெடிதான பூநீரு பலமொன்றாகும்
தேக்கான சரக்கிரண்டுந் தன்னையப்பா
தெளிவுடனே சம்பழத்தின் சாறினாலே
போக்கான சரக்கிரண்டு மைபோலாட்டி
பொங்கமுடன் முன்னரைத்த பில்லைதன்னை
வாக்கதுவும் பொய்யாமல் புலஸ்தியாகேள்
வண்மையுடன் கவசமது செய்திடாயே. 720

செய்யவே ரவிதனிலே காயவைத்து
செப்பெரிய சுண்ணாம்பு சீலைதன்னால்
பையவே தான்செய்து வுலர்ந்தபின்பு
பாலகனே பாண்டமதில் மணல்தான்கொண்டு
நையவே மணல்நடுவில் பில்லைவைத்து
நணுகாமல் மேலுமந்த மணல்தான்மூடி
வெய்யவே மேற்பாண்டந் தன்னில்மூடி
வேகமுடன் றானெரிப்பாய் சாமம்நாலே. 721

நாலான சாமமது யெரிந்தபின்பு
நாயகனே பாண்டமது திறந்துகாண்பீர்
சூலான மருந்துவகை மூன்றுதானும்
சுந்தரனே புலஸ்தியனே சுரூபங்கொண்டு
மாலான பற்பமென்ற களங்குபற்பம்
மகத்தான காரமது வதீதங்காணும்
சேலான பற்பமதை பதனம்பண்ணு
செப்புகிறே னுணுக்கமதை திறமாய்க்கேளே. 722

Koviloor Digital Library

கேளப்பா பற்பமதை பாகங்கூர்வேன்
கெடியான பாகமது யேதென்றாக்கால்
நாளப்பா போகாமல் நளினவர்னே
நலம்பெரிய வெள்ளியது த்லந்தானொன்று
பாளப்பா போகாமல் பளிங்குள்ளானே
பதமுடனே வெள்ளிக்கு யிடைநேராக
ஆளப்பா பற்பமதை யுருக்கித்தாக்கு
அப்பனே களங்கமது சொல்லொண்ணாதே. 723

சொல்லவே களங்கமதை தானெடுத்து
சொற்பெரிய ரவிதனிலே யெட்டுக்கொன்று
வெல்லவே தாமுருக்கி குருவொன்றீய
வேகமுடன் றான்பாய்ந்து சிவப்புமாறி
மெல்லவே ரவியதுவுந் துய்யான்போலும்
மேன்மையுடன் றான்வெளுத்து லாபங்காட்டும்
கொல்லனுலை தனிலுருக்கி சரிரண்டாக
கொற்றவனே மதியதுவுங் கூடச்சேரே. 724

சேர்க்கையிலே துய்யானுக் கொப்பேயாகும்
சேர்வையது காண்பதற்கு சிவமேயாகும்
பார்க்கையிலே சிவவேடம் பூண்டோர்க்கெல்லாம்
பாலகனே பூசைமுகம் சமாதிகிட்டும்
நீர்க்கமலம் வீற்றிருக்கும் தாயார்பாதம்
நிஷ்களங்க மானதொரு பதவிகிட்டும்
ஆர்க்கவே புலஸ்தியனே வன்புள்ளானே
அப்பனே யிப்பாக மருமைகாணே. 725

அஞ்சனம்

அருமையா மின்னமொரு மாக்கங்கூர்வேன்
அப்பனே புலத்தியனே வறிவுள்ளானே
பெருமையா மெனதைய ரகுவனியாந்தேவர்
பேருலகில் யெந்தனுக்கு வுரைத்தவாசம்
குருமொழியாய் பதங்கண்டு முறையுங்கண்டு
குறிப்புடனே யுந்தமக்கு வுரைத்தேனப்பா
கருமமது தொடராது துய்யபாலா
காசினியில் தானிருந்து சாமதிகொள்ளே. 726

Koviloor Digital Library

கொள்ளவே சிவயோக முமக்கேவாய்க்கும்
கோடி கோடிபவம் விட்டேயேகும்
மெள்ளவே தவநிலைக்கு வுறுதியாவாய்
மேன்மையுடன் சகலகலை யறியவல்லாய்
வள்ளலுயர் தென்பொதிகை தன்னில்வாழும்
மகத்தான சித்தர்பத முமக்கேகிட்டும்
தெள்ளமிர்த மானதொரு புண்ணியபூபா
தெகிட்டாத தென்கோவே யின்னங்கேளே. 727

கேளப்பா புலஸ்தியனே மச்சகேந்திரா
கெடியான சிடிகையென்ற மார்க்கங்கூர்வேன்
தாளப்பா வஞ்சனமா மைதானப்பா
தகைமையுடன் கூறுகிறேன் தயவுள்ளானே
சூளப்பா நீரிற்குள் சுழல்வண்டப்பா
சுந்தரனே விந்திரமாம் பட்டுப்பூச்சி
தாளப்பா மின்மினியாம் பூச்சிதானும்
தற்பரனே செவ்வட்டை மரவட்டையாமே. 728

வெட்டையாம் சிவந்ததொரு பூநாகமப்பா
வேகமென்ற காந்தமெனு மூசிக்காந்தம்
திட்டமுடன் மனோசிலையுஞ் சிணுங்கிதானுந்
தீர்க்கமுடன் சமனிடையாம் கல்வமிட்டு
சட்டமுடன் கஸ்தூரி பச்சைபூரம்
சாங்கமுடன் ரோசினையும் குங்குமப்பூ
அட்டதிசை தான்புகழும் புனுகுசட்டம்
அப்பனே தானெடுப்பாய் சரியதாமே. 729

சரியான சரக்கெல்லாம் கரியதாக்கி
சாங்கமுடன் மலைத்தேனாம் சாமம்நாலு
முறிபடவே தானரைப்பா யாறுசாமம்
முசியாமல் வெண்ணெயது போலாம்பாரு
கரிபோல மையதுவு மிகவே காட்டும்
காசினியில் நாதாக்க ளூரையாவண்ணம்
பரியான வஞ்சனமா மையின்போக்கு
பாலகனே சிமிழதனில் பதனம்பண்ணே. 730

Koviloor Digital Library

பண்ணியே சிமிழதனில் பதனம்பண்ணு
பாலகனே புலஸ்தியனே பாவலோய்கேள்
நண்ணவே ராகமுக மாளிசென்று
நாட்டிலுள்ள திரவியத்தை நண்ணலொப்பாய்
திண்ணமுடன் மையதனை கரத்திலேந்தி
தீர்க்கமுடன் பூசைமுகம் தானிருந்து
அண்ணலெனும் பராபரியை மனதிலுண்ணி
அம்பரத்தில் மையதனை யறிவாற்சொல்லே. 731

சொல்லவே யஞ்சனத்தை கையிற்றாக்கி
சொற்பெரிய தனமதனை யெடுக்கநண்ணி
வெல்லவே வஞ்சனமா மையினாலே
வேதாந்தத் தாயினது கிருபைகொண்டு
புல்லவே பிரணவத்தை யோதலாகி
புகழான வஞ்சனத்தைப் போடும்போது
நல்லதொரு பூமிதனில் இருக்கும் ஸ்தானம்
நலமுடனே நேத்திரத்திற் காணலாமே. 732

காணவே பூலோக நிதிகளெல்லாம்
காசினியில் மாணாக்கள் காணவேண்டி
மாணவே வஞ்சனத்தை யுந்தமக்காய்
மன்னவனே யானுரைத்தேன் மன்னாகேண்மோ
மாணமருங் கல்வியுள்ள மாண்பரெல்லாம்
மானிலத்தில் சித்துவிளை யாடுதற்கு
பூணவே வஞ்சனத்தை யாமுரைத்தோம்
புண்ணியனே யிதிற்செல்லும் வழியைக்கேளே. 733

வழியான வஞ்சனமாம் மையின்போக்கை
வாகுடனே லலாடமதில் திலதந்தீட்ட
சுழியான சுழிமுனையை மையதாக்கி
சுந்தரனே வுருவேற்ற மையின்வேகம்
பழியான வசியமுதல் ராஜயோகம்
பாருலகில் சகலசித்தும் பலிக்கும்பாரு
வழியான காவனத்தில் மிருகமெல்லாம்
காவலனே யுந்தமக்கு வசியமாமே. 734

Koviloor Digital Library

வெடியுப்புக்கட்டு

வசியமா மின்னமொரு மார்க்கங்கூர்வேன்
வாகான வெடியுப்பு பலந்தானொன்று
நிசிதமுள்ள கள்ளிப்பால் மூன்றுசாமம்
நீதியுடன் கண்டருக்குத் தானடித்து
பிசிதமுள்ள கட்டிதனை ரவியில்வைத்து
பிசகாமல் மூன்றுநாள் பாவகமே செய்து
நிசிதமுடன் பழம்புளியால் கவசங்கொண்டு
நீமகனே ரவிதனிலே யுலர்த்திடாயே. 735

உலர்ந்தபின்பு சீலையது சுக்கான்தன்னால்
வுத்தமனே வெழுசீலை வலுக்கச்செய்து
அலர்ந்திடவே புடமதுவும் காடையாக
அப்பனே போட்டிடவே யிறுகிக்கட்டும்
மலர்ந்துநின்ற வெடியுப்பு மார்க்கங்கூர்வேன்
மகத்தான வேதைமுகங் காணலாகும்
சலந்தனிலே அசையாத வுப்புமாச்சு
சாகரமுங் காண்பதற்கு வேதையாச்சே. 736

வெடியுப்புக் கட்டு

ஆச்சப்பா யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
அப்பனே புலஸ்தியனே மச்சகேந்திரா
மூச்சடங்கி முடங்கிநிற்கும் வெடியுப்பப்பா
மூதுலகில் நாதாக்க ளுரைத்தவண்ணம்
பாச்சலென்ற வெடியுப்பு பலமொன்றாகும்
பாருலகோர் தான்வழங்கும் கற்பமூலி
மாச்சலது நேராத புகையிலைதானாகும்
மன்னவனே வரைப்பலமா மொக்கனன்றே. 737

நன்றான புகையிலையை காம்புநீக்கி
நாயகனே மதியுப்புக் கங்கிகொண்டு
வென்றிடவே மண்சீலை வலுவாய்ச் செய்து
வெளியான ரவிதனிலே காயவைத்து
சென்றிடவே கனயெருவா மூன்றேயாகும்
செப்பியதோர் புடமிடவு முப்புக்கட்டும்
தென்திசையி லகுவனியார் வாக்குப்பொய்யா
தேற்றமுடன் மறுபடியும் பின்னுங்கேளே. 738

Koviloor Digital Library

கேட்கவே மார்க்கமது யின்னங்கேளீர்
கெடியான யெலந்தையென்ற மூலிதானும்
தாட்கமலம் வீற்றிருக்கும் தாயார்பாதம்
தகைமையுடன் கவசமது வலுவாய்ச்செய்து
நீட்கமுடன் யெழுசீலை வலுவாய்ச்செய்து
நிஷ்களங்க மாகவல்லோ புடந்தான்போடு
ஆட்கமுடன் புடமதுவுங் கோழியாக
அப்பனே போட்டிடவே யிறுகுந்தானே. 739

இறுகுமே வெடியுப்புக் கட்டினாலே
யெழிலான துருசதுவும் பற்பமாகும்
குறுகுமே சாரமது தந்தம்போலே
சூரான கட்டுமது சொல்லொண்ணாது
அறுகுமே சுன்னமது மிகவுங்கூர்வேன்
அப்பனே நாதாக்கள் மறைத்துவைத்தார்
மறுமமாய் சாத்திரங்கள் முன்பின்னாக
மறைத்துவைத்தார் முனிவர்களும் ரிடிகள்காணே. 740

வெடியுப்பு சுன்னம்

காணவே யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
கருவான புலத்தியனே கவிவல்லோனே
தோணவே வெடியுப்பு வேணமட்டும்
தோராமல் தானெடுத்து செப்பக்கேளீர்
மாணவே கல்வமதி லிட்டுமைந்தா
மாணாமல் யெண்சாமம் யெருக்கன்பாலால்
பூணவே தானரைத்துப் பில்லைசெய்து
புகழான ரவிதனிலே காயப்போடே. 741

போட்டுமே பில்லையது காய்ந்தபின்பு
பொங்கமுடன் சீலையது வலுவாய்ச்செய்து
நீட்டமுடன் புடமதுவுங் கோழியாக
நிண்ணயமாய் தான்போட்டு யெடுத்துப்பாரு
ஆட்டமென்ன பற்பமது யென்னகூர்வேன்
அரகரா நாதாக்கள் மறைத்தகூத்து
தேட்டமுடன் யுந்தமக்கு வுரைத்தநீதி
செப்புகிறேன் கைபாகந் திறமிதாமே. 742

Koviloor Digital Library

திறமான பற்பமதை பின்னுமப்பா
தீர்க்கமுடன் முன்னுரைத்த பாலினாலே
உறமுடனே தானரைத்து பில்லையாக்கு
வுத்தமனே கவசமது செப்பக்கேண்மோ
அறமுடனே வருக்கனிட மூலியப்பா
அப்பனே பழுப்பதனை யரைத்துமைந்தா
மறவாமல் பில்லைக்கு கவசங்கொண்டு
மன்னவனே புடமிடவும் சுன்னமாமே. 743

சுன்னமென்றால் சுன்னமது சொல்லொண்ணாது
சொற்பெரிய நாதாக்கள் கூறாவண்ணம்
வின்னமது நேராது சுன்னந்தன்னால்
வித்தகனே சுன்னமதை துருசுக்கப்பி
நன்னயமாய் அரக்கதுபோல் கவசம்செய்து
நயமுடனே ரவிதனிலே காயவைத்து
பன்னவே சீலையது வலுக்கச்செய்து
பாவலனே கோழியென்ற புடந்தான்போடே. 744

போடவே சுன்னமது யேதுகூர்வேன்
பொங்கமுடன் சூதமது தன்னைக்கொல்லும்
நீடவே வெள்ளியது யென்னகூர்வேன்
யென்மகனே நாதாக்கள் மறைத்தாரப்பா
கூடவே யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
குணமள்ள புலஸ்தியனே குறிவல்லோனே
பாடவே சிடிகையென்ற நுட்பங்கூர்வேன்
பாருலகில் சித்தர்முனி மறைத்தவாறே. 745

மறைவான செந்தூர மின்னங்கூர்வேன்
மானிலத்தில் நாதாக்கள் மறைத்தவண்ணம்
நிறைவான வெடியுப்பு பலந்தானொன்று
நிகரான கம்பியது கொண்டுமைந்தா
திறையான பிரமதண்டு பாலினாலே
தீர்க்கமுடன் பத்துநா ளடித்தபின்பு
குறையாமல் முன்போலவே வாலம்பாலால்
கொல்லெனவே தானடித்துக் காயப்போடே. 746

Koviloor Digital Library

போடப்பா யெழுசீலை வலுவாய்ச்செய்து
பொங்கமுடன் கோழியென்ற புடந்தான் போடு
நீடவே யாறினபின் னெடுத்துப்பாரு
நிஷ்களங் மானதொரு செந்தூரந்தான்
சாடவே செந்தூரந் தனையெடுத்து
தற்பரனே வெள்ளிதனில் பத்துக்கொன்று
ஆடவே வுருக்குமுகந் தன்னிலப்பா
அப்பனே தான்கொடுக்க மாற்றெட்டாமே. 747

வெடியுப்புச் சுன்னம்

எட்டான யின்னமொரு மர்மங்கூர்வேன்
யெழிலான சுன்னமது யென்னசொல்வேன்
திட்டமுடன் வெடியுப்பு பலந்தானொன்று
தீர்க்கமுடன் றானெடுத்து செப்பக்கேளீர்
சட்டமுடன் பச்சையென்ற திருக்கைத்தோலாம்
சாங்கமுடன் கட்டிக்கு வங்கிகொண்டு
பட்டயம்போல் சீலையது யேழுசெய்து
பாங்குடனே கோழியென்ற புடந்தான்போடே. 748

போட்டுமே புடமாறி யெடுத்துப்பாரு
பொங்கமுடன் சுன்னமது யேதுகூர்வேன்
ஆட்டுமே பற்பமதை வெள்ளிதன்னில்
அப்பனே பத்துக்கு வொன்றுதாக்க
தீட்டுமே மாற்றதுவு மெட்டதாகும்
நிஷ்களங்க மானதொரு தங்கமாகும்
தாட்டிக மானதொரு தங்கமப்பா
தாரணியில் நாதாக்கள் மறைத்தகூத்தே. 749

வெடியுப்புக் கட்டு

கூத்தான யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
குருபரனே சுந்தரனே புலஸ்தியாகேள்
நீத்தமுள்ள வெடியுப்பு பலந்தானொன்று
நீதியுடன் றானெடுத்து செப்பக்கேண்மோ
சாத்தமுடன் கல்லுப்பு சுன்னமப்பா
சாங்கமுடன் கல்சுன்னம் பலமேயாகும்
காத்தமாம் சங்கினிட சுன்னந்தானும்
வாகப் பலமொன்று நிறுத்திடாயே. 750

Koviloor Digital Library

நிறுத்துமே யண்டோடு சுன்னந்தானும்
நேரான சிப்பியொடு துருசுதானும்
பொறுத்துமே யிவ்வைந்தும் பொடியதாக்கி
பொங்கமுடன் தான்சரியா யிடைதான்கூட்டி
குறித்துடையாய் வறுத்துமே தானுணுக்கிக்
கொற்றவனே ஓடதனில் பாதிபற்பம்
நிறுத்துமே நடுமையம் வெடியுப்பிட்டு
நீங்காமல் மேற்பாதி பொடியைப்போடே. 751

போட்டுமே மேல்மூடி சீலைசெய்து
பொங்கமுடன் பத்தெருவிற் புடத்தைப்போடு
நாட்டமுடன் வெடியுப்புக் கட்டிப்போகும்
நலமான கட்டினதோர் வுப்புதன்னை
வாட்டமுடன் குகைதனிலே பாதியிட்டு
வளம்பெறவே சூதமதை நடுமையத்தில்
நீட்டமுடன் பற்பமதை மேலுமிட்டு
நிட்களங்க மாகவல்லோ சீலைசெய்யே. 752

செய்யவே பத்தெருவிற் புடத்தைப்போடு
செங்கமலக் கண்ணானே செப்பக்கேண்மோ
பைய்யவே புடமாறி யெடுத்துப்பாரு
பாலகனே சூதமணி யென்னசொல்வேன்
வெய்யபுக ழரிச்சந்திரன் கண்டசூதம்
வேதாந்தத் தாயாரு முறையுஞ்சூதம்
துய்யநல்ல சூதமணி யார்தான்கண்டார்
சுந்தரனே யுந்தமக்கா யுரைத்திட்டேனே. 753

உரைத்தேனே சூதமணி குளிகையாலே
ஓகோகோ நாதாக்கள் அனேகங்கண்டார்
திரைகடலும் சத்தசா கரமுங்கண்டார்
தீர்க்கமுட னாகாய வதிசயங்கள்
வரைந்தோடி குகைவனாந் திரங்களெல்லாம்
வாய்பாடு முறைபாடு யெல்லாங்காண்பீர்
மறைந்தவிடம் பொருள்காண்பீர் மன்னாகேண்மோ
வளம்பெரிய நாதாக்கள் கூறாரன்றே. 754

Koviloor Digital Library

அன்றான சாத்திரங்க ளனேகங்கூறி
அவனியிலே சித்தாதி முனிவரெல்லாம்
குன்றான மலைபோலும் குண்ணுபோலும்
கோடிமுறை சாத்திரங்கள் பாடிவைத்தார்
தென்திசையி லசுவனியார் தேவர்தாமும்
தேற்றமுட னெந்தனுக்கு வுரைத்தநீதி
வென்றிடவே மாணாக்கள் பிழைக்கவேண்டி
வெகுநூல்கள் பாவினங்கள் பாடினாரே. 755

வெடியுப்புக்கட்டு

பாடவே யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
பாலகனே வெடியுப்பு ஏழாங்காச்சல்
நீடவே நெடுங்கம்பி தனையெடுத்து
நெடிதான பாண்டமதில் செப்பக்கேளீர்
கூடவே கோவேறு சாணமப்பா
கொற்றவனே பாண்டமது நடுமையத்தில்
சாடவே தான்பரப்பி வுப்புதன்னை
சாங்கமுடன் தானமைத்து மேலுமூடே. 756

மேலான பாண்டமதை கவசித்தேதான்
மேன்மையுடன் கோழியென்ற புடந்தான்தீரு
காலான வுப்பதுவுங் கட்டிநிற்கும்
காவலனே புலஸ்தியனே மச்சகேந்திரா
காலான வுப்பதுவுங் காரமேறி
காசினியில் சரக்கனைத்தும் கட்டும்பாரு
நூலான நூலறிந்து நுணுக்கறிந்து
நுட்பமுடன் பாடிவைத்த பெருநூலாமே. 757

வெடியுப்புச் சுன்னம்

நூலான நூலதுதான் சடக்கறிந்து
நுவலுகிறேன் மாணாக்கள் பிழைக்கவேண்டி
சூலான மதியுப்புச் சுன்னங்கூர்வேன்
சுந்தரனே புலஸ்தியனே சொரூபவானே
தூலான வெடியுப்பு கட்டுதன்னை
துப்புரவாய் குழிக்கல்லில் தானமர்த்தி
பாலான பவளமல்லிச் செயநீராலே
பாலகனே நாற்சாம மரைத்திடாயே. 758

Koviloor Digital Library

அரைத்துமே மெழுகுபதந் தன்னிலாட்டி
அப்பனே பில்லையது லகுவாய்ச்செய்து
விரைக்கவே ரவிதனிலே காயவைத்து
வீரமுடன் சில்லிட்டு சீலைசெய்து
தரைக்குள்ளே குழியதுவு முழமதாக
தற்பரனே தானமர்த்திப் புடந்தான்தீரு
புரையதுவும் நேராமல் புனிதவானே
புகமுடனே தானெடுப்பாய் சுன்னந்தானே. 759

சுன்னமாஞ் சுன்னமது யென்னகூர்வேன்
சுந்தரனே விந்திரனே சுத்தயோகா
வின்னமது நேராது விந்தச்சுண்ணம்
வித்தகனே புலஸ்தியனே வினவிக்கேண்மோ
கன்னபரி சித்துமுனி யோகிநாதர்
காசினியில் சொன்னதில்லை கருவுள்ளானே
நன்னயமா யிந்தமுறை சுண்ணந்தானும்
நவின்றிட்டேன் அசுவனியார் பாதங்காணே. 760

காணவே புலத்தியனே புண்ணியயோகா
கண்மணியே கருவிலமே கவிராஜேந்திரா
பூணவே விச்சுண்ணம் நவலோகத்தில்
புங்கமுடன் பத்துக்கு வொன்றுதாக்க
பாணம்போல் சுன்னமதை கொடுத்துருக்க
பார்த்திவனே மாற்றதுவுங் கூரொண்ணாது
மாணவே வசுவனியார் கடாட்சத்தாலே
மன்னவனே பெருநூலை யோதினாரே. 761

செம்புசுத்தி

ஓதவே யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
ஓகோகோ நாயனா ருரைத்தபாகம்
நீதமுடன் வெடியுப்புப் பலந்தான்பத்து
நிஷ்களங்க மானதொரு புளிதான்பத்து
தோதமுட னிரண்டையுந்தா னொன்றாய்க்கூட்டி
தோராம லாறுவகை செயநீர்தன்னால்
சாதகமாய் தானரைப்பாய் யாறுசாமம்
தட்டாமல் பில்லையது வலுக்கச்செய்யே. 762

Koviloor Digital Library

செய்துமே ரவிதனிலே காயவைத்து
செங்கமலக் கண்ணானே செப்பக்கேளீர்
வெய்யவே யோட்டிலிட்டு சீலைசெய்து
வேகமுடன் புடமதுவும் கோழியாக
நையவே புடமாறி யெடுத்துப்பாரு
நாயனார் சுன்னமது யென்னகூர்வேன்
துய்யநல்ல சுண்ணமது துரைராஜேந்திரா
துப்புரவாய் ரவிதனிலே பத்துக்கொன்றே. 763

ஒன்றான செம்புதனை யுருக்கிமைந்தா
வுத்தமனே தான்கொடுக்க செம்புசெம்பொன்
குன்றான வூறலது வற்றுமேதான்
குறிப்புடனே யேமமென்ற தங்கந்தானாம்
அன்றெரித்த யாதிசிவன் தன்றன்னாணை
அப்பனே மாற்றதுவு மதீதங்காணும்
சென்றுதிரு விளையாட்டை யாடவல்லீர்
செப்பினேன் பன்னீரா யிரந்தானாமே. 764

கொங்கணவற்குபதேசித்த வெடியுப்பு

ஆமேதான் புலஸ்தியனே அன்புள்ளானே
அப்பனே யசுவனியார் சொன்னநீதி
நாமேதான் முறையோடும் வழிபாடோடும்
நவிலுகிறேன் வெடியுப்புக் கட்டுமார்க்கம்
போமேதான் பூனையென்ற மூலிதானும்
பொங்கமுடன் குகைபண்ணி காமிட்டு
வேமேதான் பூநீறு குன்றிதானும்
வேட்கமுடன் தான்கொடுத்து சீலைசெய்யே. 765

சீலையா மெழுசீலை வலுவாய்ச்செய்து
செப்புகிறேன் புடமதுவுங் கோழியாக
வாலையாம் புவனைதிரி புரைதானப்பா
வாகுடனே ஸ்தோத்திரித்து யெடுத்துப்பாரு
காலையாஞ் சூரியனார் வொளிபோல் வீசும்
காவலனே வெடியுப்பு நேர்மைபாரு
மாலையாஞ் சந்திரனார் வெண்மைதோன்றும்
மகத்தான வெடியுப்பு நேர்மைபாரே. 766

Koviloor Digital Library

நேர்மையா மின்னூலில் நுணுக்கமெத்த
நெறியுடனே பாடிவைத்தப் பெருநூலாகும்
கூர்மையா மின்னமொரு மார்க்கங்கூர்வேன்
குருபரனே பரஞ்சுடரே வதீதவானே
தீர்மையாம் நெடுக்கம்பி வெடிதானாகும்
தீர்க்கமுடன் கம்பளத்தின் ரோகமாகும்
கூர்மையாம் கவசமது மேலேகொண்டு
கருத்துடனே பாண்டமதில் பொதிந்திடாயே. 767

பொதியவே மேற்பாண்ட மூடியேதான்
பொங்கமுடன் சீலையது வலுவாய்ச்செய்து
சதிருடனே வாலுகையா யடுப்பில்வைத்து
சட்டமுடன் தானெரிப்பா யாறுசாமம்
மதியுடனே பாண்டமதை திறந்துபாரும்
மகத்தான கம்பியுப்பு கட்டிநிற்கும்
விதிப்படியே யுப்பதனை யெடுத்துப்பாரு
வித்தகனே மகத்தான கட்டுமாச்சே. 768

ஆச்சப்பா புலஸ்தியனே மச்சகேந்திரா
அப்பனே முன்போல் யெரிப்பாய்மைந்தா
மாய்ச்சலது நேராமல் பின்னுமப்பா
மகிமையுட தானெரிப்பாய் முன்போலாக
பாய்ச்சலுடன் மூன்றுமுறை யிந்தபாகம்
பாலகனே தானெரித்து யெடுத்துப்பார்க்க
வீச்சான கம்பியுப்புக் கடுங்காரமேறி
விதிப்படியே யுருகியது மணிபோலாமே. 769

மணியான மணியதுவு மென்னகூர்வேன்
மகத்தான நாதாக்க ளாடுங்கூத்து
கணிதமுடன் மணியெடுத்து புலஸ்தியாகேள்
கன்னவனே ரவிதனிலே பத்துக்கொன்று
அணிபெறவே குருவதனை யுருக்கிமைந்தா
அளவுடனே தான்கொடுக்க மதிபோலாகும்
துணிவுடனே செம்பெடுத்து பதனம்பண்ணு
துப்புரவாய் செம்புதனில் பத்துக்கொன்றே. 770

Koviloor Digital Library

பத்தான செம்புதனை யுருக்கிமைந்தா
பாவலனே தங்கமது வொன்றுசேரு
வித்தான தங்கமது வொன்றுகூட்டி
வித்தகனே வாரடித்துப் புடந்தான்போடு
சத்தான தங்கமென்ற யேமஞ்சேர்த்து
சதுரான வர்ணமது சொலிக்கும்பாரு
சுத்தமுள்ள செம்பதுவும் செம்பொன்னாகும்
சுந்தரனே யாமுரைத்தோ முண்மைபாரே. 771

வெடியுப்புச் சுன்னம்

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பதறாதே யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
நேரப்பா முன்னுரைத்த கம்பிதன்னை
நேர்மையுடன் சுட்டதனை யெடுத்துமைந்தா
சூரப்பா பேய்க்கதலிச் சாற்றினாலே
பெருமையுடன் தானரைப்பாய் நான்குசாமம்
சேரப்பா யடிமரத்தின் கட்டைச்சாற்றால்
தேற்றமுடன் தானரைப்பாய் சாமம்நாலே. 772

நாலான சாமமது வரைத்தபின்பு
நாவலனே பில்லையது வலுக்கச்செய்து
பாலான ரவிதனிலே காயவைத்து
பாலகனே சில்லிட்டு சீலைசெய்து
காலான புடமதுவுங் கோழியாக
கருத்துடனே தான்போட பற்பமாகும்
ஆலால விஷமுண்டோன் தன்னினானை
அப்பனே பற்பமது சொல்லொண்ணாதே. 773

சொல்லவே பற்பவகை போக்குகூர்வேன்
சொற்பெரிய நாதாக்க ளுரைத்தவண்ணம்
வெல்லவே பற்பமதை யெடுத்துமைந்தா
வேட்டமுடன் துருசுக்கு வங்கிபூண்டு
புல்லவே ரவிதனிலே காயவைத்து
பொங்கமுடன் கற்சுண்ணம் மூன்றுசீலை
தெள்ளமிர்த மானதொரு சீலைசெய்து
தேற்றமுடன் காடையென்ற புடந்தான்போடே. 774

Koviloor Digital Library

போடப்பா புடமதுவு மாறிப்பாரு
பொங்கமுடன் சுன்னமது நாவொண்ணாது
ஆடப்பா கண்டரது சுன்னமப்பா
அப்பனே கடுங்கார மென்னகூர்வேன்
நாடப்பா சுன்னமதை யெடுத்துமைந்தா
நலமுடனே போக்குவகை பிரித்துக்கூர்வேன்
சூடப்பா ரவிதனிலே பத்துக்கொன்று
சுந்தரனே தான்கொடுக்க மாற்றெட்டாமே. 775

எட்டான மாற்றதுவு மென்னகூர்வேன்
எழிலான புலஸ்தியனே மச்சகேந்திரா
அட்டதிசை தான்புகழும் நாதர்தாமும்
அப்பனே கண்டறிந்த சுன்னமப்பா
விட்டகுறை யிருந்ததொரு தன்மையாலும்
வேதாந்தத் தாயினது வருளினாலும்
தொட்டகுறி போலாக யுந்தமக்கு
தோற்றமுடன் அமைத்ததொரு கிருபைகாணே. 776

காணவே புலஸ்தியனே சுகுணமாரா
கருவான காவலனே கண்ணுள்ளானே
ஆணவங்கள் தானொடுங்கி வன்புள்ளானே
அப்பனே பதினெண்பேர் தாள்பணிந்து
பூணவே யவர்மனது யிளகாலகி
புகழுடனே தானடந்தால் யெல்லாஞ்சித்தி
வேணதொரு கருவிகர ணாதியந்தம்
வேட்கமுட னுந்தமக்கு வாய்க்கும்பாரே. 777

வெடியுப்புக்கட்டு

வாய்க்குமே யின்னமொரு மர்மங்கூர்வேன்
வளம்பெரிய நாதாக்கள் மறைத்ததோஷம்
நாய்க்கோட்டான் மூலமென்ற கிழங்குதானும்
நலமுடனே தானரைத்துக் குகைதான்செய்து
மாய்க்கவே வெடியுப்பு தனையெடுத்து
மாளவே குகைதனிலே சீலைசெய்து
காய்க்கவே ரவிதனிலே காயவைத்துக்
கனமான கோழியென்ற புடந்தான்கொள்ளே. 778

Koviloor Digital Library

கொள்ளவே கட்டதுவு மென்னகூர்வேன்
குவலயத்தில் நாதாக்கள் ரிடிகள்தாமும்
விள்ளவே யவரவர்கள் மறைத்ததோஷம்
விளம்பினே னுந்தமக்காய் வெளியதாக
தெள்ளமிர்த மானதொரு விந்தபோக்கு
தேடினா னுலகிலுள்ள மாண்பர்தாமும்
எள்ளளவும் விள்ளார்கள் புலஸ்தியாகேள்
யென்மகனே யுந்தமக்கா யுரைத்திட்டேனே. 779

இட்டேனே வெடியுப்பு கட்டுதன்னை
யெழில்பெறவே தானெடுத்து மன்னாகேண்மோ
சட்டமுட னுப்பதுவும் பலமொன்றாகும்
சார்பான கல்லுப்பு பலமொன்றாகும்
திட்டமுள்ள சீனமது பலமொன்றாகும்
தீர்க்கமுட னாறுவகை செயநீர்தன்னால்
அட்டதிசை தான்புகழ நான்குசாமம்
அப்பனே வரைத்தபின்பு செப்பக்கேளே. 780

செப்பவே பில்லையது வலுவாய்ச்செய்து
செம்மலுடன் ரவிதனிலே காயவைத்து
ஒப்பமுடன் ஓட்டிலிட்டு சீலைசெய்து
வுத்தமனே ரவிதனிலே காயவைத்து
தப்பிதங்கள் நேராமல் துய்யபாலா
சட்டமுடன் கோழியென்ற புடந்தான்போடு
நப்பில்ல பற்பமது கூரொண்ணாது
நாதாக்க ளுரைப்படியே சொன்னவாறே. 781

வாறான பற்பமது யென்னகூர்வேன்
வளம்பெரிய சித்தர்களும் கூறாவண்ணம்
நீறான பற்பமதை வெள்ளிதன்னில்
நீதியுடன் பத்துக்கு ஒன்றுதாக்கு
கூறான மாற்றதுவு மெட்டதாகும்
குருபரனே ரவிதனிலே பத்துக்கொன்று
மீறாமல் வாரடித்துப் புடந்தான்போடு
மிக்கான வயத்தங்கம் சுயமுமாமே. 782

Koviloor Digital Library

லிங்கக்கட்டு

சுயம்பான பாகமது வின்னுங்கூர்வேன்
சுந்தரனே புலஸ்தியனே சுத்தவீரா
நயம்பெறவே களங்கமதை தானெடுத்து
நாட்டிலுள்ள மாணாக்கர் பிழைக்கவேண்டி
பயம்படவே முலைப்பாலி லூறப்போடு
பாலகனே மூன்றாநா ளெடுத்துப்பின்பு
செயம்பெறவே போக்குவகை வழிதான்கூர்வேன்
சொரூபமுள்ள புலஸ்தியனே யின்னங்கேளே. 783

கேளப்பா மேற்போக்கு வதீதங்கூர்வேன்
கெணிதமுடன் கெந்தகமும் படிகாரந்தான்
தாளப்பா பொன்னரி தாரமாகும்
தகமையுடன் மூன்றுவரைப் பலமுமாகும்
கேளப்பா நேராமல் பொரடியாய்ச்செய்து
கொற்றவனே சிற்றண்டந் தன்னுக்குள்ளே
பாளப்பா போகாமல் பொடியைத்தானும்
பாகமுடன் சிற்றண்டந் தன்னிற்போடே. 784

போட்டுமே லிங்கமதை நடுவில்வைத்து
பொங்கமுடன் மேலுமந்த பொடியைப்போடு
நாட்டமுடன் பாண்டமதை மேலேமூடி
நலம்பெறவே சீலையது வலுவாய்ச்செய்து
வாட்டமுடன் பாண்டமதில் மணல்தான்கொட்டி
வளமாக நடுமையம் வண்டம்வைத்து
தேட்டமுடன் மேலுமதில் மணல்தான்மூடி
தெளிவாக பாண்டத்தால் மேல்தான்மூடே. 785

மூடியே தானெரிப்பா யாறுசாமம்
முக்கியமா யாறினபின் னெடுத்துப்பாரு
தேடியதோர் லிங்கமது யென்னகூர்வேன்
தேற்றமுடன் சரக்கைந்தும் கட்டிப்போகும்
மாடியே திரியாதே மன்னாகேளு
மார்க்கமுடன் லிங்கமது சிடிகைவேதை
ஆடியதோ ராட்டமெல்லாம் லிங்கத்தாட்டார்
அப்பனே சன்னிமுதல் தோஷம்போமே. 786

Koviloor Digital Library

போகுமே வேதைமுகங் கூறுவேன்யான்
பொங்கமுடன் வெள்ளிதனில் பத்துக்கொன்று
சாகமுடன் வெள்ளிதனை யுருக்கிப்பாலா
சட்டமுடன் தான்கொடுக்க மாற்றாறாகும்
வேகமுடன் வாரடித்து புடந்தான்தீரு
வேதையது புடத்துக்கு யேகாத்தங்கம்
பாகுடைய தங்கமது கூரொண்ணாது
பாலகனே சிவயோகத் தங்கமாமே. 787

லிங்கக்குரு

தங்கமா மின்னமொரு மார்க்கங்கூர்வேன்
தயாபரனே புலஸ்தியனே தயவுள்ளானே
புங்கசித்தி யெட்டுரிய புண்ணியபூபா
புகழான லிங்கமது புலமேயாகும்
இங்கிதமாம் கானகத்து மூலியப்பா
யெழிலான முள்ளங்கி ரசந்தானாகும்
வங்கமா மூலியது பிரண்டையாகும்
வளமுடனே ரசமிரண்டு மொன்றாய்க்கூட்டே. 788

கூட்டியதோ ரசமதனை யெடுத்துபாலா
குறிப்புடனே கட்டியதோ ருப்புதன்னை
தேட்டமுடன் மூலிகையின் சாற்றினாலே
தெளிவுறவே தானழைத்து லிங்கந்தன்னில்
நீட்டமுடன் கவசமது தானுங் கொண்டு
நிங்களங்க மாகவல்லோ சீலை செய்து
தாட்டிகமாய் கோழியென்ற புடந்தான்தீரு
தயாபரனே லிங்கமது வுருக்குமாம. 789

உருக்கான லிங்கமதை பதனம்பண்ணு
வுத்தமனே புலஸ்தியனே மச்சகேந்திரா
வருக்கவே மேதியின்றன் சாணந்தன்னால்
வளமுடனே குகையதுவு் மொன்றுசெய்து
நெருக்கமுடன் சூதமது நேரேயிட்டு
நெடிதான கரிநெருப்பில் வைத்துமேதான்
பெருக்கவே சூதமது யேகும்போது
பேரான லிங்கமது பத்துக்கொன்றே. 790

Koviloor Digital Library

ஒன்றான குருவதுவுங் கொடுத்தபோது
ஓகோகோ நாதாக்கள் மகிமையாலே
குன்றான சூதமது மடங்கிநின்று
குருபரனே பிட்டதுபோல் சொர்ணமாகும்
வென்றிடவே குகையிலிட்டு வுருக்கிப்பார்க்க
வேதாந்தத் தாயினது சொர்ணமாகும்
தென்றிசையி லெனதைய ரசுவனியாந்தேவர்
தேற்றமுடன் யெந்தனுக்கு வுரைத்தவாறே. 791

பாஷாணநவநீத செந்தூரம்

வாறான புலஸ்தியனே யின்னங்கூர்வேன்
வளம்பெரிய நாதாக்க ளுரையாவண்ணம்
ஆறான நவநீத பாஷாணத்தான்
அப்பனே செந்தூர முறைபாடெல்லாம்
நீறான போக்குவகை பாஷாணத்தின்
நேர்மையுடன் மித்துருவு சத்துருவுமாக
கூறான வினங்கண்டு பதமுங்கண்டு
குறிப்புடனே யாமுரைப்போ முறைதான்பாரே. 792

பாரப்பா லிங்கமுடன் வீரம்பூரம்
பாங்கான தாளகமும் சூதங்கெந்தி
சேரப்பா தொட்டியென்ற பாஷாணந்தான்
செம்மலுடன் வெடியுப்பு நாகஞ்சேரு
நேரப்பா யிவையெல்லா மொன்றாய்க்கூட்டி
நிஷ்களங்க மாகவேதான் கல்வமிட்டு
ஆரப்பா யாறுவகை செயநீர்தன்னால்
அப்பனே தானரைப்பாய் சாமம்நாலே. 793

நாலான சாமமது வரைத்தபோது
நலம்பெரிய சரக்கெல்லா மொன்றாய்ச்சேர்த்து
பாலான நவநீத தொந்தத்தாலே
பாங்கான சரக்கெல்லாங் கட்டிக்கொள்ளும்
மேலான சரக்கனைத்து மரைத்துபில்லை
மேன்மையுடன் தான்செய்து ரவியில்வைத்து
ஆலால முண்டதொரு னவ்யன்பாதம்
அப்பனே தாள்வணங்கி சீலைசெய்யே. 794

Koviloor Digital Library

செய்யவே பாண்டமதில் மணல்தான்செம்மி
செப்பெரிய மருந்ததனை நடுமையத்தில்
பையவே தானமர்த்தி மணல்தான்மூடி
பாங்குடனே மேற்பாண்டஞ் சீலைசெய்து
வெய்யவே தானெரிப் பாய் காலமாக
வெண்சாம மானபின்பு வாறவிட்டு
நையவே மூன்றாம்நா ளெடுத்துப்பாரு
நாயகனே செந்தூரஞ் சொல்லொண்ணாதே. 795

சொல்லவே செந்தூரங் கூரொண்ணாது
சொற்பெரிய நாதாக்கள் கூறும்வண்ணம்
மெல்லவே பாண்டமது தான்திறந்து
மேன்மையுடன் தானெடுத்துப் பதனம்பண்ணு
புல்லவே மதிதனிலே பத்துக்கொன்று
புகழ்பெறவே தானுருக்கி குருவொன்றீய
நல்லதொரு யேமமது கூரொண்ணாது
நாதாந்த சித்துமுனி கூர்ந்தவாறே. 796

கூர்ந்ததே மனதுவந்து யெந்தநாதர்
குருவான வசுவனியார் வுரைத்தநீதி
சேர்ந்ததொரு வாக்கதுவும் பொய்யாதப்பா
தெளிவுடனே யுந்தமக்கா யுரைத்தேன்கண்டாய்
சார்ந்ததொரு பசுபாச நிலையில்நின்று
சற்குருவை சதாகால நிலையிற்கொண்டு
கூர்ந்துமே சமாதிமுகங் கொண்டேயேகி
கூர்மையுடன் யென்னாளும் தியானமோதே. 797

லிங்கப்போக்கு

ஓதவே யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
ஓகோகோ நாதாக்க ளுறையாவண்ணம்
நீதமுடன் லிங்கமது களஞ்சிபத்து
நிம்பழத்தின் சாறுடனே தேனுங்கூட்டி
சாதகமாய் சுருக்கதுவும் நான்குசாமம்
சட்டமுடன் தான்கொடுத்து சாற்றக்கேளீர்
தோதமுடன் கானகத்தி னரக்குஉண்டு
தோராமல் களஞ்சியது பத்ததாமே. 798

Koviloor Digital Library

பத்தான சரக்கதுவும் மறைத்துமேதான்
பாலகனே புலத்தியனே புண்ணியபூபா
சத்ததுவு மேகாம லரைத்துக்கொண்டு
சாங்கமுடன் லிங்கமதற் கவசங்கொண்டு
புத்தான சீலையது வலுவாய்ச்செய்து
பூரணமா் மண்மறைவில் புடந்தான்தீரு
பத்தியுடன் புடமாறி யெடுத்துப்பாரு
பாலகனே யுறுக்கதுபோல் கட்டும்பாரே. 799

கட்டியதோர் லிங்கமதை யெடுத்துமைந்தா
காவலனே செம்பதனில் பத்துக்கொன்று
திட்டமுடன் தானுருக்கி குருவொன்றீய
தீர்க்கமுள்ள களிம்பான செம்புங்கட்டும்
சட்டமுடன் கரியோட்டில் வூதிப்போடு
சார்பான ஊறலது தானுமேகி
வட்டம்போல் நின்றாடும் செம்புதானும்
வண்மையுள்ள நிறமதுவுஞ் செப்பொண்ணாதே. 800

செப்பவென்றால் நாவில்லை பாவுமில்லை
செயராஜ சுந்தரனே யின்னங்கேண்மோ
ஒப்பரிய நாதாக்கள் மறைத்துவைத்தார்
வுத்தமனே யெனதைய ரசுவனியாந்தேவர்
மெப்புடனே யெந்தனுக்கு வுரைத்தவண்ணம்
மேவலுட னுந்தமக்கா யாமுரைத்தேன்
இப்படியே கைபாகம் பிசகிடாமல்
யெழிலுடனே செம்பதனை வைத்துக்கொள்ளே. 801

கொள்ளவே செம்பதனை யெடுத்துபாலா
கொற்றவனே மதிதனிலே பத்துக்கொன்று
எள்ளளவும் பிசகாமல் கொடுத்தாயானால்
யென்னசொல்வேன் மாற்றதுவு மேழேயாகும்
தெள்ளமிர்த மானதொரு புலஸ்தியாகேள்
தேட்டமுடன் வாரடித்து புடந்தான்தீரு
உள்ளபடி தங்கமது யெறங்கும்பாரு
வுத்தமனே யசுவனியார் சொன்னவாக்கே. 802

Koviloor Digital Library

லிங்ககுரு

வாக்கான வாக்கதுவும் பொய்யாதப்பா
வளம்பெரிய நாதாக்கள் மறைத்துவைத்தார்
போக்கில்லா முறைபாடு யின்னங்கூர்வேன்
புகழான லிங்கமென்ற கட்டுரைப்பேன்
தூக்கமுடன் லிங்கமது பல்லொன்றாகும்
துப்புரவாய் தானெடுத்துச் செப்பக்கேளீர்
ஆக்கமுடன் செம்புதனை ராவிமைந்தா
அப்பனே முன்னுரைத்த லிங்கந்தானே. 803

தானான லிங்கமதை யெடுத்துபாலா
தகைமையுடன் குகைதனிலே நூல்தானிட்டு
மானான லிங்கமதை மேலேவைத்து
மார்க்கமுடன் செம்பதனை மேலுமிட்டு
பானான சீலையது வலுவதாக்கி
பாலகனே ரவிதனிலே காயவைத்து
கோனான வசுவனியா ருரைத்தவண்ணம்
கொற்றவனே நெருப்பதனில் புடத்தைப்போடே. 804

போடவே புடமாறி யெடுத்துப்பாரு
பொங்கமுடன் லிங்கமது கம்பிபோலாம்
சாடவே வெண்மை யென்ற நிறந்தான்தோன்றும்
சாங்கமுடன் லிங்கமதை யெடுத்துப்பாலா
நீடவே முன்னுரைத்த பாவினம்போல்
நேர்மையுடன் செம்பதனை யுருக்கிமைந்தா
கூடவே குகைதனிலே யுருகும்போது
குருபரனே பத்துக்கு வொன்றுதாக்கே. 805

தாக்கவே யோட்டிலிட்டு வூதிப்போடு
தண்மையுடன் செம்பதுவுங் கூறொண்ணாது
வாக்கதுபோல் செம்பொன்று தங்கமொன்று
வளம்பெறவே மதியொன்று தானுங்கூட்டி
போக்கில்லா குகைதனிலே வுருகிமைந்தா
பொங்கமுடன் தானெடுத்து பார்த்தபோது
தூக்கமது ஊட்டமுடன் பொன்னேயாகும்
துப்பற்று நிறந்தோன்ற புடந்தான்போடே. 806

Koviloor Digital Library

புடமதுவும் தீர்ந்தபின்பு புகழுள்ளானே
புங்கசித்திக் குரியதொரு தங்கப்பொன்னாம்
அடலான மாற்றதுவு மெட்டேயாகும்
அப்பனே சிவயோகப் பொன்னுமாகும்
விடலாக யிருந்ததொரு புண்ணியோர்க்கும்
விட்டகுறை யிருந்ததொரு சாதுமார்க்கும்
திடமான காயசித்தி கொண்டபேர்க்கும்
தீர்க்கமுடன் தானமையும் அதீதங்காணே. 807

கட்டினலிங்கம் வேதை காண

காணவே யின்னமொரு மதீதங்கூர்வேன்
கருவான புலஸ்தியனே கணேசபாதா
பூணவே முன்னுரைத் தகட்டுலிங்கம்
புகழான லிங்கமதை யெடுத்துமன்னா
தோணவே நற்கையான் மூலிதானும்
தொந்தமுடன் தானரைத்து கவசங்கொண்டு
மாணவே சீலையது வலுவாய்ச்செய்து
மன்னவனே புடமதுவு முமிதான்பாரே. 808

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பாலகனே புடமாறி யெடுத்துப்பாரு
தேரப்பா லிங்கமது யென்னகூர்வேன்
தேசொளிவின் லிங்கமது நாவொண்ணாது
சீரப்பா புடமதுவு மூன்றேயாகும்
சிற்பரனே சொல்வதற்கு நாவுமில்லை
ஆரப்பா ஆட்டமெல்லாம் லிங்கத்தாட்டு
அப்பனே போக்குவகை செப்புவேனே. 809

செப்புவேன் மதிதனிலே பத்துக்கொன்று
செழிப்புடனே தானுருக்கி குருவொன்றிய
தப்பிதங்கள் நேராது தருமபாலா
தயாபரனே ஓட்டிலிட்டு யூதிப்போடு
மெப்பமுடன் மாற்றதுவு மெட்டுக்கொக்கும்
மேதினியில் சிவஞான யோகிகாண்பான்
இப்புவியி லார்காண்பார் புண்ணியோனே
எழிலான தவயோகி காண்பான்தானே. 810

Koviloor Digital Library

மச்சமுனியாருக்கு வுபதேசித்த லிங்கக்குரு

தானென்ற தவயோகி காண்பதல்லால்
தாரணியில் புலஸ்தியனே தருமவானே
தானென்ற குடியிருப்பு மச்சனுக்கு
காசினியி லெனதைய ருபதேசித்த
தேனென்ற லிங்கமது போக்குசொல்வேன்
தென்னவனே புலஸ்தியனே தெளிவுள்ளானே
கோனென்ற லிங்கமது களஞ்சிபத்து
கொற்றவனே தானெடுப்பாய் மன்னாகேண்மோ. 811

மன்னவனே புலஸ்தியனே மதிவல்லோய்கேள்
மதிப்பான லிங்கமதை யோட்டிலிட்டு
நன்னயமாய் செருப்படையின் சாற்றினாலே
நலம்பெறவே சுருக்கதுவு மாறுசாமம்
பொன்னவனே தான்கொடுத்து மூலியாலே
பொங்கமுடன் கவசமது மிகவுஞ்செய்து
பன்னவே ரவிதனிலே காயவைத்து
பாலகனே வைந்தெருவிற் புடந்தான்தீரே. 812

தீர்க்கவே புடமதுவு மஞ்சதாகும்
திறமுடனே யெருவதுவு மஞ்சதாகும்
ஏர்க்கவே புடமதுவுந் தீர்ந்தபின்பு
யெழிலான லிங்கமதை யெடுத்துமைந்தா
பூர்த்ததொரு மதியதுவு மேழதாகும்
புகழான செம்பதுவு மூன்றதாகும்
ஆர்க்கமுடன் தானுருக்கிக் குருவொன்றிய
அப்பனே கரிக்குருபோல் சொலிக்குந்தானே. 813

சொலிக்குமே புத்தோட்டி லூதிப்போடு
சொரூபமுள்ள சுந்தரனே புலஸ்தியாகேள்
நலிக்கவே வரணமது யேதுகூர்வேன்
நாதாந்தத் தம்பியரே மாற்றோவேழாம்
பலிக்குமே புண்ணியற்கு யிந்தவேதை
பாருலகில் பாபியற்கு பலியாதப்பா
சலிக்காத வேதைமுகங் கண்டபேர்க்கு
சட்டமுடன் சிவயோகங் காணலாமே. 814

Koviloor Digital Library

சிடிகை லிங்கம்

காணலாம் புலஸ்தியனே கருவுள்ளானே
காசினியில் நாதாக்கள் மறைத்ததெல்லாம்
தோணவே யெனதைய ரசுவனியாந்தேவர்
தொல்லுலகை தான்மறந்து வுரைத்தவண்ணம்
ஆணவங்கள் மிகவடங்கி யடியேன்றானும்
அப்பனே யாமுமக்கு வுரைக்கலானோம்
வேணபடி யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
வேதாந்தத் தாயாரின் பாதங்காப்பே. 815

காப்பான லிங்கமொரு களஞ்சிபத்து
கருவாகத் தானெடுத்து கணக்குபோலே
மூப்பான கேசரியின் றயிலத்தாலே
முசியாமல் சுருக்கதுவும் கொடுத்தாயானால்
தேப்பில்லா லிங்கமது யிறுகியல்லோ
தெளிவான மெழுகதுபோல் திரைந்துநிற்கும்
ஆப்பதுபோ லுருகிநின்ற லிங்கந்தன்னில்
அப்பனே கவசமது செப்பக்கேளே. 816

செப்பவென்றால் தங்கமது பத்துக்கொன்று
செயம்பெறவே லிங்கத்திற் கங்கிகொண்டு
ஒப்பமுடன் முன்போல் நான்குசாமம்
வுத்தமனே சுருக்கதுவுங் கொடுத்தாயானால்
தப்பிதங்கள் நேராமல் தங்கந்தன்னை
தகைமையுட னுரிந்துகொள்ளும் லிங்கமப்பா
செப்பவே மெழுகதுவா யிறுகிநிற்கும்
செம்மலுடன் சிமிழ்தனிலே பதனம்பண்ணே. 817

பண்ணவே வெள்ளிதனில் பத்துக்கொன்று
பாவலனே தான்கொடுக்க மாற்றோவெட்டு
நண்ணவே செம்பதனில் பத்துக்கொன்று
நயமுடனே தான்கொடுக்க மாற்றோமிச்சம்
அண்ணலா ரெனதைய ரசுவனியாந்தேவர்
அன்புடனே தாமுரைத்த கைபாகந்தான்
திண்ணமுடன் விட்டகுறை யிருந்ததாலே
தீர்க்கமுட னுந்தமக்கு வாய்க்கலாச்சே. 818

Koviloor Digital Library

ஆச்சப்பா வாரடித்துப் புடந்தான்தீர்ந்தால்
அப்பனே சுயத்தங்கம் பிறவியென்பார்
மூச்சடங்கும் தேகமதுக் கிதுவேகாயம்
முசியாமல் மண்டலந்தான் கொண்டபேர்க்கு
மாச்சலது நேராது காயகற்பம்
மகத்தான கருங்கழுதைக் கருவேகாயம்
பாச்சலுட னருந்தினதோர் புண்ணியோர்க்கு
பாருலகில் தேகமது கற்பமாமே. 819

கற்பமா மிம்மெழுகு யார்தான்சொன்னார்
காசினியில் நாதாக்கள் மறைத்ததல்லால்
சொற்பமென்ற குளிகையது மெழுகுபற்பம்
சுந்தரனே மறைத்துவைத்தார் ரிடிகள்தாமும்
அற்பமென்ற காயாதி மார்க்கமெல்லாம்
அவனியிலே காணார்கள் மாண்பரெல்லாம்
கற்பமென்ற மெழுகதனைக் கைமறப்பாய்
காவலனே பாடிவைத்தார் கோடியாமே. 820

புசுண்டருக்குபதேசித்த லிங்ககுரு

கோடியா மின்னமொரு மார்க்கங்கூர்வேன்
கொற்றவனே புலஸ்தியனே புண்ணியதீரா
தேடியே நெடுங்கால மடியேன்றானும்
தேசங்கள் காடுபதி னாயிரங்கள்
ஓடியே பதினெண்பேர் சித்துமாரை
வுத்தமரைக் கண்டல்லோ வினையங்கொண்டேன்
பாடியே புசுண்டருக்கு யென்றன்தேவர்
பாலித்த பாகமதை யருள்செய்தாரே. 821

அருளான மகிமையெல்லா மறிந்துகொண்டேன்
அப்பனே புசுண்டருக்கு பாதங்கண்டேன்
இருளான யிருளகற்றி யெந்தன்தேவர்
யெழிலுடவே தாமுரைத்தா ரிந்தபாகம்
தெருள்கலையிற் றேர்ந்தெடுத்த புலஸ்தியாகேள்
தெளிவான கண்மணியே தெளிந்தமாரா
பொருளான பொருளறிந்து புசுண்டர்தம்பால்
பொங்கமுடன் தாமுரைத்த முறையதாமே. 822

Koviloor Digital Library

முறையான முறைகோடி தொந்தங்கோடி
மூதுலகில் நாதாக்க ளுரையாவண்ணம்
திரையகல லிங்கமது களஞ்சிபத்து
தீர்க்கமுடன் யெலியாலம் பாலினாலே
குறையாம லறுசாமம் சுறுக்குதாக்கு
குருபரனே பின்னுமதற் குவமைகேண்மோ
நிறையான திருவினையாள் வீற்றிருக்கும்
நிஷ்களங்க தாமரைதான் நூல்தான்காணே. 823

காணவே புலஸ்தியனே கவிவல்லோனே
கருவான செப்பகலாம் வட்டிலொன்று
பூணவே தாமரையாள் நூல்தானாகும்
புங்கமுடன் திரியாக்கி வைத்துமேதான்
சாணளவு மண்பாண்ட மகலேயாகும்
சட்டமுடன் திரியதனை யகலிலிட்டி
வேணதொரு யிலுப்பெண்ணை யதனிற்றாக்கி
வேட்டமுடன் வட்டில்தனில் லிங்கத்தாக்கே. 824

தாக்கியே லிங்கமது நடுமையத்தில்
தகைமையுடன் கட்டிதனை சுறுக்குதாக்கு
வாக்கதுவும் பொய்யாமல் மன்னாதென்னா
வளம்பெறவே குமரியின்றன் பூச்சாற்றாலே
நோக்கமுடன் சுறுக்கவுது நான்குசாமம்
நொறுக்கிடவே மெழுகாகும் வரைமுன்னாக
பாக்கதுபோல் திரண்டுமெழு காகிநிற்கும்
பாருலகில் புசுண்டருட மெழுகுதானே. 825

தானான மெழுகுதனை கதிரால்குத்தி
தண்மையுடன் காணுகைக்கு மெழுகுபோலாம்
பானான சுடரின்மேல் வுருகிக்காட்டும்
பாலகனே மெழுகுபத மென்றேயெண்ணி
கோனான லிங்கமதை யெறக்கிமைந்தா
கொற்றவனே சிமிழ்தனில் பதனம்பண்ணு
தேனான மனோன்மணியாள் தன்னைப்போற்றி
சின்மயத்தை யெந்நாளு மனதிலுன்னே. 826

Koviloor Digital Library

உன்னவே குருவெடுத்து மன்னாகேண்மோ
வுத்தமனே மதிதனிலே பத்துக்கொன்று
நன்னயமாய் தான்கொடுத்து வுருக்கிப்பாரு
நாதாந்த சிவயோக பொன்னுமாகும்
பன்னவே வாரடித்துப் புடந்தான்போடு
பாவலனே மாற்றதுவுங் கூறொண்ணாது
நன்னயமாய் புடத்தங்க முறுதித்தங்கம்
நாமுமக்கு வறிந்தவரை சொல்லலாச்சே. 827

ரோமரிடியார்வுபதேசம் பெற்ற லிங்கக்குரு

சொல்லவே யின்னமொரு வதீதங்கூர்வேன்
சொற்பெரிய நாதாக்கள் மறைத்தமார்க்கம்
வெல்லவே லிங்கமது பலந்தானைந்து
வெருளாமல் தானெடுத்து வகுக்கக்கேண்மோ
புல்லவே சிவந்த கத்தாழம்பாலால்
பூரணமாய் பட்சம்வரை சுறுக்குதாக்கு
செல்லவே பலமைந்து கதிசமாக
செப்புகிறே னோர்பலந்தா னதீதங்காணே. 828

காணவே பலம்நிறை வருகுமட்டும்
காவலனே சுறுக்கதுவுந் தாக்கவேண்டும்
பூணவே புல்லறிவால் மனதிலுன்னி
புகழ்பெறவே லிங்கமதிற் குழிதான்தோண்டி
மாணவே யாறுவகை மூலாதாரம்
மதிப்பான சரக்கதனைக் கவசஞ்செய்து
தோணவே புடமதுவுங் கோழியாக
தோராமல் போட்டிடவே கட்டும்பாரே. 829

கட்டான லிங்கமதை பதனம்பண்ணு
கருவான சூதமதை கணக்குபோல
திட்டமுடன் லிங்கமதிற் றளும்பவிட்டு
தீர்க்கமுடன் வனல்நெருப்பில் காச்சும்போது
சட்டமுடன் சூதமது பிட்டுபோலாம்
சார்புடனே வரும்போது பதமுங்கண்டு
அட்டதிசை தான்புகழும் சூதந்தன்னை
அன்புடனே தானெடுத்து அறையக்கேளே. 830

Koviloor Digital Library

அறையவே குகையிலிட்டு வுருகும்போது
அப்பனே வெள்ளியது மணிபோலாகும்
புறையதுவு மேகாமல் வெள்ளிதன்னை
புகழுடனே செந்தூரஞ் செய்தாயானால்
குறையாமல் ரவிதனிலே பத்துக்கொன்று
குருபரனே கொடுத்திடவே மாற்றோபத்து
நிறையதுவு மேகாது நீதவானே
நிஷ்களங்க மாகவல்லோ புடந்தான்தீரே. 831

புடமான புடமதுவுந் தீர்த்தாயானால்
பூரணமாந் தங்கமது கூறொண்ணாது
திடமான சுயத்தங்கம் பசுமைமெத்த
தீர்க்கமுள்ள சுந்தரனே சுகுணமாரா
கடலான லிங்கமதில் வந்துதித்த
காவலனே புலஸ்தியனே கருவுள்ளானே
சடமதுவு மழியாது சூதந்தன்னை
சாங்கமுட னுண்டவற்கு காயசித்தே. 832

சித்தான சித்துமுனி கண்டறிந்து
சிற்பரனே யெந்தமக்கா யுரைத்தவண்ணம்
பத்தியுட னெனதைய ரசுவனியாந்தேவர்
பாலித்தா ரவர்பாதம் வணங்கிநின்றேன்
முத்திவழி பெறுவதற்கு முதண்மைகண்டேன்
மூதண்ட வுலகாசை யான்மறந்தேன்
தத்துவத்தி நற்பெரியோர் பதமுங்கண்டு
தக்கபடி யுந்தமக்கு வுரைக்கலாச்சே. 833

ஆச்சப்பா சூதமது கொண்டபோது
அப்பனே நெடுவரையாங் கோடிகாலம்
மூச்சடங்கு சமாதிமுக மிருக்கலாகும்
மூதுலகை யெப்போது மறக்கலாகும்
மாச்சலது நேராது சடலமப்பா
மானிலத்தில் மறுபடியு மேகலாகும்
பாச்சலுடன் சமாதிமுகம் யின்னுமென்ன
பாலகனே சித்திமுத்தி யடையலாமே. 834

Koviloor Digital Library

காலாங்கிக்கு வுபதேசித்த துருசுகுரு

அடையலா மின்னமொரு வதீதங்கூர்வேன்
அப்பனே புலஸ்தியனே மச்சகேந்திரா
தடையில்லா கண்டரது களஞ்சிபத்து
தண்மையுள்ள வைந்தூசி பிடிக்குங்காந்தம்
படைபோல நெற்கனமாய் செயநீர்தன்னால்
பாலகனே தானரைத்து கவசங்கொண்டு
இடைகண்டு பீங்கானில் பூநீறிட்டு
யெழிலுடனே நடுமையம் துரிசைவையே. 835

வைக்கவே பீங்கானில் துரிசைவைத்து
வளம்பெறவே கீழ்மேலும் பூநீறிட்டு
மெய்க்கவே நாளேழு ரவியில்வைத்து
மேன்மையுடன் சரக்கதனை யெடுத்துமைந்தா
பொய்க்காமல் அண்டோடு பொரித்தவண்டம்
பொங்கமுடன் சமநிறையா யரைத்துமைந்தா
தைக்கவே செயநீரா லரைத்துசீலை
தகமையுடன் செய்துமே ரவிதான்வையே. 836

வைத்தபின்பு புடமதுவுங் கோழியாக
மன்னவனே தான்போட்டு யெடுத்துப்பாரு
செத்துமே துரிசதுவும் காரமேறி
செம்மலுடன் பற்பமது யென்னசொல்வேன்
புத்தான பற்பமதை பதனம்பண்ணு
புகழான மதிதனிலே பத்துக்கொன்று
கைத்தவமாய் தான்கொடுக்க கனகமாகும்
காவலனே புலஸ்தியனே கருதொண்ணாதே. 837

ஒண்ணாது மாற்றதுவு மேதுகூர்வேன்
ஓகோகோ நாதாக்கள் மறைத்தசேதி
கண்ணான மானிடர்கள் கண்டதில்லை
காசினியில் சித்தர்முனி சூதுமார்க்கம்
மண்ணானும் மனுவேந்தர் ராசமன்னர்
மகாதவத்தோர் கண்டறிந்துகாணா மற்றான்
திண்ணமுட னிதிகாச நிலையில்நின்று
தீர்க்கமுடன் வொருபோது மொன்றுங்காணே. 838

Koviloor Digital Library

ஒன்றான காயசித்தி காணாமற்றான்
வொடுங்கினார் நவகோடி ரிடிகள்சித்தர்
குன்றான புலஸ்தியனே மச்சகேந்திரா
குருவான வெந்தனிரு கண்ணேகேண்மோ
தென்றிசையில் பொதிகைமலை சார்பில்நின்று
தேற்றமுட னெனதையர் தேவர்தாமும்
வென்றிடவே கமலமுனி ரிடியாருக்கு
வேதமுடன் வோதிவைத்த ஞானங்கேளே. 839

பொதிகைமலையில் கமலமுனி ஞானோபதேசம் பெற்றது

கேளப்பா புலஸ்தியனே கெணிதவானே
கெடியான கமலருக்கு ஞானநேர்மை
நாளப்பா நெடுங்கால மிருந்தசித்து
நாதாந்த சின்மயத்தை யறிந்தஞானி
பாளப்பா போகாமால் காயந்தன்னை
பாருலகில் காயாதி கொண்டசித்து
ஆளப்பா தவவுறுதி வேடங்கொண்ட
அருள்ஞான தேசொளிவி னுண்மைபாரே. 840

பாரப்பா தென்பொதிகை சார்பில்நின்று
பாங்குடனே ஞானோப பொருளறிந்து
சேரப்பா தவவுறுதி யோகம்பெற்று
செந்திருவின் யெனதையர் வருளுங்கொண்டு
தேரப்பா சிலகாலஞ் சமாதியேக
தேற்றமுடன் கலைதனை யேவகுத்துமாறி
தீரப்பா தீர்க்கமுக நிலையில்நின்று
திறமுடனே யுபதேசம் பெற்றார்தானே. 841

தானான யுபதேசம் பெற்றுமல்லோ
தாரணியில் பொதிகைமலை சார்பின்னோரம்
கோனான குகையுண்டு குண்ணுமுண்டு
கொற்றவனே யெனதையர் தடாகமுண்டு
தேனான மனோன்மணியாள் வீற்றிருக்கும்
சிவந்த தாமரையுண்டு பொய்கையுண்டு
மானான கற்கோட்டை படிகளுண்டு
மகதேவர் சமாதிமுக பீடமுண்டே. 842

Koviloor Digital Library

உண்டான ரிடிகள்முனி கோடிசித்து
ருறவினர்கள் மகாகோடி சங்கம்யாகம்
கண்டதொரு கமலமுனி ரிடியார்தாமும்
காவணத்தின் சமாதிநிலை யறிவதற்கு
அண்டர்முனி ராட்சதர்கள் நெருங்கும்பொய்கை
அடர்ந்ததொரு சாரலியே பிரவேசித்து
தெண்டமுடன் யாகமுகப் பதிவில்நிற்க
தேசொளிவின் சின்மயத்தா லொளிகண்டாரே. 843

ஒளிவான பதிகண்டு சோதிகண்டு
ஓகோகோ நாதாக்கள் சமாதிகண்டு
தெளிவான யெனதைய ருபதேசத்தால்
தேற்றமுட னவ்வனத்தில் ஞானங்கொண்டு
வளியான பாதைமுகம் சேர்வைகண்டு
வளம்பெரிய நாதாக்கள் சமாதிபக்கல்
அளியாத சமாதிமுகம் யேகநண்ணி
அவ்வனத்தே சார்பினிட மழுந்திட்டாரே. 844

இட்டாரே கமலமுனி நெடியசித்து
யெழிலான வடபொதிகை சங்கஞ்சென்று
தொட்டகுறி போலாக வடபான்மீதில்
தோராமல் மகமேராம் பர்வஞ்சென்று
அட்டதிசை தான்புகமு மகமேர்சார்பில்
அம்மலையி லருள்கொண்ட ஞானசித்து
விட்டகுறை யிருந்ததொரு ஞானத்தாலே
வேதாந்தப் பொதிகைமலை சார்பானாரே. 845

உரோமருக் குபதேசித்த கண்டர்குரு

சார்பான வின்னமொரு மார்க்கங்கூர்வேன்
சதுர்புஜங் கொண்டதொரு புலஸ்தியாகேள்
நேர்பான ரோமருக்கு உபதேசித்த
நெடிதான கண்டர்குரு கருதக்கேண்மோ
தேர்பாகக் கண்டரது களஞ்சிபத்து
தெளிவரவே யாறுவகை செயநீர்தன்னால்
ஊர்படவே மூன்றுநா ளரைத்தபில்லை
வுத்தமனே ரவிதனிலே காயப்போடே. 846

Koviloor Digital Library

போடேதான் மறுபடியும் செப்பக்கேண்மோ
பொலிவாக சிவந்தகொடி வேலியப்பா
ஊடவே தானரைத்து பில்லைதன்னை
உத்தமனே கவசமது மிகவாய்ச்செய்து
சாடவே சீலையது வலுவாய்க்கொண்டு
சட்டமுடன் கோழியென்ற புடந்தான்தீரு
ஆடவே பற்பமது யென்னகூர்வேன்
அரகரா கூறுதற்கு நாவொண்ணாதே. 847

ஒண்ணான பாவமது போக்கு கூர்வேன்
வுத்தமனே புலஸ்தியனே யுகந்தமாரா
கண்ணான பற்பமதை காவலோனே
கடியசெம்பு மதிதனிலே பத்துக்கொன்று
திண்ணமுடன் றானுருக்கி குருவொன்றிய
திறமான மாற்றதுவு மிகக்கொள்ளாது
வண்ணமுடன் வாரடித்துப் புடந்தான்தீரு
வளமான பொன்னதுவுந் தங்கமாமே. 848

மச்சமுனியார்க் குபதேசித்த துருசுகுரு

தங்கமா மின்னமொரு மதீதங்கூர்வேன்
தண்மையுள்ள புலஸ்தியனே தம்பிரானே
புங்கசித்தி யெட்டுரிய பூபாலாகேள்
புகழ்பெரிய துருசதுவுங் களஞ்சிபத்து
வங்கமென்ற மூலியப்பா சங்கமூலி
வளம்பெரிய வண்டமது பிரமாணந்தான்
பங்கமது நேராமல் கண்டர்தம்மை
பதமுடனே மூலிகையில் பொதித்திடாயே. 849

பொதிந்துமே மண்சீலை வலுவாய்ச்செய்து
பொங்கமுடன் ரவிதனிலே காயவைத்து
மதியுடனே வைந்தெருவில் புடந்தான்போடு
மாசற்ற கண்டரது சுண்ணமாகும்
கதிபெறவே சுண்ணமுடன் வீரம்பூரம்
கணக்குடனே சமனிடையாய் நிறுத்துமேதான்
பதியவே யாறுவகை செயநீர்தன்னால்
பக்குவமாய் பதங்கண்டு வரைத்திடாயே. 850

Koviloor Digital Library

பதமான பதங்கண்டு பில்லைசெய்து
பாலகனே ரவிதனிலே காயவைத்து
மிதமான சீலையது மூன்றுசெய்து
மிக்கவே மூன்றெருவில் புடந்தான்தீரு
மதம்பெரிய கண்டரது காரமேறி
மகத்தான சுண்ணமென்ற கண்டர்நீறும்
அதம்பண்ணி சரக்கனைத்தும் நீற்றச்செய்யும்
அப்பனே துரிசிடை போக்குதானே. 851

போக்கான சுன்னமது பதனம்பண்ணு
பொலிவுடனே மதிதனிலே பத்துக்கொன்று
ஆக்கமுடன் றானுருக்கி குருவொன்றீய
அப்பனே மாற்றதுவு மெட்டேயாகும்
நோக்கமுடன் சடக்கறிந்து மார்க்கங்கண்டு
நெடிதான சரக்கனைத்து மாறல்செய்வீர்
வாக்கதுவும் பொய்யாது வசுவனியார் தேவர்
வண்மையுள்ள பாகமதை மதித்திட்டேனே. 852

மதிப்பான பொன்னதுவும் வாரடித்து
மாயாமல் புடமிடவு மாற்றோபத்து
விதியாளி யாயிருந்தா லபிக்கும்பாரு
வித்தகனே புலஸ்தியனே வீருள்ளானே
கதிபெறவே சிவயோகங் காணலாகும்
காசினியில் வெகுதொழில்க ளாடலாகும்
பதியான நிலையுண்டு மோட்சமுண்டு
பாலகனே வஷ்டசித்து கிடைக்கும்பாரே. 853

துரிசி செந்தூரம்

கிடைக்குமே முன்னுரைத்த பற்பந்தன்னை
கீர்த்தியுடன் வரமுள்ளிச் சாற்றினாலே
தடையதுவும் வாராமல் நான்குசாமம்
தட்டாமல் தானடைத்து பில்லைசெய்து
அடைபோல வோட்டிலிட்டு சீலைகொண்டு
அப்பனே புடமதுவுங் கோழியாக
விடையருள புடமதுவு மாறிப்பாரு
வித்தகனே செந்தூரங் கூறொண்ணாதே. 854

Koviloor Digital Library

ஒண்ணாத செந்தூரம் பதனம்பண்ணு
ஓகோகோ நாதாக்கள் கண்டால்கேட்பார்
கண்ணான செந்தூரம் ரவியில்தாக்க
காவலனே வன்பதுக் கொன்றேயாகும்
மண்ணாளும் வேந்தர்களும் காணமாட்டார்
மானிலத்தில் புண்ணியற்கு கிட்டும்பாரு
வண்ணமுடன் ஞானமென்ற யோகியோற்கு
வகுக்குமே மற்றவர்கள் வகுக்காதன்றோ. 855

துருசிகுரு சூதமடக்கல்

வகுப்பான யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
வளம்பெரிய நாதாக்கள் மறைத்துவைத்த
தொகுப்பான சுன்னமது யின்னஞ்சொல்வேன்
தோராமல் காயிசித்திக் குறுதியான
பகுப்புடனே வேலியென்ற பருத்திப்பாலாம்
பண்பான கண்டருக்கு தினமும்நாலாம்
வகுப்பான மண்டலந்தான் சாரணித்தால்
வளமுடனே ரவிதனிலே நீற்றுப்போமே. 856

நீறான நீறதுவு மேதுசொல்வேன்
நீணிலத்தில் வசுவனியார் சொன்னநீதி
கூறான பற்பமது கூரொண்ணாது
குருபரனே சுந்தரனே புலஸ்தியாகேள்
ஆறான சூதமது களஞ்சிபத்து
அப்பனே சுன்னமது மாவொன்றாகும்
பாறான சூதமதி லிட்டுமேதான்
பாங்குடனே சம்பழத்தின் சாற்றாலாட்டே. 857

ஆட்டியே சூதமென்ற வெண்ணைதன்னை
அப்பனே காந்தமென்ற குகையிலிட்டு
வாட்டமுடன் சில்லிட்டு சீலைசெய்து
வாகுடனே மண்மறைவில் புடந்தான்தீரு
தாட்டிகமாய் வெண்ணைதனை யெடுத்துபாலா
தகைமையுடன் மீசைதனி லிட்டுமேதரன்
நாட்டமுடன் காரமிட்டு வுருக்கிப்பார்க்க
நாதாந்த சூதவெள்ளி பதினாறாமே. 858

Koviloor Digital Library

ஆமேதான் நாதாந்த வெள்ளிதன்னை
அப்பனே சிவயோகி காண்பாரானால்
நாமேதா னுரைத்தபடி யோகங்கொள்வான்
நாதாந்த வாலைமுகம் பதிவாய்நிற்பான்
போமேதான் சிவகலையும் பொலிவுங்கொண்டு
பொங்கமுடன் வஷ்டசித்துக் குறுதிகொள்வான்
தாமேதான் காயாதிக் குள்ளேயேகி
தாரணியில் நெடுங்கால சித்தாவானே. 859

சித்தான சித்துமுனி ரிஷிதானென்பார்
சிவராஜ யோகபதி யிவர்தானென்பார்
முத்தான மோட்சவழி கொண்டோனென்பார்
மூதுலகைக் கண்டறிந்த சித்தோவென்பார்
சத்தான பதிநிலையைப் பகர்ந்தோனென்பார்
சாலோக சாயுச்சிய பதவிக்குள்ளார்
நித்தமுமே களையோடும் கருணையோடும்
நிஷ்களங்க யோகனென்றே செப்புவாரே. 860

புசுண்டருக்கோதிய கண்டர்செம்பு

செப்புவே னின்னமொரு வதீதங்கூர்வேன்
சிவராஜ புலஸ்தியனே சிங்கவேறே
ஒப்பமுடன் புசுண்டருக்கு யோதிவைத்த
வுற்பனமாங் கண்டரது தங்கச்செம்பாம்
தப்பிதங்கள் நேராமல் பூநீர்தானும்
தகைமையுடன் வெடியுப்பு துருசுமூன்றும்
மெப்புடனே கல்வமிட்டு மூலிதானும்
மேன்மையுடன் நாயுருவிச் சார்தான்தூக்கே.861

தூக்கான சாறதுதான் நான்குசாமம்
துறையோடு தானரைப்பாய் பில்லைசெய்து
தாக்கான பில்லையது ரவியில்வைத்து
சாங்கமுடன் மேலுமந்த மூலியாலே
வாக்கதுவும் பொய்யாமல் வோட்டிலிட்டு
வளம்பெறவே சீலையது வலுவாய்ச்செய்து
நோக்கமுடன் புடமதுவுங் கோழியாக
நோன்புடனே தான்போட செம்புமாமே. 862

Koviloor Digital Library

செம்பான பொடியதுவுங் குகையிலிட்டு
செயம்பெறவே புலஸ்தியனே வுருக்கிப்பாரு
அம்பொன்னாம் செம்பொன்னாம் துருசுசெம்பாம்
அப்பனே சொல்வதற்கு நாவுமில்லை
நம்பியே செம்பதனை மதியில்பத்து
நாயகனே வொன்றுடனே தங்கமொன்று
இன்பமுடன் றான்கூட்டி யுருக்கியல்லோ
யெழில்பெறவே றான்கொடுக்க மாற்றெட்டாமே. 863

எட்டான யேமமது நாவொண்ணாது
யெழில்பெறவே வாரடித்துப் புடந்தான்போடு
கட்டான தங்கமது பிறவித்தங்கம்
காசினியில் நாதாக்கள் மெச்சுந்தங்கம்
அட்டதிசை தான்புகழு மருமைத்தங்கம்
அப்பனே சிவஞானத் தங்கமாகும்
திட்டமுடன் சமாதிநிலை யிருந்துகொண்டு
தீர்க்கமுட னற்பதவிக் கிடங்கொள்வீரே. 864

கருவூராருக்கு வுபதேசித்த துருசுக்குரு

கொள்ளவே யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
கொற்றவனே புலஸ்தியனே மச்சகேந்திரா
தெள்ளமிர்த மானதொரு யெந்தன்தேவர்
தேற்றமுடன் அசுவனியா ருபதேசித்த
வள்ளலுயர் தென்கோவே கருவூரார்க்கு
வளமுடனே யுபதேசங் கொண்டவேதை
உள்ளபடி யாமறிந்த மட்டுமேதா
னுத்தமனே யுபதேசம் விண்டிட்டேனே. 865

விண்டிடவே கண்டரது பலமொன்றாகும்
வீரான மூலியது முள்ளியாகும்
கொண்டிடவே தான்கரிக்க சாம்பலாக்கி
கொற்றவனே தானெடுத்து செப்பக்கேண்மோ
கண்டர்து பலமதுவுங் களஞ்சிபத்து
காவலனே முன்னுரைத்த சாம்பலோடு
சண்டமெனு மூலியது மூலியோடும்
சட்டமுடன் தானரைத்துக் கவசந்தானே. 866

Koviloor Digital Library

தானான கவசமது கண்டருக்கு
தண்மையுடன் தான்பொதிந்து செப்பக்கேண்மோ
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனா ருபதேச வுண்மைகொண்டு
பானான பரஞ்சுடரை நண்ணல்கொண்டு
பான்மையுடன் சீலையது வலுவாய்ச்செய்து
தேனான மனோன்மணியைக் கருத்திலுன்னி
தேசொளிவின் சின்மயத்தை போற்றிடாயே. 867

போற்றவே புலஸ்தியனே புடந்தான்தீரு
பொங்கமுடன் புடமதுவும் லெகுவதாக
மாற்றலது நேராமல் மன்னாகேண்மோ
மயங்காமல் கண்டரதை யெடுத்துமைந்தா
சீற்றமது நேராமல் பூநீர்வீரம்
சிதறாமல் சமனிடையாய் நிறுத்துமேதான்
நீற்றுதற்கு முன்னுரைத்த மூலிதன்னால்
நீதியுடன் தானரைத்து கவசங்காணே. 868

காணவே கவசமது செப்பக்கேண்மோ
காவலனே மூலியதுக் குட்பொதிந்து
மாணவே சீலையது வலுவாய்க்கொண்டு
மன்னவனே ரவிதனிலே காயவைத்து
தோணவே நான்கெருவில் புடந்தான்தீரு
தேற்றமுடன் புடமதுவு மாறிப்பாரு
ஆணவங்கள் தானொடுங்கி வன்புள்ளானே
அப்பனே தானெடுத்து செப்பக்கேளே 869

செப்பவென்றால் கூறுதற்கு நாவோயில்லை
சிவசிவா சுன்னமது யென்னசொல்வேன்
ஒப்பமுடன் சுண்ணமதை பதனம்பண்ணு
ஒகோகோ நாதாக்கள் கண்டால்மோசம்
எப்படியு முந்தனுக்கு யிதவுகூறி
எழிலான சுண்ணமதை கையேகொள்வார்
இப்புவியில் சுண்ணமதை மறவுகொண்டு
யெழில்பெறவே யூமைபோ லிருக்கநன்றே. 870

Koviloor Digital Library

நன்றான சுண்ணமது காரமெத்த
நலமுடனே மஞ்சளுக்கு சிவக்கலாகும்
தென்றிசையின் பொதிகைமலை பாவலோய்கேள்
தேற்றமுடன் சுண்ணமதின் போக்குகூர்வேன்
வென்றிடவே நாதாக்கள் பதம்பணிந்து
வேதாந்தத் தாயாரின் வருளுங்கொண்டு
குன்றிடையாம் சுண்ணமது தானெடுத்து
குருபரனே மதிதனிலே பத்துக்கொன்றே. 871

ஒன்றான சுண்ணமது யென்னகூர்வேன்
ஓகோகோ நாதாக்கள் மறைத்துவைத்தார்
தென்றிசையி லசுவனியார் மனதுவந்து
தேற்றமுட னுந்தமக்கு வருளுங்கொண்டார்
குன்றான சுண்ணமது காரமெத்த
குருபரனே மாற்றதுவு மெட்டதாகும்
வென்றிடவே வாரடித்து புடந்தான்தீரு
வேதாந்தத் தாயினிடத் தங்கமாமே. 872

இராமதேவருக் குபதேசித்த துருசுகுரு

தங்கமா மின்னமொரு போக்குசொல்வேன்
தயவுள்ள புலஸ்தியனே தம்பிரானே
புங்கசித்தி கொண்டதொரு ராமதேவர்
புகழான சித்தருக் குபதேசித்த
வங்கமென்ற பாகமதால் வந்துதித்த
வளம்பெரிய கண்டரது துரிசுசுண்ணம்
பங்கமது நேராத சுண்ணமப்பா
பாலகனே துரிசியது களஞ்சிபத்தே. 873

பத்தான துரிசியது தானெடுத்து
பாலகனே வெள்ளையென்ற சாரணைதான்
சத்தான மூலிகையின் சாற்றினாலே
சாங்கமுடன் வேமுநா ளூறப்போடு
முத்தான கண்டரது முசியாமற்றான்
முனையான யூறலது தானுமேகி
வத்தியே மூலியது காய்ந்தபின்பு
வளமுடனே கண்டரதை யெடுத்துக்கொள்ளே. 874

Koviloor Digital Library

கொள்ளவே காரீயங் களஞ்சிபத்து
கொற்றவனே தானுருக்கி கண்டர்தம்மை
மெள்ளவே வதிற்றோய்க்க விபரங்கூர்வேன்
மேன்மையுடன் குறட்டதனால் பிடிதான்கொண்டு
விள்ளவே வுருக்குமுகந் தன்னிற்றோய்க்க
வீறான கண்டரது சுண்ணமாகும்
தள்ளாமல் சுண்ணமது பதனம்பண்ணு
தண்மையுடன் நோக்குவகை கூறுவேனே. 875

கூறுவேன் சூதமதில் பத்துக்கொன்று
கொப்பெனவே பற்பமதை விட்டாயானால்
மாறுபடா சூதமது மணிபோலாகும்
மகத்தான வெண்ணைதனை யெடுத்துமைந்தா
தேறுதலாய் மத்தங்காய்க் குட்பொதிந்து
தெளிமையுடன் காட்டெருவிற் புடந்தான்தீரு
ஆறுதலங் கண்டதொரு கதையைப்போல்
அப்பனே சூதமது மணியுமாமே. 876

மணியான மணியதனைப் பதனம்பண்ணு
மகத்தான பாட்டமது யிதற்குள்ளாடும்
அணியான அணிவரிசை யிதற்குள்சித்தி
அப்பனே சித்தர்முனி ரிஷிகள்தாமும்
துணிவுடனே வாடுகின்ற வாட்டமெல்லாம்
தூயதான சூதமணி யாட்டமர்கும்
தணியவே சூதமென்ற குளிகைதன்னை
தகமையுடன் சாரணைதான் செப்பக்கேளே. 877

செப்பவென்றால் நூறுவரை புடந்தான்தீரு
செங்கமலக் கண்ணானே மத்தங்காய்தான்
ஒப்பமுடன் சாரணைதான் தீர்ந்தாயானால்
வுத்தமனே புலஸ்தியனே குளிகைவேகம்
இப்புவியி லாருரைத்தா ரிந்தபாகம்
யெழிலுடனே யுந்தமக்காய் கூறலானேன்
தப்பிதங்க ளணுகாமல் குளிகைதன்னை
தாரணியி லனுபவிக்க விபரங்கேளே. 878

Koviloor Digital Library

கேளப்பா புலஸ்தியனே கெவுனமாரா
        கெணிதமுடன் போக்குவகை கூறக்கேண்மோ
நாளப்பா கெவனமென்ற குளிகைதன்னால்
        நலம்பெறவே வாசிமுகங் கொள்ளலாகும்
பாளப்பா போகாது கெவனந்தானும்
        பாருலகில் நாதாக்கள் குளிகையாகும்
ஆளப்பா சூதமணி குளிகையாலே
        அப்பனே கோடிவரை காணலாமே. 879

காணவே குளிகையது மார்க்கந்தன்னால்
        காவலனே கண்மணியே கருதக்கேண்மோ
தோணவே கெவனமென்ற சூதந்தன்னால்
        தோராம லடவிமுதல் மலைகள்குண்ணு
நாணவே சித்தர்முனி ரிஷிகள்தம்மை
        நனினமுடன் காணுதற்கு கெவனியாவாய்
பூணவே சூதமணி கெவனியாலே
        புகழான மிருகமுமைப் பணியுந்தானே. 880

தானான கெவனமென்ற குளிகையாலே
        தாரணியில் வெகுகோடி சித்தேகொள்வீர்
கோனான யெனதையர் அசுவனியாந்தேவர்
        கொற்றவனார் யெந்தமக்கு யுரைத்தவண்ணம்
தேனான மனோன்மணியாள் பதாம்புயத்தை
        தெரிசித்து எந்நாளுந் துதியேகொண்டு
மானான மகதேவர் தாள்பணிந்து
        மகிதலத்தி லென்னாளும் வாழ்வீர்தாமே. 881

துரிசுவேதை

தாமான யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
        தண்மையுள்ள புலஸ்தியனே தம்பிரானே
சாமானிய மானதொரு சயந்தநாதா
        தண்மையுள்ள வசுவனியார் தேவர்தாமும்
வேமேதான் மனதுவந்து மண்ணுள்ளார்க்கு
        விட்டகுறை யிருந்ததொரு நேர்மையாலே
பூமானாம் வுந்தனுக்கு வாய்க்கலாச்சு
        புகழான சிடிகையென்ற வேதையாமே. 882

Koviloor Digital Library

வேதையா மின்னமொரு மார்க்கங்கூர்வேன்
வேதாந்தத் தாயினது வருளினாலே
காதையாம் பலநூலுங் கண்டாராய்ந்து
கருவான கண்டர்தனை எடுத்துமைந்தா
பாதையாங் களஞ்சியது பத்தேயாகும்
பாலகனே தாமரையா லிலையரைத்து
ஆகையாங் கண்டருக்கு கவசஞ்செய்து
அப்பனே ரவிதனிலே காயப்போடே. 883

போடவே ரவிதனிலே காய்ந்த பின்பு
பொங்கமுடன் சில்லிட்டு சீலைசெய்து
நீடவே பாண்டமது தனையெடுத்து
நிஷ்களங்க மாகவல்லோ மணல்தான் செம்மி
சூடவே மேலுமந்த மணல்தான்கொட்டி
சுந்தரனே மேற்பாண்டங் கவிழ்ந்துமூடி
கூடவே சீலையது வலுக்கச் செய்து
குருபரனே தானெரிப்பாய் கமலம்பாரே. 884

பாரப்பா கமலமது எரித்தாயானால்
பாலகனே பற்பமது யென்னகூர்வேன்
ஆரப்பா புலஸ்தியனே அறிவுள்ளானே
அப்பனே காரமது வேகமெத்த
சாரப்பா சுன்னமது பதனம்பண்ணு
சங்கரனே சித்தர்செய்யும் வேதையாச்சு
காரப்பா மதிதனிலே பத்துக்கொன்று
காவலனே கொடுத்துருக்க மாற்றெட்டாமே. 885

எட்டான பற்பமது என்னசொல்வேன்
எழிலான நாதாக்கள் மறைத்த செய்தி
முட்டாளா முழுமக்காள் மூடருக்கு
மூதுலகில் சற்றேனும் பலியாதப்பா
அட்டதிசை தான்புகழு மன்புள்ளானே
அரியதொரு நவகோடி ரிஷிகளுக்கு
பட்டமாம் துளுத்ததொரு காதைபோலே
கலியுகத்தில் அமைக்கவென்று பாடிட்டேனே. 886

Koviloor Digital Library

சூதமுனிக்கு வுபதேசித்த துரிசிவேதை

பாடியே யின்னமொரு கருமானங்கேள்
பாலகனே புலஸ்தியனே பண்புள்ளானே
தேடியே சூதமுனிக் குபதேசித்த
தெளிவான கண்டரது களஞ்சிபத்து
ஆடியே பிராயம்பால் தானெடுத்து
அப்பனே கண்டருக்கு மேலதாக
கூடியே சாரணைகள் மிகவாய்ச்செய்து
குருபரனே ரவிதனிலே காயப்போடே. 887

காய்ந்ததொரு துரிசதனை யெடுத்துமைந்தா
காவலனே கவசமது செப்பக்கேண்மோ
ஆய்ந்ததொரு கண்டருக்கு கவசம்ரெட்டி
அன்புடனே சீனமுடன் காரந்தானும்
மாய்ந்திடவே உருக்கலெண்ணை தானெடுத்து
வளமுடனே சரக்கதனை யரைத்துமைந்தா
தோய்ந்திடவே கண்டருக்கு கவசங்கொண்டு
துப்புரவாய் ரவிதனிலே காயப்போடே. 888

போட்டுமே சீலையது வலுக்கச்செய்து
பொங்கமுடன் ரவிதனிலே காயவைத்து
காட்டெருமை எருவதுவுங் கோழியாக
சுண்மணியே புடந்தீர்ந்து எடுத்துப்பாரு
நாட்டிலுள்ள நவகோடி ரிஷிகள்தாமும்
நலமுடனே மெச்சுகின்ற சுன்னமப்பா
பூட்டரிந்து செய்வதற்கு எல்லாஞ்சித்தி
புகழான கண்டரது பற்பமாமே. 889

பற்பமாம் கண்டர்தனை யெடுத்துமைந்தா
பாலகனே மதிதனிலே பத்துக்கொன்று
அற்பமென்று நினையாம லன்புள்ளானே
அப்பனே மதிதனிலே பத்துக்கொன்று
ஒப்பமுடன் தானுருக்கி குருவொன்றீய
வுத்தமனே பசுமையது யென்னகூர்வேன்
தப்பிதங்கள் நேராது தகைமையோனே
தாரணியில் மெச்சுகின்ற வேதைகாணே. 890

Koviloor Digital Library

காணவே மாற்றதுவுங் கூர்வதற்கு
கயிலாய வடிவுடைய கண்ணேகேண்மோ
தோணவே தங்கமது யார்க்குங்கிட்டும்
தோறாத சிவயோகி காண்பான்பாரு
ஆணவங்கள் தானொடுங்கி காண்பான்பாரு
அன்புடனே யிருந்தவற்கு எல்லாங்கிட்டும்
பூணவே தவயோக நிலையில்நின்று
புங்கசித்தி கொண்டவற்கு யெல்லாஞ்சித்தே. 891

கருவூரார்க்கு வுபதேசித்த துரிசிவேதை

சித்தான மகிமையது யின்னங்கூர்வேன்
சிற்பரனே புலஸ்தியனே சீரியபாலா
சுத்தமுள்ள கருவூரார் தந்தமக்கு
சுந்தரனே வுபதேசஞ் செய்தவேதை
நித்தமுமே வனுதினமும் கருவூராரும்
நிஷ்களங்க தவநிலையி லடிபணிந்து
வுத்தமரு மனதுவந்து வேதைகண்டு
வுகடன்மையுபரி சமத்தவேதைபாரே. 892

பாரப்பா சண்டரது களஞ்சிபத்து
பாலகனே தானெடுத்து செப்பக்கேண்மோ
நேரப்பா தென்பொதிகை தன்னில்தானும்
நெடிதான பூநீர்தான் விளையும்பூமி
ஆரப்பா கற்சுன்னந் தனையெடுத்து
அப்பனே வெள்ளாட்டு நீரினாலே
சேரப்பா தாளித்து சுண்ணாம்பாக்கி
செம்மலுடன் சாதிக்கா வகைதான்கேளே. 893

கேளப்பா நீற்றினமு மானபின்பு
கெவனமுடன் மதியுப்பை தானெடுத்து
நாளப்பா போகாமல் நளினவானே
நன்மையுட னுப்பதனை யரைத்துமைந்தா
சூளப்பா கருவங்க மங்கிபூண்டு
சுந்தரனே கவசமது செய்துமேதான்
ஆளப்பா புடமெருவு வன்பதாகும்
அப்பனே போட்டிடவே சுன்னமாச்சே. 894

Koviloor Digital Library

சுன்னமாம் நவாச்சாரம் சேர்த்துமைந்தா
சுந்தரனே தானரைக்க மெழுகுபோலாம்
வன்னமுடன் மெழுகதனை ரவியில்வைக்க
மாசற்ற செயநீராந் தீநீராகும்
என்னரிய நற்பொருளு மொளியேகாட்டும்
ஏகாந்த சரக்கதனை யிறுகிக்காட்டும்
அன்னனார் சிவனாணை ரிடிகளாணை
அம்பரத்தி னாணையது யறைந்திட்டேனே. 895

அறைந்தேனே சுந்தரனே சொரூபவானே
அனாகதத்தின் மெய்ப்பொருளே வன்புள்ளானே
குறைந்ததொரு சரக்கெல்லா மிதிலே தோயும்
குருபரனே குணக்குன்றே சிங்கவேறே
நிறைந்த பொருளி திற்காட்டுந் தகமையோனே
நிஷ்களங்க மானதொரு சிவமேகாட்சி
மறைந்ததொரு கருவிகர ணாதியந்தம்
மானிலத்தில் யுந்தமக்கு வாய்க்குந்தானே. 896

தானான புலஸ்தியனே தருமவானே
தாக்கான செயநீரி லனந்தங்கோடி
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனா ரெந்தமக்கு வுரைத்தநீதி
தேனான செயநீரின் போக்குகூர்வேன்
தெளிவான வெள்ளையென்ற பாஷாணந்தான்
மானான மகதேவர் தன்னையப்பா
மாசற்ற கட்டியொன்று யெடுத்திடாயே 897

எடுத்துமே ஜெயநீரில் தோய்த்துவாட்டி
யெழிலான ரவிதனிலே காயவைத்து
தொடுத்துமே சீலையது வலுவாய்ச்செய்து
தோறாமல் ரவிதனிலே காயப்போடு
அடுத்துமே கோழியென்ற புடந்தான்தீரு
அப்பனே கண்டரது சுன்னநேர்மை
விடுத்ததொரு சரக்கெல்லாமல் இதிலேகட்டும்
விட்டகுறை யிருந்தவற்கு கிட்டும்பாரே. 898

Koviloor Digital Library

பாரேநீ யுகந்தோறும் சொல்வேனப்பா
பாலகனே யிந்நீரில் யாவுந்தோன்றும்
சீருடனே துரிசதுவும் நீறிப்போகும்
சிற்பரனே சரக்குமுதல் காலனாகும்
நேரேதா னிப்படியே சரக்கனைத்தும்
நேர்மையுடன் செயநீரில் தோய்க்கக்கட்டும்
ஆமேதான் சித்தர்முனி ரிடிகள்தாமும்
அப்பனே யறிந்தவர்க ளறியார்தாமே. 899

துரிசிசெம்பு

தாமான யின்னமொரு போக்குகூர்வேன்
தண்மையுள்ள புலஸ்தியனே தம்பிரானே
சாமானிய மானதொரு கண்டர்தாமும்
தண்மையுடன் களஞ்சியது பத்ததாகும்
நாமேதான் சொன்னபடி செயநீர்தன்னில்
நலமுடனே யெட்டுமுறை காச்சிதோய்க்க
போமேதான் ரவிதனிலே காய்ந்தபின்பு
பொங்கமுடன் சீலையது வலுவாய்ச்செய்யே. 900

செய்யவே காடையென்ற புடந்தான்தீரு
செங்கமலக் கண்ணானே கெவனவானே
துய்யவே சுன்னமதை பதனம்பண்ணு
துப்புரவாய் தானெடுத்து மெய்க்ககேண்மோ
பையவே ரவிமதியில் பத்துக்கொன்று
பாய்ச்சிடவே வயதுவு மெட்டதாகும்
வெய்யபுகழ் ஏமமது யென்னகூர்வேன்
வேதாந்தத் தாயாரின் விளம்பக்கேளே. 901

அகஸ்தியர் புலஸ்தியருக்கு அட்டாங்கயோகம் ஓதல்

கேளப்பா யின்னமொரு கெவனங்கூர்வேன்
கேண்மைகொண்ட புலஸ்தியனே மச்சகேந்திரா
நாளப்பா போகாமல் நளினவானே
நளினமுட நாதாக்க ளாடுங்கூத்து
சாளப்பா சதுர்முகமும் நான்குங்கண்டேன்
சதுரான சித்தர்முனி ரிடிகள்மார்க்கம்
ஆளப்பா வவரவர்கள் அடைந்தமார்க்கம்
அப்பனே யுந்தனுக்கு கூறுவேனே. 902

Koviloor Digital Library

கூறுவேன் பூபாலா குமுதவானே
குவலயத்தில் நாதர்முனி ரிடிகளெல்லாம்
வீறுடைய பதினெண்பேர் நாதர்தாமும்
விட்டகுறை யிருந்ததொரு தபசியோரும்
மாறுடைய மாண்பர்களும் சாதுதானும்
ஞானவெளி தான்கடந்த யோகிமாண்பர்
ஆறுதலங் கொண்டதொரு ஞானசித்து
அருளானார் கோடிமுறை யிருந்தார்தானே. 903

தானான திரேதாயி னுகத்திலப்பா
தண்மையுள்ள திருப்பாலின் கடற்குமேலாம்
கோனான யெனதைய ரகுவனியாந்தேவர்
கொற்றவனா ரெந்தனுக்கு வுரைத்தநீதி
தேனான மனோன்மணியா ளம்பாள்தானும்
தேசொளியின் சின்மயத்தின் பொருட்டினாலே
பானான பரஞ்சுடரை மனதிலுன்னி
பாலித்தேன் வடபாகம் பான்மைபாரே. 904

பாரப்பா மகமேரு வடபாகத்தில்
பாரான மலையுண்டு குகைதானுண்டு
நேரப்பா குகையருகே குண்ணுமுண்டு
நெடிதான குண்ணருகே சுனையுமுண்டு
ஆரப்பா சுனைநடுவில் மண்டபந்தான்
அப்பனே நடுமையந் திட்டுவாசல்
சீரப்பா தாப்பாளுங் கதவுமுண்டு
சிற்பரனே சோதியென்ற தடமுங்காணே. 905

காணவே தடமதனி லாயக்காலாங்
கடுந்தவசு தான்புரியும் கடந்தஞானி
ஆணவங்கள் தானொடுங்கி யிருக்குஞ்சித்து
அகதிபர தேசியைப்போல் தவமுங்கொள்வார்
வேணபடி யுபவாச முள்ளடக்கி
வேண்டியே ரேசகத்தை மனதிற்பற்றி
பூணவே கும்பகத்தை மேலேநோக்கி
குருபரன்போல் தவம்புரிவா ரதீதந்தானே. 906

Koviloor Digital Library

தானேகேள் வரைகோடி சித்துமாண்பர்
தவயோகம் நெடுங்கால மிருந்தசித்து
தானேகேள் கெவனமென்ற குளிகைதன்னால்
மார்க்கமுடன் மண்டலத்தை யளாவிநிற்பார்
தேனேகேள் சித்தருட மகிமைதன்னை
தேற்றமுடன் கூறுதற்கு யாராலாகும்
சோனேதான் மழைபோலே பொழியும்வல்ல
சொற்பெரிய சொரூபரது மகிமைபாரே. 907

பாரப்பா சித்தரது மகிமைமெத்த
பாருலகில் நாதாக்க ளரியசித்து
நேரப்பா யவரவர்கள் மலைகள்தோறும்
நெடிதான சமாதிமுக மிருந்தார்பாரு
சேரப்பா புலஸ்தியனே யுந்தமக்கு
சிற்பரனே வெகுஞானம் கூறலாகும்
கூரப்பா சமாதிமுக மேவலாகி
குருபரனே யுந்தமக்கு மோதுவேனே. 908

புலஸ்தியர் தவங்கொள்ளல்

ஓதவே புலஸ்தியனே யின்னங்கூர்வேன்
ஓகோகோ நாதாக்கள் கூறவில்லை
நீதமுடன் சமாதிமுகங் கொள்வதற்கு
நிட்களங்க மானதொரு நிலைமைகூர்வேன்
ஆதலத்தில் பெருங்குமுழா மடவிதன்னில்
அப்பனே சமாதிமுக மேவுதற்கு
தோதமுடன் பதிபாசக் களையினின்று
தோராமல் ஞானப்பால் கொள்வீர்தாமே. 909

கொள்ளவே புலஸ்தியனே மச்சகேந்திரா
கெடிதான யோகவழி செல்லும்போது
விள்ளவே ஞானக்கண் திறக்கவேண்டும்
வீறான வாசிநிலை யறியவேண்டும்
தள்ளவே பவக்கடலை யொழிக்கவேண்டும்
தாரணியி லாசைதனை மறக்கவேண்டும்
அள்ளவே மனக்கண்ணா லறியவேண்டும்
அப்பனே காயசித்து வடைதல்நன்றே. 910

Koviloor Digital Library

நன்றான தவநிலையில் நிற்கும்போது
நாதாந்த வெட்டவெளி தாயார்தாமும்
சென்றான சமாதிவழி தோன்றலொப்பாய்
சென்றிடவே முன்னிற்பாள் தெய்வகன்னி
வென்றிடவே யுந்தமக்கு யெல்லாங்கிட்டும்
வெற்றியுண்டா மெண்போக மிகவுண்டாகும்
நின்றிடவே யோகநிலை பதியறிந்து
நிஷ்களங்க மாகவல்லோ சாதிப்பாரே. 911

சாதிக்க யோகமது கொள்ளும்போது
சதுரான சின்மயத்தை யறிதலாகும்
போதிக்க சிவயோக பதியில்நின்று
பெருமையுடன் சித்தருக்கு சித்தராவார்
சேதியே செகசோதி காணலாகும்
சொரூபமுள்ள தவயோக நிலையைக்கொள்வீர்
ஆதித்தன் சந்திரனார் ஒளியேவீசும்
அப்பனே சமாதியிட போக்குதானே. 912

தானான புலஸ்தியனே தம்பிரானே
தகைமையுடன் ஞானப்பால் அருந்தும்போது
கோனான வெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனார் தாமுரைத்த நீதிவண்ணம்
தேனான மனோன்மணியாள் அருளுங்கொண்டு
தேசொளியின் சின்மயத்தை யறிதலாகி
பானான பரம்பொருளா மேதென்றாக்கால்
பாரினிலே யாசையது மறக்கல்நன்றே. 913

நன்றான வாசையது யிறந்தபோதே
நானிலத்தில் ஞானமது கண்திறக்கும்
குன்றான குருமொழியாந் தவவேடந்தான்
குவலயத்தில் ரவிபீச மதியந்தோன்றும்
தென்றிசையாந் தேவரிடி புண்ணியத்தால்
தெள்ளமிர்த மானதொரு யோகிமான்பர்
சென்றுமே நெடுங்கோடி வரைதானப்பா
தெய்வபதி சுழிகாண மதிகொண்டாரே. 914

Koviloor Digital Library

கொண்டாரே மூன்றுயுக சித்துதாமும்
கொற்றவரே சமாதிநிலை பதியுங்காண
அண்டர்தொழும் தவமுனிவ ரிடிகள்நாதர்
அருந்தவத்தி லுதித்ததொரு யோகிமாண்பர்
தண்டகா ரண்யமது யேகலாகி
தாரணியி லமர்ந்ததொரு சித்துமாகி
சண்டமா ருதம்போலே பணையங்கொண்டு
சதாநித்தம் பதிபாச நிலைநின்றாரே. 915

நிலையான நீதிவழி யின்னங்கூர்வேன்
நிஷ்களங்க மானதொரு சித்துபாலா
கலையான கலைபகுத்து வுரைத்தவண்ணம்
காவலனே நாதாக்கள் கூறாதெல்லாம்
தலைகுறையா மவரவர்கள் செய்தநீதி
தண்மையுடன் புலஸ்தியனே தயவாய்க்கேண்மோ
மலையான சாஸ்திரங்கள் மிகத்தெளிந்து
மாநிலத்தில் மாணாக்கள் பிழைக்கக்கேளே. 916

துரிசுசெம்பு

கேளப்பா புலஸ்தியனே புனிதவானே
கெடியான சூட்சமென்ற மார்க்கங்கூர்வேன்
நாளப்பா நற்கண்டர் களஞ்சோபத்து
நயமுடனே தானெடுத்து நவிலக்கேண்மோ
சூளப்பா ரோமமது சத்தியேதான்
சூட்சமென்ற மேகவெண்ணை தனிற்பொதிந்து
கோளப்பா நேராமல் குகையில்வைத்து
கொற்றவனே சீலையது வலுவாய்ச்செய்யே. 917

செய்துமே குகைதனையே யுருக்கிப்பாரு
செப்பரிய ரவியதுவு மேதுசொல்வேன்
நையவே தானடித்து வுருக்கிப்பாரு
நாதிந்த கெவுனமது மேதுசொல்வேன்
துய்யநல்ல நாகமென்றால் சிறுகண்ணாகம்
துப்புரவாய் களஞ்சியது பத்துக்கொன்று
பையவே தாமுருக்கி யெடுத்துப்பாரு
பகரவே யேமமது சொல்லொண்ணாதே. 918

Koviloor Digital Library

சொல்லொண்ணா யேமமது வாரடித்து
சொற்பெரிய புடமதுவும் தீர்த்தாயானால்
நல்லதொரு தங்கமது வேதுகூர்வேன்
நயமான புடத்தங்கஞ் சுயத்தங்கந்தான்
வல்லபுகழ் சித்துமுனி நாதர்தாமும்
வளமுடனே மானிடர்கள் பிழைக்கவேண்டி
வெல்லவே யசுவனியார் சொன்னநீதி
மேதினியில் வாக்கதுவும் பொய்யாதன்றே. 919

அன்றான தேவரிடி வாக்குதானும்
அவனிதனில் பொய்யாது மெய்யேயாகும்
குன்றான பர்வதமாந் தென்பொதிகைதன்னில்
குருபரனார் தந்தமக்கு யுரைத்தவண்ணம்
தென்றிசையில் திரள்கோடி யுகாந்தகாலம்
தேற்றமுடன் பாடிவைத்த நூல்கள்யாவும்
வென்றிடவே மிகவாய்ந்து மிகத்தெளிந்து
வேட்கமுடன் பாடிவைத்த பெருநூலாமே. 920

பெருநூலாம் புலத்தியனே யின்னங்கூர்வேன்
பேரான புசுண்டமகா ரிஷியாருக்கு
குருநூலா மிந்நூலில் சிலதுகாலம்
குறிப்புடனே மனதுவந்து கூறும்வண்ணம்
திருநூலாம் தாம்பரமாங் குருச்செம்பாகு
தீர்க்கமுடன் றானுரைத்த காரச்செம்பாம்
அருமையுடன் மனங்களித்து வன்பனாற்கு
அப்பனே யோதிவைத்த வேதையாமே. 921

வேதையாங் கண்டரது களஞ்சிபத்து
வெளுப்பதற்கு வேளையென்ற மூலிதன்னில்
பாதையா மூன்றுநாள் பாவகமேசெய்து
பாலகனே தானெடுத்து ரவியில்வைத்து
நீதமுடன் சீலையது யேழுஞ்செய்து
நிட்களங்க மானதொரு புடந்தான்கோழி
தோதமுடன் றான்போட்டு யெடுத்துப்பாரு
தோறாத பற்பமது நாவொண்ணாதே. 922

Koviloor Digital Library

ஒண்ணாது பற்பமது வொன்றேயாகும்
வுற்பனமா மயமதுவு மிருபதாகும்
கண்ணான கெந்தியது வைந்ததாகும்
காவலனே சாரமது வைந்ததாகும்
தண்ணமுடன் பூரமது வைந்ததாகும்
தகைமையுள்ள சூதமது வைந்ததாகும்
வண்மையுள்ள குடவனதுவு வைந்ததாகும்
வளமான வீரமதிற் பாதிசேரே. 923

பாதியாஞ் சரக்கெல்லா மொன்றாய்க்கூட்டி
பாலகனே வரைப்பதற்கு வண்மைகேளீர்
சாதியாஞ் சருவான சிவந்தவல்லி
சார்வான கிழங்கதுவு மெடுத்துமைந்தா
வாதியாங் கண்டவர்கள் மயங்காமற்றான்
வண்மையுடன் றானெடுத்து சாறுவாங்கி
ஆதியா முன்னுரைத்த வயத்தோடப்பா
அப்பனே தானரைப்பாய் சாமம்நாலே. 924

நாலான சாமமது வரைத்துநன்றாய்
நாயகனே மெழுகுதனை யெடுத்துபாலா
நூலான நூலுரைத்த வரைபாடோடு
நுணுக்கமுடன் கண்டரது பலம்பத்துக்கு
சேலான மெழுகதனை கவசங்கொண்டு
செப்பரிய ரவிதனிலே காயவைத்து
பாலான சுண்ணமது சத்தானகல்லாம்
பாலகனே கவசமது செய்திடாயே. 925

செய்துமே ரவிதனிலே காயவைத்து
செப்பரிய நாளதுவும் நான்கேயாகும்
பையவே கவசமது நீக்கியேதான்
பாங்குடனே வச்சிரமாங் குகையிலிட்டு
வெய்யவே சீலையது வலுவாய்ச்செய்து
வேகமுடன் றானுருக்கி யெடுத்துப்பார்க்க
நையவே மூசைதனை யுடைத்துப்பாரு
நாதாந்த செம்பதுவுங் கூறொண்ணாதே. 926

Koviloor Digital Library

கூறுதற்கு நாவில்லை பாவுமில்லை
குருபரனே யிச்செம்பை மதியில்பத்து
ஆறுதலங் காண்பதற்கு வுரியோனாக
அப்பனே வுருக்குமுகந் தன்னிலப்பா
மாறுபடா வெள்ளிதனில் பத்துக்குரெண்டு
மகத்தான செம்பதுவை தாக்கிப்பாரு
வீறுடைய மாற்றதுவு மேதுகூர்வேன்
விட்டகுறை யிருந்ததொரு மாற்றெட்டாமே. 927

எட்டான மாற்றதுவு மேதுகூர்வேன்
யெழிலான தங்கமது பத்துக்கொன்று
திட்டமுடன் றான்சேர்த்து வாரடித்து
தீர்க்கமுடன் புடமதுவும் தீர்த்தாயானால்
நாட்டமில்லா சுயத்தங்க மெட்டேகாணும்
நாதாந்தத் தங்கமென்றே செப்பலாகும்
சட்டமுட னெனதைய ரசுவனியாந்தேவர்
சாங்கமுட னெந்தனக்கு யுரைத்திட்டாரே. 928

இட்டாரே பலநூலு மிகவாராய்ந்து
யெழிலான கருவிகர ணாதியந்தம்
தொட்டகுறி போலாக யெந்தமக்கு
தோராமல் கைபாகம் மெய்பாகந்தான்
விட்டகுறை யிருந்ததொரு தன்மையாலே
வீரமுட னுபதேச முந்தமக்கு
அட்டதிசை தான்புகழும் சித்தர்முன்பால்
அப்பனே யுபதேசங் கூறலாச்சே. 929

இதுவும் புசுண்டருக்கு வுபதேசித்தது

ஆச்சப்பா துருசினுட மார்க்கங்கூர்வேன்
அப்பனே வீரமது களஞ்சைந்தாகும்
நீச்சமென்ற வெண்காரம் நவச்சாரந்தான்
நீதியுள்ள வெடியுப்பு பலந்தானொன்று
மாச்சலென்ற கல்லுப்பு களஞ்சுஒன்று
மகத்தான பூரமது களஞ்சுநான்கு
ஆச்சரிய மானதொரு ஜெயநீர்தானும்
அப்பனே யாறுவகை ஜெயநீர்தானே. 930

Koviloor Digital Library

தானான சரக்கெல்லா மொன்றாய்க்கூட்டி
தகமையுள்ள ஜெயநீரால் நான்குஜாமம்
கோனான எனதையர் அசுவனியாந்தேவர்
கொற்றவனார் எந்தமக்கு வுரைத்தவண்ணம்
தேனான சரக்கனைத்து மரைத்துமேதான்
செப்பரிய ஓட்டிலிட்டு சீலைசெய்து
மானான ரவிதனிலே காயவைத்து
மன்னவனே புடமிடவும் வரிசைகேளே. 931

கேளப்பா புலஸ்தியனே கெவுனவானே
கெணிதமுடன் புடமதுவுங் கோழியாக
நாளப்பா போகாம் ளாறிப்பாரு
நன்மையுள்ள பருவமது யென்னகூர்வேன்
தேளப்பா குட்டியதோர் பற்பமாகும்
தேஜொலியின் பற்பமது காரமெத்த
ஆளப்பா பற்பமதை செய்வார்தாமும்
அப்பனே சித்துமுனி யென்பார்பாரே. 932

பாரப்பா பற்பமதை பதனம்பண்ணு
பாருலகில் நாதர்முனி சித்தர்கண்டால்
ஆரப்பா யுந்தமையு மனதுவந்து
அப்பனே விடைகொண்டு கேள்விகொண்டு
தேரப்பா மனந்தேறி வித்தைகூறி
தெளிவுடனே யுபதேச மிகவாய்ச்சொல்லி
சீரப்பா பற்பமதை தருகவென்று
சிற்பரனே யுந்தமையும் நத்துவாரே. 933

நத்துவார் வெகுமொழிகள் மிகவேகூறி
நாதாந்த வாலதனை மிகவாயெண்ணி
புத்தியுடன் மதியூகம் பலவாய்க்கூறி
புகழ்பெரிய வேதாந்த வலவையுன்னி
சத்தியங்கள் தவறாத பான்மைபோலும்
சதுருகத்தை கண்டறிந்த முனிவர்போலும்
சித்துமுனி நவகோடி ரிஷிகள்போலும்
சிறப்புடைய தபோதனர்போல் பேசுவாரே. 934

Koviloor Digital Library

பேசுவார் சிவயோகி பான்மைபோலே
பேருலகை மறந்ததொரு மாண்பனாகி
கூறுவார் பல்லொளிவை யுட்பொருந்தி
குருபரனே தாநினைந்து குமுதங்கொண்டு
ஆசுகவி ராஜனைப்போல் மதியம்பூண்டு
அப்பனே சடாட்சரத்தை சிக்கறுத்து
வீசுதமிழ் புலவர்முன்பு வினயங்கூறி
வீறுடனே பற்பமதை விதிகேழ்ப்பாரே. 935

விதியான விதியதுவு மிகக்கடந்து
விட்டகுறை வாய்த்ததொரு தன்மைபோலும்
பதியான பதிவழிபய காண்பிப்பேன்போல்
பாலகனே சடக்கறுத்து பருவங்கண்டு
கதிபெறவே சாலோக சாமீபத்தில்
சாரூப சாயுச்சிய பதிக்கியாவாய்
துதியுடனே யுந்தமக்கு வுளவுகூறி
துப்புரவாய் ஏமாற்றல் செய்வார்காணே. 936

காணவே புலஸ்தியனே கருவுள்ளானே
காவலனே நாவலனே கருதக்கேண்மோ
பூணவே பற்பமதற் கிடங்கொடாதே
புண்ணியனே தெண்ணியனே புகழுள்ளானே
ஆணவங்கள் தானொடுங்கி வன்புள்ளானே
அப்பனே யவர்தமக்கு ஏவலாகி
வேணபடி யுபசார மிகவாய்ச்செய்து
வேட்கமுடன் பற்பமதை பாய்ச்சக்கேளே. 937

பாய்ச்சவே மதிதனிலே பத்துக்கொன்று
பாலகனே தானுருக்கி பருவம்பூண்டு
தேய்க்கவே தானுருக்கி யெடுத்துப்பாரு
தேஜொளியின் சின்மயத்தின் மாற்றேதோன்றும்
வாய்க்கவே வாரடித்து புடந்தான்தீரு
வளம்பெரிய நாதாக்கள் தங்கமாச்சு
ஆச்சரிய மானதொரு தங்கப்பா
அப்பனே சிவயோகி தங்கமாச்சே. 938

Koviloor Digital Library

பொன்மாத்துயர்வு

தங்கமொரு மின்னமொரு மார்க்கங்கூர்வேன்
தயாபரனே சுந்தரனே தண்மையோனே
புங்கசித்தி யெட்டுரிய புகழுள்ளானே
புங்கவனே மணிமாரா புகல்வேனப்பா
அங்கமுடன் வீரமது பூராதானும்
அப்பனே சீனமது வெண்காரந்தான்
சிங்கமென்ற வெடியுப்பு வன்னபேதி
சிற்பரனே யோர்நிறையா யெடுத்துதூக்கே. 939

தூக்கியே சரக்கனைத்துங் கல்வமிட்டு
துப்புரவாய் வறுபாக செயநீர்தன்னால்
ஆக்கமுடன் மூன்றுநா ளரைத்துமேதான்
அப்பனே ரவிதனிலே காயவைத்து
நோக்கமுடன் சில்லிட்டு சீலைசெய்து
நெடிதான புடமதுவுங் கோழியாகும்
வாக்கதுவும் பொய்யாமல் தீர்வாயப்பா
வளம்பெரிய செந்தூரங் கூரொண்ணாதே. 940

ஒண்ணாது வாறுமாற் றாணியாலே
வுத்தமனே வாரடித்து புடந்தான்கொள்வாய்
கண்ணான செந்தூரங் குன்றிதானும்
காவலனே முன்னீரால் மத்தித்தேதான்
வண்ணமுள்ள வாறுமாற் றாணிதன்மேல்
வகையுடனே பூசிவர வதீதங்கேண்மோ
திண்ணமுடன் ரவிதனிலே காயவைத்து
தீர்க்கமுடன் காவிதனில் புடந்தான்தீரே. 941

தீர்க்கவென்றால் புடமதுவு மூன்றுபாகம்
திறமையுடன் முதற்பாகம் போலேதீர்வாய்
ஏற்கவே எருவதுவும் நான்கேயாகும்
எழிலான புடமதுவு மாறிப்பாரு
பூர்க்கவே மாற்றதுவு மென்னகூர்வேன்
புகழ்பெரிய நாதாக்கள் கூரார்தாமும்
ஆர்க்கவே தங்கமது வருணத்தங்கம்
அப்பனே சின்மயத்தின் தங்கமாச்சே. 942

Koviloor Digital Library

புசுண்டருக் குபதேசித்த தாரக்கட்டு

ஆச்சப்பா புலஸ்தியனே புண்ணியமாரா
அருந்தமிழைக் கரைகண்ட வனமுள்ளானே
மூச்சடங்கி நெடுங்கால மிருந்தசித்து
மூதுலகை கரைகடந்த புஜண்டமாரும்
மாச்சலது வாராமல் வரைகோடிகாலம்
மன்னவனே நெடுங்கார மிருந்தசித்து
பாச்சலெனும் சுவாசமதை யுள்ளடக்கி
பாருலகில் யிருந்ததொரு சித்தாம்பாரே. 943

பாரேதான் யுகந்தோறும் சதுருகந்தான்
பாருலகில் சாதிநிலை நின்றசித்து
நேரேதான் வடகோடி கானகந்தான்
கெடியதொரு மகமேரு சார்வுதன்னில்
சீரமுடன் குண்ணேறி குகைகடந்து
தீர்க்கமுடன் வெகுகோடி ரிஷிகள்தம்மை
சாரலெனும் மலைச்சார்பு பொதிகைதன்னில்
சட்டமுடன் ரிஷிபதத்தை கண்டசித்தே. 944

கண்டதொரு புஜண்டமகா ரிடியார்தாமும்
காவணத்தை தான்மறந்து கானகத்தில்
அண்டர்முனி ராட்சதர்க ளிருக்கும்ஸ்தானம்
அடைவியெனும் பொதிகைமலை கண்டசித்து
திண்டிலைசூழ் வடபொதிகை சங்கஞ்சென்று
தீர்க்கமுடன் ரிடிபதத்தை சார்ந்துநின்று
வண்டமிழான் கரைகடந்து எந்தநாதன்
வளமையுள்ள வசுவனியார் பதங்கண்டாரே. 945

பதங்கண்ட வகஸ்தியனார் எங்கேளன்ன
பட்சமுள்ள எனதையர் மனதுவந்து
இதமுடனே தென்பொதிகை சார்வுதன்னி
லெழில்பெறவே சாங்கமதி லிருப்பதாக
விதமுடனே கிருபையது மிகவாய்க்கொண்டு
வித்தகனே யென்பெயரை யுரைக்கும்போது
நிதமுடனே வருள்கொண்டு துதியுங்கொண்டு
நிஷ்டையிலே குளிகையது கொண்டிட்டாரே. 946

Koviloor Digital Library

கொண்டாரே தென்பொதிகைக் கேகலாகி
குருபரனே யெனைக்கண்டு துதித்தபோது
வண்டமிழாஞ் சங்கத்தார் நாற்பத்தெண்பேர்
வளம்பெரிய நாதாந்த சித்துதாமும்
தெண்டமுடன் கைலாகு மிகவேகொண்டு
தோற்றமுடன் புஜண்டருக்கு வுபதேசந்தான்
கொண்டல்வண்ண னச்சுதனார் குளிகைகற்பம்
கொற்றவனே குருமுறையை புகழ்கண்டாரே. 947

கண்டாரே புஜண்டமகா ரிடியாருக்கு
கருத்துடனே சாரமென்ற காயபற்பம்
வண்டமிழை யறியாத மாண்பர்தாமும்
வளம்பெரிய நாதாக்கள் கோர்வைதன்னை
சண்டமா ருதம்போலே னூல்கள்கோர்வை
சதகோடி மககோடிமகா ங்கந்தான்
அண்டர்முனி தேவரிடி நாதர்தாமும்
அன்புடனே வாக்கதுவுங் கொண்டிட்டாரே. 948

இட்டதொரு புஜண்டருக்கு யுகாந்தகற்பம்
யெழில்பெறவே சாரமென்ற கற்பமப்பா
தொட்டகுறி போலாக வெந்தனையர்
சுடமணித்தா மரைபோலே சூட்சங்கொண்டு
நட்டதொரு கல்லுப்பு சேர்தான்ரெண்டு
நயம்பெறவே வெடியுப்பு சமனாய்ச்சேரு
இட்டமுடன் கற்சுண்ண நீரில்தானும்
எழில்பெறவே தான்கலந்து வடிதான்செய்யே. 949

செய்யவே தெளிவிருத்து காய்ச்சியேதான்
செங்கமலர்க் கண்ணானே புலஸ்தியாகேள்
துய்யநல்ல வுப்பதனை யெடுத்துமைந்தா
துப்புரவே பாண்டமதில் மணல்தான்கொண்டு
வெய்யபுகழ் வுப்பதனை பாதிதானும்
வீறுடனே தான்பரப்பி சாரந்தன்னை
நைய்யவே நடுமையம் தான்பொதிந்து
நன்மையுடன் மேலுமந்த உப்பைக்கொட்டே. 950

Koviloor Digital Library

பொன்மாற்றுயர்வு

தானான சாரமது துரிசைக்கொல்லும்
தாக்கான துருசதுவுஞ் சூதங்கொல்லும்
மானான சூதமுதால் சகலசித்து
மானிலத்தி லாடுதற்கு விடமுண்டாகும்
கோனான வெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனார் யுந்தமக்கு வுரைத்தநீதி
தேனான சின்மயத்தி னருளினாலே
தெளிவுடனே யுந்தமக்கு வுரைத்தவாறே. 951

வாறான யின்னமொரு முறமைகூர்வேன்
வளம்பெரிய நாதாக்கள் கூறாவண்ணம்
நீறான னீரதுவும் சாரனீராம்
நீதியுள்ள சாரமது களஞ்சியொன்று
கூறான கண்டரது களஞ்சியொன்று
குறிப்பான சூதமது களஞ்சியொன்று
பாறான மனோசீலை களஞ்சியொன்று
பாங்குபெற சரக்கனைத்தும் பொடியாய்ச்செய்யே. 952

செய்துமே மண்கலசம் தன்னிலப்பா
செப்புகிறேன் சரக்கனைத்தும் பாண்டமிட்டு
துய்யநல்ல சீலையது வலுவாய்ச்செய்து
துப்புரவாய் ரவிதனிலே காயவைத்து
வையகங்கள் தான்புகழ பூமிதன்னில்
வளமுடனே புடமதுவும் பட்சமாகும்
நையவே பட்சமது சென்றபின்பு
நயமுடனே தானெடுத்து நவிலக்கேளே. 953

கேளப்பா புலஸ்தியனே கெவுனவானே
கேண்மையுள்ள சரக்கதனை யெடுத்துமைந்தா
நாளப்பா போகாமல் ஞானவானே
நன்மையுள்ள மாற்றதுவு மாறேயாகும்
தேளப்பா கொட்டியதோர் விஷம்போலே
தேற்றமுட னாறுமாற் றாணிமேலே
கேளப்பா நேராமல் குமுதவானே
குறிப்புடனே தயிலமதை பூசிடாயே. 954

Koviloor Digital Library

பூசியே புடமதுவு மெருஒன்றாகும்
புகழுடனே பூங்காலி தனிற்பொதிந்து
வீசுபுகழ் தகடதன்னை யெடுத்துப்பாரு
வெண்ணுலகு நாதாக்கள் மதிக்குந்தங்கம்
ஆசுகவி வாணர்முத வறியாத்தங்கம்
அப்பனே சுயத்தங்கம் பிறவித்தங்கம்
மாசிலாத் தங்கமது யென்னகூர்வேன்
மன்னவனே சித்தருட வேதையாமே. 955

வேதையாஞ் சித்தொளியே யின்னங்கூர்வேன்
வேதாந்த தாயொளியை வெல்லும்மாரா
பாதையெனு ஞானவழி கடந்தசீலா
பாருலகில் நவகோடி ரிஷிகள்மெய்ச்சும்
காதையெனு மாயுரு வேதந்தன்னை
கட்டறுத்த சின்மயத்தி னொளியேகேண்மோ
தாதையெனும் பாட்டனவ ரசுவனியாந்தேவர்
தாரணியில் பாடிவைத்த பெருநூலாமே. 956

பெருந்நூலாஞ் சிறுநூலாங் குருநூலாகும்
பேருலகில் பேரின்ப பெருநூலாகும்
திருநூலாம் பன்னீரா யிரந்தானப்பா
தீர்க்கமுள்ள புலஸ்தியனே யுந்தமக்காய்
அருநூலா முலகிலுள்ள வதிசயங்கேள்
அப்பனே சத்தசா கரந்திரிந்து
ஒருநூலாய் தென்பொதிகை மேலமர்ந்து
யோதிவைத்தேன் சாபநிலை நுணுக்கம்பாரே. 957

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பாடினேன் நாதாக்கள் பிழைக்கவென்று
நேரப்பா யிந்நூல்போல் மூன்றுசொன்னேன்
நேர்மையுடன் முப்பத்தா றாயிரந்தான்
சீரப்பா முதற்பன்னீ ராயிரந்தான்
சிறப்புடனே பாடிவைத்த ஞானநூலாம்
தீரப்பா சத்தசா கரமுமாகும்
தீர்க்கமுள்ள ரிஷிகள்பதம் வணங்குவீரே. 958

Koviloor Digital Library

வணங்கவே நாதாக்க ளடிபணிந்து
வகையுடனே பலநூலுங் கண்டாராய்ந்து
இணங்கியே யவரவர்க ளாசீர்மங்கள்
யெழிலான பர்வதங்கள் மிகவேசென்று
மணங்கமழும் தேவர்முனி பதாம்புயத்தை
மன்னவனே சதாகாலம் பணிந்துபோற்றி
சுணங்கமது வாராமல் குருவல்லோனே
சுந்தரனே யவர்பணிக்கு முன்னாய்நில்லே. 959

நில்லென்று கூறுகையில் மன்னாகேளு
நீதியுள்ள மன்னவனே நிசிதமின்றி
வல்லபமாய் மிகமொழிகள் கூறாவண்ணம்
மன்னவனே யவர்மொழிக்கு முன்னாய்நின்று
வெல்லறிய சாஸ்திரங்க ளதீதங்கூறி
வேதாந்த வெட்டவெளி முன்னில்நின்று
புல்லறிவு உடையதொரு சிறியபாலா
பொங்கசித்தி நான்பெறவே பணிந்துக்கொள்ளே. 960

கொள்ளவே யவர்பாதம் முன்பாய்நின்று
கொற்றவனே புலஸ்தியனே குணமுள்ளானே
என்ளளவு குற்றமது நேராவண்ணம்
யெழில்பெறவே யவர்தமக்கு முதல்வனாகி
தெள்ளுதமிழ் விளையாட்டை யறிந்தபாலா
தேற்றமுடன் சிற்றறிவை யறிந்தசீலா
உள்ளபடி யவருமக்கு மனதுவந்து
வுற்றதொரு கருவிதனை யோதுவாரே. 961

ஓதுவார் யின்னமொரு ஞானப்போக்கு
ஓகோகோ நாதாக்க ளறிந்தவித்தை
நீதமுடன் கருவிகர ணாதியந்தம்
நிஷ்கமுள்ள ஞானவழி சின்மயத்தை
பாதமெனும் மனோன்மணியா ளருளினாலே
பாருலகில் நாதாக்கள் மறைத்ததெல்லாம்
தோதமுடன் மனதுவந்து யுந்தமக்கு
தோராம லோதிவைப்பார் சித்தர்தாமே.

Koviloor Digital Library

சித்தான சித்தர்பதம் யார்க்குக்கிட்டும்
சின்மயத்தை கண்டவர்கள் சிவயோகிக்கு
முத்தான வழியதுவுந் திறந்துகாட்டும்
மூதுலகை உட்கடலை துரத்திக்கொல்லும்
பத்தான வெருட்கடலை யடையக்காட்டும்
பாருலகில் பரஞ்சோதி சுடரேதோன்றும்
சுத்தமுட னென்னாளும் சுருதிகாண்பாய்
சுந்தரனே யெந்தமக்கு யாவுஞ்சித்தி. 963

சித்தியா முந்தமக்கு யாவும்வாய்க்கும்
சிற்பரனே சுந்தரனே வதீதங்காண்பாய்
முத்திபெற சகலகலைக் கியானமெல்லாம்
மூதுலகை கட்டறுத்து மொழியலாகும்
எத்திசையும் வீற்றிருக்கும் ரிஷிகள்நாதர்
எழிலான சீஷவர்க்கம் முதுமையுள்ளோர்
பத்தியுட னுந்தமக்கு ஏவல்பூண்டு
பரம்பொருளின் விசித்திரத்தை பகருவாரே. 964

ஞானேந்திரியங் கூறல்

பகருவார் புலஸ்தியனே பண்புள்ளானே
பாவலனே நாவலனே பண்பாய்க்கேண்மோ
நிகரமுடன் பசுபாசக் கடலைவெட்டி
நிஷ்களங்க மானதொரு நிஷேதபூர்வம்
சகலகலை தானுணர்ந்து சித்துபாலர்
சதகோடி யுககோடி தொந்தங்கோடி
அகமகிழ்ந்து தானுரைப்ப ரதீதவித்தை
அப்பனே ஞானத்தி னதீதங்கேளே. 965

கேளப்பா ஞானேந்திரிய கிளைகள்கூர்வேன்
கெடியான கர்மேந்திரிய மேதென்றாக்கால்
நாளப்பா பூர்வீக தபோபலத்தால்
நாதாந்த சித்துமுனி ரிடிகள்தாமும்
மீளப்பா பவக்கடலுக் குள்ளாறாகி
முக்கியமாங் கர்மேந்திரிய நிலையில்நின்று
பாளப்பா திரேகமது வினைக்காளாகி
பாருலகில் மடிந்தவர்கள் கோடிகாணே. 966

Koviloor Digital Library

காணவே புலஸ்தியனே புண்ணியமாரா
காசினியில் வெகுகோடி நாதர்தாமும்
தோணவே சமாதிமுகம் பணிந்துநின்று
தோறாமல் சின்மயத்தை யுள்ளேகொள்வார்
ஆணவங்கள் தானொடுங்கி வதீதமாண்பர்
அப்பனே தவரிஷிகள் மகிமைகொண்டு
வேணவுப சாரமது மிகவேசெய்து
வேழ்க்கமுடன் ஞானவழிக்' கேகுவாரே. 967

ஏகுவார் சின்மயத்தின் பொருளைநோக்கி
யெழிலான சரிதைகிரி யோகமார்க்கம்
வாகுடனே யுந்தமக்கு யோதுவார்காண்
வளம்பெரிய நாதாந்த சித்துமார்க்கம்
மாகுபோல் மனந்தேற்றி யுளவுகூறி
பாலிப்பார் சதகோடி சூரியன்போல்
சாவேது காயாதி கற்பத்தாலும்
சட்டமுட னுந்தமக்கு பாலிப்பாரே. 968

பாலிப்பார் சித்துமுனி ரிடிகள்தாமும்
பாருலகில் நவகோடி ஞானமார்க்கம்
நூலிதுபோல் பெருநூலா நுட்பங்கண்டு
நுணுக்கமுடன் போதிப்பார் ஞானமார்க்கம்
வாலிபனாங் காயாதி கற்பமார்க்கம்
வலுமையுடன் போதிப்பார் வதீதநேர்மை
மூலியெனுங் காயாதி கற்பமூலி
மூதுலகை கட்டறுத்த முனிவர்தாமே. 969

முனியான முனிவரவர் யேதுகூர்வார்
மூதுலகை தான்வெறுக்கு முயற்சியாகும்
தனியான சூட்சாதி சூட்சமெல்லாம்
தற்பரனே யுந்தமக்கு தாக்குவார்கள்
கனியான வர்க்கனிக ளதிகங்கொண்டு
காவலனே தீட்சைமுகம் பதிவுகண்டு
வனிதையுடன் ஞானப்பால் பூட்டகத்தை
வாகுடனே யுந்தமக்கு ஓதுவாரே. 970

Koviloor Digital Library

ஓதுவேன் ஞானப்பால் விளக்கந்தோன்றும்
ஒருகோடி யுகாந்தவரை யிருக்கலாகும்
தீதுடனே மகமேரு ஞானக்கண்பால்
தீர்க்கமுடன் தானறிவாய் வதீதமெத்த
சாதுரிய சிவயோக வாசியோகம்
சதுர்க்கண்ணால் தானறியும் மனோலயந்தான்
வாதுறையும் பஞ்சேந் திரியத்தாலே
வளமையுடன் குறிப்பறிந்துங் கூறலாமே. 971

கூறவே ஞானேந்திரிய கிரியையெல்லாம்
குருபரனே யுந்தமக்கு கூறலாகும்
மாறவே சொரூபநிலை யொளியைப்பற்றி
மன்னவனே மனதடங்கி நடுவில்நின்று
ஆறவே பதிபாச நிலையிற்சென்று
அப்பனே மணிவிளக்கை தீபங்கொண்டு
மீறவே வுள்மூல மாறாதாரம்
மிக்கவொளி தெரிசனத்தை காணலாமே. 972

காணவே தேஜொளிவின் மயத்தைவிட்டு
கடுங்கார மனலதனை மேலேநோக்கி
பூணவே யோங்கார முள்ளடக்கி
புகழான சவுக்கநிலை பதியில்நின்று
ஷோணபடி களைபாச வலையைநீக்கி
வெட்டவெளி யம்பரத்தை மேலேசுத்தி
ஆணவங்கள் தானொடுங்கி யன்புள்ளானே
அம்பரத்தை யேவுதற்கு ஆளாவாயே. 973

ஆளான வாசிபத மேலேநோக்கி
அம்பரத்தின் மேலிருந்து அடவாச்சென்று
தாளவே கும்பத்தின் முனையில் நின்று
தற்பரனே ஞானமணி தம்பிரானே
சூளவே கர்மேந்திரிய பாபம் நீக்கி
சுந்தரனே சுடரொளியே சுன்னதான்கொண்டு
[illegible]மாம் வட்டமதிற் கடலாஞ் சென்று
நிங்களங்க மானரவி சுடரிலநில்லை. 974

Koviloor Digital Library

நில்லென்ற பதநிலையை பத்திநின்று
நீதியுள்ள சலாகையென்னும் ஞானந்தன்னில்
கல்லென்று கருவிகர ணாதியந்தம்
கசடறுத்த பெரும்பான்மை ஞானியோர்க்கும்
புல்லென்ற பூடுமுதல் பிரணாயங்கள்
புகலரிய கபாலவழி வாசல்காட்டும்
சில்லென்ற நடுக்காடு சின்மயந்தான்
சீருள்ள நடுமைய மிருளுமாமே. 975

இருளான பொருளதனில் ஞானந்தோன்றும்
எழிலான சருவநிலை பதமுங்காண்பீர்
அருளான யிருள்கண்டு யிதமுங்கண்டு
அப்பனே அட்டதிசை வுளவுங்கண்டு
பொருளான போக்குவழி பொதிவுதோன்றும்
பொங்கமுடன் மயநீங்கி கருணைகொள்வீர்
தெருளான தெள்ளமிர்த ஞானக்கண்ணே.
தேஜொளிவின் சுடர்நிலையை தெளிவாய்க்கொள்ளே.976

கொள்ளவே சிற்சொரூப சித்தாந்தத்தை
கோட்டைதனை நிலையதனை காணாமைந்தான்
சுள்ளாணி பட்டிருக்கும் வடபாகந்தான்
சூக்குமத்தை யறியாமல் சுடரில்நின்று
விள்ளவே வினையகலும் பாபம்நீக்கி
விட்டகுறை வாசல்வழி சொரூபமாச்சி
தள்ளாமல் சமாதிவழிக் கேகும்போது
தயாபரனே சின்மனிலை யறிவர்தானே. 977

அறிவான வாசிவழி யோகஞ்சென்று
அம்பரத்தி லாடுகின்ற பஞ்சகர்த்தாள்
குறியான குறிப்பறிந்து ஸ்ரீம்தங்கொண்டு.
குருபரனார் வீற்றிருக்கும் குலாசந்தன்னில்
நெறியான நீதிவழி பானஞ்சென்று
நீதியுள்ள சொப்பன சாக்ரதமாகி
முறியான மூர்ச்சதனை யடக்கிமைந்தா
மூதண்ட சிவஞான யொளியைக்காணே. 978

Koviloor Digital Library

காணவே புலஸ்தியனே புண்ணியமாரா
காவலனே வேதாந்தப் பொருளேகேண்மோ
தோணவே கலசமாம் கோர்வைதன்னை
தோறாமல் யுந்தமக்கு போதிப்பார்காண்
வேணபடி காப்பகத்து விபரங்கூர்வேன்
வெளிநோக்கி கண்திறந்து விண்ணிலேகி
நீணவே வாசினிலையை நீந்தியேதான்
நீதியுடன் சுவாசனிலை பதிகொள்வீரே. 979

பதியான பதிபாசக் கலையில்நின்று
பாருலகை சிக்கறுத்து பதமுங்கண்டு
துதியான மோட்சவழிக் கேகலாகி
துப்புரவாய் கருணையெனுங் கடலில்மூழ்கி
மதியான சந்திரனில் பூரகத்தை
மாற்றிவிட்டு கேசரத்தை மேலேதூக்கி
விதியான விச்சுளியை விண்ணில்கண்டு
வீதமுடன் கேசரத்தை மாற்றிடாயே. 980

மாற்றவென்றால் பூரணத்தை மதியில்நின்று
மன்னவனே மாரணத்துக் கேகலாகி
கூற்றனுக்கு மிகவழிகள் தான்கொடாமல்
குறியான வழியதனை மடக்கவென்று
நீற்றமுடன் புலான்பதி பாசம்விட்டு
நின்றுநிலை விட்டேகி கலையிற்சென்று
பூட்டகமா மும்மூலஞ் சிக்கறுத்து
புகழான பீடமது சமாதி கொள்ளே. 981

கொள்ளவென்றால் சமாதிமுக மேறலாகும்
குருபரனே கும்பகத்தின் மேலேனின்று
எள்ளளவும் சோதனைக்கி யிடங்கொள்ளாமல்
யெழிலான குருபீட பதியிற்சென்று
தெள்ளமிர்த மென்றதொரு ஞானப்பாலை
தேற்றமுடன் கொண்டுமல்லோ காயசித்தி
உள்ளபடி கைமுறையோ டிருந்துகொண்டு
வுத்தமனே யென்னாளுஞ் சுவாசங்கொள்ளே. 982

Koviloor Digital Library

கொள்வதற்கு முன்னாலே மதியம்பூண்டு
கொற்றவனே கும்பகத்தி னிலையைப்பற்றி
வள்ளலுயர் தேற்றமுள்ள கலையினின்று
வகையுடனே பிரணாயந் தன்னிற்சென்று
கொள்ளமிர்த மானதொரு கும்பகத்தின்
கோலமணி கலாபமென்ற சொரூபந்தன்னில்
கள்ளநமன் காலனுக்கு யிடங்கொள்ளாமல்
கருத்துடனே யோகநிலை சாதிப்பாயே. 983

சாதிப்பாய் சமாதிதனிலே கலைபகுத்து
சட்டமுடன் வத்வீத புவனந்தன்னில்
சோதியென்ற ஞானமென்னும் தீட்சணத்தால்
சுடரொளிபோல் மின்னுகின்ற சோதிபோலும்
பாதிமதி சடையணிந்த தம்பிரானின்
பதிபாசக் களையனைத்துங் கொண்டேயேகி
நீதியுடன் சமாதிநிலை பிரணவத்தை
நிஷ்களங்க மாகவல்லோ ஒதுவீரே. 984

ஓதுகின்ற தன்மையது யேதென்றாக்கால்
வுத்தமனே பரமவெளி காணலாகும்
சாதுரிய வத்வீத சுவானந்தன்னில்
சாத்தெரிய துவாதசாந் தத்தினின்று
சோதிமயந் தனைக்காண சூட்சாசூட்சம்
சொரூபவெளி பரகிரியை காணலாகும்
தீதுதரும் பவக்கடலை விட்டகற்றி
தீர்க்கமுடன் பரகதிக்கி யேகுவீரே. 985

யேகவென்றால் ஞானப்பா லுண்டோர்கோடி
ஏற்றமுள்ள சிவயோகி நிலையிற்சென்று
சாகமுட னென்றாலு முந்திச்சென்று
சட்டமுடன் பிராணதவ நிலையில்நின்று
வேகமுடன் மண்ணுலகில் சமாதியோகம்
விட்டமுடன் பலபலவாய் தவங்கள்பூண்டு
தேகமது யென்றாலும் மதியார்தன்னை
தேசமதி லிருப்பதற்கு யினங்கொண்டாரே. 986

Koviloor Digital Library

கொண்டதொரு வாயகலை தனையுணர்ந்து
குவலயத்தில் வரைகோடி காலமப்பா
அண்டர்புகழ் சித்துமுனி ரிஷிகள்போலும்
அவனிதனில் கோடிசங்க மிருட்டோமென்றும்
திண்டிரைசூழ் தாபோல நதிகள்யாவும்
தீர்க்கமுடன் குண்ணுமலை வனாந்திரங்கள்
யெண்ணரிய சொரூபமென்ற சமாதிகொள்ள
யெழிலான தம்பதிக்கு சென்றிட்டாரே. 987

சென்றாரே சதுருகமாம் வரைகோடிகாலம்
செம்மலுடன் சமாதிக்கு யேகவென்று
தென்திசையாம் பொதிகைமலை தனிலிருந்து
தேற்றமுடன் காயசித்தி கொண்டுமேதான்
வென்றிடவே கெவனமென்று குளிகையோடும்
விட்டகுறை தனிலிருந்து பற்றலாகி
குன்றுமலை பருவதங்கள் சாரலோரம்
குறிப்புடனே சமாதிமுகம் முந்திட்டாரே. 988

இட்டதொரு தேவாதி ரிடிகள்தாமும்
யெழிலான சித்துமுனி நாதரோடும்
தொட்டதொரு ராஜாதி ராஜமன்னர்
தேர்ந்ததொரு மாண்பர்களும் அதீதவான்கள்
கெட்டலைய விட்டுவிட்ட சிவயோகிதாமும்
கெடியான சாதுக்க லட்சங்கோடி
அட்டகலை தாமுணர்ந்து பெரியோர்தாமும்
அப்பெரிய பதிதனிலே யமர்ந்திட்டாரே. 989

அமர்ந்தாரே பதிகோடி யுகாந்தசங்கம்
அன்புடனே நெடுங்கால மிருக்கவென்று
சுமந்ததொரு சுவாசகலை யுள்ளடக்கி
சுத்தநிலை கலைபகுத்து சூட்சங்கொண்டு
கமருடனே யிருளகற்றி கருவிபூண்டு
கருவிகர ணாதியந்த முள்ளடக்கி
யெமனுலக காலனவர்க் கிடங்கொடாமல்
யேற்றமுடன் சமாதினிலை பதிந்திட்டாரே. 990

Koviloor Digital Library

பதியவே யெனதைய ரசுவனியாந்தேவர்
பாருலகில் பாலித்தா ரெந்தனுக்கு
விதிமறையால் தேவரிடி சொன்னவாக்கு
விண்ணுலகில் பொய்யாது மெய்யேயாகும்
துதிசெய்த நவகோடி சித்தர்தாமும்
துணையகந்தி கைலாய பதிக்கிசெல்ல
நிதிபடைத்த சாதுக்கள் மாண்பரெல்லாம்
நீடாழி யுலகுதனை மறந்திட்டாரே. 991

மறந்தாரே யுல்குபதி வாழ்வையெல்லாம்
மானிலத்தில் விட்டொழிந்தோர் கோடியுண்டு
துறந்தாரே துரைராஜ பதிக்குச்செல்ல
தூசகற்றி பிரணவத்தை யுச்சரித்து
சிறந்ததொரு வாகமத்தின் படியிற்சென்று
சிற்பரனே என்னாளும் மனதிலுன்னி
யிறந்துபடுங் காலமது யெண்ணாமற்றான்
யெழிலான துறவிமுகம் நண்ணினாரே. 992

நண்ணியே வெறுங்கூடாய் போனார்கோடி
நாதாந்த வழலைதனை உண்டோர்கோடி
குண்ணியே சமாதிநிலை யறியாமற்றான்
குருபரனார் சித்தொளிவின் வாக்குமிஞ்சி
தண்ணமுது ஞானமெனுங் கடல்கடந்து
சாகரத்தை தனைமறந்து மாண்டோர்கோடி
எண்ணரிய நற்பொருளை நினையாமற்றான்
யேகவெளி பரகெதியை யிழந்திட்டாரே. 993

இழந்தாரே வெகுகோடி மாண்பரெல்லாம்
யெழிலான வரைகோடி யுகாந்தங்கோடி
சுழன்றுமே தானலைந்து சொரூபங்கொண்டு
சூட்சமென்ற பரகதிக்கி யாளாகாமல்
வுழன்றுழன்று மாண்டவர்கள் லக்கோயில்லை
ஓகோகோ நாதாக்க ளனேகமுண்டு
பழங்கதைகள் கேட்கலையோ பாரில்தானும்
பாழ்நரகில் போனவர்கள் கோடியுண்டே. 994

Koviloor Digital Library

கோடியாம் ஞானவரை கொண்டோர்கோடி
குருபரனார் வாக்குரைத்த முறைகள்தப்பி
நீடியே சாதனத்தை எண்ணாமற்றான்
நிலைகுலைந்தார் பதிகுலைந்தார் நீனிலத்தில்
ஆடியே யம்பரத்து காலனாகி
அருந்தவத்தை தானகன்று அறிவில்லாமல்
தேடியே பலரிடமுங் கிட்டாமற்றான்
தேசமதில் நாய்போலே யலைந்திட்டாரே. 995

அலைந்தாரே தேசபதி மாண்பரெல்லாம்
அன்புடனே சமாதிமுகங் காணாமற்றான்
துலைந்தாரே சமாதிமுகம் தொல்லையென்று
தொட்டகுறை விட்டகுறை யிதுதானென்று
தலைவிதியால் முறப்பாடு காரணத்தால்
தாரணியில் சிலமாண்பர் சமாதிகொண்டார்
கலைபகுத்து சமாதிமுகங் கொண்டோர்கோடி
கஷ்டமென்று விட்டவர்கள் கோடியாமே. 996

கோடியா மின்னூல்தான் பெருநூலாகும்
குவலயத்தில் பன்னீரா யிரந்தானாகும்
தேடியே யலைந்தாலுங் கிட்டாதப்பா
தென்பொதிகை தனிச்சபையில் சமாதிகொண்ட
நீடியதோர் யின்னூலை யார்தானீவார்
நிஷ்களங்க மாகவல்லோ எந்தன்தேவர்
பாடியே யெந்தனுக்கு பணையங்கொண்டு
பரம்பொருளாய் யென்னாளும் பாலித்தாரே. 997

பாலிக்க விக்காண்டம் நான்காங்காண்டம்
பாருலகில் சாதுக்கள் மனங்களிக்க
வாலிபனாம் புலஸ்தியரே யுந்தமக்கு
வரமளித்தா ரெனதைய ரகுவனியாந்தேவர்
நாலிதற்குள் காண்டமது நான்றாய்க்கூறி
நாட்டினார் தேவரிடி வாக்குபொய்யா
பாலிதமாம் மாயுறு வேதந்தானும்
பாருலகில் நான்முறையாங் காண்டமுற்றே. 998

நான்காவது காண்டம்
முற்றுப்பெற்றது

Koviloor Digital Library

அகத்திய மகா முனிவர் சிறப்பு

தமிழ் மொழிக்கு முதன் முதலில் இலக்கணம் இயற்றி நவகோடி சித்தர்களுக்கு தந்தையாக விளங்குபவர் அகத்திய மகா முனிவர்.

அவர் முருகப் பெருமான் என்று நாம் அழைக்கும் தலைவன் சுப்பிரமணியருக்கு தலைமை சீடராய் இருந்தவர். அகத்தியரின் காலம் முருகப் பெருமானுடைய காலம் ஆகும். இது இருக்கு வேதத்திற்கும் முற்பட்டது என்று பல சரித்திர சான்றுகள் கூறுகின்றன.

காகபுசுண்டர் பிரான் அவருடைய பெருநூல் காவியம் (1000) என்ற நூலில் அகத்தியரின் பெருமையைக் கீழ்க் கண்டவாறு பாடியருளிருக்கிறார்.

அகத்தியரே பெரும் பேற்றை அடைந்தோராவார்
அம்மம்மா வெகுதெளிவு அவர்வாக்குத்தான்
அகத்திலுறை பொருளெல்லாம் வெளியாய்ச் சொல்வார்
அவர்வாக்குச் செவிகேட்க அருமையாகும்
அகத்தியரின் பொதிகையே மேருவாகும்
அம்மலையும் அகத்தியரின் மலையுமாகும்
அத்தியரி னடையாளம் பொதிகை மேரு
அவர் மனது மலரைப் போற் பெரியோருண்டோ.
காகபுசுண்டர் பெருநூல் காவியம்1000-142

கூறுமே யாம்நினைத்த சங்கற்பத்தை
குருவானாற் சொல்லிடுமே அடியாராவோம்
யாருமே எட்டு ரெண்டும் பத்தென்றார்கள்
யார் சொன்னார் அகத்தியரே விரித்துச் சொன்னார்
தாருமே மாந்தர்களும் மயங்கினார்கள்
தமர் சித்த ரானாக்காற் சொல்லுவார்கள்
கோருமே நீர் கேட்கச் சொல்லி வாரேன்
குரு வாகு மந்திரங்க ளீதுதானே.
காகபுசுண்டர் பெருநூல் காவியம்1000-772

Koviloor Digital Library

"ஞானவெட்டி" என்ற நூலில் திருவள்ளுவர் பெருமான் அகத்தியர் தனக்கு மெய்ஞ்ஞானம் அருளிச் செய்த குருபிரான் என்று கூறியுள்ளதைக் கீழ்க்கண்ட பாடலில் காணலாகும்.

மருவுயர்ந்த கமலமல ராயிரத் தெட்
டிதழில் வளர் மதியை வேண்டித்
திரு வுயர்ந்த வம்பிகைப் பெண்சீர்பாத
பங்கயத்தில் தெரிசித்தோன்
கருவுயர்ந்த வளநாடு தில்லை நதிக்
கரையோரங் கருதி வாழ்ந்தேன்
அருவுருவாய் மெய்ஞ்ஞான மருளி
அகத்தியரெனக் கருள்செய்தாரே.

ஞான வெட்டி-542

இச்சை மூன்றானவித மினியுரைக்கும் வகைகா
ணிதுவே புத்திரவிச்சை லோக விச்சையுமாகும்
பட்சமாமர்த்த விச்சையுமிதன் கூறறியவெந்தன்
பரிபூரண வம்பிகை பாதமலர் பணிந்தேன்
அஷ்டதிக்கும் புகழு மகத் தீசரருள் போற்றி
யடியன் திருவள்ளுவன் அவனி மீதிலிந் நூல்
நிஷ்டை யோகத்தின் ஞான நிகழ்ந்த மூன்றுவகை
நிகழுமிச்சையதின் சுகத்தைக் கண்டவனாண்டே.

ஞான வெட்டி-170

முருகன் அருள் பெற்று முருகனைப் பாடியே பெரும் பேறு பெற்றவர் அருணகிரி நாதர். அவர் பாடல் ஒவ்வொன்றும் தமிழ்த் தேன் அருவியாகும்.

அறிவழிய மயல்பெருக வுரையுமற விழிசுழல
அனலவிய மலமொழுக - அகலாதே
அனையுமனை யருகிலுற வெருவியழ வுறவுமழ
அழிவினிகர் மறலியெனை - அழையாதே
செறியுமிரு வினைகளற மருவுபுல னொழியவுயர்
திருவடியி லணுகலா - மருள்வாயே
சிவனை நிகர் பொதியவரை முனிவ னகமகிழ இரு
செவிகுளிர இனிய தமிழ்- பகர்வோனே.

அருணகிரிநாதர் திருப்புகழ்- 18

Koviloor Digital Library

முருகப் பெருமானுக்குச் சூட்டிய பாமலையில் அருணகிரிநாதர் பெருமான், அகத்திய மகா முனிவரை சிவபெருமானுக்கு நிகரான பொதியவரை முனிவன் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

காலனிடத் தணுகாதே காசினியிற் பிறவாதே
சீல அகத்திய ஞானத் தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே நாதகிரிப் பெருமானே.
அருணகிரிநாதர் திருப்புகழ்- 169

இந்தப் பாடலில் "சீல அகத்திய ஞானத்தேனமுது" காலனிடத்தில் அணுகாதிருக்கவும் காசினியிற் (உலகில்) பிறவாதிருக்கவும் செய்ய வல்லமை உடையவர் என்று அருணகிரிநாதர் கூறியிருக்கிறார்கள்.

நந்தீசர் மகானும் கொங்கண மகரிஷியும் அகத்தியரின் சிறப்பு பற்றியும் அவரின் ஆற்றலைப் பற்றியும் அருளிய கவிகள்.

"நீதியென்ற நெறிதவறாப் பொதியைவாழும்
நிரஞ்சனமாய் நிறைந்தகும்ப முனிதாள் போற்றி"
நந்தீசர் கருக்கிடை 300

அகத்திய மகரிஷி நமா என்றென்றோது
அஷ்ட சித்துதனை ஈவார் குளிகை ஈவார்
அகத்தியரே காஷாய வேடமீவார்
அப்போது சித்தரெல்லாம் கைக்கொள்வார்கள்
அத்தியரைத் தெண்டனிட்டு மேருசெல்ல
யாருக்குந் தடையில்லை அரசே யென்பார்
அகத்தியர் தாம் எக்கியத்தில் பிறந்த யோகி
ஆயிரத்தெட்டு அண்டமெல்லாம் ஆணையாச்சே.
கொங்கண மகரிஷி

அகத்தியர் சாதி சமயச் சழக்கைவிட்டு அருட்சோதியைக் கண்டவர். சாதிசமய வேறுபாடுகள் அவருக்குக்கிடையாது "எல்லாம் தானாகி" நிற்கும் ஞானநிலையைப் பெற்றவர். போக மகா முனிவர் சத்த காண்டம் என்ற நூலில்-

தானான சிலநூலில் சொன்னாரப்பா
தன்மையுள்ள சிலநூலில் சொல்லவில்லை
கோனான அகத்தீசர் ஜாதிபேதம்
கொற்றவனே வேளாளன் என்னலாகும்

Koviloor Digital Library

பானான தலைமுறைகள் எது என்றாக்கால்
பதமுடனே நாற்பத்தி எட்டேயாகும்
மானான நூல்தனிலே கண்டாற் போல
மகத்தான போகரிஷி வகுத்திட்டேனே.
போகரிஷி சத்த் காண்டம் 5703

மகான் சட்டைமுனி தன்னுடைய நூலில் அகத்தியர்கும்ப மாதத்தில் கும்பலக்கினத்தில் கும்பராசி என்ற ஓர் அபூர்வமான அமைப்பில் பிறந்தவர் என்று நமக்கு எடுத்துரைக்கின்றார்.

பார்க்கவன் ஸவித்ரு என்ற புகழ் பெற்ற அறிஞருக்கும் இந்துமதி என்ற அம்மையாருக்கும் குழந்தையாக குஜராத்தில் உருவெடுத்தவர் அகத்தியர்.

ஆரம்பக் கல்வியை குஜராத்தில் முடித்த அவர் இளமையிலேயே ஞானமும் சீலமும் நற்றவப் பண்பும் உடையவராகத் திகழ்ந்தார்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்று நாம் புகழும் தவத் தலைவன் சிவபெருமானுக்கே ஞானம் உபதேசித்த ஞானப் பழமாகிய சுப்பிரமணியருக்கு சீடராக இருந்து ஆன்ம ஞானத்தின் நுணுக்கங்களையும், ஆன்ம விடுதலையடையும் வழிகளைப் பற்றியும் கற்றறிந்தார். ஞானத்தலைவன் சுப்பிரமணியரின் கட்டளைப்படி தமிழ் எழுத்துக்களை வரி வடிவமைத்து, தமிழ் எழுத்துக்கும் தமிழ் மொழிக்கும் மூலமாயிருந்தார்.

மூலத் தமிழ் இலக்கியம் உலகம் முழுவதும் பரவ வேண்டும் என்று மொழி பெயர்த்தவர்

(ஸமஸ்கிருதம், கிரீக், ஹீப்ரு, சீனம் மொழிகளில்)

அவர் காலகட்டத்திலேயே ஒரு "சித்தர் ஞானகூடம்" பல்கலைக்கழகமும் ஒரு மருத்துவமனையும் ஏற்படுத்தியவர். துரோன மலையில் மருத்துவ ஆராய்ச்சி நிலையம், திருப்பரங் குன்றத்தில் இரசாயன ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் மருதமலையில்விஷ ஆராய்ச்சி நிலையமும் நிறுவிய பொருமை அகத்தியரையே சாரும்.

Koviloor Digital Library

அகத்தியர் தம்முடைய தவப் பிரயாண காலத்தில் அவருடைய அறப்பணியாக கஷ்டப்படும் மனித இனத்திற்கு மருத்துவ மனைகளையும் கல்விக் கூடங்களையும், குருகுலங்களையும், ஆசிரமங்களையும் நிறுவி உதவி செய்தார்.

அகத்திய மகாமுனிவர் பொதிகைமலையில் அடைக்கலம் ஆகியிருக்கின்றார், அதைக் குற்றாலம் என்று சொல்வதுண்டு. "எல்லா விஷங்களையும் போக்கும் இடம்" என்றும் சொல்வர்.

அகத்தியரை தவமுனி, மாமுனி, ஞானமுனி, கும்பமுனி, மலைமுனி, வேதவாகுல மறை என்றெல்லாம் சொல்லிப் புகழ்ந்து அழைப்பதுண்டு.

இவ்வுலகில் தோன்றும் எல்லா உயிர்களும் பிறப்பின் லட்சியத்தை அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு அகத்திய மகா முனிவர் பல அரிய பெரிய நூல்களை அருளியிருக்கின்றார். ஜோதிடம், வான சாஸ்திரம், வேதாந்தம், யோகம், மருத்துவம் எல்லாத் துறைகளிலும் கருத்துக் கருவூலங்கள் போன்ற நூல்களை அவர் பாடியுள்ளார்.

ஆதிபரா பரத்தினுட கிருபை கூர்ந்து
அப்பனே மனோன்மணியைத் தொழுது போற்றிச்
சோதியெனும் கமலமலர் அமுதம்கொண்டு
சுந்தரம்போல் வாதத்தி லட்சங்காப்பு
நீதி பெற வைத்தியத்தில் இரண்டு லட்சம்
நிலைத்ததொரு சூத்திரத்தில் கோடாகோடி
வாதியென வந்தோர்க்கும் பெரியோர்க்கும்
மனமகிழ்ந்து கருக்குருவாய் வசனித்தேனே.

அகத்தியர் அமுதகலைக் ஞானம் 1200

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
Acc. No. 44790

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

தாமரை
நூலகம்